# කෘෂිකර්ම අමාත්‍යාංශය
# கமத்தொழில் அமைச்சு
# Ministry of Agriculture



*ගොවියෝ මිහිතලයේ කලාකරුවෝය* විவசாயிகள் பூமியின் ஓவியர்கள் *Farmers the Earths Artists*



ගොවිතැනට මුල්තැන
සිතමු
එක්ව රට හදමු
ஒன்றாய் நாட்டைக் கட்டியெழுப்புவோம்
Develop the Nation Together

## කාර්යසාධන වාර්තාව
## செயலாற்றுகை அறிக்கை
## PERFORMANCE REPORT
## 2017

# ගොවි ගීතය

දළු දමන්නනේ ඉර සොයාගෙන
මුල් බසින්නේ අඳුරටා
වීර මිනිසුන් නම් කරන්නේ
වැපිරෙනා ගොවි කම් තකා

යාය ගානේ සිත දුවන්නේ
වම් ඉවුර ගැන සිත සිතා

මාල ඕනේ පළඳවන්ටා
ගොවි රජුන් ගෙල සොයා සොයා...//

ගිරවුන්ට දළු කරල් දා
කවියන්ට පද ලියල්ලා
රජ කිරුළු හිස තියල්ලා
ගොවියන්ට බිම දියල්ලා...//

මාල ඕනේ පළඳවන්ටා
ගොවි රජුන් ගෙල සොයා සොයා....

බිමක් වේ නම් වගාවට රිසි
තැන සොයා පස පෙරළලා
ඒ නැවුම් පස මත ඉසින්නට
හෙට ඉරක් ගැන සිත සිතා

உலகே மாறும்
செம்மண்ணாய் மாறும்
வாயிற் கதவுகள் திறக்கட்டும்
மலர்கள் கோர்த்து மாலையிடுவோம்
விவசாயி நம் மன்னனே

நாம் நாற்று நடுவோமே வா
கவி பாடிப் பயிரிடவே வா
ராஜ வீரமணியலாம் வா
நேசமே விவசாயி வா

**ගිරවුන්ට දළු කරල් දා**
**කවියන්ට පද ලියල්ලා**
**රජ කිරුළු හිස තියල්ලා**
**ගොවියන්ට බිම දියල්ලා**

**මාල ඕනේ පළඳවන්ටා**
**ගොවි රජුන් ගෙල සොය සොයා...**

පද රචනය - වසන්ත දුක්ගන්නාරාල මහතා
සංගීතය - ඉරාජ් වීරරත්න මහතා
ගායනය - නිරෝෂා විරාජිනී මහත්මිය
ඉරාජ් වීරරත්න මහතා
හාචි සුසාන් මහතා
තීක්ෂණ අනුරාධ මහතා

**ජාතික ගොවි සතිය 2017 - කැකිරාව**
தேசிய விவசாயிகள் வாரம் 2017 - கெக்கிராவை
2017 National Farmers Week - Kekirawa



# செயலாற்றுகை அறிக்கை
# 2018

## விவசாய அமைச்சு



# உள்ளடக்கம்


| இலக்கம் | தொடர் இலக்கம் | நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| | | உள்ளடக்கம் | |
| | | கௌரவ விவசாய அமைச்சரின் ஆசிச் செய்தி | v |
| | | கௌரவ இராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி | vii |
| | | விவசாய அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி | ix |
| | | விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆசிச் செய்தி | xi |
| | | அறிமுகம் -நிலைபேறான அபிவிருத்தி 2030 தொலைநோக்கும் விவசாயத் துறையும் | xii-xviii |
| | | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குப் பங்களிப்பு வழங்கும் விவசாய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் | xix |
| | | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்யும் அமைச்சின் தொலைநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் | xx |
| | | அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் | xxi |
| | | இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காக உலக உணவு மற்றும் விவசாயத் தாபனத்தினாலும், நிலைபேறான அபிவிருத்தி அமைச்சினாலும் அறிமுகப்படுத்தபபட்டுள்ள குறிகாட்டிகள் மற்றும் விவசாய அமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகள் - சுருக்கம் | xxii-xlii |
| | | விவசாய அமைச்சிற்குரிய விடயங்கள் | 1-143 |
| | | விவசாய அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் விடயங்கள் | 145-212 |
| 1 | நிர்வாகம் மற்றும் மனித வள முகாமை 1-35 | | |
| | 1.1 | பதவியணிக் கட்டமைப்பு | |
| | 1.2 | இடமாற்றங்கள் | |
| | 1.3 | தாபனச் செயற்பாடுகள் | |
| | 1.4 | மனித வள அபிவிருத்தி - உள்நாட்டுப் பயிற்சி | |
| | 1.5 | மனித வள அபிவிருத்தி- வெளிநாட்டுப் பயிற்சி | |
| | 1.6 | ஆதன முகாமை | |
| | 1.7 | நிதி முகாமை | |
| 2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையப்பெறுதலும் 2017 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டமிடல் செயற்பாடுகளும் | | 36-108 |
| | 2.1 | உணவுப் பாதுகாப்பு தொடர்பான விசேட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.1.1 – 2.1.1.7 | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நெல், சோளம், மிளகாய், சோயா அவரை, பெரிய வெங்காயம், பயறு ஆகிய மேலதிகப் பயிர்களின் உற்பத்தியையும் விளைத்திறனையும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.1 | உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சி | |
| | 2.1.2 | மண் மாதிரிகளைப் பரிசோதித்து உர வகைகளைச் சிபாரிசு செய்தல் | |
| | 2.1.3 | ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.1.4 | இலங்கை சிறந்த விவசாய உற்பத்தி முறைகள் நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.1.5 | உள்ளீட்டு முகாமையின் கீழ் பண்ணைகளை இயந்திரமயமாக்குதல் | |
| | 2.1.6 | வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய தேனி அபிவிருத்திச் செயற்திட்டம் | |
| | 2.1.7 | 2000 பழக் கிராமங்களை உருவாக்குதல். | |
| | 2.1.8 | இளைஞர்களின் பங்கேற்புடன் வர்த்தகப் பண்ணைகள் மற்றும் விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்தி | |
| | 2.1.9 | அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | |
| | 2.1.10 | E -விவசாய நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.1.11 | காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையும் நிகழ்ச்சி (விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல், கைவிடப்பட்ட வயல்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம்) | |
| | 2.1.12 | கண்காட்சிகள் மற்றும் பொது மக்களுக்கான அறிவூட்டல்கள் | |
| | 2.1.13 | அரசாங்க தனியார் பங்குடமையின் அடிப்படையில் விதை நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.1.14 | ஹெலபோஜுன் விற்பனை நிலையங்களின் ஊடாக ப் பெண்களுக்கு வலுவூட்டும் நிகழ்ச்சி - உள்நாட்டு உணவுகளைப் பிரபல்யப்படுத்துதல். | |
| | 2.1.15 | 2.1.15 மோசமான வானிலையின் காரணமாகக் குறையும் உணவு உற்பத்திக்கா தீர்வாக அரிசிப் பையில் வற்றாளை பயிரிடும் புதிய முறையை பிரபல்யப்படுத்துதலும் வற்றாளை மற்றும் மரவள்ளி நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோயத்தலும் | |
| | 2.1.16 | கிரிதலே மற்றும் கவுடுல்லை திட்டத்திற்கான விதை நெல் வழங்கல் | |
| | 2.1.17 | உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான மேலதிக உணவுப் பயிராக அம்பாந்தோட்டை பயறுப் பயிர்ச்செய்கை | |
| | 2.1.18 | சந்தனம் குளம் பெரிய வெங்காயக் கிராமம் | |
| | 2.1.19 | விசாகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவுக்காக பாடசாலைத் தோட்டத்தை தயார்படுத்துதல். | |
| | 2.1. 20 | அரசாங்க விதைப் பண்ணை மற்றும் பயிற்சி நிறுவனம், ஒக்கம்பிட்டி | |
| | 2.1. 21 | 50% பங்களிப்பின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்குகளை வழங்குதல் செயற்திட்டம் | |
| | 2.1.22 | பிபிலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் நாற்று மேடை மற்றும் பண்ணை உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | |
| | 2.1.23 | இரணமடு விமானப் படை முகாமில் உள்ள மாம்பழச் செய்கைச் செயற்திட்டம் | |
| | 2.1.24 | சோயாவை அடிப்படையாகக் கொண்ட உணவு உற்பத்திச் செயற்திட்டம் | |
| | 2.1.25 | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளைப் பலப்படுத்துதல் | |

| | | | |
|---|---|---|---|
| 2.2 | | விவசாய அமைச்சின் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 109-136 |
| | 2.2.1 | சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல் | |
| | 2.2.2 | பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். | |
| | 2.2.3 | நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் தொடர்பான முன்னோடிச் செயற்திட்டம் | |
| | 2.2.4 | விவசாயத் துறை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் | |
| | 2.2.5 | 1500 சிறிய குளங்களில் வண்டல் அகற்றுதல் மற்றும் புனரமைத்தல் | |
| | 2.2.6 | திறன் விருத்தி நிகழ்ச்சி | |
| | 2.2.7 | விவசாயப் பயிர் எதிர்வுகூறல் நிகழ்ச்சித்திட்டம் | |
| | 2.2.8 | இலங்கையில் வர்த்தக ரீதியில் ஈரப்பலா உற்பத்திக்கான அங்குரார்ப்பணச் செயற்திட்டம் | |
| 3 | | சர்வதேச தொடர்புகள் | 137-138 |
| 4 | | விவசாயிகள் நம்பிக்கை நிதியம் | 139-141 |
| 5 | | மதிப்பீடு மற்றும் தொழிற்பாடுகள் செயற்பாடுகள் | 142 |
| 6 | | உள்ளகக் கணக்காய்வு | 143 |
| 7 | | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் | 145-212 |
| | 7.1 | விவசாயத் திணைக்களம் | |
| | 7.2 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | |
| | 7.3 | விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை | |
| | 7.4 | ஹெக்டர் கொப்பேகவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | |
| | 7.5 | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை | |
| | 7.6 | அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் | |
| | 7.7 | தேசிய உணவு மேம்பாட்டுச் சபை | |
| | 7.8 | தேசிய உரச் செயலகம் | |
| | 7.9 | வ/ப லங்கா உரக் கம்பனி | |
| | 7.10 | வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி | |
| | 7.11 | வ/ப லங்கா பொஸ்பேற்று (அரசாங்க கம்பனி) | |
| | | பங்களிப்பு | |






## கௌரவ விவசாய அமைச்சர் அவர்களின் ஆசிச் செய்தி

கடந்த 2017 ஆம் ஆண்டு விவசாயத் துறைக்கு மிகவும் சவாலான ஒரு ஆண்டாக அமைந்தது. அதன் போது இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தவாறு, கஷ்டங்களை வெற்றிகொண்டு உணவு உற்பத்திப் போராட்டங்களுக்கு தோள்கொடுத்த விவசாய சமுதாயத்தை நன்றியுடன் நினைவுகூற வேண்டும்.

உணவு உற்பத்திக்கான தேசிய போராட்டத்தின் முன்னோடி என்ற வகையில் விவசாய அமைச்சானது கடந்த வருடம் பூராக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கியது. சூழல் நட்புறவான விவசாய தொழிற்துறையினை கட்டியெழுப்புவதற்காக பொருத்தமற்ற விதமான இரசாயன பசளைப் பாவனைக்குப் பகரமாக, மண் பகுப்பாய்வுகளினை மேற்கொண்டு அதனடிப்படியில் தேவையான அளவு மாத்திரம் இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தும் முறையினை அறிமுகப்படுத்தியது. இங்கு விவசாயிகளுக்கு அறிவூட்டி பசளைப் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் சேதனப் பசளைப் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டது. சிறந்த விவசாய நடைமுறைகளினூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக தரம் வாய்ந்த விவசாயத் உற்பத்திகளை வழங்கும் பொறிமுறை மூலம் விவசாயிகளுக்கு அதிக விலையினைப் பெற முடிந்தது.

குடும்பத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்தோட்டங்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதனுடன் இணைந்த வகையில், “சிந்திப்போம்” விவசாய மகளிர் சங்கங்கள் ஊடாக, பெண்களை ஊக்கப்படுத்தி அவர்களை சுயதொழில்களில் ஈடுபடுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயப் பயிர்ச்செய்கைகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பான சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தரவுத் தொகுதியொன்றினைப் பேணி வருவதற்காக விவசாய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. உலக வங்கியுடன் இணைந்து விவசாய அமைச்சு செயற்படுத்துகின்ற விவசாயத் துறையினை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டமும் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. “ஒன்றிணைவோம் தயாராகுவோம் தானியக் களஞ்சியங்களை நிரப்புவோம்” என்ற தொனிப்பொருளில் தேசிய விவசாய வாரம் மற்றும் விவசாயக் கண்காட்சி என்பன நடாத்தப்பட்டன. அதன் போது பல்வேறுபட்ட தொனிப்பொருட்களின் ஊடாக நாடளாவிய ரீதியான பல நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் அவை விவசாயத் தொழிற்துறையின் மறுமலர்ச்சிக்குக் காரணமாகியது.

கடந்த வருடத்தின் முன்னேற்றத்துடன், ஆரம்பித்துள்ள 2018 ஆம் ஆண்டினுள் விவசாயத் தொழிற்துறையின் முன்னேற்றத்திற்காகப் பல செயற்றிட்டங்களைச் செயற்படுத்தல் விவசாய அமைச்சின் இலக்காகும். நிலைபேறான விவசாயத் தொழிற்துறையின் ஊடாக சுபீட்சமான நாடொன்றினை உருவாக்குவதற்கு விவசாய அமைச்சு உட்பட அதனுடன் இணைந்த நிறுவனங்களுடன் செயற்பட்டு இலங்கையின் விவசாய சமுதாயத்தை வலுவூட்டுவதற்காக விவசாயத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் தயாராக இருக்கின்றேன்.

துமிந்த திசாநாயக
விவசாய அமைச்சர்



## கௌரவ விவசாய இராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி

மலர்ந்த புத்தாண்டில் வேலைகளை ஆரம்பிக்க முன்னர் கடந்த சென்ற வருடத்தின செயலாற்றுகையை மீளாய்வு செய்து முக்கியமானதாகும். அதன் போது 2017 ஆம் ஆண்டில் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, மாவட்ட மற்றும் மாகாண அடிப்படையில் பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. விவசாய அமைச்சும் அதன் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும் இந்த தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சிக்கு வலுவூட்டுவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தன என்பதை இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தனதாகும்.

விஷமற்ற சூழல் நட்புறவான பயிர்ச்செய்கைக்காக சேதன உர உற்பத்தியையும் பயன்பாட்டையும் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதனோடு இணைந்த வகையில் சேதனப் பயிர்ச்செய்கையும் ஊக்குவிக்கப்பட்டது. காணப்படும் நிலத்திலிருந்து உச்ச அளவில் பயன்பெறுவதற்காக கைவிடப்பட்ட வயல்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தும் நிகழ்ச்சிகள் மற்றும் விவசாயக் கிணறுகளைப் புனரமைக்கும் நிகழ்ச்சிகள் என்பவற்றின் ஊடாக உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசிய விவசாயிகள் வார மற்றும் விவசாயக் கண்காட்சி கடந்த வருடத்தில் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் அதன் போது பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் விவசாயம் தொடர்பில் மக்களின் ஈடுபாட்டை ஏற்படுத்த முடிந்தது. வீட்டுக்கான வருமானம் உழைக்கும் பணிக்காகப் பெண்களின் பங்களிப்பை பெறுவதற்காக மகளிர் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் தாபிக்கப்பட்டன. அதன் மூலம் பெண்களுக்கு வலுவூட்டப்படுவதுடன் உள்நாட்டு உணவுகளைப் பிரபல்யப்படுத்துவதன் மூலம் தற்போதைய உணவுப் முறையின் போ'ாக்குப் பாதுகாப்பை மேம்படுத்தவும் முடிந்துள்ளது. “சிதமு” மகளிர் விவசாயச் சங்கங்களின் ஊடாகவும் பெண்களுக்குப் பொருளாதார ரீதியாக வலுவூட்டப்பட்டது.

நாட்டின் உணவுயை அதிகரிப்பதற்காகவும் அதிகரித்த வருமானம் பெறும் விவசாயச் சமுதாயமொன்றை உருவாக்குவதற்காகவும் விவசாய அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. அதன் போது உணவுப் பாதுகாப்பு ஏற்படுத்தி சுபீட்சமான விவசாயப் பொருளாதாரமொன்றை நோக்கிப் பயணிப்பதற்காக உழைக்கும் விவசாயிகளின் பங்களிப்பு போற்றப்பட வேண்டியதாகும். விவசாய சமுதாயத்தின் பங்களிப்புடன் 2018 ஆம் ஆண்டிலும் நிலைபேறான விவசாயத் துறையை உருவாக்கவாக்கு விவசாய அமைச்சு எதிர்பார்க்கின்றது.

வசந்த அலுவிகாரே
விவசாய இராஜாங்க அமைச்சர்



## விவசாய அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி

இந்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ள விவசாய அமைச்சின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த பாதகமான வானிலை மற்றும் சுற்றாடல் தாக்கங்களின் காரணமாக தேசிய பொருளாதாரத்திற்கான விவசாயத் துறையின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் குறைவடைந்த போதிலும் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை ஓரளவுக்கேனும் எங்களால் பாதுகாக்க முடிந்தமை எமக்கு ஓரளவு திருப்தியைத் தருகின்றது. இந்த பாதகமான வானிலை மற்றும் சுற்றாடல் தாக்கங்களின் காரணமாக தேசிய பொருளாதாரத்திற்கான விவசாயத் துறையின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் குறைவடைந்த போதிலும் உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை ஓரளவுக்கேனும் எங்களால் பாதுகாக்க முடிந்தமை எமக்கு ஓரளவு திருப்தியைத் தருகின்றது.

விவசாயத் துறையானது சுற்றாடல் மற்றும் வானிலைக் காரணிகளுடன் கலந்த ஒரு தொழில் துறையாக இருப்பதனால் தற்போது எதிர்நோக்கும் நவீன காலநிலை மாற்றங்களுக்கு இயைபான விதத்தில் உள்நாட்டு விவசாயத் துறையை வழிநடாத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில 2017 ஆம் ஆண்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதனடிப்படையில், காலநிலை மற்றும் சுற்றாடல் தாக்கங்களின் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான விசேட விவசாயக் காப்புறுதித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்த முயற்சி வெற்றியளித்ததுடன் அது 2017 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவொன்றாக 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும். சேதனப் உர உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவிப்பதன் ஊடாக மண் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் சேதன விவசாயத் துறையை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும் சிறந்த விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்தி நிலைபேறான விவசாய அபிவிருத்தியை உருவாக்குவதற்காக இச்செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. மேலும் சிறிய குளங்களையும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் விவசாயக் கிணறுகளையும் நிர்மாணித்தல் மற்றும் மறுசீரமைத்தல் மூலம் காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கான நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. புதிய பயிர் வகைகளை அறிமுகப்படுத்தி பிரதான பயிர்களின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விவசாய அறிவுப் பரிமாற்றம் செய்து உள்நாட்டு விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் நோக்கில் உலக வங்கியின் கடனுதவியுடனும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடனும் விவசாயத் துறை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் 2017 ஆம் ஆரம்பிக்கப்பட்டது.

“நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்” என்ற உலகளாவிய இலக்குகளை வெற்றிகொள்வ தற்காகவும் இந்நாட்டின் விவசாயத் துறையை வழிநடாத்துவதன் மூலம் இலங்கை அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக மாற்றுவதற்காக தேசிய உற்பத்திக்கான விவசாயத் துறையின் பங்களிப்பை போற்றத்தக்க மட்டத்திலான வழங்குவதையும் குறிக்கோளாகக் கொண்டு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் நடைமுறைப்படுத்தும் போது அவற்றுக்குத் தலைமைத்துவம வழங்கிய கௌரவ விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக அவர்களையும் அவற்றுக்கு முழுமையான பங்களிப்பு வழங்குகின்ற கௌரவ விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகாரே அவர்களையும் பெருமதிப்புடன் நினைவுகூரும் அதேவேளை 2017 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக தமது பணிகளைச் செவ்வனே நிறைவேற்றிய விவசாய அமைச்சினதும், விவசாய இராஜாங்க அமைச்சினதும் விவசாய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்கள் உள்ளிட்ட ஊழியர் குழாத்தினர் வழங்கிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

பி. விஜயரத்ன
செயலாளர், விவசாய அமைச்சு



## விவசாய அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி

விவசாய அமைச்சினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களையும் தரவுகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்படடும் 2017 செயலாற்றுகை அறிக்கைக்கு ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நாட்டின் தொழிற்படையில் மிக அதிகமானோர் விவசாயத் துறையிலும் அதனைச் சார்ந்த உற்பத்தித் துறையிலுமே தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். மேலும் இந்நாடட்டின் நிலப்பகுதியில் அதிகூடுதலான பகுதி விவசாயப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இரண்டு கோடிகளைத் தாண்டியுள்ள நாட்டு நெல் மக்களின் உணவுத் தேவையினை நிறைவு செய்வது விவசாய அமைச்சின் முக்கிய பொறுப்பாக விளங்குகின்றது. எனினும் 2017 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடத்திலும் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக இந்நாட்டின் விவசாய உற்பத்திகளின் பயனுறுதித்தன்மை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை விவசாயத் துறையினால் தேசிய பொருளாதாரத்திற்குச் செய்யப்படும் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கும் வர்த்தக விவசாய ஊக்குவிக்குப்புக்குமான பிரதான தடை எனக் கூற முடியும். மேலும் விவசாயத் துறையானது சூழல் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழில்துறையாகும். அதனால் மாற்றங்களுக்குள்ளாகும் சூழற் காரணிகள் விவசாயத்துறையின் பயனுறுதித்தன்மை மீதும் உற்பத்திகளின் மீது கடுமயைான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

அதனால், இந்நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு விவசாயத் துறை வழங்கும் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கிலும் வானிலை மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் நோக்கிலும் விவசாய அமைச்சு பல்வேறு நிகழ்ச்சிகளையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. முற்காலத்தில் விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக நீர்ப்பாசனத் துறையை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் முதன்மையான ஒரு பணியாகக் காணப்பட்டது. தற்போதைய அரசாங்கமும் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. அதன் கீழ் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. மண் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகவும் சேதன உரப் பயன்பாடு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. விவசாயத் திணைக்களத்தினால் வானிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாய நடைமுறைகள் அறிமுகப்படுத்தி விவசாயத்தை இயந்திரமயப்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பாதகமான வானிலை நிலைமைகள் காணப்பட்ட போதிலும் கௌரவ விவசாய அமைச்சர், இராஜாங்க அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட விவசாய அமைச்சினால் நாட்டின் உணவு உற்பத்திச் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு முடிந்தது என்று நான் நம்புகின்றேன். மேலும் இதற்காக விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் உள்ளிட்ட விவசாய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் நேரடியான பங்களிப்பு கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், 2018 ஆம் ஆண்டில் விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்குப் பூரணமான பங்களிப்பை வழங்குவதற்கு அனைவருக்கும் சக்தியும் தைரியமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

டி.ஏ. பந்துலசேன
விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி

# நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல்




அறிமுகம்

## நிலைபேறான அபிவிருத்தியும் விவசாயத் துறையும்




"எமது உலகத்தை மாற்றியமைத்தல்: நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல்" (Transforming our world : 2030 agenda for sustainable development) மனிதன், பூமி மற்றும் சுபீட்சம் என்பவற்றுக்கான ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும். மேலும் அது பரந்த சுதந்திரத்துக்கு மத்தியில் உலகளாவிய சமாதானத்தைப் பலப்படுத்து வதற்கான ஒரு முயற்சியுமாகும். கடுமையான வறுமை உள்ளிட்ட வறுமையின் அனைத்து வகைகளையும் வடிவங்களையும் ஒழிப்பது, நிலைபேறான அபிவிருத்திக்கான மிகப் பெரிய உலகளாவிய சவாலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அனைத்து நாடுகளின தும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு மற்றும் செயற்பாடுகள் மூலம் இதிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மனித இனத்தை வறுமையின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவும், பூமியை சிறப்பாக வைத்திருப்பதற்காகவும் இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. உலகத்தை நிலைபேறான ஒரு பாதையில் இட்டுச் செல்வதற்காக எடுக்கப்பட வேண்டிய தைரியமான நிலைமாற்ற நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கும், அந்த கூட்டுப் பயணத்தின் போது எந்தவொருவரையும் கைவிடக் கூடாது என்றும் வாக்குறுதி யளிக்கப்பட்டுள்ளது.




நிலைபேறான அபிவிருத்தி அபிலாசைகளுக்கு 17 குறிக் கோள்ளும் அவற்றுடன் தொடர் புடைய சுமார் 169 இலக்குகளும்

உள்ளடங்கும். இவை நிலை பேறான அபிவிருத்தியுடன் துறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளன. இந்த அபிலாசைகளையும் இலக்குகள் 2016 ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறையிலுள்ளதுடன், அவற்றை 2016 ஆம் ஆண்டாகும் போது அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒருங்கிணைப்பு - நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு)

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் - 'Sustainable Development"அல்லது உலகளாவிய குறிக்கோள்கள் 17

| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | விபரம் |
|---|---|
| | 1. அனைத்து வகையான வறுமைகளையும் அனைத்து இடங்களிலிருந்தும் ஒழித்தல் |
| | 2. பசியால் வாடுவதை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பினையும் உயர்வான போசாக்கினையும் அடைதலும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதலும். |
| | 3. ஆரோக்கியமான வாழ்வை உறுதிப்படுத்துதலும் அனைவருக்கும், அனைத்து வயதுகளிலும் நல்வாழ்வை ஊக்குவித்தல். |
| | 4. சமத்துவமானதும் உள்ளடக்கியதுமான (சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கின்ற) கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்துதலும் அனைவருக்கும வாழ்க்கை முழுவதும் கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களை ஊக்குவித்தலும். |
| | 5. ஆண் பெண் சமத்துவத்தை அடைதல் மற்றும் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் வலுவூட்டுதல். |
| | 6. அனைவருக்கும் நீர் கிடைப்பதையும் நிலைபேறான நீர் முகாமையையும் துப்புரவு வசதி கிடைப்பதையும் உறுதிப்படுத்துதல் |
| | 7. சகித்துக் கொள்ள முடியுமான, நம்பிக்கையான நிலைபேறான, நவீன எரிசக்தியைப் பெறுவதற்கான அணுவல் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்துதல் |
| | 8. தாக்குப்பிடிக்கக்கூடிய, உள்ளடக்கக்கூடிய மற்றும் நிலைபெறுதகு பொருளாதார விருத்தி, முழுமையானதும் பயனுறுதிமிக்கதுமான தொழிலும் அனைவருக்கும் கௌரவமான உயர்தொழிலும் கிடைத்தல். |
| | 9. மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல், உள்வாங்கல் மற்றும் நிலைபேறான கைத்தொழில்மயமாக்க ஊக்குவிப்பு, புத்தாக்கங்களை ஊக்குவித்தல். |
| | 10. நாடுகளின் உள்ளேயும் நாடுகளுக்கு இடையிலும் நிலவும் சமனற்ற போக்குகைளைக் குறைத்தல். |
| | 11. நகர மற்றும் மனிதக் குடியிருப்புக்களை அனைவரையும் உள்ளடக்கியவையாகவும் பாதுகாப்பானவையாகவும் நிலைபேறானவையாகவும் மாற்றியமைத்தல் |
| | 12. நிலைபேறான நுகர்வையும் உற்பத்தி முறைகளையும் உறுதிப்படுத்துதல் |
| | 13. காலநிலை நிலைமாறல் மற்றும் அதன் தாக்கங்களை தடுத்தல் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| | 14. சமுத்திர மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தலும் அவற்றை நிலைபேறான அபிவிருத்திக்காகப் பயன்படுத்துதலும். |
| | 15. பௌதிக சூழல் தொகுதியைப் பாதுகாத்தல், புனரமைத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாட்டை ஊக்குவித்தல், காடுகளை நிலைபேறான முறையில் முகாமை செய்தல், பாலைவனமாதலைத் தடுத்தல், நிலத்தின் தரம் குறைவதைத் தடுத்து அதனை மறுசீரமைத்தல் மற்றும் உயிர்ப் பல்வகைமை அழிவதைத் தடுத்தல். |
| | 16. நிலைபேறான அபிவிருத்திக்கான அமைதியானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான சமூகத்தை ஊக்குவித்தலும் அனைவருக்கும் நீதிக்கான அணுகலை வழங்குதலும் பொறுப் புணர்வுள்ள அனைவரையும் உள்ளடக்கிய நிறுவனங்களை அனைத்து மட்டங்களிலும் நிறுவுதல் |
| | 17. நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் புத்துயிரளிப்பதற்குமான வழிமுறைகளைப் பலப்படுத்துதல். |

## நிலைபேறான அ0பிவிருத்திக்கான பரந்த துறைகள் 5

குறிப்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்களைக் கவனத்தில் எடுக்கையில், கட்டமைப்பு வறுமையை ஒழித்தல், பூமியைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும். வறுமையானது, நிலைபேறான அபிவிருத்தியை அடைவதில் எதிர்நோக்கப்படும் பிரதான தடையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க கடுமையான வறுமை உள்ளிட்ட அனைத்து வகையான வறுமைகளையும் ஒழிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.




இந்த நோக்கங்களையும் இலக்குகளைளுயம் மனி இனத்தினதும் பூமியினதும் மேம்பாட்டுக்காக மிகவும் முக்கியமான பரந்த விடயங்களை உள்ளடக்கிய புதிய படிமுறைகளைக் கொண்ட ஐந்து பரந்த துறைகளாகக் காட்டப்பட்டுள்ளன. அந்த ஐந்து துறைகளும் பின்வருமாறு,

### 1. மக்கள்

- அனைத்து வகையான கோணங்களிலும் வறுமையையும் பட்டினியையும் ஒழிப்பதற்கும் நிலைபேறான மனித கௌரவம், சமத்துவம் மற்றும் சுகாதாரமான சூழலொன்றில் தமது திறமைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துதல்

### 2. பூமி

- தற்போதைய மற்றும் எதிர் கால சந்ததியினரின் தேவைகளுக்கு உதவக்கூடியவாறு, நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திகளின் ஊடாக இயற்கை வளங்களை நிலைபேறான முறையில் முகாமை செய்வதன் ஊடாகவும் காலநிலை மாற்றங்களுக்கு துரித நடவடிக்கைகள் எடுப்பதன் ஊடாகவும் பூமியைப் பாதுகாத்தல்.

### 3. சுபீட்சம்

- மனித இனத்தவர்கள் அனைவரும் சுபீட்சமானதும் திருபத்திகரமானதும் வாழ்க்கைய அனுபவிப்பதையும் பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் என்பன இயற்கைக்கு ஏற்ற முறையில் நிகழ்வை உறுதிப்படுத்துதல்.

### 4. சமாதானம்

- பயமும் வன்முறையும் இல்லாத, சமாதானதான, நீதியான, அனைவரும் ஒன்றிணைத்த சமுதாயமொன்றுக்கான தைரியத்தை வழங்குதல்.

### 5. கூட்டுச் செயற்பாடுகள்

- இந்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக, உலகளாவிய ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு வறுமை மற்றும் அதிகம் ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய பங்காளர்களினதும் அனைத்து நாடுகளினதும் அனைத்துத் தரப்பினரதும் அனைத்து மக்களினதும் பங்களிப்பைப் பெற்று நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும் இலங்கையின் விவசாயத் துறையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காக உலக உணவுத் தாபனம் அறிமுகப்படுத்தியுள்ள நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் விவசாய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கான விசேட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் 8 கீழே காட்டப்பட்டுள்ளன. (ஒருங்கிணைப்பு -தேசிய திட்டமிடல் திணைக்களம், நிலைபேறான அபிவிருத்தி அமைச்சு)




| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | நிறுவனங்களுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்ற நிறுவனங்கள் |
|---|---|---|
| சமூக அபிவிருத்தி | | |
| | *1 அனைத்து வகையான வருமைகளையும் அனைத்து இடங்களிலும் இல்லாதொழித்தல்* | *1. விவசாயத் திணைக்களம்*<br>*2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்*<br>*3. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை*<br>*4. ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்* |
| | *5 ஆண் பெண் சமூக அந்தஸ்தைப் பெறுதல் மற்றும் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் வலுவூட்டுதல்* | *1. விவசாயத் திணைக்களம்* |
| பொருளாதார அபிவிருத்தி | | |
| | *2 பட்டனியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை அடைதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்* | *1. விவசாயத் திணைக்களம்*<br>*2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்*<br>*3. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை*<br>*4. ஹெக்டர் கொப்பேகடுவை விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்*<br>*5. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் நிறுவனம்*<br>*6. தேசிய உரச் செயலகம்*<br>*7. இலங்கை உரக் கம்பனி*<br>*8. இலங்கை பொஸ்பேற்றுக் கம்பனி*<br>*9. கொழும்பு கொமர்ஷல் கம்பனி* |
| | *6 அனைவருக்கும் நீர் கிடைப்பதையும் நிலைபேறான நீர் முகாமை மற்றும் துப்புரவு வசதி கிடைப்பதையும் உறுதி செய்தல்* | *1. விவசாயத் திணைக்களம்*<br>*2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்* |
| | *8 சகிக்க முடியுமான, உள்வாங்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி மற்றும் பயனுறுதிவாய்ந்த தொழில் கௌரவமான வாழ்க்கைத் தொழில் அனைவருக்கும் கிடைப்பதை ஊக்குவித்தல்* | *1. விவசாயத் திணைக்களம்* |
| | *12 நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறையை ஊக்குவித்தல்* | *1. விவசாயத் திணைக்களம்*<br>*2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்*<br>*3. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் நிறுவனம்*<br>*4. தேசிய உரச் செயலகம்* |
| உயிர்க் கோலத்தைப் பாதுகாத்தல் | | *5.* |
| | *13 காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களைத் தவிர்ப்பத்தற்காக துரித நடவடிக்கை எடுத்தல்* | *1. விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை*<br>*2. விவசாயத் திணைக்களம்*<br>*கமநல அபிவிருத்தித் திணைக்களம்* |
| | *15 பௌதிகச் சூழல் தொகுதியைப் பாதுகாத்தல், மீள உருவாக்குதல், நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவித்தல், வனங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்தல், பாலைவனமாதலைத் தடுத்தல், நிலம் வெடித்தலைத் தடுத்து மீள உருவாக்குதல், உயிர்ப் பல்வகைமையை இழக்கப்படுவதைத் தவிர்த்தல்* | *1. விவசாயத் திணைக்களம்* |

## இலங்கையில் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான நேரடிப் பங்களிப்பு/ நிலைபேறான அபிவிருத்திகுறிக்கோள் 02

பட்டினியை ஒழித்து, உணவுப் பாதுகாப்பையும் சிறந்த போ‘ாக்கு மட்டத்தையும் பெறுவது நிலைபேறான விவசாய ஊக்குவிப்புக்கான உலகளாவிய குறிகாட்டிகளும் இலக்குகளும். (விவசாயத் துறைக்கான 8 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிப்பதில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் 2 இன் இலக்குகளும் உலகளாவிய குறிகாட்டிகளும் இங்கு தரப்பட்டுள்ளன)



| இலக்குகள்/ தொ. இல. | இலக்குகள் | உலகளாவிய குறிகாட்டிகள் |
|---|---|---|
| 2.1 | 2030 ஆம் ஆண்டாகும் போது பட்டினியை ஒழித்தல் குறிப்பாகக் குழைந்தகள் உள்ளிட்ட வறுமையினால் வாடும் பலவீனமான மக்களுக்குப் பாதுகாப்பான போஷாக்குள்ள போதியளவு உணவு வருடம் முழு வதிலும் கிடைக்கக்கூடியதாக உள்ளமையை உறுதிப் படுத்துதல் (குறிகாட்டி/மந்த போஷனப் பரம்பல்) | 2.1.1 போஷாக்குக் குறைபாட்டின் பரம்பல்<br>2.1.2 உணவுப் பாதுகாப்பின்மையை அனுபவிக்கும் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகையினுள் நடுத்தரமான அல்லது உக்கிரமான உணவுப் பாதுகாப்பின்மையின் பரம்பல் |
| 2.2 | 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் குள்ளமாகுதல் அல்லது தேய்வடைதல் தொடர்பான சர்வதேச மட்டத்தில் உடன்பாடு காணப்பட்ட இலக்குகளை 2025 ஆம் ஆண்டளவில் அடைவது உள்ளிட்ட 2030 ஆம் ஆண்டாகும போது அனைத்து வகையான மந்த போஷனை நிலைமைகளையும் ஒழிப்பது மற்றும் புதிய இளம் பெண்களின், கர்ப்பிணித் தாய்மார்களின், பாலூட்டும் தாய்மார்களின் மற்றும் வயதுமுதிர்ந்த ஆட்களின் போஷாக்குத் தேவைகளுக்கான தீர்வுகளை வழங்குதல் | 2.2.1 வயது 5 இற்கு குறைந்த பிள்ளைகள் மத்தியில் குள்ளத் தன்மையின் பரம்பல் (உலக சுகாதாரத் தாபனத்தின் சிறுவர் வளர்ச்சித் தரநியமங்களுக்கு இணங்க, வயதுக்க ஏற்ற உயரத்தை விட 2 குறைவாக இருத்தல்)<br>2.2.2 வயது 5 இற்கு குறைந்த பிள்ளைகள் மத்தியில் ஊட்டக் குறைபாட்டு மாதிரியின் அடிப்படையில் (நலிவடைதல் மற்றும் பருமனாகுதல்) அதன் பரம்பல் (உலக சுகாதாரத் தாபனத்தின் சிறுவர் வளர்ச்சித் தரநியமங்களுக்கு இணங்க, வயதுக்கு ஏற்ற எடையை சராசரிப் பெறுமானத்தின் 2 அல்லது 2 குறைவாக இருத்தல்) |
| 2.3 | 2030 ஆம் ஆண்டாகும் போது சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின், குறிப்பாகப் பெண்களின், பிரதேச மக்களின், விவசாயக் குடும்பங்களின், மீனவர்களின் விவசாயப் பயனுறுதித் தன்மையையும் வருமானத்தையும், காணிகளுக்கான பாதுகாப்பான அணுகலையும் சமமான அணுகல் வாய்ப்புக்களையும் ஏனைய உற்பத்தி வளங்களையும் அறிவையும், நிதிச் சேவைகளையும், சந்தை மற்றும் பெறுமதி சேர்ப்புக்கள் மற்றும் பண்ணை அல்லாத தொழில் வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக இரட்டிப்பாக்குதல். | 2.3.1 விவசாயம்/ விலங்கு வேளாண்மை/ காடு சார்ந்த தொழிலாளர் வகுப்புக்களின் பருமனின் அடிப்படையில், ஊழிய அலகொன்றைத் தக்க வைத்திருக்கும் உற்பத்தி அளவு<br>2.3.2 பால் வேறுபாடு மற்றும் உள்நாட்டு மட்டத்தின் அடிப்படையில் சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம் |
| 2.4 | 2030 ஆம் ஆண்டாகும் போது சிறிய நிலைபேறான உணவு உற்பத்தித் தொகுதிகளின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கும் உயிர்த் தொகுதிகளைப் பேணி வருவதற்கும் உதவும், வானிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையும் ஆற்றல்களைப் பலப்படுத்தும் பாதிப்பான வானிலை நிலைமகள், வரட்சி, வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் மற்றும் காணியினதும் மண்ணினதும் நிலைமகளை வளர்க்கும் ஈடுகொடுக்கக் கூடிய விவசாய முறைகளை நடைமுறைப்படுத்துதல் | 2.4.1 பயனுறுதி வாய்ந்ததும் நிலைபேறானதுமான விவசாய நிலப் பரப்பு |
| 2.5 | 2020 ஆம் ஆண்டாகும் போது விதைகளினதும் பயிரிடப்பட்ட தாவரங்களினதும் பண்ணைகளினதும் வீட்டு மிருங்களினதும் நிறமூர்த்தப் பல்வகைமையை பேணி வருதலும் நன்றாக முகாமை செய்யப்பட்டதும் பல்வகைமையைக் கொண்டதுமான விதை மற்றும் தாவர வங்கிகளை தேசிய, வலய மற்றும் சர்வதேச மட்டத்தில் பேணி வருதலும் சர்வதேச ரீதியில் உடன்பாடு காணப்பட்ட விதத்தில் நிறமூர்த்த வளங்களையும் பாரம்பரிய அறிவையும் பயன்படுத்துவதன் ஊடாகப் பெறப்படும் பயன்களுக்கான அணுகலையும் சமனான அனுபவத்தையும் உறுதிப்படுத்துதல். | 2.5.1 நடுத்தர மற்றும் நீண்ட கால வசதிகளின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள உணவு மற்றும் விவசாய ரீதியில் முக்கியமான தாவரங்களினதும் விலங்குகளினதும் நிறமூர்த்த வள எண்ணிக்கை |
| 2.அ | குறிப்பாக ஆகக் குறைந்தது அபிவிருத்தியடைந்த நாடுகள் அடங்கலாக, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விவசாய ஆற்றல்களை அதிகரிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட சர்வதேச ஒத்துழைப்பின் ஊடாக கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளையும், விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவைகளையும் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தாவர மற்றும் கால்நடை வள நிறமூர்த்த வங்கிகள் என்பவற்றுக்காகச் செய்யப்படும் முதலீடுகளை அதிகரித்தல். | 2.அ.1 அரசாங்க செலவுகளுக்கான விவசாய நோக்கக் குறிகாட்டி<br>2.ஆ.2 விவசாயத் துறைக்கான ஒட்டுமொத்த உத்தியோகபூர்வ வளப் பாய்ச்சல் (முறையான அபிவிருத்தி உதவிகள்) |

| | | |
|---|---|---|
| 2.ஆ | உலகில் விவசாய சந்தையின் கட்டுப்பாடு மற்றும் போலியான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை தடுத்து சரிசெய்தல், தோஹா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் உடன்பாடுகளையும் ஏற்றுமதிக்கான சலுகைகள் மற்றும் சம அளவிலான தாக்கங்கள் கொண்ட அனைத்து ஏற்றுமதி முயற்சிகளையும் சமாந்தர மான முறையில் நீக்குதல். | 2.ஆ.1 விவசாய ஏற்றுமதி உதவி |
| 2.இ | கட்டுப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்களில் உணவின் உச்ச நிலையை அடைவதைத் தவிர்ப்பதற்காக உணவுக் கையிருப்பு அடங்கலாக உணவு உற் பத்திகள் சந்தைகளிலும் அவற்றின் துணை உற்பத்தி களும் உரிய முறையில் இயங்குவதை உறுதிப் படுத்துவதற்குத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | 2.இ.1 உணவு விலை வேறுபாட்டுக் குறிகாட்டி |

இந்த நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க 2016 - 2030 ஆம் ஆண்டு வரையான 15 வருட காலத்தில் அனைத்து நாடுகளும் இணைந்து வறுமையை ஒழிப்பதற்கும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும், உணவுப் பாதுகாப்பின்மையைக் குறைப்பதற்கும், சமனற்ற போக்குகளைக் இல்லாதொழிப்பதற்கும், காலநிலை மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் முயற்சி செய்யும்.

அந்த முயற்சியை வெற்றிபெறச் செய்வதற்கான இலங்கையின் பங்களிப்புக்காக விவசாய அமைச்சு 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க ஆரம்பித்த பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களான உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சி, சேதன உர உற்பத்தியையும் பயன்பாட்டையும் ஊக்குவிக்கும் நிகழ்ச்சி, நீர் மற்றும் துப்புரவு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான முன்னோடிச் செயற்திட்டம் (World Bank), விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சி (GOSLÆADB), சர்வதேச தொடர்புகள், தேசிய விவசாய ஆய்வுத் திட்டத்தைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்துதல், விவசாயப் பயிர் உற்பத்தி மற்றும் எதிர்வுகூறல் நிகழ்ச்சி, இலங்கையில் வர்த்தக நோக்கிலான ஈரப்பலா உற்பத்திக்கான அங்குரார்ப்பணச் செயற்திட்டம் என்பனவும் அச்செயற்திட்டங்களின் முன்னேற்றங்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கையின நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள், நிறுவனக் கட்டமைப்புக்ள, திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்துக்கு இணங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்யும் பணி விவசாய அமைச்சு, விவசாய அமைச்சின் உள்ள நிறுவனங்கள், விவசாயத் துறையுடன் தொடர்புடைய ஏனை நிரல் அமைச்சுக்கள், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் என்பவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

விவசாய அமைச்சுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவ்விலக்குகளை வெற்றி கொள்வதற்காக நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் உபாய முறைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டும் நிலைபேறான யுகம் தேசிய விவசாயக் கண்காட்சி - பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம்

2017.03.31 முதல் 2017.04.04 வரை





## நிலைபேறான விவசாயத் துறைக் கட்டியெழுப்புவதற்காக விவசாய அமைச்சுடன் இணைந்து செயற்படும் நிறுவனங்கள்









# விவசாய அமைச்சு

## தொலை நோக்கு

- உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய சுபீட்சத்திற்காக வினைத்திறன்மிக்கதும், பயனுறுதி வாய்ந்ததும் சக்தி வாய்ந்ததுமான விவசாயத் துறை

## எமது பணி

- இயற்கை வளங்களை நிலைபேறான முறையில முகாமை செய்வதன் ஊடாக சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் வர்த்தகச் சாயல் கொண்டதுமான, உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட உற்பத்திகளை உருவாக்கும் முயற்சியாண்மை விவசாயத்துறை உருவாக்குதல்

## குறிக்கோள்கள்

- உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவு மற்றும் மேலதிக உணவுக் கையிருப்புக்களை முறையாக முகாமைசெய்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல்
- உணவு உற்பத்தியின் போது இரசாயன உரங்களினதும் களைகொல்லிகளினதும் பயன்பாட்டைக் குறைத்து, கழிவுப் பொருட்களை முகாமை செய்வதன் ஊடாக விஷமற்ற, சூழல் நட்புறவான, சுகாதாரமான விவசாய உற்பத்திகளை மக்களுககு வழஙகுவதன் முலம் இரசாயன உரப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல்
- இயந்திரமயமாக்கல், புதிய தொழில்நுட்பம், வினைத்திறன்மிக்க நீர் முகாமை, பயிர்களைப் பல்வகைமைப்படுத்தல், மண் பாதுகாப்பு முறைகள் என்வற்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக பயிர்களின் உற்பத்திப் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துதலும் உற்பத்திச் செலவைக் குறைத்தலும்
- உயர் தரத்திலான விதைகளைச் சுயமாக உற்பத்தி செய்தல், பெறுமதிசேர் உற்பத்தி முறைகளை விவசாயிகள் மத்தியில பிரபல்யப்படுத்வதல், சிறந்த விவசாய நடைமுறைகளையும் (GAP) சிறந்த உற்பத்தி செயன்முறைகளையும் அறிமுகப்படுத்துதல் என்பவற்றின் மூலம் வெளிநாட்டுச் சந்தைக்கான உயர் தரத்திலான விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு உற்பத்தியாளர்களுக்கு ஆர்வமூட்டுதல்
- உடைந்து தூர்ந்து போயுள்ள அனைத்துக் குளங்களையும் வாய்க்கால்களையும் புனரமைத்து கைவிடப்பட்ட வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்தல்.

## செயற்பாடுகள்

- விவசாய அமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தலும் வசதிகளை வழங்குதலும்
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டல்களை வழங்குதலும் நிர்வாகச் செயற்பாடுகளையும் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தலும்.

## 2017-12-31 ஆந் திகதி வரையில் விவசாய அமைச்சுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட கௌரவ அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள்

| பதவி | பெயர் |
|---|---|
| விவசாய அமைச்சர் | திரு. துமிந்த திஸாநாயக |
| விவசாய இராஜாங்க அமைச்சர் | திரு வசந்த அலுவிகாரே |
| செயலாளர் | திரு. பி. விஜயரத்ன |
| இராஜாங்க செயலாளர் | திரு. டி.வீ. பந்துலசேன |

## 2017-12-31 வரையில் விவசாய அமைச்சின் துணை நிறுவனங்களில் பணியாற்றிய நிறுவனத் தலைவர்கள்

| பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|
| கலாநிதி திரு. ரொஹான் விஜேகோன் | பணிப்பாளர் நாயகம் | விவசாயத் திணைக்களம் |
| திரு. எம்.ஏ.எஸ். வீரசிங்ஹ (2017 பெப்ரவரி வரை) திரு. டி.வீ. பந்துலசேன (பதில் கடமை) | ஆணையாளர் நாயகம் | கமநல அபிவிருத்தி திணைக்களம் |
| திரு. சிட்னி கஜநாயக | தலைவர் | விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை |
| திரு. ஹபுதந்திரி தர்மசேன | பணிப்பாளர் | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் |
| திரு. டபிள்யு.பீ.டி.பீ. பீரிஸ் | தலைவர் | தேசிய உணவு மேம்பாட்டுச் சபை |
| திரு. என்.பீ.வீ.சீ. ஜயதிலக (பதில் கடமை) 2017.04.17 முதல் திரு. ஜீ.ஏ. புஷ்பகுமார (பதில் கடமை) | பணிப்பாளர் பணிப்பாளர் | தேசிய உரச் செயலகம் தேசிய உரச் செயலகம் |
| திரு. காவிந்த சீ. திசாநாயக | தலைவர் | அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் |
| கலாநிதி திரு. எஸ்.டி.ஜீ. ஜயவர்தன | தலைவர் | இலங்கை விவசாய ஆய்வுக் கொள்கைச் சபை |
| திரு. ரோஷன வடுகே | தலைவர் | வ/ப லங்கா உரக் கம்பனி |
| திரு. துசித ஹல்லொழுவ 2017.08.15 ஆந் திகதி முதல் திரு. குமார லியனகே | தலைவர் தலைவர் | வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி |
| திரு. உபாலி அநுராத திசாநாயக | தலைவர் | வ/ப லங்கா பொஸ்பேற்று கம்பனி |





இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காக உலக உணவு மற்றும் விவசாயத் தாபனத்தினால் அறிமுகப்படுத்தபபட்டுள்ள குறிகாட்டிகள் மற்றும் சுகாதார அமைச்சின் செயற்பாடுகள்

## குறிக்கோள் 2.பசியால் வாடுவதை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பினையும் உயர்வான போசாக்கினையும் அடைதலும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதலும்.

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற்திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (*Out Put*) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | இறுதிப் பெறுபேறு (*Out Come* ) (குறுகிய காலம்/நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| *2.1* உணவுப் பாதுகாப்பு தொடர்பான விசேட நிகழ்ச்சி<br><br>• உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சி | பயிர் உற்பத்தியையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துதல் செயற்திட்டம்<br><br>(நெல் உள்ளிட்ட மேலதிக உணவுப் பயிர்) | • நெல், ச ோளம் , மிளகாய், பெரிய வெங்காயம் , ச ோயா அவரை உற்பத்தி மற்றும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம்<br><br>• காய்கறி உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் பழ உற்பத்தியை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம் | • பயிர் உற்பத்தியையும் விளைச்சலையும் மேம்படுத்துதல், நெல் உள்ளிட்ட மேலதிக உணவுப்பயிர்களின் உற்பத்தி அதிகரித்தல் - ஹெ/மெட்ரொ பயனாளின் எண்ணிக்கை<br>• நாளொன்றுக்கான காய்கறி நுகர்வை 100 கிராமிலிருந்து 200 கிராம்வரை அதிகரித்தல்<br>• பழச் செய்கைக் கிராமங்களை நிறுவுதல்.<br>• பயிரிடப்பட்டுள்ள பழக்கன்றுகளின் எண்ணிக்கை மற்றும் நிறுவப்பட்டுள்ள பழக் கிராமங்களின் எண்ணிக்கை<br>• பயனாளிகளின் எண்ணிக்கை | *2.1 3030* ஆம் ஆண்டாகும் போது அனைத்து வகையான பட்டினிகளையும் ஒழித்தல், ஏழைகளான வயத முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிகள், பிள்ளைகள் ஆகியோரின் போஷாக்கு மட்டத்தை அதிகரித்தலும் தன்னிறை ஏற்படுத்துதலும். | • உயர் போஷாக்கு மட்டத்தை அடைதல்<br>• ஆரோக்கியமான மக்களை உருவாக்குதல்<br>• விவசாயிகளுக்கு வலுவூட்டுதல்<br>• விவசாயிகளின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் | *2.1* வீட்டு வருமானம் மற்றும் செலவுகள்<br>*( House hold income and expenditure survey – (HIE) )*<br><br>*2.1.2* உணவுக்கான வறுமைக் கோடு<br><br>போஷாக்கு மட்டம் | சனத்தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் - இலங்கை *(NSO)*<br><br>விவசாயத் திணைக்களம்<br><br>சமூக பொருளாதாரத் திட்டமிடல் பிரிவு |

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற் திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (Out Put) | இலக்கு | இறுதிப் பெறுபேறு (Out Come ) (குறுகிய காலம்/ நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2.3<br>• உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சி<br>• **இளைஞர்களினதும் பெண்களினதும் பங்கேற்பை** அதிகரிப்பதற்கான முயற்சியாண்மை நிகழ்ச்சி - சிதரூ மகளிர அமைப்புக்களை ஏற்படுத்துதல் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சி<br>• உர மானியமாகப பணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்<br>• ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | • ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை அமைத்தல்<br>• ஐந்து இலட்சம் (500,000) வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல்<br>• தேனி வளர்ப்புச் செயற்திட்டம்<br>• சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாடு | • விசாயப் பெண்கள் சங்கங்களை அமைத்தல்<br>• மகளிர் தொழில் முயற்சியாளர் களை உருவாக்குதல்.<br>• மகளிர் விவசாயச் சங்கங்களை அமைத்தல்<br>• விதைகளையும் மரக்கன்றுகளையும் விநியோகத்தல்<br>• சாடிகளில் மிளகாய் பயிரிடும் செயற்திட்டம்<br>• சிறந்த வீட்டுத்தோட்டத்தைத் தெரிவு செய்து ஊக்குவித்தல்<br>• வீட்டுத் தோட்டச் செய்கையின் கீழ் தேனி வளர்த்தல் | வீட்டு அலகுகளாக உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்துள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை<br><br>ஊக்குவிக்கப்பட்ட சூழல் நட்புறவான பயிர்ச்செய்கை முறைகள்<br><br>நகரப்புற, நகரம் சார்ந்த, கிராமிய வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை<br><br>தேன் பாணி உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ள அளவு மற்றும் தேன் பாணி இறக்குமதி குறைவடையும் சதவீதம்<br><br>ஊழிய அலகொன்றி உற்பத்தி அளவு (விவசாயி, தொழிலாளர்)<br><br>சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம்<br><br>(மாதாந்த குடும்ப வருமான அதிகரிப்பு ரூபா) | 2.3 2030 ஆம் ஆண்டாகும் போது விவசாயத்தின் விளைத்திறனை இருமடங்காக்குதல், சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல், மகளிர் தொழில்முயற்சியாளர்களின வருமானத்தை அதிகரித்தல், அறிவு முகாமை, சந்தை, பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை அதிகரித்தல். | வீட்டு வருமான உழைப்பைத் துரிதப்படுத்துதல்<br><br>போஷாக்குள்ள உணவுகளை வீட்டின் உள்ளேயே பெறமுடிவதன் மூலம் ஆரோக்கியமான சமுதாய மொன்று உருவாகுதல். | 2.3.1 -<br><br>2.3.2 -<br><br>* ( இலங்கைக்குப் பொருத்தமற்றது ) | சனத்தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் - இலங்கை (NSO)<br><br>விவசாய அமைச்சு<br><br>விவசாயத் திணைக்களம்<br><br>கமநல சேவைகள் திணைக்களம் |

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற்திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (Out Put) | இலக்கு | இறுதிப் பெறுபேறு (Out Come ) (குறுகிய காலம்/நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2.4 **இயற்கை வள முகாமை** | • **மண் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்தல்.**<br>• **நிலைபேறான நில முகாமை**<br>• **முன்னேற்றத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கு புவியியல் தகவல் முறைமையைப் பயன்படுத்தி வரைபடமாக்குதல்** | • நிலைபேறான நில முகாமை<br>• மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பை ஏற்படுத்துதல்<br>• விவசாயச் சூழல் பல்வகைமையைப் பாதுகாத்தல்<br>• நிலைபேறான எதிர்வுகூறல் மற்றும் வானிலைத் தரவு தளமொன்றை உருவாக்குதல்<br>• வானிலைக் கிராமங்களை உருவாக்குதல்<br>• பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள்<br>• புவியியல் தகவல் முறைமையின் ஊடாக தகவல்களை வரைபடமாக்குதல் | அதிகரிக்கும் சனத்தொகைக்கு இணங்க உணவு உற்பத்திக்காக நிலத்தின் பயன்பாடு அதிகரித்துள்ளமையின் காரணமாக ஏற்படும் மண்ணின் வளம் குன்றுதல், மண்ணரிப்பு, மண்ணின் தரம் குறைதல் என்பவற்றைத் தடுப்பதற்காக<br>1. நிலைபேறான நில முகாமை மேற்கொள்ளப்பட்டுள்ள ஹெக்டயர் அளவு<br>2. நீர் பாதுகாப்பட்ட ஊட்டல் பிரதேசங்கள்<br>3. காலநிலை எதிர்வுகூறல் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விவசாய சுற்றாடல் வலயங்களுக்குப் பொருத்தமான முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் குறிக்காட்டிகளின் எண்ணிக்கை<br>4. தயாரிக்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை<br>5. பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை<br>6. விவசாயச் சூழல் பல்வகைமையைப் பாதுகாப்பதற்காக மரபு ப்ளாஸ்மாக்களைப் பாதுகாத்தல் | 2.4. 1<br>2030 ஆம் ஆண்டாகும் போது நிலைபேறான உணவு உற்பத்திக்குப் பொருத்தமான முறையில் உற்பத்தியையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நிலைபேறான விவசாய முறைமைகளை பயன்படுத்துதல், சூழல் தொகுதியைப் பராமரித்தல், காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களுக்கு (வறட்சி, வெள்ளம், ஏனைய அனர்த்தங்கள்) இயைபாக்கமடைந்த விதை இனங்களை உற்பத்தி செய்தல், நிலத்தின் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துதல், மண் பாதுகாப்பை ஏற்படுத்துதல். | மண்ணிலுள்ள நுண்ணங்கிகளின் செயற்பாடுகளைப் பாதுகாத்தல், மண்ணின் வளம் குன்றுவதைத் தடுத்தல்<br>வானிலை மாற்றங்களுக்கான இயைபாக்கமாக பருமல்லாக் காலங்களில் மரபுரீதியான பயிர்கள் பயிரிடப்படாத பிரதேசங்களில் வானிலைக் கிராம முறையைப் பயன்படுத்துதல் மற்றும் பொருத்தமான பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் உணவுப் பயிர்களின் தொடர்ச்சியான உற்பத்தியை உறுதிப்படுத்துதல் | 2.4. 1<br>பயிர்செய்ய முடியுமான நிலத்தின் அளவில் தற்போது நிலைபேறான முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலத்தின அளவு | விவசாய அமைச்சு<br>விவசாயத் திணைக்களம்<br>(இயற்கை வள முகாமை அலகு)<br>விவசாய அமைச்சு |

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற்திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (Out Put) | இலக்கு | இறுதிப் பெறுபேறு (Out Come ) (குறுகிய காலம்/நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2.4 இயற்கை வள முகாமை**<br><br>உலர் வானிலையில் உணவுப் பற்றாக்கான ஒரு **தீர்வாக அரிசி உறையில் வற்றாளை பயிரிடுதல் நிகழ்ச்சித்திட்டம்** | **அரிசி உறையில் வற்றாளை பயிரிடுதல்** | வற்றாளைத் தண்டுகளை வழங்குதல்<br><br>அறிவூட்டல் | 7. போஷாக்கு நிறைந்த உணவு உற்பத்திக்கான மாதிரிக் கிராமங்களையும் உற்பதியில் ஈடுபடும் கிராமங்களையும் உருவாக்குவதன் மூலம் உணவு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.<br><br>8. விவசாயக் கிணறுகளைப் புனரமைப்பதன் மூலம் வறட்சிக் காலத்தில் தேவையான நீரைச் சேகரித்து வைத்தல் மற்றும் புனரமைக்கப்பட்ட விவசாயக் கிணறுகளின் எண்ணிக்கை<br><br>9. பயிர்ச்செய்கை உட்படுத்தப்பட்ட கைவிடப்பட்ட்ட வயல்களின ஹெக்டயர் அளவு | 2.4.<br><br>2030 ஆம் ஆண்டாகும் போது நிலைபேறான உணவு உற்பத்திக்குப் பொருத்தமான முறையில் உற்பத்தியையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நிலைபேறான விவசாய முறைகளைப் பயன்படுத்துதல் | உலர் வானிலை நிலைமைகளின் கீழ் குறைந்த நிலப் பரப்பிலும் கைவிடப்பட்ட வயல்களை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதன் மூலமும் உற்பத்தியை அதிகரித்தல் | 2.4.1 உணவு உற்பத்திக்க நிலைபேறான முறையில பயன்படுத்தப்பட்ட நிலத்தின் அளவும் உள்ளீடுகளும் | விவசாய அமைச்சு<br><br>விவசாயத் திணைக்களம் |

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற்திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (Out Put) | இலக்கு | இறுதிப் பெறுபேறு (Out Come ) (குறுகிய காலம்/நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2.4<br><br>இயற்கை வள முகாமை<br><br>காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையும் நிகழ்ச்சி<br><br>சமூகப் பாதுகாப்பை வழங்குதல் | • விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல்<br><br>• கைவிடப்பட்ட வயல்களில் பயிர்செய்தல்<br><br>• விவசாய அபிவிருத்திக்காக காலநிலைக்கு இயைபாக்கம் அடைவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் பங்கேற்பைக் கொண்ட செயலாற்றுகைப் படையணியொன்றை உருவாக்குதல்<br><br>• வெள்ளத்தினாலும் வறட்சியினாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குதல் | • மோசமான நிலையிலுள்ள 1500 விவசாயக் கிணறுகளின் உக்கட்டமைப் பூவசதிகளை அபிவிருத்தி செய்தல்<br>• விவசாயக் கிணறுகளில் திருத்த வேலைகள் செய்தல்<br>• விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல்.<br>• நீரின் தரம் தொடர்பாகப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்<br>• அனைத்துத் தரப்பினரதும் பங்கேற்புடன் அறிவூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்<br>• இயற்கை அனர்த்தங்களினால் அழிவடைந்த வயல்களுக்கு<br><br>காப்புறுதி இலலாமல் நட்டஈடு வழங்குதல் (சிறு போகம்) | மோசமான வானிலை நிலைமைகளின் கீழ் அதிக காலத்திற்கு அதிகளவில் நீரைக் களஞ்சியப்படுத்தி வைக்க முடியுமான முறையில் விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தலும் அவ்வாறு புனரமைக்கப்பட்ட விவசாயக் கிணறுகளின் எண்ணிக்கையும்<br><br>நீரிலுள்ள இரசாயன ஆக்கக் கூறுகள் தொடர்பான நிலைமைகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை<br><br>அறிவூட்டுவதன் ஊடாக காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையும் சாத்தியம் அதிகரித்தல்<br><br>இயற்கை அனர்த்தங்களினால் பாதிகப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை, விவசாயக்<br><br>குடும்பங்களின்<br><br>எண்ணிக்கை,<br><br>வழங்கப்பட்ட நட்டஈட்டுப் பணம் | 2.4.<br><br>2030 ஆம் ஆண்டாகும் போது நிலைபேறான உணவு உற்பத்திக்குப் பொருத்தமான முறையில் உற்பத்தியையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நிலைபேறான விவசாய முறைமைகளை பயன்படுத்துதல், சூழல் தொகுதியைப் பராமரித்தல், காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களுக்கு (வறட்சி, வெள்ளம், ஏனைய அனர்த்தங்கள்) இயைபாக்கமடைந்த விதை இனங்களை உற்பத்தி செய்தல், நிலத்தின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல், மண் பாதுகாப்பை<br><br>ஏற்படுத்துதலும் விவசாயிகளுக்கு வலுவூட்டுதலும். | நீண்ட கால வறட்சி, வெள்ளம் அல்லது வேறு உணவுத் தட்டுப்பாட்டுக் காலங்களிலும் அது போன்ற நிலைமைகளிலும் தொடர்ச்சியான முறையில் உணவை உற்பத்தி செய்தலும் தொடர்ச்சியான முறையில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதலும் | 2.4.1 உணவு உற்பத்திக்காக நிலைபேறான முறையில பயன்படுத்தப்பட்ட நிலத்தின் அளவும் உள்ளீடுகளும் | விவசாய அமைச்சு<br><br>விவசாயத் திணைக்களம்<br><br>கமநல சேவைகள் திணைக்களம்<br><br>விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை |

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற்திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (Out Put) | இலக்கு | இறுதிப் பெறுபேறு (Out Come )<br><br>(குறுகிய காலம்/ நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2.4<br><br>நுகர்வோர் சுகாதாரம் மற்றும் திருப்தியை ஏற்படுத்தல்<br><br>இலங்கைக்கான சிறந்த விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் | GAP மாதிரிப் பண்ணைகளை உருவாக்குதல் | அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.<br><br>விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பண்ணைகளையும் பொதி செய்தல் நிலையங்களையும் அமைத்தல்.<br><br>சான்றுப்படுத்தும் அதிகாரம் பெற்ற அலகுகளை அமைத்தல். | தரம்வாய்ந்த, சுகாதாரப் பாதுகாப்புள்ள காய்கறிகள் மற்றும் பழ வகைகளை உற்பத்தி<br>நுகர்வ ஊக்குவிப்பதன் ஊடாகப் பொது மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதலும் பரவாத நோய்களைக் குறைத்தலும் பயனாளிகளின் எண்ணிக்கை,<br><br>உள்ளீடுகளின் எண்ணிக்கை<br><br>காய்கறிகள் மற்றும் பழங்களின நாளொன்றுக்கான நுகர்வு - கிராம்<br>அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை<br>பொதி செய்தல் நிலையங்களின எண்ணிக்கை<br>பண்ணைகளின் எண்ணிக்கை | 2.4 2030 ஆம் ஆண்டாகும் போது நிலைபேறான உணவு உற்பத்திக்குப் பொருத்தமான முறையில் உற்பத்தியையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நிலைபேறான விவசாய முறைமைகளை பயன்படுத்துதல், சூழல் தொகுதியைப் பராமரித்தல், காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களுக்கு (வறட்சி, வெள்ளம், ஏனைய அனர்த்தங்கள்) இயைபாக்கமடைந்த விதை இனங்களை உற்பத்தி செய்தல், நிலத்தின் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துதல், மண் பாதுகாப்பை ஏற்படுத்துதல் | முறையற்ற இரசாயப் பயன்பாட்டைக் குறைத்தல்<br><br>தரம்வாய்ந்த மற்றும் சுகாதாரப் பாதுகாப்புள்ள உணவு நுகர்வுக்குப் பழக்கப்படுதல்<br><br>சூழல் நிலைபேறான தன்மை உருவாகுதல்<br><br>தரம்வாய்ந்த விளைச்சலின் மூலம் சந்தைப் பெறுமதியை அதிகரித்தல் | 2.4.1 உணவு உற்பத்திக்காக நிலைபேறான முறையில பயன்படுத்தப்பட்ட நிலத்தின் அளவும் உள்ளீடுகளும் | விவசாய அமைச்சு<br><br>விவசாயத் திணைக்களம் |

| மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | செயற்திட்டங்கள் | உப செயற்திட்டங்கள் | வெளியீடு (Out Put) | இலக்கு | இறுதிப் பெறுபேறு (Out Come ) (குறுகிய காலம்/நடுத்தரக் காலம்/ நீண்ட காலம்) | நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகள் | மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக இலவசமாக இயந்திரங்களும் உபகரணங்களும் வழங்குதல் | இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் எண்ணிக்கை | நாற்று நடும் இயந்திரங்கள் - 5, கலை பிடுங்கும் இயந்திரங்கள் - 10, லேசர் லெவல் இயந்திரங்கள் - 2, வரம்பு கட்டும் இயந்திரம் 1, (உள்ளீட்டு முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டது) | செடி நடும் இயந்திரங்கள் - 35, கலப்பைகள் 72, கலை பிடுங்கும் இயந்திரங்கள் - 82, விதை தூவும் இயந்திரம் - 33 |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- மோசமான காலநிலை நிலைமைகளின் காரணமாக உற்பத்தியில் ஏற்பட முடியுமான வேறுபாட்டைக் குறைப்பபதற்குப் பங்களிப்புச் செய்தல்.
- சூழல் நட்புறவான உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவி வழங்குதல்
- விவசாயிகள் தேவையற்ற விதத்தில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த முடிந்தமையினால் அவர்களின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்குப் பங்களிப்புச் செய்ய முடிந்துள்ளமை
- உயர் தரம்வாய்ந்த விதை நெல்லைப் பயன்படுத்தச் செய்வதன் மூலம் உற்பத்தி விளைத்திறனை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்தல்.
- விவசாயத் துறையில நிலவும் ஊழியப் பற்றாக்கான ஒரு தீர்வாக இயந்திரமயமாக்கலை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் தொடர்ச்சியான முறையில் உற்பத்தியில் ஈடுபடச் செய்தல்
- விவசாய இயந்திரமயமாக்கல், பரசூட் தட்டுக்கள், காகித வர்ணக் குறிகாட்டிகள் என்பவற்றின் வழங்குநர்கள் தனியார் துறையினராக இருப்பதனால் அவர்களின் பங்களிப்பைப் பெறுதல்.
- விலைகூடிய இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை விவசாயிகளுக்கு வழங்குவதன் ஊடாக வறிய விவசாயிகளுக்கும் இயந்திரமயமாக்கலின் மூலம் பயனடைவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.

**எதிர்கால முன்மொழிவுகள் மற்றும் மேம்பாடுகள்**

எதிர்காலத்தில் மிகவும் முன்னேற்றகரமான விவசாய உபகரணங்களின் சேவைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமாயின், அதிகமான தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்து அதிக விளைச்சலைப் பெறக்கூடியதாக இருக்கும்.

உதாரணம்: லேசர் மட்டத்தின் மூலம் பெரிய வயல்களை தயார்படுத்திக் கொள்ளுதல், இயந்திரங்கள் மூலம் வரம்புகளை அமைத்தல்

## 2.1.1.2 சோள உற்பத்தியையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துதல்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 57.71**
**செலவிட்ட தொகை ரூபா. 57.68**

உள்நாட்டு கலப்பினச் சோள விதை உற்பத்தி நிகழ்ச்சி





இலங்கையின் உள்நாட்டு நுகர்வுக்கு வருடாந்த தேவைப்படும் சோளத்தின் அளவு சுமார் 425,000 மெற்றிக் தொன்களாகும். அதில் 250,000 - 275,000 மெற்றிக் தொன்களே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதற் கிணங்க சுமார் 175,000 மெற்றிக் தொன்கள் இறக்குமதி செய்யப்படுவதுடன் அதற்காகப் பெருந்தொகையான வெளி நாட்டுச் செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது. இந்த நிலைமையில் எமது நாட்டின் சோளப் பயிர்ச்செய்கையினதும் உற்பத்தியினதும் அளவை அதிகரிக்கும் முன்னுரிமையான தேவையொன்று காணப்படுவதனால் அதற்காக சோளப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு செயற்திட்டம், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி 2016 - 2018 இன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- சோளப் பயிர்ச்செய்கையின் உற்பத்திப் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துதல்
- சிறு போகத்தில் பயிர்ச்செய்யப்படும் அளவை அதிகரித்தல்
- இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்
- சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புக்கான வசதிகளை வழங்குதல்
- உள்நாட்டு கலப்பின விதை உற்பத்தியையும் பயன்பாட்டையும் பிரபல்யப்படுத்துதல்

**உபாய முறைகள்**

- சிறு போகத்தில் நெல் பயிரிடாத வயற் காணிகளில் நீர்ப்பாசன வசதிகளின கிழ் புதிய சோளச் செய்கைகளை உருவாக்குவதை ஊக்குவித்தல்
- உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட் கலப்பின சோள வகைகளின் விளைச்சல்களை ஒப்பீடு செய்வதற்காகப் பெரும் போகத்தில் வகை மாதிரிகளை அமைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்
- கடந்த சிறு போகத்தில் ஏற்பட்ட வறட்சியின் தாக்கங்களைக் குறைப்பதற்காகப் பெரும் போகத்தில் புதிய சோளப் பயிர்ச்செய்கைகளை உருவாக்குவதை ஊக்குவித்தல்
- பெரும் போகத்திற்கான உள்நாட்டுக் கலப்பினச் சோள வகை மாதிரிகளை அமைத்தல்
- பயிர்ச்செய்கைக்கான செலவைக் குறைப்பதற்காக இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்
- அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்குப் பின்னரான தரநியமங்களை விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- பொப் கோன் (ீழி ஊழசெ) பயிர்ச்செய்கையைப் பிரபல்யப்படுத்துதல்
- உள்நாட்டு கலப்பின விதை உற்பத்தியையும் பயன்பாட்டையும் பிரபல்யப்படுத்துதல்

**புதிய போக்குகள்**

- இயந்திரமயமாக்கல் முறைகைளை அறிமுகப்படுத்துதல்
- விதைகளின ஈரலிப்பை அளவிடுவதற்கான நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல்
- மண் பாதுகாப்பு முறைகைளை அறிமுகப்படுத்துதல்
- புதிய பயிர்ச் செய்கை முறைகைளை அறிமுகப்படுத்துதல்
- உள்நாட்டு கலப்பின விதைகளை அறிமுகப்படுத்துதல்
- பங வர்த்தக ரீதியான விதை உற்பத்தியாளர்களை உருவாக்குதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்: 2016 - 2020 செயற்திட்டம் நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா என்பது:- நடுத்தரக் காலம்**

பங்காளர்கள்:

- விவசாயத் திணைக்களம்
- விவசாயத் திணைக்களத்தின் மாகாணங்களுக்கிடையிலான விரிவாக்கல் பிரிவு
- கமநல அபிவிருத்தித் திணைக்களம்
- மாகாண விவசாயத் திணைக்களம்
- இலங்கை மகாவலி அதிகாரசபை
- மாவட்ட செயலகங்கள்
- இலங்கை இராணுவம்

**நேரடியான மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடிப் பயனாளிகளின் எண்ணிக்கை 27,500
- மறைமுகப் பயனாளின் எண்ணிக்கை 85,500

**2017 ஆம் ஆண்டின் பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம்**

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்ப-ிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள்**

| செயற்பாடு | பிரதான தொழிற்பாட்டுக் குறிகாட்டி | பயன்கள் வழங்கப்பட்ட அளவு | |
|---|---|---|---|
| | | 2017 | 2016 |
| சிறு போகத்தில் பயிர்செய்யப்படாத வயற் காணிகளில் நீர்ப்பாசன வசதிகளின் கீழ் சோளப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக 50% அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் கலப்பினச் சோள விதைகளை வழங்குதல் | ஹெக்டயர் | 314 ஹெக்டயர் | 1100 ஹெக்டயர் |
| உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட் கலப்பின சோள வகைகளின் விளைச்சல்களை ஒப்பீடு செய்வதற்காகப் பெரும் போகத்தில் வகை மாதிரிகளை அமைப்பதற்காக 50% அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் சோள விதைகளை வழங்குதல் | ஹெக்டயர் | 885 ஹெக்டயர் | 994 ஹெக்டயர் |
| கடந்த சிறு போகத்தில் வறட்சியின் தாக்கங்களைக் குறைப்பதற்காகப் பெரும் போகத்தில் புதிய சோளப் பயிர்ச்செய்கைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக 50% அரசாங்த்தின் பங்களிப்பின் கீழ் சோள விதைகளை வழங்குதல். | ஹெக்டயர் | 10,360 ஹெக்டயர் | - |
| இலவசமாக விதைகளை வழங்கி பெரும் போகத்தில் உள்நாட்டு கலப்பினச் சோள (MI Maize Hybrid 01) வகை மாதிரிகளை அமைத்தல் | ஹெக்டயர் | 690 ஹெக்டயர் | - |
| இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக இயந்திரங்களையும் உபகரணங்களையும் இலவசமாக வழங்குதல் | இயந்திரங்களினதும் உபகரணங்களினதும எண்ணிக்கை | தூவும் இயந்திரங்கள் 07 | 12 |
| அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்குப் பின்னரான தரநியமங்களை விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் | பயிற்சிகளின் எண்ணிக்கை | 120 | 105 |
| பொப் கோன் (Pop Corn) பயிர்ச்செய்கையைப் பிரபல்யப்படுத்துவதற்காக இலவசமாக விதைகளை வழங்குதல் | ஹெக்டயர் | 3.5 ஹெக்டயர் | - |
| இலவசமாக விதைகளையும் இரசாயனங்களையும் வழங்கி பெரும் போகத்தில் உள்நாட்டு கலப்பின சோள (MI Maize Hybrid 01) விதைகளை உற்பத்தி செய்தல் | ஹெக்டயர் | 25 ஹெக்டயர் | 12 ஹெக்டயர் |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

உரிய விவசாய முறைகளையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி சோளம் பயிரிடுதல் மற்றும் அறுவடைத் தொழில்நுட்ப முறைகள் தொடர்பில் விவசாயச் சமுதாயத்தினருக்கு அறிவூட்டுவதற்காகப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதன் மூலம் நிலப் பயன்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வதன் மூலம் பயிர்ச்செய்கைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், தமக்கு கிடைக்கும் அறுவடைப் சிறந்த விதத்தில் தயார்படுத்துதல், களஞ்சியப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் அவர்களுக்கு அறிவூட்டப்பட்டது. அதன் மூலம் உன்னதமான விவசாயத் துறையொன்றை உருவாக்குவதற்கு விவசாயச் சமுதாயத்தினருககு வலுவூட்டப்படுகின்றது.

**இயந்திரமயமாக்கல் முறைகைளை அறிமுகப்படுத்துதல்**





**எதிர்கால முன்மொழிவுகள் மற்றும் மேம்பாடுகள்**

- உள்நாட்டு கலப்பின விதை உற்பத்திக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட முறையொன்றை உருவாக்குதல்
- உள்நாட்டு கலப்பினச் சோளத்தை உள்நாட்டு விவசாயிகள் மத்தியல் பிரபல்யப்படுத்த வேண்டியுள்ளதுடன் அதற்காக அடுத்து வரும் சில போகங்களுக்கு விதைகளை இலவசமாக அல்லது 50மூ பங்களிப்பின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கி பயிர்ச்செய்கை மாதிரிகளை உருவாக்குதல்



### 2.1.1.3 மிளகாய் உற்பத்தியையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துதல்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 16.32 செலவிட்ட தொகை ரூபா. 14.39**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கை





இலங்கையின வருடாந்த செத்தல் மிளகாய் தேவை 60,000 மெ.தொ ஆக உள்ள அதேவேளை வருடாந்த பச்சை மிளகாய்த் தேவை 63,000 மெ.தொ ஆகும். மேலும் வருடாந்த செத்தல் மிளகாய் இறக்குமதி 2016 ஆம் ஆண்டில் 51,018 மெ.தொ ஆகக் காணப்பட்டது. அதற்கிணங்க, செத்தல் மிளகாய் இறக்குமதியைக் குறைத்து, பச்சை மிளகாய்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்ககாக இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- புதிய நிலப் பிரதேசங்களில் மிகாய்ச் செய்கையைப் பிரபல்யப்படுத்துதல்
- வீட்டுத்த தோட்ட மட்டத்தில் பொலித்தீன் பயிர்ச்செய்கைப் பைகளில் மிளகாய் பயிரிடுவதை ஊக்குவித்தல்
- மேற்குறித்த நிலங்களின் மூலம் பெறப்படும் விளைச்சலை அதிகரித்தல்
- புதிய மிளகாய் வகைகளின் விதைகளுக்கு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துதல்
- இலையில் பூஞ்சணம் கட்டும் நோய்த் தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கான மாதிரிகளை நடாத்திக் காட்டுதல்

**உபாய முறைகள்**

- புதிய பிரதேசங்களில் புதிய விவசாயிகள் மிளகாய் பயிரிடும் போது ஒரு ஏக்கரைத் தயார்படுத்துவதற்காக 4,000.00. ரூபா கொடுப்பனவொன்றை வழங்குதல்
- புதிய பிரதேசங்களில் பைகள்/பொதி செய்வதற்கான பொருட்கள் வழங்குதல்
- இலையில் பூஞ்சணம் கட்டும் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மாதிரிகளுக்காக விவசாயிகளுக்கு 1/8 ஏக்கருக்கு 5,000.00 ரூபா கொடுப்பனவை வழங்குதல்.

**புதிய போக்குகள்**

- நிலத்தைத் தயார்படுத்துவதற்காக நிதி வழங்கி புதிய விவசாயிகளை மிளகாய்ச் செய்கையில் ஈடுபடுத்துதல்
- விவசாயிகளின் விதைகளுக்கான தேவையில் 50மூ ஐ இலவசமாக வழங்கி மிளகாய்ச் செய்கையில் புதிய விவசாயிகளை ஈடுபடச் செய்தல்
- இலையில் பூஞ்சணம் கட்டும் நோயின் சிக்கல் தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கு மாதிரிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் இலையில் பூஞ்சணம் கட்டும் நோயை வெற்றி கொண்டு விவசாயிகளை மிளகாய்ச் செய்கையில் ஈடுபடுத்துதல்.
- பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளின் மூலம் இச்செயற்திட்டம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டிப் பயிற்சியளித்தல்

**செயற்திட்ட ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017.01.01 முதல் 2017.12.31 வரை**

**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- குறுகிய காலம் மாகாண/மாகாணங்களுக்கிடையிலான பிரதேசங்களின் விவசாய உத்தியோகத்தர்கள்,விவசாயிகள்**

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடிப் பயனாளிகள் சுமார் 10,000 பேர்
- மறைமுகமான பயனாளிகள் சுமார் 20,000 பேர்

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள்**

- இலக்காகக் கொள்ளப்பட்ட 500 ஹெக்டயர்களில் 424.75 ஹெக்டயர்களில் புதிய காணிகளில் மிளகாய் பயிரிடுதல்
- வழங்குவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட 250 கி.கிராம் விதைகளில் 215 கி.கிராம் விதைகளை விவசாயிகளுக்கு வழங்குதல்
- வழங்குவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட 583,667 பொலித்தீன் பைகளை வீட்டுத் தோட்டச் செய்கைக்காக வழங்குதல்

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

- இலக்காகக் கொள்ளப்பட்ட 500 ஹெக்டயர்களில் 424.75 ஹெக்டயர்களில் புதிய காணிகளில் மிளகாய் பயிரிட்டமை
- வழங்குவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட 250 கி.கிராம் விதைகளில் 215 கி.கிராம் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கியமை
- வழங்குவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட 583,667 பொலித்தீன் பைகளை வீட்டுத் தோட்டச் செய்கைக்காக வழங்கியமை

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

புதிய காணிகள் மற்றும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையின் ஊடாக மிளகாய்ச் செய்கையை விரிவுபடுத்துவதன் ஊடாக உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கை





**எதிர்கால முன்மொழிவுகள் மற்றும் மேம்பாடுகள்**

- உள்நாட்டு கலப்பின மிளகாய் விதை உற்பத்திகளை அதிகரித்தல்
- உள்நாட்டு கலப்பின மிளகாய் விதைகளின் ஊடாக பயிர்செய்து விளைச்சலை அதிகரித்தல் (சாதாரண மிளகாய் விதைகள் மூலம் பெறக்கூடிய ஆகக் கூடிய விளைச்சல் - ஹெக்டயரொன்றுக்கு 12 முதல் 15 மெற்றிக் தொன் பச்சை மிளகாய் ஆக உள்ளதுடன் உள்நாட்டு கலப்பின விதைகள் முலம் ஹெக்டயரொன்றுக்கு 30 முதல் 40 மெற்றிக் தொன்களை? வரையில் பச்சை மிளகாய் விளைச்சலைப் பெற முடியும்)

## 2.1.1.4 சோயா அவரை உற்பத்தியையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துதல்

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா 79.32**
**செலவிட்ட தொகை ரூபா. 77.108**

சோயா அவரைப் பயிர்ச்செய்கையைப் பிரபல்யப்படுத்துவதற்காக அறிவூட்டும் சுவரொட்டிகளை ஒட்டுதல்





### அறிமுகம்

இலங்கையின் உள்நாட்டு நுகர்வுக்காக வருடாந்தம் 235,000 மெ.தொன் சோயா தேவைப்படுகின்றது. அதில் சுமார் 15,000 மெ.தொன்கள் நேரடியாக மனித நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் சுமார் 220,000 மெ.தொன்கள் விலங்கு உணவுக்காக பிண்ணாக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. தற்போது இலங்கையில் 220,000 மெ.தொ இறக்குமதி செய்யப்படுகின்றது. அதனால், மொத்தமாக சுமார் 14,300 மில்லியன் அளவில் வருடமொன்றுக்கு செலவாவதுடன் மேற்படி பயிரை இலங்கையினுள் பயிர்செய்வதன் ஊடாக அந்தப் பணம் இலங்கையினுள் விவசாயிகள் மத்தியில் பகிரப்படுவதற்கு முடியும் என்பதுடன் அதன் மூலம் இந்தப் பயிரை பரவலாக்குவதற்கு எதிர்பார்க்கும் வட மத்திய மாகாணம், ஊவா மாகாணம், வடமேல் மாகாணம் என்வற்றிலுள்ள விவசாயிகளதும் விவசாயிகளின் பொருளாதாரச் சமூகததினதும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சியின் கீழ் சோயாச் செய்கையின உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் தரம்வாய்ந்த விதைகளை உற்பத்தி செய்வதற்காகவும் விவசாயிகளைத் தூண்டுவதன் ஊடாக சோயா அவரை இறக்குமதியைக் குறைப்பதை இலக்காகக் கொண்டு இந்த சோயா அவரைப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்புச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- சோயாச் செய்கையின் அலகு ஒன்றிற்காக விளைச்சலை ஹெக்டயரொன்றுக்கு 1.8 மெ.தொன்களிலிருந்து 8 மெ.தொன்கள் வரை அதிகரித்தல்
- உயர் தரத்திலான விதைகளை உற்பத்தி செய்தலும் தேவைக்குப் போதுமான அளவு விதைகளை உற்பத்தி செய்தலும்
- தேசிய சோயா தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சோயாச் செய்கையைப் பரவலாக்குதல்
- சோயா உற்பத்தியின் வினைத்திறன் மேம்படுத்துவதற்காக உயிரியல் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல்
- இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்
- வருடம் முழுவதிலும் உற்பத்தியை அதிகரிப்பதற்ககா பெரும் போகத்தில் உயர் நிலயங்களில் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துதல்

**உபாய முறைகள்**

- விதை உற்பத்திக்கான விவசாயிகளை இனங்காணுதலும் விதைகளை உற்பத்தி செய்வதற்காக விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கம் மற்றும் பயிற்சிப் பிரிவு, விதைப் பிரிவு, விதை சான்றுப்படுத்தற் சேவை என்பவற்றுடன் இணைந்து விதை உற்பத்திக் கிராமங்களை உருவாக்குதல்
- நீர்ப் பற்றாக்குறை நிலவும் காணிகளில் சோயாச் செய்கையை அறிமுகப்படுத்துதல்
- தற்போது பயிரிடப்படுகின்ற பிரதேசங்களில் விளைச்சலை ஹெக்டயரொன்றுக்கு 2.1 மெ.தொ. வரை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவையும் பயிற்சியையும் வழங்குதல்

- இயந்திரமயமாக்கலை அறிமுப்படுத்துவதன் ஊடாக உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான மாதிரி அமைத்தல்
- உத்தரவாத விலையொன்றை அறிமுகப்படுத்துதலும் விளைச்சலைக் கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்துதலும்

**புதிய போக்குகள்**

- இயந்திரமயமாக்கல் முறைகளை அறிமுகப்படுத்துதல்
- விதை உற்பத்திக் கிராமங்களை உருவாக்குதல்
- புதிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்துதல்
- சந்தை தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்துதல்

செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் இச்செயற்திட்டம் 2016-2020 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும்.

செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம்

**பங்காளர்கள்**

- விவசாயத் திணைக்களம்
- விவசாயத் திணைக்களத்தின் மாகாணங்களுக்கிடையிலான விரிவாக்கல் பிரிவு
- கமநல அபிவிருத்தித் திணைக்களம்
- மாகாண விவசாயத் திணைக்களம்
- இலங்கை மகாவலி அதிகாரசபை
- மாவட்ட செயலகங்கள்
- பிரதேச செயலகங்கள்
- இலங்கை இராணுவம்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடிப் பயனாளிகள் 13,000 பேர்
- மறைமுகமான பயனாளிகள் 40,500 பேர்

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| செயற்பாடு | பிரதான தொழிற்பாட்டுக் குறிகாட்டி | பயன்கள் வழங்கப்பட்ட அளவு | |
|---|---|---|---|
| | | 2017 | 2016 |
| விவசாயிகளை சோயா அவரைக்குப் பழக்கப்படுத்துவதற்காக சோயாவை அவரை விதைகளை வழங்குதல். | ஹெக்டயர் | 6,477 ஹெக்டயர் | 170 ஹெக்டயர் |
| சோயா அவரைப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான ரைசோபியம் நோய்த் தடுப்பூசி வழங்குதல் | ஹெக்டயர் | 1,761 ஹெக்டயர் | 285 ஹெக்டயர் |
| சோயா அவரைப் பயிர்ச்செய்கையில் விருப்பம் காட்டும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நிலத்தைத் தயார்படுத்துவதற்காக நிதி வழங்குதல் | ஹெக்டயர் | 3,174 ஹெக்டயர் | - |
| இலவசமாக சோயா அவரை விதைகளை வழங்கி உற்பத்தி செய்தல் | ஹெக்டயர் | 439 ஹெக்டயர் | 285 ஹெக்டயர் |
| இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக இயந்திரங்களையும் உபகரணங்களையும் இலவசமாக வழங்குதல் | இயந்திரங்களினதும் உபகரணங்களினதும எண்ணிக்கை | Seeders: 4<br>Int.Cult : 8<br>Reapers: 2 | Water Pumps<br>Elect: 109<br>Keros: 50 |
| பயிற்சி மற்றும் மாதிரிகள் | பயிற்சிகளின் எண்ணிக்கை | 40 | 75 |

2017/18 பெரும் பொகத்தில் விளைச்சல் கிடைக்கவிருப்பதனால் உற்பத்தியாகக் காட்டப்பட்டுள்ளது.

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

கடந்த சில போகங்களில் ஏற்பட்ட வறட்சி நிலைமையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேலதிக வருமானத்தைப் பெறுவதற்காக வயற் காணிகளில் இப்பயிரைப் பிரபல்யப்படுத்த முடிந்தமையினால், ஏற்பட்டிருந்த பாதிப்பான நிலைமையைக் குறைக்க முடிந்ததுடன் சில விவசாயிகள் ஏக்கரொன்றுக்கு 100,000 ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையைப் பெற்றுள்ளனர். இவை தவிர, இச்செயற்திட்டத்தின் மூலம் ஹெக்டயரொன்றுக்கு 1.8 மெ.தொ. முதல் 1.98 மெ.தொ. வரையில் விளைச்சலை அதிகரிக்க முடிந்தது. அதனால் அவர்களின் வருமான நிலைமை அதிகரித்ததுடன் சமூக அபிவிருத்தியும் ஏற்பட்டது.

**சோயா அவரைப் பயிர்ச்செய்கைக் களம்**



**எதிர்கால முன்மொழிவுகள் மற்றும் மேம்பாடுகள்:**

- சோயா அவரை விதை உற்பத்திக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட முறையொன்றை உருவாக்குதல்
- சோயா அவரையை உள்நாட்டு விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்த வேண்டியுள்ளதுடன் அதற்காக அடுத்து விவசாயம் சில போகங்களுக்கு விதைகளை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கி பயிர்ச்செய்கை மாதிரிகளை உருவாக்குதல்.



## 2.1.1.5 பெரிய வெங்காய உற்பத்தியையும் விளைச்சலையும் அதிகரித்தல்

ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 4.53 செலவிட்ட தொகை ரூபா. 3.45

### அறிமுகம்

களஅவதானிப்புகள் - மாத்தளை



பெரிய வெங்காயப் பயிர்ச்செய்கையானது மாத்தளை/ அநுராதபுரம் மற்றும் மகாவலிப் பிரதேசங்களில் வாழும் விவசாயிகள் மத்தியில் பிரபல்யமான ஆரம்பப் பயிராக விளங்குகின்றது. சிறுபோகத்தில் பயிர்ச்செய்கையை மேலும் அதிகரிப்பதன் ஊடாக அறுவடைக் காலத்தில் நுகர்வோருக்குத் தேவையான அதிக உற்பத்தியினை வழங்க முடியும். நீண்ட காலம் வைத்திருப்பது ஓரளவுக்குச் சிரமமான ஒன்றாக இருப்பதனால் மேலதிக உற்பத்தியின் மூலம் விலை குறைவடைதல் மற்றும் விணடிக்கப்படுதல் போன்ற விடயங்களைக் கவனத்தில் எடுத்து பருவகாலமல்லாத காலப்பகுதியில் பெரிய வெங்காய உற்பத்தியைப் பிரபல்யப்படுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறந்த அறுவடையைப் பெறுவதன் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கான சாத்தியம் காணப்படுவது இப்பயிரின் விசேட அம்சமாகும். மாதிரி மட்டத்தில் பருவமல்லாக் காலத்தில் பெரிய வெங்காயச் செய்கை மேற்குறித்த பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது ஓரளவு வெற்றியளித்துள்ளது. அதனால் இப்பிரதேசங்களில் பயிர்ச்செய்கைப் பரப்பை அதிகரித்து அதிக உற்பத்தியைப் பெறுவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- பெரிய வெங்காயப் பயிர்ச்செய்கையைப் பரவலாக்குதலும் உள்நாட்டு விதை உற்பத்தியை அதிகரித்து விதை இறக்குமதியைக் குறைத்தலும்

**உபாய முறைகள்**

- ஹெக்டயரொன்றுக்கு சுமார் 25 மெற்றிக் தொன் உற்பத்தியைத் தரக்கூடிய ஆஜடீமு1 இன விதை உற்பத்திய அதிகரித்து விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல்

**செயற்திட்ட ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017.01.01 முதல் 2017.12.31 வரை**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- நீண்ட காலம்**

**பங்காளர்கள்:**

- விவசாயத் திணைக்களம் (மத்திய அரசு)
- இலங்கை மகாவலி அதிகாரசபை

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை: மாத்தளை, அநுராதபுரம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகள்**

முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள் - இதுவரையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1000 கிலோ கிராம் விதை விற்பனைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பயனாளிகள் - 7800
செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு
செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்

| செயற்பாடு | முன்னேற்றம் (%) | அளவு | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *2016/17 பெரும் போகம் 2017 சிறு போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய வெங்காய விதைகளும் நடுகைப் பொருட்களும் நிலையத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* | *100* | *கிலோ கிராம் 309* | *11* |
| *IPNS மாதிரிகளுக்காக சேதன உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.* | *64* | *மாதிரிகள் - 64* | *64* |
| *விவசாயிகள் மத்தியில் பெரிய வெங்காய விதைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.* | *96* | *கிலோ கிராம் 72.* | *144* |
| *விவசாயிகளுக்கான 3 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.* | *30* | *3* | *90* |

செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்

- பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதலும்
- இறக்குமதியைக் குறைத்தல்

எதிர்கால முன்மொழிவுகள் / மேம்பாடுகள்:

- பெரிய வெங்காய விதை உற்பத்தியில் ஏற்படும் காலநிலைத் தாக்கங்களிலிருந்து பயிர்களைப் பாதுகாத்து விதை உற்பத்தியை அதிகரித்தல்
- சிறியளவிலான பெரிய வெங்காய விதை உற்பத்தியாளர்களை ஊக்குவித்து விதை உற்பத்தியை அதிகரித்தல்
- நில அலகொன்றிலிருந்து பெறப்படும் பெரிய வெங்காய விதை விளைச்சலை அதிகரித்தல்
- விதை உற்பத்திக்குத் தேவையான அறிவையும் உள்ளீடுகளையும் வழங்கி உற்பத்தியை அதிகரித்தல்.




## 2.1.1.6 பயறு உற்பத்தியையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சி

ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 2.78
செலவிட்ட தொகை ரூ.மி. 2.34

தானியம் உடைக்கும் கருவிகள்



### அறிமுகம்

சாதாரண இலங்கை உணவு வேளையொன்றில், குறிப்பாக கிராமப் பிரதேசங்களில், புரதத் தேவைகளைப் பூர்த்தி செய்வது, பிரதான பங்களிப்புச் செய்யும் பிரதான தானியமான பயறின் மூலம் நிறைவேறுகின்றது. இதனால், உள்நாட்டு பயறு தேவையான 13,861 மெ.தொ மற்றும் 6,055 மெ.தொன்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் 2914 மில்லியன் ரூபா செலவாகின்றது. மறுபுறத்தில் குறைந்த மண் ஈரலிப்பின் கீழ் மூன்றாம் போது பயறுச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதன் ஊடாக காணியின் பயனுறுதித் தன்மை மேம்படுவதுடன் இந்த தானியப் பயிரின் ஊடாக அதன் அதன் வாழ்க்கை வட்டத்தில் நிகழும் நைதரசன் உருவாக்கச் செயற்பாட்டின் ஊடாக மண்ணில் நைதரசன் சேர்வதனால் மண்ணின் வளமும் மேம்படும். மேலும், இது பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்படாத தானியப் பயிர்களுக்குச் சந்தையில் பெற்றுக் கொள்ளக்கூடிய மிகவும் அதிகரித்த விலையின் காரணமாக குறிப்பாக பெண் விவசாயிகளுக்கு பருவமல்லாத காலத்தில் ஒரு சிறந்த வருமான மூலமாகவும் அமையும்.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- தேசிய பயறு உற்பத்தியை அதிகரித்தல்
- விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரித்தல்
- விவசாயக் காணிகளின் மண்ணை மேம்படுத்துதல்
- இரசாயன உரங்களின் அதிகரித்த பயன்பாட்டுக்கான ஊக்கத்தைக் குறைத்தல்
- களஞ்சியப்படுத்தும் ஆற்றலை அதிகரித்தல்
- பயறுப் பயிர்ச்செய்கையை இயந்திரமயமாக்கல்

**உபாய முறைகள்**

- புதிய பிரதேசங்களில் பயிரிடும் நிலப்பரப்பை அதிகரித்தல்
- விதை உற்பத்திகளை ஆரம்பித்தல்
- மூன்று படலங்களைக் கொண்ட பைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக விவசாயிகளின் மட்டத்தில் விதைகளைக் களஞ்சியப்படுத்தும் ஆற்றலை அபிவிருத்தி செய்தல்
- விளைச்சலை அதிகரித்தல், தொழில்நுட்ப உபகரணத் தொகுதியை அறிமுப்படுத்துதல்
- பயறு உற்பத்திச் சமுதாயத்தில் பெறுமதிசேர் உற்பத்திகளுக்காக தானியங்களை உடைக்கும் இயந்திரங்கள் இச்செயற்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டன.
- அரும்புகள் அழுகும் நோய் மற்றும் மஞ்சள் நிறமாக மாறும் நோய் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துதல், விளைச்சலை அதிகரித்தல் மற்றும் சரியான விஞ்ஞானப் பயன்பாடுகளுக்கான அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் தொகுதி தொடர்பில் கவனம் செலுத்தி பயிற்சி வழங்குதல்.

**புதிய போக்குகள்**

- நான்காம் போகத்தில் பயிரிடுதல் இந்த வருடத்திலும் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிலும் மேற்கொள்வதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது.

செயற்திட்ட ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017.01.01 முதல் 2017.12.31 வரை
செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம்

விவசாயத் திணைக்களம் மற்றும் சிறியளவிலான விவசாயிகள்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

நேரடிப் பயனாளிகள் 2,500 பேர்

மறைமுகமான பயனாளிகள் 10,000 பேர்

## செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்

| செயற்பாடு | முன்னேற்றம் (%) | அளவு ஹெ. | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *இலவசமாகப் பதிவு செய்யப்பட்ட விதைகளை வழங்குதல்* | *100* | *169.32* | *424* |
| *புத்தாக்கமான மூன்று மட்டங்களைக் கொண்ட பைகளை இலவசமாக வழங்குதல்* | *100* | *7500* | *3750* |
| *விவசாயச் சங்கங்களுக்கு தானியம் உடைக்கும் இயந்திரங்களை இலவசமாக வழங்குதல்* | *100* | *22* | *660* |
| *தொழில்நுட்ப உபகரணத் தொகுதி மற்றும் சரியான களஞ்சியப்படுத்தல் தொடர்பான பயிற்சி தொழில்நுட்ப உபகரணத் தொகுதியை இயக்குதல் தொடர்பான ஊடக நிகழ்ச்சிகள்* | *62* | *19* | *570* |
| *மாதிரிகளுக்கு இலவசமாக விதைகளை வழங்குதல் மற்றும் வரிசையாக நடுதல், ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு, தயார்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் ( 1 Ac மாதிரிகள் 80 )* | *72* | *23* | *60* |

செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்

- செயற்திட்டத்திற்காக சமூகத்தில் கவனத்தில் கொள்ளப்படாத பெண்களைப் பங்கேற்கச் செய்தல்
- விவசாய சமுதாயத்தினரின் உணவுகளின் போஷாக்குப் பெறுமானத்தை அதிகரித்தல்
- சிறு போகத்திற்கும் பெரும் போகத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் கைவிடப்பட்ட வயல்களைப் பயன்படுத்துதல்.
- மண் போசணை மட்டத்தை மேம்படுத்துதல்
- வறிய விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்
- அறுவடைக்குப் பிந்திய அழிவுகளைக் குறைத்தல்
- பயிர்ச்செய்கை அடர்த்தியை அதிகரித்தல்









அறுவடைகளைச் சேகரித்தல்

## 2.1.1.7 உள்நாட்டு உருளைக் கிழங்கு உற்பத்தியை மேம்படுத்தும் செயற்திட்டம்

ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில். 241.66
செலவிட்ட தொகை ரூபா.மில். 190.58

800ஓ2 பொலித்தீன் வீடுகள் 3 நிர்மாணி-த்தல்



### அறிமுகம்

நுகர்வோரின் உருளைக் கிழங்குத் தேவையில் 60 இறக்குமதி செய்யப்படுகின்றது. அதற்காக வருடமொன்றுக்கு 3,500 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணி செலவாகின்றது. ஊயர் தரத்திலான விதை உருளைக் கிழங்கு உற்பத்தியையும் பயன்பாட்டையும் அதிகரித்து நுகர் வோருக்கான உருளைக் கிழங்குப் பயனுறுதித் தன்மையையும் உற்பத்தியையும் அதிகரிப்பதன் மூலம் இந்த அந்நியச் செலாவணிச் செலவைக் குறைக்க முடியும். வருடாந்த நுகர்வோர் உருளைக் கிழங்குத் தேவை அண்ணளவாக 2 மெற்றிக் தொன்களாகும். ஊயர் தரத்திலான விதை உருளைக் கிழங்குகளின் பற்றாக்குறையின் காரணமாகவும் அவற்றை உரிய நேரத்தில் பெறுவதற்கு முடியாமையினாலும் உற்பத்திப் பயனுறுதித் தன்மை குறைவடைந்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக் கிழங்குகளின் விலை அதிகமாக இருப்பதனால் உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது.

### செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்/ இலக்குகள்

- வருடாந்த முந்திய அடிப்படை விதை உருளைக் கிழங்கு விதைகளின் எண்ணிக்கையை 01 மில்லியனில் இருந்து 10 மில்லியன்கள் வரை அதிகரித்தல்.
- ஊயர் தரத்திலான விதை உருளைக் கிழங்கு மற்றும் தொழில்நுட்ப முறைகளின் ஊடாக வருடாந்த நுகர்வோர் உருளைக் கிழங்கு உற்பத்தியை 80,000 மெ.தொன்களிலிருந்து 150,000 மெ.தொன்கள் வரை அதிகரித்தல்.
- உருளைக் கிழங்குச் செய்கையின் வருடாந்த பயிர்ச்செய்கை நிலப்பரப்பை 5000 ஹெக்டயர்களிலிருந்து 7500 வரை அதிகரித்தல்.
- உருளைக் கிழங்குச் செய்கையின் விளைச்சலை ஹெக்டயரொன்றுக்கு 16 மெ.தொன்களிலிருந்து 20 மெ.தொன்கள் வரை அதிகரித்தல்.

### உபாய முறைகள்

- சீதாஎலிய விதை உருளைக் கிழங்குப் பண்ணையின் வளாகத்தில் 800 சதுர மீற்றர், முன்ன ஆரம்ப (Go) விதை உருளைக் கிழங்கு உற்பத்திப் பச்சை வீடுகள் 6 நிர்மாணித்தல் மற்றும் 400 சதுர மீற்றர் கொண்ட விதை உருளைக் கிழங்குப் பச்சை வீடுகள் 40 நிர்மாணித்தல் என்பவற்றின் ஊடாக அடிப்படை விதைகளை உற்பத்தி செய்தல்.
- சிற்றும் மற்றும் நடுத்தர அளவிலான உருளைக் கிழங்கு விதை உற்பத்தியாளர்களின் ஊடாக இந்த அடிப்படை விதைகளை உருவாக்கி தரமான விதைகளை நுகர்வுப் பயிர்ச்செய்கைக்காக வழங்குதல்.
- சிறிய அளவிலான பயிர்ச்செய்கையாளர் களுகக் விதைகளை வழங்கி சுயமான விதை உற்பத்திகளை அதிகரித்தல்
- புழ விதை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சியொன்றை நடைமுறைப்படுத்துதல.
- உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்காக உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கையில் புதிய தொழில்நுட் பங்களை விவசாயிகள் மத்தியில் பரவ லாக்குதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உருளைக் கிழங்கு விதைகளை உற்பத்திசெய்யும் விவசாயி களின் ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- குளிர்சாதன அறைகளை நிர்மாணிப்பதன் மூலம் அரசாங்கத்தினதும் விவசாயிகளினதும் விதை உருளைக் கிழங்குகளைக் களஞ்சியப்படுத்துதல்.

சீதா எளிய உருளைக் கிழங்குப் பண்ணையின் குளிர்சாதன அறையை விரிவுபடுத்துதலும் புதிய குளிர்சாதன அறையொன்றை நிர்மாணித்தலும்



**புதிய போக்குகள்:-**

- அடிப்படைக்கு முன்னரான விதைகளை வழங்குவதன் ஊடாக விவசாயிகளின் சுயமான விதை உற்பத்தி அளவிலும் தரத்திலும் மேம்படுதல்.
- சுயமாக விதைகளை உற்பத்திசெய்வதற்கு விவசாயிகள் பழக்கப்படுவதனால் விதை உற்பத்திச் செலவு குறைவடைதல்.
- விதைகளை குளிர்ச்சியாகக் களஞ்சியப்படுத்துவதன் மூலம் உரிய போகத்தில் உயர் தரத்திலான விதைகளைப் பெறுவதற்கு விவசாயிகளைப் பழக்கப்படுத்துதல்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்: - 2016 - 2018**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம் செயற்திட்டம்.**

**பங்காளர்கள்:-**

- மத்திய அரசின் விவசாய அமைச்சு
- மத்திய அரசின் விவசாயத் திணைக்களம்
- மத்திய மாகாண விவசாயத் திணைக்களம்
- ஊவா மாகாண விவசாயத் திணைக்களம்

400ஓ2 பொலித்தீன் வீடுகள் 20 நிர்மாணித்தல்



**நேரடியான மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- உருளைக் கிழங்கு பயிரிடும் விவசாயிகள்
- உருளைக் கிழங்கு விதை உற்பத்தியாளர்கள்

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்த/ பயனாளிகள்**

- விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடிப்படைக்கு முன்னரான விதை உருளைக் கிழங்குகள் அளவில் அதிகரித்தல்.
- இலங்கையின் நுகர்வோர் உருளைக் கிழங்கு அளவு அதிகரித்தல்.

**செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நிதி - இலங்கை அரசாங்க நிதி**

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| செயற்பாடு | பிரதான தொழிற்பாட்டுக் குறிகாட்டி | பயன்கள் வழங்கப்பட்ட அளவு | |
|---|---|---|---|
| | | 2017 | 2016 |
| 400மீ2 பொலித்தீன் வீடுகள் 20 நிர்மாணித்தலும் GO விதை உற்ப்த்திக்கான 800மீ2 பொலித்தின் வீடுகள் 03 நிர்மாணித்தல் | - | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 50% நிர்மாணம் பூர்த்தி யடைந்துள்ளது |
| சீத்தா எலிய விதை உருளைக் கிழங்குப் பழைய குளிர் அறையை விரிவுபடுத்துதலும் புதிய குளிர் அறையொன்றை நிர்மாணித்தலும் | - | பூரத்தி செய்யப்பட்டுள்ளது | 40% நிர்மாணம் பூர்த்தி யடைந்துள்ளது |
| சீதா எலிய விதை உருளைக் கிழங்குப் பண்ணையக்கு மின் மற்றும் குழாய் நீர் இணைப்பு வழங்குதல் | - | மின்சார சபைக்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளது | |
| சவ்வு வளர்த்தல் ஆய்கூடத்தை மேம்படுத்துதல் | | தேவையான இரசாயனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | |
| 200,000G 0 விதை உருளைக் கிழங்குகள் 50% பங்களிப்பின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை | G 0 விதை உருளைக் கிழங்கின் அளவு | G 0 விதை உருளைக் கிழங்கு 179,550 | |
| G 01 பொலித்தீன் வீட்டை அண்டி நிலத்தைத் தயார்படுத்துதல் | | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | |
| 50ஓ20 பொலித்தீன் வீடொன்றை நிர்மாணித்தல் (20% பங்களிப்பின் கீழ்) | பொலித்தீன் விடுகளின் எண்ணிக்கை | பதுளை பிரதேச விவசாயி ஒருவருக்காக பொலித்தீன் வீடு 01 நிர்மாணிக்கப்பட்டுள்ளது | |

## 2.1.2 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வயற் காணிகளில் மண் பரிசோதனைகளைச் செய்து உரப் பாவனைக்கான சிபாரிசுகளைச் செய்தலும் வினைத்திறன்மிக்க உரப் பாவனையும்

ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா. மில். 100 செலவிட்ட தொகை - ரூபா மில். 98.78





**அறிமுகம்**

கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வயற் காணிகளில் மண் பரிசோதனை செய்து அக்காணிகளுக்கான உரங்களைச் சிபாரிசு செய்வதும் அதன் மூலம் அப்பிரிவுகளுக்கான பொருளாதார ரீதியில் இலாபகரமான சுற்றாடல் நட்புறவான வினைத்திறன்மிக்க உர முகாமைத் திட்டமொன்றை உருவாக்குவது இச்செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். இதன் மூலம் தேவையற்ற முறையில் உரங்கள் மண்ணில் சேர்வதை தடுக்கப்படுவதுடன் உரத்தை அதிகமாக பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை குறைக்கிறது. மேலும் இச்செயற்திட்டத்தின் மற்றுமொரு குறிக்கோளான மண் பரிசோதனை சேவையை மேலும் விரிவுபடுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் மேலும் 20 மண் ஆய்வுகூடங்ள் நிறுவப்படும். இவை உரம முகாமைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக மண் தொடர்பான ஆய்வுகள் நாடு முழுவதிலும் மேற்கொள்ள்படும்.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்/ இலக்குகள்**

கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வயற் காணிகளுக்கான மண்ணைப் பரிசோதித்து சமநிலையான சிபாரிசுகளை வழங்குதல், தேவையற்ற விதத்தில் மண்ணில் உரங்களும் ஏனைய விவசாய இரசாயனங்களும் இடப்படுவதைக் குறைத்தல், உர இறக்குமதிக்கான தேவையற்ற செலவைக் குறைத்தல், அதிகளவில் உரம் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதைக் குறைப்பதன் ஊடாக சூழல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்தல்.

**உபாய முறைகள்**

இச்செயற்திட்டம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஆய்வு நிலையங்களில் மண் பரிசோதனை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பதவியணியினரை ஒருங்கிணைத்து இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

**புதிய போக்குகள்**

- மண்ணைப் பரிசோதித்து உரங்கள் தொடர்பான சிபாரிசுகளைப் பெறுவதன் முக்கியத்துவம் தொடர்பில் வானொலி நிகழ்ச்சிகளின் ஊடாக விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் அறிவூட்டுதல்.
- பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளின் மூலம் இச்செயற்திட்டம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டிப் பயிற்சியளித்தல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- குறுகிய காலம்**
**விவசாயிகள், விவசாய ஆராய்ச்சி மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்கள், விவசாய அமைச்சு**

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**
நேரடிப் பயனாளிகள் 2,500 பேர்
மறைமுகமான பயனாளிகள் 10,000 பேர்

நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:
விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் (மண் பரிசோதனை தொடர்பாகப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது)
செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நிதி உள்நாட்டு/ வெளிநாட்டு - உள்நாட்டு

- மண் மாதிரிகள் பரிசோதிப்பதற்காக விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான 12 மண் ஆய்வுகூடங்களுக்கான இரசாயனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன.
- 20 மாவட்டங்களில் தாபிக்கப்படவுள்ள மண் ஆய்வுகூடங்களுக்கு மண் பகுப்பாய்வுச் செயற்பாடுகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களும் இரசாயன உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன
- இதுவரையில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள வயற் காணிகளில் 13,439 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்காக மண் ஆய்வுகூடங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 11,430 மண் மாதிரிகளின் பகுப்பாய்வு பூர்த்தியடைந்துள்ளது.
- கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் உரங்களைச் செய்வதற்காக பகுப்பாய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருவதுடன் குறித்த சிபாரிசுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இச்செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மண் தொடர்பான முறையான ஆய்வுக்காக விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஆய்வு நிலையங்களிலும் விவசாயக் களங்களிலும் ஆய்வுகள் துறைவாரியாக நிறுவப்பட்டுள்ளன.
- மண் மாதிரிகளைப் பெறுவது தொடர்பில் சுமார் 900 விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.
- மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்படவுள்ள மண் ஆய்வுகூடங்களுக்கான உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு குறித்த மண் பகுப்பாய்வு முறைகள் அடங்கிய கைநூலொன்று வழங்கப்பட்டுள்ளது.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- **ஒட்டுமொத்த உற்பத்தியையும், பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துதல்** - மண்ணைப் பரிசோதித்து உரங்களைச் சிபாரிசு செய்வதன் ஊடாக தேவையறற் முறையில் மண்ணில் பல்வேறு இரசாயன உரங்கள் சேர்வதைக் குறைப்பதும் அதிக உரப் பாவனையினால் போ'னை சமமின்மைகள் ஏற்படுவதனால் ஏற்படக்கூடிய பயிர் வளர்ச்சி குன்றுதல் மற்றும் ஏனைய பயிர் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் குறைவதுடன் உற்பத்திகள் பயனுறுதி வாய்ந்த முறையில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- மண்ணைப் பரிசோதித்து உரங்களை இடுவதன் மூலம் தேவையற்ற விதத்தில் உரம் மற்றும் ஏனைய இரசாயனங்கள் சேர்வது குறைவதனால் இரசாயன உரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதனால் ஏற்படக் கூடிய மண் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளைக் குறைத்தல். நாட்டின் 20 மாவட்டங்களில் மண் ஆய்வுகூடங்களை அமைப்பதன் ஊடாக குறித்த மாவட்டங்களிலேயே தமது பண் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கு விவசாயிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தல்.

**எதிர்கால முன்மொழிவுகள் / மேம்பாடுகள்:**

மண்ணைப் பரிசோதித்து உரங்கள் தொடர்பான சிபாரிசுகளைப் பெறுவதன் முக்கியத்துவம் தொடர்பில் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களின் ஊடாக விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் அறிவூட்டுவது அவசியமாகும். மண்ணைப் பரிசோதித்து உரம் தொடர்பான சிபாரிசுகளை வழங்கும் பணியை ஒரு முறை மாத்திரம் செய்யாமல் காலத்துக் காலம் செய்வது அவசியமாகும். ஆகக் குறைந்து 2 வருடங்களுக்கு ஒருமுறையாவது செய்வது அவசியமாகும். மண் பரிசோதைன நிகழ்ச்சிக்காகத் தற்போது அடிப்படைத் தரநியமங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் பல்வேறு இடைநிலை மற்றும் நுண் ஊக்கிப் பகுப்பாய்வு செயற்பாடுகளை உள்ளடக்குவது பொருத்தமானதாகும்.

### 2.1.3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்ச்சிகளின எண்ணிக்கை 27
**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 81.23 செலவிட்ட தொகை ரூ.மி. 74.24**

விவசாய அமைச்சினால் நடைமுறைப்படும் 2016-2018 மூன்று வருட தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியுடன் தொடர்புடைய வகையில் 2016 ஆம் ஆண்டில் 27 ஆய்வுச் செயற்திட்டங்களின் ஒருங்கிணைப்பு, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் 2 ஆய்வுச் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு, தேசிய விவசாய ஆய்வுத் திட்டத்தின் கீழ் 12 ஆய்வுச் செயற்திட்டங்களின் ஒருங்கிணைப்பு, விவசாயத் தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு வரிச் சலுகைகளைச் சிபாரிசு செய்தல், அமைச்சுடன் தொடர்புடைய சட்டங்களான மரங்களை வீழ்த்தும் சட்டம், மண் பாதுப்புச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புடைய சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய உணவு உற்பத்திக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான 4 துறைகளின் (இயற்கை வள முகாமை, ஆய்வு மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பு, நுகர்வோர் சுகாதாரம் மற்றும் திருப்தி) கீழ் விவசாயத் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**விவசாயத் தொழில்நுட்ப உள்ளீடுகளுக்கான வரிச் சலுகைகளைச் சிபாரிசு செய்தல்**
விவசாயத் தொழில்நுட்ப உள்ளீட்டுடன் தொடர்புடைய சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள தீர்வை, பெறுமதிசெர் வரி, மற்றும் செஸ் வரிச் சலுகைகளுக்காக கோரப்படும் போது சிபாரிசுகள் வழங்கப்படுகின்றன.

**2017 ஆம் ஆண்டு இன்று வரையில் வழங்கப்பட்ட சிபாரிசுகளின் விபரம் வருமாறு**
இறக்குமதித் தீர்வைச் சிபாரிசுகள் - 26
பெறுமதிசெர் வரிச் சிபாரிசுகள் -22
செஸ் வரிச் சிபாரிசுகள் - 105

**தாவரப் பொருள் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவதுடன் தொடர்புடையதாக சிபாரிசுக் கடிதங்கள் வழங்குதல்**

**பொப் கோன் (மனிதப் பயன்பாட்டுக்காக)**

2017 ஆம் ஆண்டில் பொப் கோன் இறக்குமதிமதிக்காக 23 கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனடிப்படையில் 750 மெற்றிக் தொன் பொப் கோனை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**சோளம் (விலங்குகளுக்கான உணவாக) இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.**
2017 ஆம் ஆண்டு விலங்கு உணவு உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்கின்ற போது உணவு ஊக்குவிப்புச் சபைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதன் ஊடாக விவசாய அமைச்சின் சார்பில் அச்செயற்பாடுகள் வழிநடாத்தப்படுகின்றன.

**(04) சட்டங்களுடன் தொடர்புடைய சட்டச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.**
**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| பிரதான துறைகள் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 2017 ஆம் ஆண்டின் நிதிச் முன்னேற்றம் :- (ரூபா.மில்) |
|---|---|---|
| **ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி** | 14 | 16.26 |
| **இயற்கை வள முகாமைத்துவம்** | 07 | 17.55 |
| **உணவுப் பாதுகாப்பு** | 05 | 28.15 |
| **நுகர்வோர் சுகாதாரம் மற்றும் திருப்தி** | 01 | 23.76 |
| **மொத்தம்** | **27** | **85.73** |

## ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் - சாராம்சம்

### 01. விசேட துறை - ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி

| நிறுவனம்/ அலகு | செயற்திட்டத்தின் பெயர் | ஒதுக்கப் பட்ட தொகை 2017 | நிதிச் முன்னேற்றம் 2017 |
|---|---|---|---|
| RRDI | நெல் உற்பத்திகளை அதிகரித்தல் | 3.6 | 3.58 |
| NRMC | வானிலை மாற்றங்களுக்கான இயைபாக்கமாக பருமல்லாக் காலங்களில் மரபுரீதியான பயிர்கள் பயிரிடப்படாத பிரதேசங்களில் பயிரிடுவதன் மூலம் உணவுப் பயிர்களின் தொடர்ச்சியான உற்பத்தியை உறுதிப்படுத்துதல். | 0.5 | 0.39 |
| HORDI | தெரிவுசெய்த காய்கறிகளின் உற்பத்தியையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தலையீடு. | 1.0 | 0.64 |
| | சூழலியல் மற்றும் உயிரியல் முறைகளுக்கு இணங்க ஒருங்கிணைந்த கிருமி நாசினி மற்றும் நோய்க் கிருமிக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துதல். | 3.0 | 2.91 |
| FRDI | பழ மரங்களில் பூச்சி முகாமை மூலம் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல் | 0.37 | 0.34 |
| | ஆரோக்கியமான மன்டரின் கன்று உற்பத்தி செய்வதற்காக சவ்வு வளர்ப்புத் தொழில்நுட்பத்தை அறிமுப்படுத்துதல் | 0.7 | 0.68 |
| | அன்னாசி, கொய்யா, யானைக் கொய்யா, கொடித் தோடை அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதற்கான பொதிகளைத் தயாரித்தல் | 1.3 | 0.71 |
| | முள் ஆத்தாப் பழம் மற்றும் ஆணைக் கொய்யா என்பவற்றில் நோய்க் கட்டுப்பாட்டுக்காகப் பாதுகாப்பான கலப்பு மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்களை ஆராய்தல். | 0.5 | 0.45 |
| FCRDS, கண்ணொருவை | பழ உற்பத்தி தொடர்பில் வானிலைக் காரணிகளின் தாக்கத்தை ஆய்வுசெய்வறத்கான செயற்திட்டம் | 1.0 | 0.97 |
| ARS, ரஹன்கலை | தெரிவுசெய்யப்பட்ட பழங்களின் (ஜமநாரங்) உற்பத்தியையும் விளைத்திறனையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தலையீடு | 0.2 | 0.19 |
| RARDC, Bandarawela | தெரிவுசெய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் (ஸ்ரோபரி) உற்பத்தியையும் விளைத்திறனையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தலையீடு | 0.2 | 0.19 |
| SCPPC SCS | காய்கறி விதைகளுக்குப் பொருத்தமான சவ்வு மறைத்தல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்து விதைகளின் களஞ்சியப்படுத்தக் கூடிய காலத்தை அதிகரித்தல். | 4.0 | 3.98 |
| FCRDI | உழுந்துப் பயிர்ச்செய்கையின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல் | 0.25 | 0.23 |
| | மிளகாய்ப் பயிர்ச்செய்கையின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல் | 1.0 | 0.98 |
| உப மொத்தம் | | 17.63 | 16.26 |

### 02. விசேட துறை - இயற்கை வள முகாமைத்துவம்

| நிறுவனம்/ அலகு | செயற்திட்டத்தின் பெயர் | ஒதுக்கப் பட்ட தொகை 2017 (ரூபா.மில்) | நிதிச் முன்னேற் றம் :- (ரூபா.மில்) 2017 |
|---|---|---|---|
| NRMC | மண் பாதுகாப்பு மாதிரிகளை அமைத்தல் | 10.0 | 8.80 |
| | மண் மற்றும் நீரின் பாதுகாப்பு மற்றும் பேணுவதற்கான முறைகளை நடைமுறைப்படுத்துதல் | 2.5 | 2.38 |
| | ஆய்வுகூடப் பகுப்பாய்வு வசதிகளை மேம்படுத்துதல் | 5.4 | 4.15 |
| | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சிக்கான திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அச்செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை வரைபடத் தகவல்கள் மூலம் இலகுவாக அவதானிப்பதை நோக்காகக் கொண்டு புவியியல் தகவல் தொகுதி தொழில்நுட்பத்தின் உதவியுடன் தற்போது காணப்படும் நிலப் பயன்பாடு தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பயிர்ச்செய்கை நிலங்களின அளவுகளை வரைபடமாக்குதல். | 2.0 | 1.27 |
| | காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கமடையும் விதத்தில் விவசாய சுற்றாடல் வலயங்களுக்கு மிகவும் பொருத்தமான பயிர்களையும் பயிர் குறிகாட்டிகளையும் அறிமுகப்படுத்துதல் | 0.1 | 0.09 |
| | நீண்ட கால காலநிலை மாற்றங்களின் அடிப்படையில் பொருத்தமான பயிர்களை அறிமுப்படுத்துதலும் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தலும் | 1.1 | 0.83 |
| SCPPC PGRC | மரபுரீதியான நெல் இனங்களை விவசாயிகளின் கள மட்டத்தில் பாதுகாத்தல் மற்றும் பண்புகளைக் குறித்தலும் | 1.0 | 0.98 |
| உப மொத்தம் | | 22.1 | 18.53 |

### 03. விசேட துறை - உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் திருப்தி

| நிறுவனம் / அலகு | செயற் திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை 2017 | நிதிச் முன் னேற்றம் 2017 | விசேட துறை |
|---|---|---|---|---|
| SCPPC | NPQS | விவசாயப் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் போது உயர் தரத்தைப் பேணுவதற்காக வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குவதற்குத் தேவையான தாவரத் தொற்று நீக்கல் தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுதததுதல். | 12.0 | 11.41 |
| | | சிறந்த விவசாய முறைகள் பின்பற்றுவதன் ஊடாக ஏற்றுமதிச் சந்தைப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல். | 10.0 | 7.701 |
| | PQS Seaport | சான்றுப்படுத்தபட்ட ஏற்றுமதிப் பயிர்களில் பழ ஈக்களை முற்றாக அழிப்பதற்கான தொற்றுநீக்கச் சிகிச்சையாக கதிர்வீச்சைப் பயன்படுத்துதல் | 3.7 | 3.63 |
| | PPS | விவசாயத் துறைக்கான ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டை ஊக்குவித்தல் | 1.8 | 1.46 |
| | PQU - Gannoruwa | கோவா மற்றும் தக்காளிப் பயிர்ச்செய்கையில் கிருமிக் கட்டுப்பாட்டுக்காக உயிரியல் விஞ்ஞானக் காரணிகளாக சேகரித்து இனப்பெருக்கம் செய்யப்படும் ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்துதல். | 4.0 | 3.95 |
| உப மொத்தம் | | | 31.5 | 28.15 |

### 04. விசேட துறை - நுகர்வோர் திருப்தி

| | | | | |
|---|---|---|---|---|
| ETC | CFAg EDC | சிறந்த விவசாய நடைமுறைகளின் ஊாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான உயர் தரத்திலான, பாதுகாப்பான விவசாய உற்பத்திகளை வழங்குவதற்கான இயந்திரங்கள் | 27.8 | 23.76 |

## அறுவடைக்குப் பிந்திய நிலை தொடர்பான நிறுவனத்தின் ஆய்வுச் செயற்திட்டங்கள்

| இலக்கம் | செயற்திட்டம் | ஒதுக்கப் பட்ட தொகை ரூபா.மில். | 2017.12.31 இல் உள்ளவாறான பௌதிக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் (பொறுப்புக்கள் மற்றும் வரவுகள் அடங்கலாக) | |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா. மில். | (%) |
| 01 | செயற்கை பங்கசு நாசினிகளுக்கான ஒரு மாற்றீடாக தவிட்டு சிலிக்கனைப் பயன்படுத்தி மிளகாய்ச் செடிகளின் அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்குப் பின்னரான நோய்களைக் குணப்படுத்துதல் | 1.4 | 2017 ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்படட செயற்பாடுகளில் 95% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கிளிக்கன் நாசினியை இலைகளில் வைத்து நெல் நோய்களைக் குணப்படுத்தவற்கான சாத்தியம் அதிகரிப்பதாக அவதானிக்கப்பட்டது. | 1.28 | 91.7 |
| 02 | உணவு உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் எண்ணெய்களில் பிளாஸ்டிக் தன்மையினால் ஏற்படும் தீய விளைவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக முறையான விஞ்ஞானபூர்வமான ஆய்வு முறையொன்றைக் கட்டியெழுப்புதலும் அதன் முலம் உணவுகளில் சேரும் அந்த இரசாயன ஆக்கக்கூறுகளைத் தீர்மானித்தல். | 1.01 | 2017 ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டம் நடைபெற்று வருகின்றது. | 0.61 | 60.0 |

## மரங்களை வீழ்த்துதல் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்குவதை இலகு-ப்படுத்தும் செயற்பாட்டின் முன்னேற்றம்

2017 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்

| தொடர் இலக்கம் | திகதி | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பிப்பதற்கான காரணம் | விண்ணப்பித்துள்ள பலா/ ஈரப்பலா மரங்களின எண்ணிக்கை | அனுமதி வழங்கப்பட்ட பலா மரங்களின எண்ணிக்கை | நடப்பட்ட பலாக் கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2017.08. 14 | மாத்தறை | திக்குவல்லை | ஆடைத் தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கான நிலத்தைத் தயாரிபடுத்துவதற்குத் தடங்கலான முறையில் அமைந்துள்ளமை | 20 பலா மரங்கள் | 20 பலா மரங்கள் | 40 |
| 02 | 2017.07. 17 | களுத்துறை | மில்லனிய | நோய்க்கு மருத்துவம் செய்வதற்காகப் பணம் பெறுவதற்காக | 17 பலா மரங்கள் | 17 பலா மரங்கள் | - |
| 03. | 2017.11. 30 | குருநாகல் | பொல்கஹவலை | மத்திய கடுகதிப் பாதைச் செயற்திட்டத்திற்காகச் சுவீகரிக்கப்பட்ட ஒரு காணியாக உள்ளமை. | 22 பலா மரங்கள் | 22 பலா மரங்கள் | - |
| 04. | 2017.07. 07 | மாத்தளை | ரத்தோட்டை | சுண்ணாம்புக் கல் உயர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஆபத்தாக அமைந்துள்ளமை | 23 பலா மரங்கள் 02 ஈரப்பலா மரங்கள் | பலாக் கன்றுகளின் நடுகை பலவீனமானதாக உள்ளமையினால் இது வரையில் அனுமதி வழங்கப்படவில்லை. | 50 (இவற்றில் 14 பலாக் கன்றுகள் இறந்துள்ளன) |
| 05. | 2017.11. 22 | கேகாலை | கேகாலை | தூய எரிசக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறனை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் கீழ் துல்ஹிரிய - கேகாலை 132 கி.வோல்ட் மாற்றல் வீதியை நிர்மாணிப்பதற்குத் தடையாக அமைந்துள்ளமை | 31 பலா மரங்கள் | 31 பலா மரங்கள் | - |
| 06. | 2017.06. 15 | கேகாலை | ருவான்வல்லை | சனீக்ரொஃப்ட் தோட்டத்தில் உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஆபத்தாக அமைந்துள்ளமை | 17 பலா மரங்கள் | பலாக் கன்றுகளின் நடுகை பலவீனமானதாக உள்ளமையினால் இது வரையில் அனுமதி வழங்கப்படவில்லை. | 51 (இவற் றில் அதிக மான கன்று கள் இறந்துள்ளன) |
| 07. | 2017.12. 28 | கேகாலை | தரணியகலை | மியனவிட்டை தோட்டத்தில் இறப்பர் மீள் பயிர்ச்செய்கைக்குத் தடையாக அமைந்துள்ளமை | 72 பலா மரங்கள் | கள அவதானிப்பு அறிக்கை செயலாளரின் அனுமதிக் காகச் அனுப்பப்பட்டுள்ளது | 227 |
| 08. | 2018.01. 11 | பதுளை | பண்டாரவளை | அகாவுட் பயிர்ச்செய்கைக்கு தடையாக அமைந்துள்ளமை | 23 பலா மரங்கள் | கள அவதானிப்பு அறிக்கை செயலாளரின் அனுமதிக் காகச் அனுப்பப்பட்டுள்ளது | 50 |

*2017.01.27 ஆந் திகதி மாத்தறை கொடகமை முதல் அம்பாந்தோட்டை வரையான தென் கடுகதிப் பாதை நெடுகிலுமான செயற்திட்டத்திற்காகச் சுவீகரிக்கப்பட்ட காணிகளில் 15 இற்கும் மேற்பட்ட பலா மரங்கள் வீழ்த்தப்படும் போது பலா மரங்களை அகற்றுவதற்கு அனுமதி வழங்குவதற்கு அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

## 2.1.4 சிறந்த விவசாய நடைமுறைகளின் ஊாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான உயர் தரத்திலான, பாதுகாப்பான விவசாய உற்பத்திகளை வழங்குவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குதல்

ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா 27.8
செலவிட்ட தொகை ரூபா. 23.76




### அறிமுகம்

சந்தையிலுள்ள விவசாய உற்பத்திகள் பாதுகாப்பும் தரமும் குறைந்தவையாக இருப்பதனால் நுகர்வோருக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்த்து விவசாயிகளின் பொருளாதார மட்டத்தை மேம்படுத்துவதற்கு இச்செயற்திட்டம் உதவியாக அமையும்.

### செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:

- சிறந்த விவசாய நடைமுறைகளின் ஊடாக உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளுக்கான விவசாய உற்பத்திகளின் தரத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்.
- உள்நாட்டுச் சந்தைக்கான விவசாய உற்பத்திகளின் தரத்தையும் பாதுகாப்பான தன்மையையும் உறுதிப்படுத்தும் வழிமுறையை மென்மேலும் பலப்படுத்துதல்
- உள்நாட்டுச் சந்தைக்கான பசுமையானதும் தயாரிக்கப்பட்டதுமான உணவு உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக நில / விதை மட்டத்திலிருந்து நுகர்வோர் வரையான வழங்கல் மற்றும் பெறுமதி சேர்ப்புச் சங்கிலியை வழிநடாத்துதல்.
- உள்நாட்டு சந்தைக்கான பசுமையானதும் தயாரிக்கப்பட்டதுமான உணவு உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக நில / விதை மட்டத்திலிருந்து தேசிய தாவரத் தொற்று நீக்கச் சேவை வரையான வழங்கல் மற்றும் பெறுமதி சேர்ப்புச் சங்கிலியை வழிநடாத்துதல். சிறந்த விவசாய நடைமுறைகள் உறுதிப்படுத்தப்பட்ட விவசாய உற்பத்திப் பண்ணைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- இலங்கைக்கு ஏற்ற சிறந்த விவசாய நடைமுறைகளைச் சான்றுப்படுத்தும் வழிமுறையொன்றையும் குறியீட்டு முறைமையொன்றையும் உருவாக்குதல்
- இத்துறையுடன் குறித்த அனைத்துத் தரப்பினருக்கும் இடையில் காணப்படும் தகவல் இடைவெளியை நிரப்புதல்

### உபாய முறைகள்

- அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளின் ஊடாக சிறந்த தரத்திலான, பாதுகாப்பான விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்வது தொடர்பில் விவசாய அறிவூட்டல்
- சிறந்த விவசாயக் கைத்தொழில் நடைமுறைகளுக்கான தரங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்

செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் 2016 2018

செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம்

பங்காளர்கள் - நாடு முழுவதிலுமுள்ள விவசாயிகள்

நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**




- GAP சான்றிதழ் பெற்ற 200 பழ மற்றும் காய்கறிப் பண்ணைகளை உருவாக்குதல் - 146 பண்ணைகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- நாடு முழுவதிலும் 25 மாதிரிப் பண்ணைகளை உருவாக்குதல் - 22 பண்ணைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- GAP நிகழ்ச்சி தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவூட்டுவதற்காக 750 நிகழ்ச்சிகளும் 520 பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.
- GAP நிகழ்ச்சியை நடாத்தும் பிரதான நிலையத்திற்கும் பிராந்திய நிலையங்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குதல் - மாவட்ட அலுவலகங்களுக்கு 25 மடிக் கணினிகளும் மேசைக் கணினியொன்றும், அச்சுப் பொறியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- சான்றுப்படுத்தற் சபையை முறையாக ஒழுங்கமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- GAP சான்றிதழ் பெற்ற பண்ணைகளுக்கான தரவுத் தொகுதியொன உருவாக்குதல் - 1900 வர்த்தகப் பண்ணைகளுக்கான தரவுகள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டு உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.
- 60 ஊடக நிகழ்ச்சிகளின் ஊடாக வெற்றியடைந்த GAP சான்றிதழ் பெற்ற பண்ணைகள் தொடர்பான தகவல்களை விளம்பரப்படுத்துதல்.
- ஏற்றுமதி செய்யப்படும் பழவகைகளும் காய்கறிகளும் GAP தரநியமங்களுக்கு ஏற்ப இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக 2308 பழ மற்றும் காய்கறிக் களஞ்சியங்கள் ஏற்கனவே பரிசோதிக்கப்பட்டுள்ளன.
- நெல் மற்றும் வயற் பயிர்களுக்கான தரநியமங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

இலங்கையில் விவசாய உற்பத்திகளின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் சிறந்த விவசாய நடைமுறையின் GAP கீழ் சான்றுப்படுத்துவதன் ஊடாக மக்களின் மனப்பாங்கை மாற்றுதல்.

விவசாய இரசாயனங்களின் பொருத்தமற்ற பாவனையைக் குறைத்தல்

- **சமூகத் தாக்கங்கள்**

இலங்கையில் வாழும் மக்களுக்காக விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசுகளின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் சுகாதாரப் பாதுகாப்பான, தரமான உணவு வழங்கலின் ஊடாக ஆரோக்கியமான மக்களை உருவாக்குதல்

- **பொருளாதாரத் தாக்கங்கள்**

சுகாதாரப் பாதுகாப்பான, தரம்வாய்ந்த விவசாய உற்பத்திகளை (GAP உற்பத்திகளை) ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுத்தல்

GAP உற்பத்தியின் ஊடாக உள்நாட்டு விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் சிறந்த வருமானம் கிடைத்தல்.

- **குடிமக்களுக்கு**

சுகாதாரப் பாதுகாப்பான, தரம்வாய்ந்த உணவை நுகர்வதன் ஊடாக ஆரோக்கியமான மக்களை உருவாக்குதலும் நாட்டின் ஒட்டுமொத்த மக்களினதும் போ'க்கு மட்டத்தை மேம்படுத்துதலும்

## 2.1.5 உள்ளீட்டு முகாமைச செயற்திட்டத்தின் கீழ் பண்ணைகளை இயந்திரமயமாக்குதல்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 54.22 செலவிட்ட தொகை ரூ.மி. 53.44**

**அறிமுகம்**

மனித ஊழியப் பற்றாக்குறைக்கான சிறந்த மாற்றீடாக விவசாய இயந்திரமயமாக்கலைக் குறிபபிட முடியும். உற்பத்திகளின் தரத்தையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்தும் ஆற்றல் விவசாய இயந்திரங்கள் மூலம் கிடைக்கும். நேரம் குறைதல், செலவு குறைதல், ஊழியத்திற்கான தேவை குறைதல், செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் களைப்புக் குறைத்தல் என்பன இயந்திரமயமாக்கலின் பிரதான பயன்களாகும். இயந்திரமயமாக்கல் தற்போதைய பரம்பரையினரின் உள்ளத்தைக் கவரக்கூடியதாகும். இயந்திரமயமாக்கலை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் மகா இலுப்பல்லமைப் பண்ணை இயந்திர ஆய்வு நிலையம் விசேட வகிபாகத்தை நிறைவேற்றுகின்றது. அச்யெுசயற்பாடுகளில்,

- விவசாய இயந்திரமயமாக்கலுக்கான ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- விவசாய இயந்திரங்களைப் பரிசோதித்து தரச் சான்றிதழ் வழங்குதல்
- தொழில்நுட்ப ரீதியில் விவசாய இயந்திரங்களைப் பரவலாக்குதல்
- விவசாய இயந்திரமயமாக்கலின் புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் எமது நிறுவனம் விவசாய இயந்திரமயமாக்கல் செயற்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தல்.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளுக்கு பரவலாகக் காணப்படும் விவசாய இயந்திரங்களை வழங்குதலும் உபகரணங்கள் தொடர்பான அறிவை வழங்குதலும்
- குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளுக்கு விவசாய இயந்திரமயமாக்கலை அறிமுகப்படுத்துதல்
- குறிப்பாகப் பாரியளவிலான, நடுத்தர அளவிலான, சிறியளவிலான விவசாயிகளின் பயிர் நிலங்களில் விவசாயப் பருவங்களில் இயந்திரமயமாக்கலை மேம்படுத்துதல்
- விவசாய உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல்
- விவசாய உற்பத்திகளின் செலவைக் குறைத்தல்
- விவசாய இரசாயனப் பொருட்களின், உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல்
- உள்நாட்டு விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்பவர்களை உருவாக்குவதற்கு உதவுதல்

**உபாய முறைகள்**

- நெற் செய்கை மேம்படுத்துவதற்காக இயந்திரமயமாக்கலைப் பயன்படுத்துதல்
- சோளச் செய்கையை மேம்படுத்துவதற்காக இயந்திரமயமாக்கலைப் பயன்படுத்துதல்
- சோயா செய்கையை மேம்படுத்துவதற்காக இயந்திரமயமாக்கலைப் பயன்படுத்துதல்
- பயறுச் செய்கையை மேம்படுத்துவதற்காக இயந்திரமயமாக்கலைப் பயன்படுத்துதல்
- விவசாய இயந்திர ஆய்வு சான்றுப்புடும் செயற்பாடுகளை விரிவுபடுத்துதலும் வசதிகளை மேம்படுத்துதலும்
- விவசாய இயந்திரமயமாக்கல் ஆய்வு நிலையத்தின் பணிகளை மேம்படுத்துதல்
- புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குதலும் பிரபல்யப்படுத்துதலும்

**புதிய போக்குகள்**

- நெற் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக நாற்று நடும் இயந்திரங்கள், எரிசக்தியின் மூலமான கட்டுப்படுத்தல் இயந்திரங்கள், லேசர் மட்டமாக்கல் இயந்திரங்கள், வரம்பு கட்டும் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்.
- சோளப் பயிர்ச்செய்கையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக களைக் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், அதிக கொள்ளளவு கொண்ட அறுவடை இயந்திரங்கள், வேலி போடும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

- சோயாப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக நான்கு சக்கர ட்ரக்டருன் இணைத்து இயக்கப்படும் விதை தூவி சோயா அறுவைட இயந்திரங்கள், களைக் கட்டுப்பாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்
- பயறுப் பயிர்ச்செய்கையின் முன்னேற்றத்திற்காக இரண்டு சக்கர ட்ரக்டருடன் இணைத்து இயக்கப்படும் விதை தூவும் விதை உடைக்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்
- விவசாய இயந்திர ஆய்வு நிலையத்தின் ஆய்வு மற்றும் பரிசோதனைச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக,

  - மேட்டுநிலப் பயிர்களையும் கள மற்று சேற்றுப் பயிர்களையும் கள நிலங்களையும் சேதனப் பொருட்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்தல்
  - இயந்திரங்களின் தகைமையைப் பரீசோதிக்கும் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் களங்களைச் சுற்றி வேலியொன்றை அமைத்தல்
  - புதிய ஆய்வுகூடத்திற்கான புதிய ஆய்வு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
  - நிறுவனத்தின் கேட்போர்கூடத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்
  - நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்** - ஆரம்பிக்கும் வருடம் 2016 முடிவடையும் வருடம் - 2018

**செயற்திட்டம்** (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம்

**பங்காளர்கள்**:விவசாய அமைச்சின் அனைத்துப் பிரிவுகளினதும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**
பயனாளிகளின் எண்ணிக்கையை எவ்வளவு என்பதை நேரடியாகக் கூற முடியாதுள்ளது. இலங்கை முழுவதிலும் பயனாளிகள் பரந்து காணப்படுகின்றனர்

**நேரடிப் பயனாளிகள் - விவசாயிகள்**
மறைமுகமான பயனாளிகள் - விவசாய உற்பத்தியாளர்கள், விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவோர், விவசாய உற்பத்தித் தொழிற்சாலைகளின் ஊழியர்கள்

**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு**

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

**1. பின்வரும் விவசாய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.**
பின்னால் செல்லும் நாற்று நடும் இயந்திரங்கள் - 5
மின்சக்தியினால் களை அகற்றும் இயந்திரங்கள் - 10
லேசர் மட்ட இயந்திரங்கள் - 2
வேலி அமைக்கும் இயந்திரங்கள் 1
குஆசுஊ தயாரிக்கபட்ட 4 சக்கர ட்ரக்கருடன் இணைக்கப்பட்ட தூவும் இயந்திரங்கள் - 3
ரொட்டரி ஊடு பண்படுத்துகை உபகரணங்கள் - 6
உயர் கொள்ளளவு கொண்ட நாற்று நடும் இயந்திரங்க் - 2
2 சக்கர சோள அறுவடை அடிக்கும் இயந்திரங்கள் - 6
குஆசுஊ தயாரிக்கபட்ட 4 சக்கர ட்ரக்கருடன் இணைக்கப்பட்ட தூவும் இயந்திரங்கள் - 4
சோயாவை தோல் அகற்றும் இயந்திரங்கள் - 2
ரொட்டரி ஊடு பண்படுத்துகை உபகரணங்கள் - 8
மின்சாரப் பலகணி கொண்ட தூவும் இயந்திரங்கள் - 10
துதானியங்களுக்கு மெருகூட்டித் தயார்படுத்தும் இயந்திரங்கள் 22

**2. தாழ் நில மற்றும் உயர் நில புனரமைப்புச் செயற்பாட்டு ஆய்வுகள் மற்றும் ஆய்வுக் களங்கள் -**

- ஓடை நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது, கூட்டு உரங்கள், உங்களுக்கான பைகள், எரிபொருள் கொள்வனவு செய்தல்

**3. புதிய ஆய்வுகூடமொன்றை அபிவிருத்தி செய்தலும் பரிசோதன ஆய்வுகூடத்திற்கு நவீன ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தலும்**

புதிய ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (கணினி - 1, ஆய்வுகூட உபகரணங்கள், வி'வாயு எதிர்ப்புத் தலைக்கவசும், ஆய்வுகூட உபகரணங்கள், ஆய்வுகூடக கதிரைகள் - 20, 1, அல்ட்ரா சோனிக் கதிர் பரிசோதனை இயந்திரம், ஹைட்ரோலிக் கதவுகள், அச்சுப் பொறி - 1, மின்னுயர்த்தி - 1, ஆய்வுகூட அலுமாரி 1, மின்சக்தி கொண்ட பண் ஈரமாக்கி - 1, இரசாயன அலுமாரி, தொலைநகல் இயந்திரம் - 1)

FMRC மாநாட்டு மண்டபத்தின் வசதிகளை புனரமைத்தல் -

மாநாட்டு மண்டபம் நிர்மாணித்தல் (புஷ்பமாலா நிர்மாணக் கம்பனி)

பூர்த்திசெய்யப்பட்ட்ட மாநாட்டு மண்டபத்தை நவீனமயப்படுத்தல் (அலுமினியம் வேலைகள்)

மாநாட்டு மண்டபத்திற்காகக் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள்

(புரொஜெக்டர் - 1, பலக்கை 1, வோட்டர் டிஸ்பென்சர் - 1, புரொஜெக்டர் திரைகள் -1, ஜெனரேட்டர் - 1, கெமரா - 1, மொனிட்டர் -1, கதிரைகள் - 60, மடிக் கணினி - 1, ஓடியோ உபகரணத் தொகுதி -1)

சிவலினுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்தல்

முழுமையான சில திரைகளைப் பொருத்துதல்

தற்போது காணப்படும் லொபி பிரதேசத்தை நவீனமயப்படுத்தல்

**5. FMRC உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி**

காற்றோட்டத்தை அமைத்து முடித்தல்

தற்போது காணப்படும் குளியலறையில் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

காற்றொட்டத் தடுப்புக்களைப் பொருத்துதல்.

FMRC இல் 2 நுழைவாயிற் கதவுகள் பொருத்துதல்.

தற்போது காணப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களில் திருத்தவேலைகளைப் பூர்த்தி செய்தல்.

பிரதிப் பணிப்பாளரின் அறைக்கு அடுத்துள்ள குளியலறையைத் தயார்படுத்தி பூர்த்தி செய்தல்

அங்குல் வீ பெதும் தயாரிப்பை பூரணப்படுத்துதல்

விடுதி மற்றும் அலுவலகக் கட்டடத்தைப் பூர்த்தி செய்தல்

ஆண்களுக்கான மலசலகூடம் நிர்மாணித்தல்

வாகனத் தரிப்பிடமொன்றை நிர்மாணித்தல்

நிலத்தை தயார்படுத்துதல் சுற்றுப்பகுதியை தயார்படுத்தி முடித்தல்

**6. விவசாய இயந்திரமயமாக்கலுக்காகப் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்**

ஆய்வு ட்ரக்டர் 1, விதை உற்பத்திக் கைநூல்கள் 50, கௌபி துண்டாக்கும் இயந்திரங்கள் 21, நிலம் தயார்படுத்தும் இயந்திரம் 1 என்பன கொள்வனவு செய்யப்பட்டன.

**7. குஆசுஊ ஆய்வுச் செயற்பாடுகள் தொடர்பான ஆய்வுச் செயற்பாடுகள்**

சுழலியொன்றைக் கொண்ட 2 ட்ரக்டரொன்று, 1 கரடு முரடான சக்கரம் என்பன வேலைத்தளத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்டன.

**8. விவசாய இயந்திரமயமாக்கல் மற்றும் பொதுப் பயன்களுக்காக சூரிய சக்தியை அறிமுகப்படுத்துதல்**

சூரிய கலங்கள் மற்றும் சோய பம்பி பொருத்தப்பட்டுள்ளன.

உள்ளக வயர் தொகுதியை மறுசீரதைத்தல்

CEB கட்டணங்கள்

மின்சார உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பணி பூர்த்தியடைந்துள்ளது.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும், சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்:**

மேலே குறிப்பிட்ட இயந்திரங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பயிர்ச் செய்கைகளின் ஒட்டுமொத்த உற்பத்தி 10மூ - 15மூ சதவீதத்தால் அதிகரிக்கும். ஊழியத் தேவையைப் போன்று பயிர்ச் செய்கைக்கான விதைத் தேவையும் பாரியளவில் குறைவடையும். இதற்கு இணங்க பயனுறுதித்தன்மை அதிகரிக்கும். மேலும் குறைந்த படிமுறைகளின் கீழ் அதிக உற்பத்தியைப் பெற முடியும். உற்பத்தியின் தரம் உயர்வதுடன் விவசாயிகளுக்கு போட்டித் தன்மை கொண்ட சந்தையொன்றும் விளைச்சலுக்கு சிறந்த விலையும் கிடைக்கும். இதனால் விவசாயிகளின் வருமான மட்டம் அதிகரிக்கும்.

விவசாய இயந்திரப் பயன்பாட்டின் காரணமாக விவசாய இரசாயனப் பொருட்களினதும் உர வகைகளினதும் பயன்பாடு குறைவடையும். மேலும் இயந்திரங்களை அறிமுகப்படுத்திப் பரவலாக்கும் செயற்பாடுகளுக்கு தனியார் துறையினரின் பங்களிப்பும் கிடைக்கும்.

அதனால், இயந்திரமயமாக்கலின் ஊடாக குறைந்த நிலப் பரப்பில் அதிக வெளியீட்டைப் பெற முடியும்.

உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி



## 2.1.6 வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சி மற்றும் தேசிய தேனி வளர்ப்புச் செயற்திட்டம்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 155**
**செலவிட்ட தொகை ரூ.மி. 126.8**

**அறிமுகம்**

களுத்துறை



குடும்பத்தின் உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு 25,000 கிராமங்களில் ஐந்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்வது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். தன்னிறைவு வீட்டுத்தோட்டமொன்றை உருவாக்கி குடும்பத்தின் உணவு மற்றும் போஷாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் நாட்டின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் உதவியாக அமையும். இதன் போது வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் குறுக்கு மற்றும் நெடுக்கு இடங்களைப் பயன்படுத்தி நிலத்தின் பயனுறுதியை மேம்படுத்த முடியும் என்பதுடன் உணவுப் பயிர்களின் ஊடாக நிலத்தை அழகுபடுத்தும் முறையினை அறிமுகப்படுத்துவதன் ஊடாக வீட்டுத் தோட்டங்களைப் பரவலாக்குவதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- “சிதமு” விவசாய மகளிர் சங்கங்களின் மூலம் பெண்களை ஊக்குவித்தலும் சுயதொழில்களை விருத்தி செய்தலும்
- குடும்பத்தின் உணவு மற்றும் போசாக்குத் தேவைகளை நிறைவேற்றுதல்
- மக்களின் உணவு நுகர்வு முறைகளை மேம்படுத்துதல்
- குடும்ப அங்கத்தவர்களின் உள மற்றும் சுகாதார நிலைமை விருத்தியடைதல்
- நிலத்தின் பயனுறுதித்தன்மையை மேம்படுதலும் சூழல் பாதுகாப்பு பேணப்படுதலும்
- உணவுப் பயிர்கள் ஊடாக நிலத்தை அழகுபடுத்துவதன் மூலம் வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்துதல்

**உபாய முறைகள் புதிய போக்குகள்**

- இச்செயற்திட்டம் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் 525 கமநல சேவைகள் நிலயங்களினூடாக 10500 கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.
- ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தலா 20 பெண் பயனாளிகளைத் தெரிவுசெய்து “சிதமு” மகளிர் விவசாயச் சங்கங்களை அமைத்து அவற்றின் ஊடாகப் பயன்களை வழங்குதல்
- நாடு முழுவதிலும் உள்ள தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு பழக் கன்றுகளையும் காய்கறி விதைத் தொகுதிகளையும் வழங்குதல்
- 10,500 கிராமங்களில் 10,500 சிதமு விவசாய மகளிர் சங்கங்களை அமைத்தல்
- கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இந்த செயற்திட்டத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்
- செயற்திட்டத்துடன் தொடர்புடைய டிப்ளோமாதாரி விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் (வி.ஆ.உ.உ) களுக்கும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வி.ஆ.உ.உ பிரிவின் வி.ஆ.உ.உதவியாளர்களுக்கும் வீட்டுத் தோட்டச் செய்கை தொடர்பில் பயிற்சியளித்தல்.
- பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தல்
- ஒவ்வொரு மகளிர் விவசாயச் சங்க உறுப்பினருக்கும் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்திக் கைநூல்கள் வழங்குதல்

- கமநல சேவைப் பிரிவு மட்டத்தில் வீட்டுத்தோட்டச் செய்கை தொடர்பான போட்டிகளை நடாத்துதல்
- “சிதமு” மகளிர் விவசாயச் அமைத்து அச்சங்கங்களின் ஊடாக வீட்டுத்தோட்டச் செய்கைச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

**ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் பொருட்கள்**

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிப் பெண்களை வீட்டுத்தோட்டச் செய்கைக்காக ஊக்குவிப்பதற்காக மகளிர் விவசாயச் சங்சங்கள் ஊடாக ஒரு வீட்டுக்கு விவசாய காலநிலை வலயங்களுக்குப் பொருத்தமான முறையில் தரம்வாய்ந்த ரூபா 550.00 பெறுமதியான 5 பழக்கன்றுகள் கொண்ட தொகுதியொன்று வழங்கப்படும். இந்தப் பழக் கன்றுத் தொகுதியில் பட்செய்யப்பட்ட 3 பழக்கன்றுகளும் விதைக் கன்றுகள் 2 உம் உள்ளடங்கும். இவை தவிர பயனாளிகளுக்கு காய்கறி விதைத் தொகுதிகளையும் வழங்குதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம்**
**பங்காளர்கள்: விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள், பொது மக்கள், விவசாயிகள், விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், தேசிய உணவு மேம்பாட்டுச் சபை

**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு நிதி**

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

- அரும்பொட்டப்பட்ட செய்யப்பட்ட கன்றுகள் 03, விதைக் கன்றுகள் 2 அடங்கிய 5 பழக்கன்றுகளைக் கொண்ட 128,800 தொகுதிகள் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
- தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு 580,991 வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை விதைப் பக்கற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
- செவண மாதிரிக் கிராமங்களுக்கு 2264 பழக் கன்று பகிர்ந்தளிக்கப்பட்டன.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம் பெண்கள்**

- பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- ஒட்டுமொத்த உற்பத்திகளினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்
- நிலப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல்

கம்பஹா



## 2.1.6.2 தேசிய தேனி வளர்ப்புச் செயற்திட்டம்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 15**
**செலவிட்ட தொகை ரூ.மி. 11.19**

தேனி வளர்ப்பு கிராமங்களின் பயனாளிகளுக்கான பயிற்சி





**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள், இலக்குகள்:**

- தெனி வளர்ப்பை வீட்டுத் தோட்ட மட்டத்தில் பிரபல்யப்படுத்துவதன் ஊடாக பயிர்களின் இனப்பெருக்கத்தையும் தேன் உற்பத்தியையும் அதிகரித்தல்
- ஒரு ஆரோக்கியமான உணவாகிய தேனை குடும்பத்தின் நுகர்வுக்குப் பயன்படுத்துவதைத் தூண்டுதல்
- இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் மத்தியில் தேனி வளர்ப்பை பிரபல்யப்படுத்துதல்
- தெனி வளர்ப்புத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்
- தெனி வளர்ப்பு அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

**உபாய முறைகள்**

- 25 மாவட்டங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விதத்தில் 110 தேனி வளர்ப்புக் கிராமங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக 2200 பயனாளிகளை தேனி வளர்ப்பில் ஈடுபடுத்துதல்.
- தேனி வளர்ப்பு தொடர்பான நவீன தொழில்நுட்ப முறைகள் தொடர்பில் கிராமிய மக்களுக்கு அறிவூட்டுதலும் பரீட்சயத்தை ஏற்படுத்துதலும்
- கிராமிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பேரை தேனி வளர்ப்புத் தொழில்நுட்பவியலாளர்களாகப் பயிற்றுவிப்பதன் ஊடாக கிராமிய மட்டத்தில் தொழில்நுட்பத்தை பரவலாக்குதல்
- அதிக உற்பத்தியைக் கொண்ட தேனிக் குடியிருப்புக்களைப் பரப்பும் முறைகளை அறிமுகப் படுத்துதல்
- தேனி வளர்ப்பு தொடர்பில் பயிற்சியளிப்பதற்காக விவசாயத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனங்களினுள் வசதிகளை வழங்குதல்

**புதிய போக்குகள்**

- தேனி இராணிகளை இனப்பெருக்கம் செய்யும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்
- வீட்டுத்தோட்டத்தில் மகரந்தச் சேர்க்கையை அதிகரிப்பதற்காக தேனிக் குடியிருப்புக்களைப் பேணி வருதலும் அதன் மூலம் குடும்பத்தின் நுகர்வுக்காக தேன் உற்பத்தி செய்தலும்
- தேனி வளர்ப்புப் பெட்டிகளை தயாரித்தல், குடியிருப்புக்களை உருவாக்குதல் என்பவற்றை ஊக்குவித்தல்

**செயற்திட்ட ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017 ஜனவரி முதல் 2017 டிசம்பர் வரை**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- குறுகிய காலம்**

**பங்காளர்கள்:**

- மத்திய மற்றும் மாகாண விவசாயத் திணைக்களம்
- இலங்கை மகாவலி அதிகாரசபை
- தேனி வளர்ப்பில் ஈடுபடுகின்ற கிராமிய மக்கள்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடிப் பயனாளிகள் (தேனி வளர்ப்பில் ஈடுபடுகின்ற விவசாயிகள்) 2200
- மறைமுகமான பயனாளிகள் (தேனி வளர்ப்பு உபகரண/ குடியிருப்பு உற்பத்தியாளர்கள்) - 100

**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு நிதி**
**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம் - 2017**

- தேனி வளர்ப்புக் கிராமங்களை உருவாக்குதல் - 107 தேனி வளர்ப்புக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் 1,735 தேனி வளர்ப்புப் பெட்டிகளும் 1570 புகை அடிக்கும் கருவிகளும் 1,353 தேனிக் குடியிருப்புக்களும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.
- பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் - விவசாயிகளுக்கான 100 பயிற்சிகளும் உத்தியோகத்தர்களுக்கான 8 பயிற்சிகளும் நடாத்தப்பட்டன.
- தனியார் தேனி வளர்ப்புத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல் - பிந்துனுவெவ தேனி வளர்ப்பு அலகுக்காக 200 தேனி வளர்ப்புப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றில் 100 தேனி வளர்ப்புப் பெட்டிகள் தனியார் தேனி வளர்ப்புத் தொழில்முயற்சியாளர்கள் 10 பேருக்கு இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது
- பிந்துனுவெவ தேனி வளர்ப்பு அலகில் புதிய விரிவுரை மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பிந்துனுவெவ தேனி வளர்ப்பு அலகில் புதிய விரிவுரை மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான 50 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- தேனி வளர்ப்புத் தினமொன்றை நடாத்துதல் - இதற்காக தேனி வளர்ப்புக் கைநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன
- பிந்துனுவெவ தேனி வளர்ப்பு அலகிற்குத் தேவையான பலகைகளைக் கொள்வனவு செய்தல் - பிந்துனுவெவ தேனி வளர்ப்பு அலகிற்குத் தேவையான பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்

- கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதலும்.

விவசாய ஆலோசகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் - பிந்துனுவெவ





தேனிலையான் தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சி - பிந்துனுவெவ





மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் தேனிலையான் நிபுணர்களுக்கான பயிற்சி - வாரியப்பொலை





## எதிர்கால முன்மொழிவுகள் அல்லது மேம்பாடுகள்

- செயற்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள கிராமங்களை மேலும் அபிவிருத்தி செய்தலும் பதிவு செய்தலும்.
- தேன் பாணியைச் சேகரிப்பதற்கும் சந்தைப்படுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்.
- தேனி வளர்ப்புக்கான சாத்தியப்பாடுகளைக் கொண்ட பிரதேசங்களில் வர்த்தக மட்டத்திலான தேனி வளர்ப்பாளர்களை உருவாக்குதல்

தேனிலையான் தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சி - பிந்துனுவெவ






## 2.1.7 2000 பழச் செய்கைக் கிராமங்களை உருவாக்குதல்

**ஒதுக்கப்பட்ட தொகை 184.25 மில்லியன் ரூபா**
**செலவிட்ட தொகை 75.3 மில்லியன் ரூபா**

**குறிக்கோள்:**

- நிலத்தைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்துதலும் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தலும்
- மக்களின் போஷாக்கு குறைபாட்டைக் குறைப்பதற்காக உள்நாட்டில் குறைவாகப் பயன்படுத்தப்படும் பழ வகைகளை ஊக்குவித்தல்
- பழச் செய்கை சார்ந்த பெறுமதிசேர் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படுதல்.

**உபாய முறைகள்:**

- 2017 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள 24 மாவட்டங்களில் 2,000 பழச் செய்கைக் கிராமங்களை உருவாக்குதல் (கொழும்பு மாவட்டத்தைத் தவிர)
- கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் மூலம் கிராமங்களை அடையாளம் காணுதல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட பழக் கன்று உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கும் விதத்தில் பெறுகைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- 2017 டிசம்பர் மாதமளவில் பயனாளிகளுக்கு பழக் கன்றுகளை வழங்குவதற்குத் திட்டமிட்டதன் மூலம் பெரும் போகத்தில் மழைவீழ்ச்சியுடன் பழக் கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**
**பயனாளிகள் - 18,459**

கொழும்பு மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களுக்கான பழச் செய்கைக் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுக்கு உட்பட்ட வகையில் பழக்கன்றுகளைப் பெறுவதற்கு விலைமனுக்கள் கோருவதற்கு பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பழப் பயனாளிகளுக்கு உரிய கமநல அபிவிருத்தி நிலையங்களின் ஊடாக பழக் கன்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பிரசைகள் வலுவூட்டப்பட்டுள்ள முறை**

பழங்கள் இலகுவாகக் கிடைப்பதன் மூலம் மக்களின் போ'ாக்கு மட்டம் அதிகரிப்பதன் மூலம் ஆரோக்கியம் ஏற்படுதல்.

**சவால்கள் மற்றும் பிரச்சினைகள்**

வறட்சியின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அளவு பழக்கன்றுகளைப் பெறமுடியாது போனமை மற்றும் பயிர்ச்செய்கைகளை பேணி வருவது முக்கியமானதாக அமைந்தமை.

## பௌதிக முன்னேற்றம்

| மாவட்டம் | பழ வகை | கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| இரத்தினபுரி | தோடை | 02 |
| | ஜமநாரங் | 03 |
| பதுளை | தோடை | 02 |
| | மாதுளை | 03 |
| கண்டி | ஜமநாரங் | 02 |
| மாத்தளை | முள் ஆத்தா | 02 |
| | மாதுளை | 01 |
| கம்பஹா | முள் ஆத்தா | 20 |
| கேகாலை | முள் ஆத்தா | 02 |
| திருகோணமலை | மா | 15 |
| | எலுமிச்சை | 03 |
| | மாதுளை | 03 |
| | தோடை | 01 |
| பொலனறுவை | மா | 18 |
| | முள் ஆத்தா | 12 |
| | கொய்யா | 09 |
| | எலுமிச்சை | 16 |
| | மாதுளை | 40 |
| | தோடை | 06 |
| அநுராதபுரம் | எழுமிச்சை | 15 |
| | மாதுளை | 10 |
| | கொய்யா | 05 |
| | முள் ஆத்தா | 10 |
| | மா | 08 |
| | தோடை | 04 |

(அம்பாந்தோட்டை மீகஹஜந்துரவுக்கு கன்றுகளை வழங்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களில் பழக் கன்றுகள் வழங்கப்பட்ட கிராமங்களின் தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன)

- 2015 ஆம் ஆண்டில் யட்டிவாலை கிராமத்தில் 4 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட ஆத்தாப்பழக் கன்றுகளின் நிலைமையை மேற்பார்வை செய்தல்.







விலான பல்லேகமை
முள் ஆத்தாப் பழக் கன்றுகள்

## 2.1.8 இளைஞர்களின் பங்கேற்புடன் வர்த்தகப் பண்ணைகள் மற்றும் விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்தி

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 5.8**
**செலவிட்ட தொகை ரூபா. 4.27**

**அறிமுகம்**
வருமானம் குறைவடைந்துள்ளதன் காரணமாக விவசாயத் துறையில் விவசாயகளின் பங்கேற்பு குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இது இளைஞர்கள் விட்டு விலகிச் செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது. தொழில்நுட்ப வழிகாட்டல்களையும் நிதி உதவிகளையும் வழங்குவதன் ஊடாக விவசாயத் தொழிற்துறையில் இளம் தொழில்முயற்சியாளர்களைக் கவர முடியும்.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்**
- ஏற்றுமதி நோக்க விவசாய உற்பத்தியாளர்களை உருவாக்குதல்
- புதிய பிரதேசங்களில் பயிர் செய்தல்
- பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்திகளை உருவாக்குதல்
- புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்
- அறுவடைக்குப் பிந்திய அழிவுகளைக் குறைத்தல்
- வானிலை மாற்றங்களுக்கு மத்தியில் பலமான பொருளாதார மற்றும் சமூக மட்டமொன்றைப் பேணக்கூடிய விவசாய சமுதாயமொன்றை உருவாக்குதல்

**நோக்கங்கள்**
- விவசாய முயற்சியாண்மை ஊக்குவிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் அறிமுகம்
- நடுத்தர அளவிலான விவசாயத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்
- வர்த்தக விவசாயத்தை ஊக்குவித்தல்
- சந்தையை இலக்காகக் கொண்ட பண்ணைகளை அதிகரித்தலும் இலாபத்தை அதிகரித்தலும்

**உபாய முறைகள்**
விவசாயிகளின் 50% பங்களிப்பின் கீழ் (அதிகபட்சமாக 500,000 ரூபா வரையில்) விவசாயத் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் ஊடாக அவர்களின் விவசாய வியாபாரங்களைப் பலப்படுத்துதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்**- 2016 - 2017
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:**- குறுகிய காலம்
**பங்காளர்கள்** - நாடு முழுவதிலும் உள்ள விவசாயத் தொழில்முயற்சியாளர்கள்
**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:** 15
**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி** - உள்நாட்டு

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**
- சந்தைப்படுத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியொன்றை நடாத்துதல், விவசாயச் செயற்திட்டப் பாடசாலை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டுள்ளது.
- 15 பயனாளிகள் கோரியுள்ள இயந்திரங்கள், பாதுகாப்பான தளபாடம், நுண் நீர் வழங்கல் தொகுதி, நிழல் தரும் வலை வீடு மற்றும் பூச்சி எதிர்ப்பு வலைகள் என்பவற்று நிதி வசதிகளை வழங்குதல் - 12 பயனாளிகளுக்கு நிதி வசதி வழங்கப்பட்டுள்ளது. 3 பயனாளிகள் பயன்களைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயத் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டுவதன் ஊடாக கிராமிய வறுமையை ஒழித்து விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதன் ஊடாக அவர்களை வியாபாரிகள் மட்டத்திற்கு உயர்த்துதல்
- விவசாய முயற்சியாண்மைக்கான பெண்களின் பங்கேற்பை அதிகரித்தல்.

## 2.1.9 அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப அபிவிருத்திச் செயற்திட்டங்கள் (செலவுத் தலைப்பு 118-02-03-20-2509)

**ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 70.39 செலவிட்ட தொகை ரூ.மி. 44.32**

| இலக்கம் | செயற்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை ரூ.மி. | பௌதிக முன்னேற்றம் 2017.12.31 இல் உள்ளவாறு | நிதி முன்னேற்றம் (பொறுப்புக்கள் மற்றும் வரவுகள் அடங்கலாக) | |
|---|---|---|---|---|---|
| 2. அபிவிருத்தி செயற்திட்டங்கள் | | | | ரூ.மி. | ] |
| 01 | அறுவடைக்குப் பின்னரான அழிவைக் குறைப்பதற்காக இலங்கையின் விவசாயம் தொடர்பான நிறுவனங் களின் பயிற்றுவிப்பாளர் களுக்குப் பயிற்சியளித்தல். | 1.0 | 17 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் 1381 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. | 0.95 | 95 |
| 02 | இறக்குமதிசெய்யப்படும் பிரதாகன உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள பாரமான உலோகங்களின் அளவைக் கணித்தல். | 5.35 | பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 7 உணவுப் பயிர்களின் 500 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. | 5.35 | 100 |
| 03 | சேதன முறைப்படி பழங் களைப் பழுக்கச் செய்தல் | 5.425 | செயற்திட்டங்களுக்கான ஆய்வுச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. | 5.41 | 100 |
| 04 | இலங்கையின் விவசாய உற்பத்திகளின் வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலி முகாமை | 10.55 | இலங்கையின் விவசாயப் பயிர்களின் உற்பத்தித் தரவுகள் விவசாய அமைப்புக்களின் மட்டத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன. மீள உருவாக்கப்பட்ட வழங்கற்ச சங்கிலியை முன்னோடிச் செயற்திட்டமாக முறைப்படி நடைமுறைப்படுத்து வதற்கும் அவதானிப்பதற்கும் தேவையான உபகரணங்களைப் பெறுதல். | 6.68 | 63.3 |
| 05 | இலங்கையில் மாம்பழ வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்துதல். | 25.09 | 50 பயிற்சிநெறிகள் நடாத்தப் பட்டுள்ளதுடன் மாம்பழம் கையாளல் மற்றும் பதப்படுத்தல் வலயங்கள் 2 உம் நிலையங்கள் 11 உம் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. | 23.62 | 91.2 |
| 06 | கொய்யாப் பழ வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்துதல். | 8.94 | முன்னோடிச் செயற்திட்டமாக அநுராதபுரம் மாவட்டத்தில் 57 பயனாளிகளுக்கு 03 பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டுள்ளது கொய்யாப் பழம் பதப்படுத்தல் வலயங்கள் 02 அமைக்கப்பட்டுள்ளன. 27 பயனாளிகளுக்கு தலா ஒவ்வொரு கொய்யாப் பழம் பதப்படுத்தல் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | 8.54 | 95.53 |
| 07 | பப்பாசிப் பழ வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்துதல். | 5.17 | முன்னோடிச் செயற்திட்டமாக அநுராதபுரம் மாவட்டத்தில் 26 பயனாளிகளுக்கு 2 பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் பப்பாசிப் பழம் பதப்படுத்தல் வலயம் 1 உம் அமைக்கப்பட்டுள்ளது. 12 பயனாளிகளுக்கு தலா ஒவ்வொரு பப்பாசிப் பழம் பதப்படுத்தல் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | 5.16 | 100 |
| 08 | வாழைப் பழ வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலியை மேம்படுத்துதல். | 5.65 | முன்னோடிச் செயற்திட்டமாக அநுராதபுரம் மாவட்டத்தில் 21 பயனாளிகளுக்கு 01 பயிற்சிநெறி நடாத்தப்பட்டுள்ளதுடன் வாழைப் பழம் பதப்படுத்தல் வலயம் 01 உம் அமைக்கப்பட்டுள்ளது. 12 பயனாளிகளுக்கு தலா ஒவ்வொரு வாழைப் பழம் பதப்படுத்தல் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | 5.01 | 88.7 |

## 2.1.10 E விவசாய நிகழ்ச்சி

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 40**
**செலவிட்ட தொகை ரூ.மி. 2.48**

**அறிமுகம்**
இந்நிகழ்ச்சியின் கீழ் விவசாய அமைச்சு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவுடன இணைந்து உருவாக்கி விவசாயத் தொழில்நுட்பத் தகவல் தளம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இத்தரவுத் தளம் மூலம் இந்த வருடத்தில் உர மானியம் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பயிர்ச் சேதங்களுக்கான காப்புறுதிப் பணம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**நோக்கங்கள்**
- தொழில்நுட்பவியலாளர் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்திகள் தொடர்பில் சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தரவுத் தொகுதியொன்றை பேணி வருதல்

**உபாய முறைகள்**
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவுடன் இணைந்து இத்தகவல் தொகுதியை மேம்படுத்துதல்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்: - 2016 - 2018**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- நடுத்தரக் காலம்**

**பங்காளர்கள்:**
விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்கள், விவசாயிகள்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**
இந்த தரவுத் தொகுதி மூலம் விவசாயிகளுக்கு உர மானிய நிதி உதவி மற்றும் பயிர் அழிவுகளுக்கான காப்புறுதிப் பணம் என்பவற்றை வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.
மேலும் தரவுப் பகுப்பாய்வுக்காக உத்தியோகத்தர்களுத் தேவையான தகவல்களை இந்த தரவுத் தளத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் அத்தகவல்கள் அமைச்சினாலும் ஏனைய நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சிகளின் முன்னேற்ற மீளாய்வுக்காகவும் கொள்கை வகுப்புக்கான தீர்மானங்களை எடுப்பதற்கும் பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நிதி உள்நாட்டு/ வெளிநாட்டு - உள்நாட்டு**

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் |
|---|---|
| *மடிக் கணினிகள் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பெறுதல்* | *75 மடிக் கணினிகள் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுக் கட்டளை சொப்ட்லொஜிக் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.* |
| *சேர்வர் இடவசதி* | *விவசாயத் தரவுத் தொகுதி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஸ்ரீலங்கா ரெலிகொம் சேர்வரைப் பராமரித்தல்* |
| *அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்* | *அநுராதபுரம் மாவட்டத்தில் 2 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.* |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப் படும் விதம்**
அரசாங்கத்தின் முன்னுரிமை நிகழ்ச்சிகளில் ஒன்றான விவசாயிகளுக்கு உரமானியத்தைப் காசாக வழங்குதல் மற்றும் பயிர் அழிவுக் காப்புறுதி வழங்குதல் என்பவற்றை மிகவும் வினை த்திறன்மிக்க முறையில் நிறைவேற்றுவதற்கு இதன் மூலம் விவசாயிகளுக்கு வசதிகளை வழங்குதல்

## 2.1.11. காலநிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையும் நிகழ்ச்சி



**ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 281 செலவிட்ட தொகை ரூபா. மில். 223.61**

**விவசாயக் கிணறுகளைப் புனரமைக்கும் நிகழ்ச்சி**
**ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 200 செலவிட்ட தொகை ரூபா. மில். 157.9**

**கைவிடப்பட்ட வயர்களில் பயிர்செய்தல்**
**ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 34 செலவிட்ட தொகை ரூபா. மில். 27.71**

**பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சி - கெத்தாராமையில்**
**ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 47 செலவிட்ட தொகை ரூபா. மில். 38**

### 2.1.11.1 விவசாயக் கிணறுகளைப் புனரமைக்கும் நிகழ்ச்சி

நடைமுறைப்படுத்தும் நிறுவனம்: (கமநல அபிவிருத்தித் திணைக்களம்)

### அறிமுகம்

இலங்கை உலர் வலயத்திலுள்ள 17 மாவட்டங்களின் (மாவட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன) விவசாயிகளின் வருமான வழிகளை மேம்படுத்துவதற்காக விவசாயத் துறையை முன்னேற்றும் நோக்கில், அதற்குப் பிரதான தடையாகவுள்ள நீர்த் தட்டுப்பாட்டுக்கான ஒரு தீர்வாக ஆழங் குறைந்த நிலக்கீழ் நீரை சூழல் நட்புறவான முறையில் பயன்படுத்ததுவதற்காக மோசமான நிலையில் காணப்படும் 1000 விவசாயக் கிணறுகளை திருத்தியமைக்கும் செயற்திட்டமாகும். இதன் போது ஒரு கிணற்றுக்கு அதிகபட்சமாக 200,000 ரூபா வரையறைக்கு உட்பட்ட வகையில் உதவி வழங்கப்பட்டது.
(மாத்தளை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலனறுவை, குருநாகல், புத்தளம், பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, அம்பாறை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி)

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்**
- இலங்கையின் உலர் வலயத்தில் ஆழம் குறைந்த தரைக் கீழ் நீரின் பயன்பாட்டை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதன் மூலம் கிராமிய விவசாயிகளின் வருமான வழிகளை மேம்படுத்துதல்

**நோக்கங்கள்**
- இலங்கையில் அடையாளம் காணப்பட்ட 17 உலர் வலய மாவடங்களில் அமைந்துள்ள மோசமான நிலையிலுள்ள 1,166 விவசாயக் கிணறுகள் 2017 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பதன் மூலம் சுமார் 2000 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலத்தின் நீர் வினைத்திறனையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துதல்.

**இலக்குகள்**
- மொசமான நிலையில் காணப்படும் 1,166 விவசாயக் கிணறுகளைத் திருத்தியமைத்தல்

**உபாய முறைகள்**
- விவசாயக் கிணறுகளைத் திருத்தியமைத்தலும் தரைக்கீழ் நீரைப் பயன்படுத்துவதற்கான முறைகளும்

**புதிய போக்குகள்**
- தரைக்கீழ் நீரின் பயன்பாட்டை சிறப்பான மட்டத்தில் பேணி வருதல்
- சூழல் தாக்கங்கள் ஏற்படாத விதத்தில் பாதுகாப்பான முறையில் தரைக்கீழ் நீரைப் பயன்படுத்துதல்
- தரைக்கீழ் நீர்ப் பயன்பாட்டின் மூலம் பயிர்களைப் பல்வகைப்படுத்துதல்

செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017
செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- குறுகிய காலம்
விவசாயக் கிணறுகளின் உரிமையாளர்கள் / கிணற்று நீர் மூலம் விவசாயம் செய்யும் விவசாயிகள்
நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை: 1166

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள்**
பயனாளிகளின் எண்ணிக்கை 637

**செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட நிதி உள்நாட்டு/ வெளிநாட்டு:** உள்நாட்டு

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்:**

| தொ. இல. | மாவட்டம் | அடையாளம் காணப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நிதி நிலைமை | | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | | | விடுவிக்கபட்ட தொகை | செலவு | |
| 1 | மாத்தளை | - | 4.00 | - | 0] |
| 2 | அம்பாந்தோட்டை | 55 | 8.00 | 3.58 | 50] |
| 3 | அநுராதபுரம் | 400 | 80.00 | 78.80 | 94] |
| 4 | பொலனறுவை | 77 | 15.00 | - | 0] |
| 5 | குருநாகல் | 47 | 10.00 | 8.78 | 85] |
| 6 | புத்தளம் | 16 | 5.00 | 2.20 | 48] |
| 7 | பதுளை | 15 | 3.00 | 3.00 | 100] |
| 8 | மொனராகலை | 30 | 6.00 | 3.00 | 50] |
| 9 | இரத்தினபுரி | 19 | 3.00 | 3.00 | 100] |
| 10 | அம்பாறை | 90 | 15.00 | 12.41 | 75] |
| 11 | வவுனியா | 125 | 17.00 | 11.59 | 70] |
| 12 | மன்னார் | 46 | 6.00 | 6.00 | 100] |
| 13 | முல்லைத்தீவு | 55 | 6.00 | 6.00 | 100] |
| 14 | திருகோணமலை | 14 | 2.00 | 2.00 | 100] |
| 15 | மட்டக்களப்பு | 22 | 4.00 | 1.63 | 45] |
| 16 | கிளிநொச்சி | 34 | 4.00 | 3.99 | 99] |
| 17 | யாழ்ப்பாணம் | 121 | 12.00 | 11.92 | 98] |
| | **மொத்தம்** | 1.166 | **200.00** | 157.90 | 80] |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும், சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரஜைகள் வலுவூட்டப்படும் விதம்:**

- **ஒட்டுமொத்த உற்பத்திகளினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல் -** நீர்த் தட்டுப்பாடின்றி பயிர்ச்செய்கையை மேற்கொள்வதனால் அலகுக்கான அறுவடையும் பயிர் செய்யும் நிலப்பரப்பின் அளவும் அதிகரித்தல்

- பிரதேச அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் - குளங்களின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளைப் போன்று விவசாயக் கிணறுகளின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கும் பொருளாதாரத்தை சமநிலைப்படுத்துதல்

- பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் - விவசாயக் கிணறுகளின் கீழ் விவசாயச் செயற்பாடுகளை மேம்படுத்துதல்

- கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தலும் - அலகு நிலத்தினால் பெறப்படும் வருமானத்தை மேம்படுத்துதலும் தரைக்கீழ் நீரைப் பயன்படுத்தி அதிக கேள்வி கொண்ட பயிர்களைப் பயிரிடுதலும்

- ஏற்றுமதி ஊக்குவிப்பு - விவசாயக் கிணறுகளின் கீழ் தேயிலை பயிடும் விவசாயிகளின் அமைப்புக்கள் (உற்பத்திக் குழுக்கள்) ஊடாக ஏற்றுமதிக்கான வழிகளைக் கண்டறிதல்

- சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுதல் - அதிக கேள்வி கொண்ட பயிர்களுக்கும் இந்த நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் பயிர்களை அடையாளம் காணுதல்
- ஊழியப் பங்களிப்பு - விவசாயக் கிணறுகளின் அதிகமான பயிர் நிலங்களை முகாமை செய்வதற்காக கிராமிய ஊழியத்தைப் பயன்படுத்துதல்
- தனியார் துறையினரின் பங்களிப்பு - அதிக சந்தைவாய்ப்பு மற்றும் பெறுமதிசேர்ப்புக்கு (ஏயடரசந யுனனவைழைஅ) தனியார் துறையினரி உதவிகளைப் பெறுதல்
- நிலப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல் - நில அலகொன்றிலும் பெறும் விளைச்சலை அதிகரித்தல்

**எதிர்கால முன்மொழிவுகள் அல்லது மேம்பாடுகள்:**
விவசாயக் கிணறுகளின் கீழ் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அதிகளவில் அறிமுகப்படுத்துதல், தரைக்கீழ் நீரின் தரத்தை நிர்வகித்தல்

**மானராகலை**

**மறுசீரமைப்புக்கு முன்னர்** | **மறுசீரமைப்பின் பின்னர்**





**அநுராதபுரம்**





## 2.1.11.2 கைவிடப்பட்ட வயல்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தும் நிகழ்ச்சி (மாகாண சபைகளின் ஊடாக)

**ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. 34 செலவாகிய தொகை ரூ.மி. 4.26**

வெள்ளம், வறட்சி போன்ற காலநிலை மாற்றங்களின் தாக்கங்களின் காரணமாக ஊழியப்படையானது சேவைகள் மற்றும் கைத்தொழில் துறைகளை நோக்கி செல்வதன் காரணமாக நெற் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளமை மற்றும் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதனாலும் காலநிலை மாற்றங்களின் காரணமாக விளைச்சல் கிடைப்பதிலுள்ள நிச்சயமற்ற தன்மை என்பவற்றிக் காரணமாக விவசாயிகள் பயிர்ச் செய்கையிலிருந்து விலகிச் செல்லும் போக்கு உருவாகியுள்ளது. இந்நிலைமயில், கொழும்பு, கம்பஹா, கழுத்துறை, காலி மாத்தறை மாவட்டங்களிலும் வடமேல், சப்ரகமுவை மாகாணங்களிலும் அதிக வயற் காணிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் நாடு முழுவதிலும் நாட்டினுள் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சவாலுக்கான ஒரு தீர்வாகவும் அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்கவும் கைவிடப்பட்ட வயல்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டில் தெற்கு, மேற்கு, சப்ரகமுவை, வடமேல் மாகாணங்களில் கைவிடப்பட்ட வயல்களை மீண்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவதற்காக நிலத்தை தயார்படுத்துவதற்கும், மண் பிரச்சினை காணப்படும் நிலங்களைப் புனரமைப்பதற்கும் விதை நெல் பெறுவதற்கு நிதி உதவிகளை வழங்கி இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**குறிக்கோள்**

- தேசிய அரிசி உற்பத்தியை அதிகரித்தல்
- கைவிடப்பட்ட வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் வயல் உரிமையாளரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- விளைச்சலை அதிகரிப்பதற்குப் புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல்
- விவசாய வளங்களைப் பயனுறுதி வாய்ந்த முறையில் முகாமை செய்தல்

**நோக்கங்கள்**

- கைவிடப்பட்ட வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் நெல் உற்பத்தியை அதிகரித்தல்

**இலக்குகள்**

- 938 ஹெக்டயர் கைவிடப்பட்ட வயர்களில் மீண்டும் பயிர்ச்செய்தல்

**உபாய முறைகள்**

விவசாயிகளின் 50மூ பங்களிப்பின் கீழ் நிலத்தைத் தயார்படுத்துவதற்காக ஹெக்டயரொன்றுக்கு 25,000 ரூபாவும் விசேட பிரச்சினைகள் கொண்ட நிலங்களைப் புனரமைப்பதற்காக ஏக்கரொன்றுக்கு 2500 ரூபா வீதம் வழங்குதலும்

**செயற்திட்டத்தின் ஆரம்பம் மற்றும் முடிவு - 2017 - 2018**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- குறுகிய காலம்**

**பங்காளர்கள்**

- விவசாய அமைச்சு
- மேல், தென், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களின் முதன்மைச் செயலாளர்கள்
- மாகாண விவசாயத் திணைக்களம்
- கமநல சேவைகள் திணைக்களம்
- விவசாய ஆலோசகர்கள்
- விவசாயிகள்

**பயனாளிகளின் எண்ணிக்கை** - 2262
**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி** - உள்நாட்டு
**ஒதுக்கப்பட்ட தொகை** - ரூபா.மில். 34

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|
| *நிலத்தை தயார்படுத்துதல்* | *829.06 ஹெக்டயர் கைவிபட்ட வயல் பயிரிடப்பட்டுள்ளது. அதற்காக 21.9 மி.ரூபா வழங்கப்பட்டுள்ளது* |
| *விதை நெல் வழங்குதல்* | *50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் விதை நெல் பெறுவதற்காக .............மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.* |
| *விசேட மண் பிரச்சினைகளைக் கொண்ட நிலங்களைப் புனரமைத்தல்* | *மண் பிரச்சினை காணப்படும் 377.9 ஏக்கர் நிலம் புனரமைக்கப்பட்டுள்ளதுடன அறத்காக 1.95 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது* |

மேற்குறித்த நிகழ்ச்சியின் கீழ் 2262 விவசாயிகள் கைவிடப்பட்ட வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொண்டனர்.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- ஒட்டுமொத்த அரிசி உற்பத்தி அதிகரித்தல்
- பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதலும்.
- சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுதல் (புயூ)
- நிலப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல்

**மீரிகமை பத்கம்கொட யாய**



**கலஹிட்டியாவை பரகந்தெனிய யாய**



**ஹோமாகமை வடக்கு பிட்டகும்புர** யாய



கலவில்யாய வயல் மகரகமை



## 2.1.12 விவசாயக் கண்காட்சி ஊடகங்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவூட்டல்

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 81 செலவிட்ட தொகை ரூபா. மில். 19.11

### 2.1.12.1 செயற்திட்டத்தின் பெயர் - மிகச் சிறந்த விவசாயியைத் தெரிவும் செய்யும் நிகழ்ச்சி (2017) (உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சி)

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி 9.82 செலவிட்ட தொகை ரூபா. மில். 9.71

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்**

- விவசாயிகளின் சமூக அந்தஸ்தையும் வரவேற்பையும் சிறந்ததாக மாற்றுதல்
- இளம் சந்ததியினரை விவசாயத் துறையை நோக்கிக் கவர்தல்
- நாடு முழுதிலும் மாதிரி வீட்டுத்தோட்டங்களையும் மாதிரிப் பண்ணைகளையும் உருவாக்குதல்
- உள்நாட்டு உணவுப் பயிர் உற்பத்தியை மேம்படுத்துதல், விவசாய மறுமலர்ச்சியொன்றை ஏற்படுத்துதல்

**உபாய முறைகள்**

சிறந்த வீட்டுத்தோட்டம் மற்றும் சிறந்த வர்த்தகப் பயிர்ச்செய்கை என்ற இரண்டு துறைகளிலும் போட்டிகளை நடாத்துதல்.

- மாவட்ட மட்டத்தில் மிகச் சிறந்த வீட்டுத் தோட்டத்திற்காக மூன்று ஆண் விவசாயிகளையும் பெண் விவசாயிகளையும் (முறையே 1,2,3 ஆம் இடங்களாக) மிகச் சிறந்த வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக மூன்று விவசாயிகளையும் (முறையே 1,2,3 ஆம் இடங்களாக) தெரிவு செய்வதற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்குறித்த இரண்டு பிரிவுகளின் கீழும் தெரிவு செய்யப்படும் மிகச் சிறந்த ஆண் விவசாயிகளையும் பெண் விவசாயிகளையும் கௌரவிப்பதற்கும் மாகாணத்தின் மிகச் சிறந்த விவசாயிகள் மூன்று பேரையும் (முறையே 1,2,3) தனித் தனியாக கௌரவிப்பதற்கும், அப்பிரிவுகள் இரண்டுக்கும் தனித் தனியாகத் தெரிவுகளைச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- தேசிய மட்டத்திற்கு மாகாண மட்டத்தில் மிகச் சிறந்த வீட்டுத்தோட்டம் மற்றும் மிகச் சிறந்த வர்த்தப் பயிர்ச்செய்கை என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளைத் (முறையே 1,2,3) தனித் தனியாக கௌரவித்து, அப்பிரிவுகள் இரண்டுக்காகவும் தேசிய மட்டத்தில் மிகச் சிறந்த வீட்டுத்தோட்டம் மற்றும் வர்த்தப் பயிர்ச்செய்கை என்பவற்றுக்காக (முறையே 1,2,3) என்ற அடிப்படையில் விவசாயிகளைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கப்பட்டன.

**செயற்திட்டத்திற்கான நியாயங்கள்**

உலகப் பொருளாதாரத்தில் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் இலங்கை விவசாயிகளுக்கும் தற்போதைய சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளுக்கு இணங்க இளைஞர் யுவதிகள் விவசாயத் துறையில் ஈடுபாடுகாட்டாத போக்கை அவதானிக்க முடிகின்றது. இவை தவிர விவசாயத் துறையை நவீன மற்றும மரபுரீதியான தொழில்நுட்பங்களையும் சிறந்த முகாமைத்துவத்தையும் கொண்டதாக மாற்றியமைக்கப்படுவதன் மூலம் விவசாயத் துறை மிகவும் நிலைபேறான ஒரு துறையாக மாற்றமடையும். மேலும், விவசாயிகளுக்குத் தேவையான சமூக அங்கீகாரத்தை வழங்குதற்கும் அதற்கான அரசாங்கத் தலையீட்டை மேலும் விரிவுபடுத்துவதற்கும் அதனைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதும் அவசியமாகும். அதனால், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி 2016- 2018 இன் கீழ் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக மிகச் சிறந்த ஆண் விவசாயியையும் பெண் விவசாயியையும் தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

நாடு முழுவதிலும் உள்ள விவசாயிகள் மத்தியில் மிகச் சிறந்த வர்த்தப் பயிர்ச்செய்கை மற்றும் மிகச் சிறந்த வீட்டுத்தோட்டம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தெரிவு செய்து வெற்றிபெற் விவசாயிகளுக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கையினால் 2017.07.21 திகதி கந்தளாய்க் குளத்திற்கு அருகில் நடாத்தப்பட்ட ஒரு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

**பல்வேறு துறைகளில் செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

விவசாயத் துறையிலிருந்து விலகிச் செல்லும் இளம் சந்ததியினரை விவசாயத் துறையை நோக்கிக் கவர்தல், தமது நுகர்வுக்குத் தேவையான பயிர்களைத் தமது வீட்டுத்தோட்டத்திலேயே உற்பத்தி செய்துகொள்வதன் மூலம் ஆரோக்கியமான மனிதர்கள் உருவாக்கப்படுதல், விவசாயிகள் வர்த்தப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதன் மூலம் உள்நாட்டு விவசாயகள் என்ற வகையில் பலமடைவதும் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் பழக்கப்படுவதும் நிகழும்.

## 2.1.12.2 தேசிய விவசாய வாரம் மற்றும் விவசாயக் கண்காட்சி (ரூபா.மில்.)



**விவசாயிகள் வாரம் - ஒன்றிணைவோம் எழுவோம் களஞ்சியங்களை நிரப்புவோம்**

**உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டும் தேசிய பயிர்ச்செய்கைப் போராட்டம்**

உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு வலுவூட்டும் தேசிய பயிர்ச்செய்கைப் போராட்டம் கெக்கிராவை திப்பட்டு வெவ வயல்வெளியில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. 2017- 2020 அபிவிருத்தி திட்டம் 2017.10.06 ஆந் திகதி முதல் 2017.10.12 வரையில் பல்வேறு கருப்பொருட்களின் மூலம் விவசாய அறிவு வழங்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டங்கள் நிலைபேறான விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பயன்படுத்தப்படவுள்ள முறை, கீழே காட்டப்பட்டுள்ளது.

**எங்களில் ஆரம்பிப்போம்** - விவசாய அமைச்சு உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி

**செயற்பாடு** - 25000 வீட்டுத் தோட்டங்களை அமைத்தல்
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நாடு முழுவதிலும்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - அமைச்சின் உத்தியோகத்தர்களின் குடும்பங்களின் உணவு மற்றும் போ'ஷாக்குத் தேவைகளைப் பூர்த்திசெய்தல்

**இடைக்காலத்தில் பயிர்செய்வோம்** - மூன்றாம் போக விவசாயம்

**செயற்பாடு** - மிகக் குறைந்த நீர் வழங்கலின் கீழ் 22500 ஏக்கர்களில் கௌபி மற்றும் பயற்றுப் பயிர்ச்செய்கை
**அமுலாக்கல் பிரதேசம்** - அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, குருநாகல், அநுராதபுரம், புத்தளம், பொலனறுவை, திருகோணமலை, மாத்தளை, கண்டி (ஹஸலக), இரத்தினபுரி, மன்னார், வவுனியா
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறு** - விவசாய சமுதாயத்தினருக்கும் மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுத்தல்

**உலர் வலய தெங்குப் பயிர்ச்செய்கை**

**செயற்பாடு** - 10000 ஏக்கரில் புதிதாக தெங்குப் பயிர்ச்செய்கையும் இடைப் பயிர்ச்செய்கையும்
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - வட மத்திய மாகாணம்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - வருடாந்த தேங்காய் உற்பத்தியை 10 மில்லியன்களால் அதிகரித்தல்
இடைப் பயிர்ச் செய்கையினை அதிகரித்தல்
காணிகளின் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துதல்

**சிதமு மகளிர் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல்**
**செயற்பாடு** - 500000 வீட்டுத்தோட்டங்களை நிறுவுதல்

**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நாடு முழுவதிலும்
குடும்ப அலகின் வருமானம் அதிகரித்தல்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - குடும்ப அலகுகளினுள் உணவு மற்றும் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்துதல்
இல்லத்தரசிகளை தேசிய உணவு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்பவர்களாக மாற்றுதல்

### நகர வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைப் புரட்சி

**செயற்பாடு** - கிடை மற்றும் குத்துயர இடங்களை வினைத்திறன்மிக்க முறையில் பயன்படுத்தும் தொழில்நுட்பப் பயிர்ச்செய்கை முறைகளை அறிமுகப்படுத்துதல்
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நகரப்புறங்கள்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - நகரப்புற மக்களின் மன உழைச்சலைப் போக்குதலும் ஓய்வுநேரத்தைப் பயனுறுதி வாய்ந்த முறையில பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதலும்

### பயன்தரும் ஓய்வுகாலம் (ஓய்வுபெற்ற சமுதயாத்தை விவசாயத்திற்குப் பழக்குதல்)

**செயற்பாடு** - ஓய்வுபெற்றவர்களிடம் உள்ள விவசாயம் செய்யக்கூடிய எனினதும் தற்போது விவசாயம் செய்யப்படாத காணிகளைப் விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கான சேவைகளை வழங்குதல்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - ஓய்வு வாழ்க்கை பயனுறுதி வாய்ந்த முறையில் விவசாயத் துறைக்குப் பயன்படுத்துதல்
விவசாய உற்பத்திகளை அதிகரித்தல்
இளம் பரம்பரையினருக்குத் தொழில்வாய்ப்புக்களை வழங்குதல்

### குளங்களைப் புனரமைத்தல்

**செயற்பாடு** - 10000 சிறு குளங்களையும் வாய்க்கால்களையும் புனரமைத்தல்
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள்** - உலர் வலய மாவட்டங்கள்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - பருவத்திற்குப் புறம்பாக பயிரிடுவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்
மனிதர்களுக்கும் விலங்குகளுக்குமான நீர்த் தேவையினைப் பூர்த்தி செய்தல்
விவசாய உற்பத்திகள் மீது காலநிலை மாற்றங்கள் ஏற்படுத்தும் தாகக்கங்களைக் குறைத்தல்

### விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல்

**செயற்பாடு** - 2000 விவசாயக் கிணறுகளைப் புனரமைப்பதற்காகவும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் 200000 ரூபா நிதி உதவி வழங்குதல்.
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள்** - உலர் வலய மாவட்டங்கள்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - பருவத்திற்குப் புறம்பாக பயிரிடுவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், மனிதன் மற்றும் விலங்குகளின் நீர் தேவையினைப் பூர்த்தி செய்தல் விவசாய உற்பத்திகள் மீது காலநிலை மாற்றங்கள் ஏற்படுத்தும் தாகக்கங்களைக் குறைத்தல்

### பாடசாலையில் விவசாயப் பண்ணை (மாதிரி வீட்டுத்தோட்டப் பயிர்களை நடுதல்)

**செயற்பாடு** - பாடசாலைகளில் மாதிரிப் பண்ணைகளை உருவாக்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள்** - மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விதத்தில் 4 பாடசாலைகள் வீதம் (உயர் தரப் பாடப்பிரிவில் விவசாயம் உள்ளடங்கும்)
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - பாடசாலைகளின் ஊடாக வெற்றிகரமான விவசாயத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படைகளை இடுதல்
பாடசாலைப் பிள்ளைகளை விவசாயத்திற்குப் பழக்கப்படுத்துதல், விவசாயம் தொடர்பான பாடசாலைப் பிள்ளைகளின் மனப்பாங்குகளை விருத்தி செய்தல்

## நெல், சோளம் உள்ளிட்ட அனைத்துப்ப பயிர்களினதும் பயனுறுதித்தன்மையை அதிகரித்தல்

**செயற்பாடு** - புதிய விதை வகைகளை (தெமுகுன் அடங்கலாக) அறிமுப்படுத்துதலும் பிரபல்யப் படுத்துதலும் தரம்வாய்ந்த விதைகளினதும் நடுகைப் பொருட்களினது எளிதிற் கிடைக்கும் தன்மை அதிகரித்தல், நாற்று நடும் இயந்திரங்கள், களை அகற்றும் இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட இயந்திரப் பாவனையை விவசாயிகளின் மத்தியில் பிரபல்யப்படுத்துதல்

புதிய விவசாயத் தொழில்நுட்ப அறிவையும் நெற்செய்கைக்கான உரச் சிபாரிசுகளையம் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் வழங்குதல்

**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நாடு முழுவதிலும்

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - ஒரே நிலத்தில் சாதாரண விளைச்சலை அதிகரித்தல் விவசாய இரசாயனங்களின் பயன்பாடு குறைதல், அறுவடைக்குப் பிந்திய அழிவுகள் குறைவடைதல், உற்பத்திச் செலவு குறைதல், புதிய தொழில்நுட்ப முறைகளுக்குப் பழக்கப்படுவதனால் இளம் பரம்பரையினர் விவசாயத்திற்குக் கவரப்படுதல், புதிய உற்பத்திகள் உருவாகுதல்

## தென்னந் தோட்டங்களில் கீழ் வளரிகள்

**செயற்பாடு** - தென்னந்தோட்டங்களில் அன்னாசி, கொடித் தோடை, வாழை, முள் ஆத்தாப்பழம், காய்கறிகள், நிலக்கடலை, கிழங்கு வகைகள் (வற்றாளை, மரவள்ளி), மஞ்சள், இஞ்சி, மிளகு போன்ற பயிர்களை கீழ் வளரிகளாகப் பிரபல்யப்படுத்துல்

**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள்** - தென்னை பயிரிடப்படும் பிரதேசங்கள்

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - பயிர் உற்பத்திகளை அதிகரித்தல், காய்கறிகளினதும் பழங்களிதும் எளிதிற் கிடைக்கும் தன்மை அதிகரித்தல், தென்னைத் தோட்டங்களின் வளமும் உற்பத்தியும் அதிகரித்தல், நாளாந்த உணவுகளின் போ'ாக்குப் பெறுமான அதிகரித்தல், தென்னை விவசாயிகளின் வருமானம் அதிகரித்தல்

## கைவிடப்பட்ட நிலங்களை வர்த்தப் பயிர்ச்செய்கைப் பயன்படுத்துதல்

**செயற்பாடு** - விவசாயம் செய்யப்படத காணிகளை மாவட்ட மட்டத்தில் அடையாளம் காணுதல், பயிர்ச்செய்கையாளர்களையும் பொருத்தமான செயற்திட்டங்களையும் அறிமுப்படுத்துதல், பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தேவையான கடன் வசதிகளையும தொழில்நுட்ப அறிவையும் வழங்குதல்.

**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நாடு முழுவதிலும்

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - புதிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல், வர்த்தகமட்டத்தில் பண்ணைகளை உருவாக்குதல், ஏற்றுமதி விவசாயத் துறை அபிவிருத்தியடைதல், பயிர் உற்பத்தி மேம்படுதல், பெறுமதிச் சங்கிலிச் செயற்பாடுகளுக்குத் டீரயடரந ஊாயபை தொழில்முயற்சியாளர்கள் தொடர்புபடுதல்

## விவசாய வீதிகளைப் புனரமைத்தல்

**செயற்பாடு** - முன்னுரிமையின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விவசாய வீதிகளை அடையாளம் கண்டு மேம்படுத்துதல்

**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நாடு முழுவதிலும்

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - விவசாயிகளின் போக்குவரத்துத் தேவைகள் நிறைவேறுதல், அறுவடைக்குப் பிந்திய சேதங்கள் குறைவடைதல், விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் இலகுவாகுதல்

## சமயத் தளங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்

**செயற்பாடு** - தென்னை மற்றும் பழக் கன்றுகளை வழங்குதல்

**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம்** - நாடு முழுவதிலும் (கமநல சேவை நிலயைங்கள் மட்டத்தில்)

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - தென்னை மற்றும் பழ உற்பத்திகள் அதிகரித்தல், காணிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுதல்

### குளிரூட்டல் வசதிகளை அபிவிருத்தி செய்தல்

**செயற்பாடு** - மாவட்ட மட்டத்தில் பொருத்தமான குளிரூட்டல் அறைகளை நிர்மாணித்தல்
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள்** - மாவட்ட மட்டத்தில்
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - அறுவடைக்குப் பிந்திய சேதங்கள் குறைவடைதல், விவசாயிகளுக்கு தங்களது அறுவடைகளுக்கு நிலையான விலை கிடைத்தல், பருவத்திற்குப் புறம்பான உற்பத்திகள் சந்தைக்கு கிடைத்தல், சந்தையில் விலை ஸ்திரமடைதல்

### பச்சைவீட்டுப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி

**செயற்பாடு** - 100 பச்சைவீடுகளை உருவாக்குதல், அப்பச்சைவீடுகளைத் தெரிவு செய்த இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்குதல், தேவையான கடன் வசதிகளை வழங்குதல்,
**நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள்** - அநுராதபுரம், பொலனறுவை, மாத்தளை, மொனராகலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு
**எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்** - காலநிலை மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல், விஷம் குறைந்த சுகாதாரப் பாதுகாப்பான உணவு உற்பத்தி, இளம் சந்ததியினர் விவசாயத்தை நோக்கி ஈர்க்கப்படுதல், ஏற்றுமதி நோக்கச் சந்தையொன்று உருவாக்கப்படுதல், சுற்றுலாக் கைத்தொழிலுக்குத் தேவையான உணவுகளை உற்பத்தி செய்தல்.

## 2.1.12.3 நிலைபேறான யுகம் தேசிய விவசாயக் கண்காட்சி

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 1.86**
**செலவிட்ட தொகை ரூ.மி. 1.05**

**அறிமுகம்**

நிலைபேறான அபிவிருத்தியைக் கருப்பொருளாகக் கொண்டு சனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி தேசிய விழாவும் விவசாயக் கண்காட்சியும் 2017.03.31 முதல் 2017.04.04 வரை பண்டாரநாயக மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்/ இலக்குகள்**

விவசாய அமைச்சுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை வெற்றிகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் உபாய முறைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுதல்.

**உபாய முறைகள்**
இதற்காக அமைச்சின் கீழ் உள் அனைத்து நிறுவனங்களின் ஊடாகவும் நிலைபேறான இலக்குகளை வெற்றி கொள்வதற்காக நிறைவேற்றப்படும் செயற்பாடுகளை விபரித்துக் காட்டும் விதத்தில் 40ஓ100 அளவில் பிரதான காட்சிக்கூடங்கள் 2 இல் காட்சிகளை நிர்மாணித்தல் மற்றும் அது தொடர்பில் விவசாய ஆலோசகர்கள் மூலம் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
கண்காட்சிக் கூடங்களாக, நெல், காய்கறிகள், பழ வகைகள் மேலதிக உணவுப் பயிர்கள் என்பவற்றுக்கான புதிய இனங்கள், அவற்றின் விசேட சிறப்பியல்புகள் போன்றவை தொடர்பாகவும், விவசாய இயந்திரமயமாக்கல் மற்றும் அதன் மூலம் உற்பத்திச் செலவை குறைப்பது தொடர்பிலும், விவசாயத்தில் கிருமி நாசினிப் பயன்பாட்டுடன் தொடர்புடைய முக்கியமான விடயங்கள், பெயரிடப்பட்ட கிருமி நாசினிகளை அகற்றுதல், சேதனப் பயிர்ச்செய்கை, புயீ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிருமி நாசினிப் பயன்பாட்டைக் குறைத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. மேலும் ஹெல போஜுன் விற்பனை நிலையங்களைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சிகள், விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் உள்ளடக்கப்பட்டன.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் - 2017**
**செயற்திட்டம் நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா என்பது:- குறுகிய காலம்**
**பங்காளர்கள்: பொது மக்கள்**

நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை: பொது மக்கள்
செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு நிதி

செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்: கண்காட்சியைக் கவர்ச்சியான முறையில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல்



## 2.1.13. அரசாங்க தனியார் பங்குடமையின் அடிப்படையில் விதை நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சி

உயர் தரத்திலான விதைகளையும் நடுகைப் பொருட்களையும் எளிதிற் கிடைக்கச் செய்யும் தேவையின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் மூலம் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதற்கிணங்க அரசாங்க தனியார் பங்குடமையின் அடிப்படையில் விதைகளையும் நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்யும் நிகழ்ச்சி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. பல செயற்திட்டங்களின் சேர்க்கையாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியின் ஊடாக அடிப்படை விதை உற்பத்திக்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் அரசாங்கப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில செயற்திட்டப் பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், தனியார் துறையுடன் பங்குடமை அடிப்படையில் விதை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தனியார் துறையினரிடமிருந்து செயற்திட்டப் பிரேரணைகளைப் பெற்று 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமானது என அங்கீகரிக்கப்பட்ட 2 செயற்திட்டப் பிரேரணைகள் அமைச்சுக்கும் குறித்த நிறுவனங்களுக்கும் இடையில் செய்து கொள்வதற்கான ஒப்பந்தங்களுக்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது. அவற்றில் ஒரு செயற்திட்டம் உயர் தரத்திலான கலப்பின விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கானது (12.7 மில்லியன் ரூபா), மற்றையது உயர் தரத்திலான விதைக் கன்று உற்பத்திக்கு உதவியாக அமையும் விதைத் தட்டுக்களை உற்பத்தி செய்வதற்கானதாகும் (11 மில்லியன் ரூபா).

## 2.1.14. ஹெல போஜுன் விற்பனை நிலையங்களின் ஊடாகப் பெண்களுக்கு வலுவூட்டுதலும் உள்நாட்டு உணவுகளைப் பிரபல்யப்படுத்துவதன் ஊடாக தற்போதைய உணவு முறையை மாற்றியமைத்து போஷாக்குப் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 61.76 செலவிட்ட தொகை - ரூ.மி. 45.24**



**அறிமுகம்**

தற்போது செயற்கை உணவு நுகர்வு அதிகரித்துள்ளமையினால் பரவா நோய்கள் பரம்பல் அதிகரித்துள்ளது. அதனை ஒழிக்கும் நோக்கில், உள்நாட்டு உணவைப் பிரபல்யப்படுத்தும் போது அந்த உணவுகளை உற்பத்தி செய்யும் ஆற்றல்களைக் கொண்ட பெண்கள் கிராமங்கள் அதிகளவில் காணப்படுவதனால், பெண்களுக்கு வலுவூட்டுவதன் மூலம் குடும்பத்தின் போஷாக்கு, சமூக அந்தஸ்து, பொருளாதார நிலைமை என்பவற்றை மேம்படுத்துவதற்காக ஹெல போஜுன் செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**

- பெண்களுக்கு வலுவூட்டுவதன் மூலம் குடும்பத்தின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துதல்
- ஆரோக்கியமான உணவுப் பழக்கத்திற்குப் பழக்கப்படுத்துதல்
- உள்நாட்டு உணவு நுகர்வை அதிகரித்தல்
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளை எளிதிற் கிடைக்கச் செய்தல்
- மகளிர் தொழில்முயற்சி அபிவிருத்தி
- போஷாக்கு தொடர்பில் பெண்களுக்கு அறிவூட்டுதல்

**உபாய முறைகள்**

- உள்நாட்டு உணவுகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல்
- வேலையற்ற பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்துதல்

**புதிய போக்குகள்**

- பாடசாலைகளில் ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை உருவாக்குதல்
- வைத்தியசாலைகளில் ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை நடாத்துதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் - 2012**

**செயற்திட்டக் கால எல்லை (நீண்ட காலம்/நடுத்தரக் காலம்/குறுகிய காலம்):- நீண்ட காலம்**

**பங்காளர்கள் - விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், தொழில்முயற்சியாளர்கள்**

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள்** - நேரடிப் பயனாளிகள் 578
மறைமுகமான பயனாளிகள் 594

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள்**

- ஹெல போஜுனட விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை - 18
- உருவாகிய தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை - 205
- பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை - 60
- கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் - பிளாஸ்டிக் கதிரைகள் - 04, பிளாஸ்டிக் மேசைகள் 10, போத்தல் குளிரூட்டி 01, பழக் கலவை இயந்திரம் - 1

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - விவசாய அமைச்சின் நிதி

**2017 ஆம் ஆண்டின் பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம்**

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

- 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மூலம் 2017 ஆம் ஆண்டு வரையில் கண்ணொருவை, பேராதனை, குண்டசாலை, கண்டி வாகனத் தரிப்பிடம், அநுராதபுரம், படஅத, லபுதுவை, நுவரெலியா, அம்பாறை, பொலனறுவை, மஹியங்கனை, பின்னவலை, பல்வெஹரை, பத்தரமுல்லை, ஆகிய பிரதேசங்களில் ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.
- 2016 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிட்டம்புவை, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை ஹெல போஜுன் விற்பனைகள் திறக்கப்பட்டுள்ளன. பதியதலாவை, வாகரை மற்றும் கந்தளாய் ஹெல போஜுன் விற்பனை நிலையங்களின் நிர்மாணப் பணிகள பூர்த்தியடைந்துள்ளன.
- 2017 ஆம் ஆண்டில் சிலாபம் மற்றும் திருகோணமல பிரதேசங்களில் ஹெல போஜுன் விற்பனை நிலையங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது காணப்படும் ஹெல போஜுன் விற்பனை நிலையங்களின் பராமரிப்புச் செயற்பாடுகளும் இச்செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
- 57 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன
- மாத்தளை ஹெல போஜுன் விற்பனை நிலையத்தின் மதில் நிர்மாணம், வாய்க்கால் நிர்மாணம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் - மகளிர் தொழில்முயற்சியாளர்களின் ஊடாக குடும்பத்தின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்தல்
- கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதலும் - பெண்கள் தொழில்முயற்சியாளர்களாவதன் மூலம் சுய தொழில் வாய்ப்புக்கள் உருவாகுதலும் உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான சந்தைக் கேள்வி அதிகரித்தலும்



நிர்மாணிக்கப்பட் வாய்க்கால் தொகுதி மற்றும் பொருத்தப்பட்ட நுழைவாயில்



நிர்மாணிக்கப்பட்ட ஹெல போஜுன் விற்பனை நிலையத்தின் மதில்

## 2.1.15. மோசமான வானிலையின் காரணமாகக் குறையும் உணவு உற்பத்திக்கனா தீர்வாக அரிசிப் பையில் வற்றாளை பயிரிடும் புதிய முறையை பிரபல்யப்படுத்துதலும் வற்றாளை மற்றும் மரவள்ளி நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோயத்தலும்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 2.39 செலவிட்ட தொகை - ரூ.மி" 2.19**

**அறிமுகம்**

உலர் வானிலை நிலைமைகளின் காரணமாக ஏற்படும் உணவுப் பற்றாக்குறைக்கான ஒரு தீர்வாகப பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பயிர்களாக கிழங்குகளும் வற்றாளையும் விளங்குகின்றன. வருடம் முழுவதிலும் பயிர்செய்யக்கூடியதாக இருப்பதனாலும் குறுகியகாலப் பயிராக இருப்பதனாலும் வற்றாளை மிகவும் பொருத்தமானதாகும். வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு உணவுக்காக தமது வீட்டுத்தோட்டத்தில் பயிர்செய்து விஷங்களற்ற வற்றாளையைப் பண்படுத்துவதற்கும் அதற்கு மேலதிகமாக இடவசதியுள்ளவர்களுக்கு சிறியளவில் வற்றாளை மற்றும் மரவள்ளி பயிரிடுவதற்கான நடுகைப் பொருட்களை வழங்கி தமது உணவை தாங்களே உற்பத்தி செய்வதைப் பிரபல்யப்படுத்துவது இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

**குறிக்கோள்கள்**

- **பிரதான குறிக்கோள்கள் (அம்சங்கள்) இரண்டு.**

- வீட்டுத் தோட்டங்களுக்கு குறைந்த உள்ளீடு கொண்ட பைகளில் வற்றாளை பயிரிடும் முறையை அறிமுகப்படுத்தி பொருத்தமான தண்டுகளை வழங்குதலும் அதன் மூலம் வீட்டு உணவுப் பாதுகாப்புக்கு உதவியாக அமைதலும்
- சிறியளவிலான (நிலத்தில்) வற்றாளை மற்றும் மரவள்ளி பயிரிடுபவர்களுக்கு நடுகைப் பொருட்களை வழங்குதல்.

**உபாய முறைகள்**

- இச்செயற்திட்டம் முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் போது கிராமங்களுக்குச் சென்று வீட்டுத்தோட்டங்களுக்கு அரிசி உறையில் வற்றாளை பரியிடுதல் தொடர்பான செயலமர்வுகளை நடாத்திப் பொருத்தமான நடுகைப் பொருட்களையும் ஒரு விவசாயிகடு 2 அரிசி உறைகள் வீதமும் வழங்கி வீட்டுத்தோட்டங்களில் வற்றாளை பயிரிடும் குழுக்களை (கிராமங்களை) உருவாக்குதல்.
- அரசாங்க நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், சங்கங்கள் போன்ற நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்கு நடுகைப் பொருட்கள், தொழில்நுட்பம், பயிர்ச்செய்கைப் பைகள் என்பவற்றை வழங்குவதன் ஊடாக வீட்டு வற்றாளைச் செய்கையை மென்மேலும் விரிவுபடுத்துதலும் நகரப்புற விவசாயத்தை ஊக்குவித்தலும்
- மாதிரிப் பயிர்ச்செய்கைகளை அமைத்து வீட்டுத்தோட்ட வற்றாளைச் செய்கையைப் பரவலாக்குதல்
- பூங்காப் பயிர் ஆய்வு நிறுவனத்திற்குச் சொந்தமான பண்ணைகளில் பல்வேறு வகையான வற்றாளை மற்றும் மரவள்ளி நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்து சிறிய அளவிலான வற்றாளை மற்றும் மரவள்ளிச் செய்கையாளர்களுக்குப் பகிர்ந்தளித்தல்

**புதிய போக்குகள்**

அதிக விளைச்சலைத் தருகின்றமை, குறை இடவசதி, ஊழியம் மற்றும் உள்ளீட்டுத் தேவைகளைக் கொண்டதாக உள்ளமை, வி'ங்களற்ற தங்களுக்குத் தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளமை என்பவற்றின் காரணமாக நகரப்புற விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும். இதற்கு விவசாயிகளை விட வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள நகரப்பு மக்களிடம் அதிக கேள்வி காணப்படுகின்றது.

**ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் வருடம் - 2017**

**செயற்திட்டம்** நீண்ட காலமா/சமகால காலமா/ குறுகிய காலமா என்பது:- குறுகிய காலம் (ஒரு வருடம் மாத்திரம்)

பங்காளர்கள் - மாகாண விவசாய விரிவாக்கற் பிரிவுகள், மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள், பிரதேச செயலகங்களின் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் மகளிர் சங்கங்கள்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை: விவசாயிகள் மற்றும் வீட்டுத் தோட்ட உரிமையாளர்கள்**

நேரடிப் பயனாளிகள் - 3702

மறைமுகமான பயனாளிகள் - சுமார் 10,000 வீட்டு அலகுகள்

வற்றாளை மற்றும் மரவள்ளி தண்டுகள் வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை - 15000

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் அதிகரித்த உற்பத்தி**

பயிர்ச்செய்கைத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 3702

**பகிர்ந்தளிக்கப்பட்ட நடுகைப் பொருட்களின் அளவு**

வற்றாளைத் தண்டுகள் - 837171

மரவள்ளித் தண்டுகள் - 133750

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு





**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|
| அரிசி உறையில் வற்றாளை பயிரிடும் கிராமங்களை அமைத்தல்– நேரடி | 43 |
| கள உத்தியோகத்தர்கள் / ஏனைய பிரிவுகள் (மறைமுகம்) | 60 |
| கள மேற்பார்வை மற்றும விரிவாக்கம் | 95 |
| நடுகைப் பொருள் உற்பத்தி<br>வற்றாளை<br>மரவள்ளி | 8,377.171<br>133,750 |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

**ஒட்டுமொத்த உற்பத்திகளினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்**

- அரிசி உறையில் வற்றாளை பயிரிடுவதற்காக அகற்றப்படும் அரிசி உறைகள் பயன்படுத்தப்படுவதுடன் ஒரு உறையிலிருந்து 1 கிலோ கிழங்கினை உற்பத்தி செய்ய முடியும். ஒவ்வொரு விவசாயையும் ஒரு வாரத்தில் -2 உறைகள் வீதம் தயாரிப்பதற்கு ஊக்கப்படுத்துவதுடன், ஒவ்வொரு கிழமையும் 1-2 உணவு வேளைகளை அதன் மூலம் பூர்த்தி செய்துகொள்ள முடியும். அதற்கிணங்க, இத்தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆட்கள் தொடர்ச்சியாக வற்றாளை உற்பத்தி செய்வார்களாயின் ஒருவரால் வருடமொன்றுக்கு தேசிய உணவு உற்பத்திக்கு வி'மற்ற 52-104 கிலோ கிராம் வற்றாளையினைச் சேர்க்க முடியும்.
- இம்முறை நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் பொருத்தமானதாகும். நீர் குறைவாகத் தேவைப்படுவதனால் உலர் வலயப் பிரதேசங்களுக்கும் பைகளில் அதிக நீர் மிக விரைவாக வடிந்து செல்வதனால் ஈர வலயத்திற்கும் பொருத்தமானதாகும்.
- இந்த பயிர்ச்செய்கையை இலத்தரசிகளால் இலகுவாகச் செய்ய முடியும். பயிற்சிபெற்ற ஊழியம் அவசியமற்றது.
- தமது உணவு வேளைகளை உற்பத்தி செய்து வீட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும்.
- வற்றாளை உற்பத்தியை குறைந்த இடங்களிலும், தூண்களிலும் கொங்கிரீட் கூரைகளலும் மேற்கொள்ள முடியும்.
- தமது உணவைத் தாமே உற்பத்தி செய்து அந்தச் சந்தர்ப்பத்திலேயே அறுவடை செய்வதனால் அறுவடைக்குப் பிந்திய சேதங்கள் மிகக் குறைவாகும்.
- எந்தவொரு விவசாய இரசாயனங்களும் பயன்படுத்தத் தேவையில்லை.அவ்வாறே வளமான மண்ணைப் பயன்படுத்துவோமாயின் இரசாயன உரங்களைப் பயன்படுத்தத் தேவையில்லை. சேதனப் பயிர்ச்செய்கையாகப பிரபல்யப்படுத்த முடியும்.
- பெண்களாலும் சிறுவர்களாலும் இலகுவாகச் செய்ய முடியும்.
- வற்றாளைக் கொடி மேல் நோக்கி வளர்வதனால் மிகவும் வினைத்திறன்மிக்கதாக நிலம் பயன்படுத்தப்படும். ஒரு பயிர்ச்செய்கைப் பைக்கு 1 சதுர அடிக்கும் குறைவான இடமே தேவைப்படும்.
- இது தவிர, நடுகைப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக அதிகமான விவசாயிகள் கிழங்குச் செய்கையைக் கைவிட்டுள்ளனர். இச்செயற்திட்டத்தின் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்காக நடுகைப் பொருட்கள் வழங்கப்படும்.

## 2.1.16 கிரிதலே மற்றும் கவுடுல்லை திட்டத்திற்கான விதை நெல் வழங்கல்

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில் 60.83**
**செலவிட்ட தொகை ரூபா. மில் 60.83**

மெதிரிகிரிய விவசாய ஆலோசகர் அலுவலகத்தின் தொழில்நுட்ப உதவ-
ியாளர் (விவசாய விரிவாக்கம்) செல்வி சமரி நில்மினி
(விவசாய விரிவாக்கம்) செல்வி சமரி நில்மினி
நெற் செய்கையில் பரசூட் பாத்தி அமைத்தல் - 2017.03.07



**அறிமுகம்**

2016/17 பெரும்போகத்தில் ஆகிய வறட்சி நிலையின் காரணமாக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாது போன கிரிதலை மற்றும் கவுடுல்லைத் திட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கு வதற்காக 2017 சிறுபோகத்தின் போது விதை நெல்லை இலவசமாக வழங்குதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

**குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**

2016/17 பெரும் போகத்தில், நெல் பயிரிடப்படாமையினால் கிரிதலே மற்றும் கவுடுல்லை திட்டங்களின் விவசாயிகளுக்கு 2017 சிறு போகத்தில் விதை நெல்லைத் தேடுவதன் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக இலவசமாக விதை நெல் வழங்குவதன் மூலம் தேசிய நெல் உற்பத்தியை அதிகரிப்பதும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய விவசாயக் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் இதன் குறிக்கோள்களாகும்.

**இலக்குகள்**

- கிரிதலே மற்றும் கவுடுல்லை திட்டங்களின் 8,500 விவசாயிகளுக்கு 36,000 புசல் விதை நெல் இலவசமாக வழங்குதல்.
- கிரதலே திட்டத்தில் சிறு போகத்தின் இறுதியில் இடைக்காலத்தில் பயறுச் செயகைக்காக 400 விவசாயிகளுக்கு 6,000 கிலோ பயற்று விதைகளை இலவசமாக வழங்குதல்.

**உபாய முறைகள்**

கேள்விப் பத்திர நடைமுறைகளுக்கு இணங்க விதை நெல்லுக்கான விலைனுக்கோரல், விவசாயத் திணைக்களம் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குதல்.

**செயற்திட்ட ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் வருடம்**
**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் - 2017**
**செயற்திட்டம் முடிவடையும் வருடம் - 2017**
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:-** குறுகிய காலச் செயற்திட்டம்

**பங்காளர்கள்**

- நெல் பயிரிடும் விவசாயிகள்
- விவசாயத் திணைக்களம்
- நீர்ப்பாசன முகாமைப் பிரிவு
- மாவட்ட செயலகம்
- கமநல சேவைகள் திணைக்களம்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடியான பயனாளிகள் நெற் செய்கை - 8,450
- பயறுப் பயிர்ச்செய்கை - 433

**பிரதான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள்**

- மாவட்டத்தின் நெல் உற்பத்தி அதிகரித்தல்
- விவசாயிகளின் பொருளாதார நிலைமை மேம்படுதல்

**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தும் நிதி**

- உள்நாட்டு நிதி



கிரிதலே திட்டத்தில் இடைப்பட்ட போகத்தில் பயறுச் செய்கை - 2017.10.06

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

- விவசாயிகளுக்கு 36085 புசல் விதை நெல்லை வழங்கி 180,425 ஏக்கர்களில் பயிரிடப்பட்டது. 6000-கிலோ விதை நெல்லை வழங்கி 600 ஏக்கர்களில் இடைப்பட்ட போகத்தில் பயிரிடப்பட்டது.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- இச்செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தரமான விதை நெல்லைப் பயன்படுத்துவதன் ஊடாக நெற் செய்கையின் பயனுறுதித்தன்மை மேம்படுத்தப்படுகின்றது. மேலும் காலநிலை மாற்றங்களின் காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வறுமையை ஒழித்து வருமான மட்டம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



கிரிதலே திட்டத்தில் இடைப்பட்ட போகத்தில் பயறுச் செய்கையைப் பார்வையிடும் உத்தியோகத்தர்கள் (இடமிருந்து வலமாக) விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் திரு. கமல் பிரேமரத்ன, விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. பி.எம்.எஸ். பஸ்நாயக, கிரிதலே நிலையப் பொறுப்பு விவசாய ஆலோசகர் திரு. சுஜித் சேனவிரத்ன மற்றும் இரண்டு விவசாயிகள் - 2017.10.06



கவுடுல்லை திட்டத்தின நெற்செய்கையின் களச் செயற்பாட்டுத் தினம் - விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் திரு. கமல் பிரேமரத்ன (வலது பக்கம்) 2017.06.02

**எதிர்கால முன்மொழிவுகள் அல்லது மேம்பாடுகள்**

அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்களின் காரண்மாக விவசாய உற்பத்திகளில் வீழ்ச்சி அவதானிக்கப்படுகின்றது. அதனால், காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுத்தல் மற்றும் அவற்றுக்கு இயைபாக்கம் அடைதல் தொடர்பில் கள உத்தியோகத்தர்களுக்கும் விவசாயிகளுக்கும் அறிவூட்டி தொழில்நுட்ப முறைகளைப் பின்பவற்றுவது அவசியமாகும்.

## 2.1.17. உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பதற்கான மேலதிக உணவுப் பயிராக பயறு பயிடுதல்- அம்பாந்தோட்டை

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 6.64**
**செலவு- ரூபா.மில். 6.64**

அம்பலாந்தோட்டை ரிதியகமை பிரதேசம்



அம்பலாந்தோட்டை ரிதியகமை பிரதேசம்



### அறிமுகம்

வறுமையை ஒழித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் அறுவடைக்குப் பிந்திய வயல்களில் பயறுச் செய்கையினை/ இடைப்பட்ட பருவப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. திணைக்களதத்தின் சிபாரிசின் அடிப்படையில் பயறுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதன் மூலம் பயிர்ச்செய்கையை மீள உருவாக்கி உரிய செடி அடர்த்தியைக் கொண்ட பயிர்ச்செய்கைகளுக்கு மாத்திரம் ஏக்கரொன்றுக்கு ரூபா 2500.00 ரூபா நிவாரண உதவி வழங்குவதற்கு பிரதேசத்துக்குப் பொறுப்பான விவசாய ஆலோசகர், உதவி விவசாயப் பணிப்பாளர், விவசாயச் சங்கம் ஆகியோரின் சிபாரிசின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றன.

### செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

- விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை மேம்படுத்துதலும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதலும்
- பயற்று விதைகளின் இறக்குமதியை மட்டுப்படுத்துவதன் ஊடாக செலவாகும் அந்நியச் செலாவணியைக் குறைத்தல்.
- மட்டுப்படுத்தப்பட்ட மண் நீர் நிலைமைகளின் கீழ் அறுவடையான வயல்களைக் குறுகிய காலப் பயிரான பயறுப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்துதல்
- தானியப் பயிர்ச்செய்கையின் ஊடாக மண்ணின் வளத்தை மேம்படுத்துதல்
- நிலப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல்

### உபாய முறைகள்

- சிறந்த பயிர் அடர்த்தியைப் பேணி வரும் விவசாயிகளுக்கு மாத்திரம் ஏக்கரொன்றுக்கு 2500 ரூபா நிதி உதவி வழங்குதல்.
- விதைகளைக் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவு செய்யும் நிறுவனத்துடன் ஒருங்கிணைப்புச் செய்வதன் ஊடாக விற்பனைச் செயற்பாடுகளை இலகுபடுத்துதல்

### புதிய போக்குகள்

களஞ்சிய விதைகளை பூச்சி கிருமிகளிலிருந்து பாதுகாப்பதற்காக மூன்று படங்களைக் கொண்ட பொலிசக் பைகளை (Triple layer Polysac bag) இலவசமாக வழங்குதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்த** - 2017.03.01- 2017.12.31
**செயற்திட்டம்** (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:- குறுகிய காலம்
**பங்காளர்கள்:** அம்பாந்தோட்டை மற்றும் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 28 விவசாய அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 1,637 விவசாயிகள்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**
நேரடிப் பயனாளிகள் - பயறு விவசாயிகள் 1,637
மறைமுகமான பயனாளிகள் - அறுவடை செய்தல் மற்றும் தயார்படுத்தல் என்பவற்றுக்காக எடுக்கப்படும் 10,720 தொழிலாளர்கள், வியாபாரிகள், இடைத்தரகர்கள், நுகர்வோர்

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள்**

- பயிர்செய்யும் ஹெக்டயர்களின் எண்ணிக்கை (1072.52 ஹெக்டயர்) நிலப் பரப்பு 25மூ ஆல் அதிகரித்துள்ளது.
- பயறு விதை உற்பத்தி - மொத்த விளைச்சல் 855 மெ.தொன்களாகும். முன்னை வருடங்களில் சாதாரண விளைச்சல் (ஹெக்டயருக்கு 800 கிலோ கிராம்களாகும்).
- பயனாளிகளின் எண்ணிக்கை சுமார் 50மூ இனால் அதிகரித்துள்ளது.

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| தொ.இல. | செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| *1.* | *பயனாளி பயறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குல் ( ஏக்கரொன்றுக்கு 25,000)* | *1,552 விவசாயிகளுக்கு 6,447.625 ரூபா வழங்குதல், மொத்த பயிர் நிலப்பரப்பு 1,073 ஆக உள்ளதுடன் அதன் விளைச்சல் பின்வருமாறு காணப்பட்டது.<br>மாகாணங்களுக்கு இடையிலான பிரதேசம்<br>• மொத்த விளைச்சல் 855 மெ.தொ மற்றும் வருமானம் ரூ.மி. 162.66<br>• படஅத விதை மற்றும் நடுகைப் பிரிவுக்கு ஒரு கிலோ ரூ. 230 என்ற அடிப்படையில் 7,991 கிலோ கிராம்கள் விற்கப்பட்டன<br>• ஒரு கிலோ 190 விலையில் சமபோஷ கம்பனிக்கு 29,885 கிலோ கிராம்கள் விற்கப்பட்டன<br>• 816.5 மெ.தொ சாதாரண விற்பனைக்காக ஒரு கிலோ 190 ரூபா விலையில் சந்தைக்கு விற்கப்பட்டது.<br>மாகாண சபை அதிகாரப் பிரதேசங்கள்<br>அம்பாந்தோட்டை, மீகஹஜந்துர பிரதேசத்தில் 3.8 ஹெக்டயரில் 385 கி.கிராம்* |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- **ஒட்டுமொத்த உற்பத்திகளினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்**

மொத்தத் தேசிய உற்பத்திக்காக 855 மெ.தொன் பயறு விதைகளை வழங்க முடிந்ததன் மூலம் இறக்குமதி செய்யப்படும் அளவைக் குறைப்பதற்கும் அதற்காகச் செலவாகும் வெளிநாட்டு செலாவணியை மீதப்படுத்த முடிந்தமை

- **பிரதேச அபிவிருத்தி வேறுபாடுகளைக் குறைத்தல்**

நெல் பயிரிடும் விவசாயிகளையும் உயர் நிலங்களில் பயிர் செய்யும் விவசாயிகளையும் இதற்காகப் பயன்படுத்த முடியும் என்பதுடன் பிரதேசத்தில் பயிர் நிலங்கள் இல்லாத மக்களின் ஊழியத்தைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையாளர்களுக்கும் அதற்கு ஊழியம் வழங்குபவர்களுக்கும் இடையிலான வருமான வேறுபாட்டை ஓரளவுக்கு குறைக்க முடியும்.

- **பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்**

பயறுப் பயிர்ச்செய்கையில் அதிக ஊழியம் தேவைப்படும் செயற்பாடுகளான அறுவடை செய்தல் மற்றும் வழங்கல் செய்தல் என்பவற்றுக்குப் பெண்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக குடும்பத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியும். மேலும் பயறு விதையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் உணவு உற்பத்தியின் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரித்து குடும்பத்தின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முடியும்.

- **கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதலும்.**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உயர் வலயத்தில் பெரும்பாலான கிராமப் பிரதேசங்களிலுள்ள மக்கள் வறுமையினால வாடுவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இதன் அடிப்படைக் குறிக்கோளாகும். இச்செயற்திட்டத்தின் மூலம் 855 மெ.தொ பயறு விதைகளின் அறுவடையை விற்பனை செய்ததன் மூலம் 163 மில்லியன் ரூபா வருமானத்தை விவசாயிகள் பெற்றுள்ளனர். மேலும் இச்செயற்திட்டத்தின கீழ் விவசாயிகளுக்கான நிவாரணமாக 6.44 மில்லியன் ரூபா 1552 விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதற்கிணங்க, இச்செயற்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரித்துள்ளதுடன் கிராமிய வறுமையை ஒழிக்கப்படுவதற்கும் அது காரணமாக அமைந்துள்ளது.

- **அறுவடைக்குப் பிந்திய அழிவுகளைக் குறைத்தல்**

பயற்றுப் பயிர்ச்செய்கையின் போது அறுவடைக்குப் பின்னரான அழிவு ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது. ஒரே தடவையில் அறுவடை செய்ய முடியாமையினாலும், உரிய நேரத்தில் அறுவடை செய்வதற்கான ஊழியத்தை தேடுவதிலுள்ள சிரமத்தின் காரணமாகவும் அறுவடைக்குப் பின்னரான அழிவுகள் அதிகமாக உள்ளன. மேலும் தயாரிக்கப்பட்ட விதைகளை களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியப் பிரச்சினைகளின் காரணமாகவும் அறுவடை நாசமடைகின்றது. இதனைக் குறைப்பதற்கு மூன்று படலங்களைக் கொண்ட பொலித்தீன் பைகளை (Triple Layer Polysac bag) இலவசமாக வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

- **சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுதல்**

விவசாயத் திணைக்களம் புபீ (சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுதல்) நிகழ்ச்சி தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவூட்டியுள்ளது. பயறுப் பயிர்ச்செய்கையின் போது விதைக்கு முன்னரான சிகிச்சை முறையைப் பின்பற்றி அவரை இழையானினால ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்துதல் பயற்று அறுவடைகளைப் பொதி செய்யும் போதும் களஞ்சியப்படுத்தும் போதும் முப்படல பொலிசக் பைகளைப் பயன்படுத்துவதன் மூலம் களஞ்சியப் புழுக்களினால் ஏற்படும் அழிவுகள், வண்டுகளால் ஏற்படும் அழிவுகள் என்பவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

- **ஊழியப் பங்களிப்பு**

வயற் காணிகளில் இடைப்பட்ட போகத்திற்கான பயிராக பயறு பயிரிடப்பட்டதுடன் நிலத்தை குறைந்தளவு தயார்படுத்துதல் அல்லது நிலயத்தை பூச்சிய அளவில தயார்படுத்துதல் ஆகிய விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துவதனால் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் போது நிலத்தைத் தயார்படுத்துவதற்கான செலவும் ஊழியமும் குறைவடைந்துள்ளன. மேலும் குடும்ப ஊழியத்தைப் பயன்படுத்துவனால் ஊழியத்திற்காகச் செலவாகும் செலவும் ஊழியமும் குறைவதனால் செலவு குறைந்து இலாபம் அதிகரிக்கும்.

- **தனியார் துறையினரின் பங்களிப்பு**

விற்பனையின் போது தனியார் துறையின் தலையீடு மற்றும் அவர்களுடனான ஒருங்கிணைப்பு மூலம் அச்செயற்பாடுகள் இலகுவாகியுள்ளன. குறிப்பாக, சமபோஷ, யஹபோஷ, மற்றும் திரீபோஷ உற்பத்திகளின் கொள்வனவு நேரடியாக மேற்கொள்ளப்படுவதனாலும் இடைத்தரகர்கள் தொடர்புபடாமையினாலும் விவசாயிகளின் வருமானம் அதிகரித்துள்ளது.

- **நிலப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல்**

சிறு மற்றும் பெரும் போகங்களுக்கிடையிலான காலத்தில் பெரும்பாலான வயல்கள் அறுவடைக்குப் பின்னர் தரிசு நிலங்களாக விடப்படுகின்றன. எனினும் அறுவடை செய்யும் சந்தர்ப்பத்தில் காணப்படும் மண்ணின் ஈரப்பதனைப் பயன்படுத்தி விதைகள் தூவப்படுவதுடன் காணி பயிரிடப்படாதிருக்கும் காலமொன்று இல்லாமையின் காரணமாக நிலப் பயன்பாட்டின் வினைத்திறன் உச்சமடைந்து காணப்படுகின்றது. இதன் மூலம் மேலதிக வருமானத்தையும் உழைக்கிறார்கள். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இவ்விதத்தில் அறுவடையான வயலில் பயிர்ச்செய்வதன் ஊடாக தேசிய உற்பத்திக்கு வழங்க முடியுமான பங்களிப்பு அதிகரித்துள்ளது. இத்தகைய செயற்திட்டங்கள் மூலம் மண்ணின் செழிப்பு உயிரியல், இரசாயனவியல் ரீதியில் அதிகரிப்பதனால் நிலைபேறான தன்மையைப் பேணுவதற்கு உதவியாக அமையும்.

**இறுதித் தொழிற்பாடு மற்றும் மதிப்பீடு**

விவசாய அமைச்சின் பங்கேற்புடன் 2017.08.11 ஆந் திகதி நடாத்தப்பட்ட இரண்டாம் காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்துடன் இணைந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட களச் சுற்றுலாவின் போது பயனர்களான விவசாயிகளுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. அவர்கள் தங்களது அனுபவங்களை விளக்கிய போது, அறுவடைக்குப் பின்னரான வயலில் பயறுப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டதன் மூலம் அவர்களுக்கு மேலதிக வருமானம் கிடைத்ததுடன் மண்ணில் நீரை வைததிருக்கும் ஆற்றல் அதிகரிப்பதாகவும் வயலின் சேற்றுத் தன்மை அதிகரித்தமையும் தெரிய வந்தது. பயறு அறுவடையைத் தயார்படுத்தியதன் பின்னர் எஞ்சும் கதிர்களின் உமியை இயற்கைகாகக் காளான் உற்பத்தி செய்வதற்கான ஊடகமாகப் பயன்படுத்த முடியும் என்றும் அவர்கள் கூறினர்.

**எதிர்கால முன்மொழிவுகள் அல்லது மேம்பாடுகள்**

- விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக அறுவடைக்குப் பின்னரான வயலில் பயற்றுச் செய்கைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக விதைகளை அல்லது நிதி உதவிகளை 50% பங்களிப்பின் கீழ் வழங்குவது தொடர்ந்தும் அத்தியவசியமானதாக உள்ளது.
- அறுவடைகளைத் தயார்படுத்தியதன் பின்னர் எஞ்சும் பயிர் எச்சங்களை காளான் உற்பத்திக்கான ஒரு ஊடகமாகப் பயன்படுத்துவதன் சாத்தியம் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக விவசாயத் திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவுக்கு அனுப்புதல்
- அறுவடைக்குப் பிந்திய வயலில் விடப்படும் மாடுகளிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக மாடுகள் வயலினுள் நுழையும் இடங்களில் சூரிய கலத்தின் மூலம் இயக்கக்கூடிய தற்காலிகமான எளிய மின் வேலியொன்றை அறிமுகப்படுத்துதலும் அதற்குத் தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு அனுசரணை வழங்குதலும்
- அறுவடைக்குப் பிந்திய வயலில் பயறுப் பயிர்ச்செய்கையின் பின்னர் ஈரப்பதன் தேங்கி நிற்பதனால் நெற் செய்கையின் நீர் பாய்ச்சும் தடவையொன்றை மீதப்படுத்த முடியுமாக இருப்பதனால் நீர்ப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்கக்கூடியதாக உள்ளமை.



அம்பாந்தோட்டை பந்தகிரிய பிரதேசம்



அம்பாந்தோட்டை பந்தகிரிய பிரதேசம்



அம்பாந்தோட்டை பந்தகிரிய பிரதேசம்



அம்பாந்தோட்டை பந்தகிரிய பிரதேசம்

## 2.1.18 சந்தனக்குளம் பெரிய வெங்காயக் கிராமம் தொடர்பான செயலாற்றுகை அறிக்கை

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 9.16**
**செலவிட்ட தொகை ரூ.மி. 80.21**

**அறிமுகம்**
பெரிய வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் புதிதாகப் பயிர்செய்யும் நிலப் பரப்பை அதிகரிப்பதற்காகவும் ஒரு நிலத்திலிருந்து கிடைக்கும் அறுவடையை அதிகரிப்பதற்காகவும் சந்தனன் குளம் கிராமத்தை பெரிய வெங்காய உற்பத்திக் கிராமமாக மாற்றுதல்

**குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**
- சிறு போகத்தில் பெரிய வெங்காயப பயிர்ச்செய்கைப் பரப்பை 150 ஏக்கர்களாலும் உற்பத்தியை 1,200 மெ.தொன்களாலும் அதிகரித்தல்
- பெரும் போகத்தில் பெரிய வெங்காய உண்மை விதை உற்பத்தியை 400 மெ.தொன்களால் அதிகரித்தல்
- சந்தனன் குளம், மகா கந்துபாகம கிராமங்களின் விவசாயக் குடும்பங்களின் வருமான மட்டத்தை அதிகரித்தல்
- பிரதேசத்தின் காணிகளை மண் பாதுகாப்புக்கு உட்படுத்துதல்

**உபாய முறைகள்**
விவசாயிகளை அமைப்புக்களாக்கி, விவசாயப் பயிற்சிகளின் ஊடாகத் தேவையான அறிவை வழங்குதல், கள அனுபவத்தைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்

**செயற்திட்ட ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் வருடம்-** 2017 - 2019
**செயற்திட்டம் (நீண்ட காலம்/நடுத்தரக் காலம்/குறுகிய காலம்:-** நடுத்தரக் காலம்
**பங்காளர்கள்** - சந்தனன் குளம் பெரிய வெங்காயப் பயிர்ச்செய்கையாளர்களின் சங்கம்
**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:** 120
**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி** - உள்நாட்டு நிதி

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| *செயற்பாடு* | *நிதி முன்னேற்றம் (ரூ.மி)* | *பௌதிக முன்னேற்றம்* |
|---|---|---|
| *1. பெரிய வெங்காய உண்மை விதை விநியோகம்* | *0.64* | *விதை 50 கி.கி* |
| *2. பலநோக்கு துண்டாக்கல் இயந்திரம் வழங்கல்* | *0.132* | *01 இயந்திரம்* |
| *3. பயிற்சி நிகழ்சிகளை நடாத்துதல்* | *0.01* | *06 பயிற்சிகள்* |
| *4. நிர்வாகச் செலவுகள்* | *0.0084* | |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

கிராமத்தினுள் பெரிய வெங்காயச் செய்கை வியாபிப்பதன் ஊடாக விவசாயிகளின் வருமானம் அதிகரித்து அவர்களின் பொருளாதாரம் அபிவிருத்தியடையும். அதன் மூலம் கிராமிய வறுமையைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விவசாயிகளின் ஊழியப் பங்களிப்புடன் சிறந்த விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதன் காரணமாகவும் அறுவடைக்குப் பின்னரான அழிவுகளைக் குறைப்பதற்கனை நடைமுறைகளைப் பின்பற்றுவதனாலும் தரமான உற்பத்தி நிகழ்வதுடன் அவற்றுக்குச் அதிக சந்தை வாய்ப்பினைப் பெற முடியும். மேலும் உச்சளவில் பயன்படுத்தப்படாத காணிகளை அடையாளம் கண்டு அவற்றுக்குத் தேவையான உபாய முறைகளைப் பயன்படுத்துதன் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.1.19. விசாகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவுக்காக பாடசாலைத் தோட்டத்தை தயார்படுத்துதல்




**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 0.99**
**செலவிட்ட தொகை ரூ.மி. 0.99**

**அறிமுகம்**

பாடசாலை வீட்டுத் தோட்ட நிகழ்ச்சியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மாதிரி நகரப்புற விவசாய வீட்டுத் தோட்ட நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்

**குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**

- தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மாதிரி வீட்டுத்தோட்டங்களையும் பிரயோக விவசாயச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு விவசாயச் செயற்பாடுகள் தொடர்பில் அறிவூட்டலும் அவர்கள் மத்தியில் விவசாயம் தொடர்பில் ஆர்வத்தை ஏற்படுத்துதலும்

**உபாய முறைகள்**

நகரப்புற விவசாயத்தைப் பிரபல்யப்படுத்துவதற்ககா கொழும்பு விசாகா வித்தியாலயத்தின் வளாகத்தினுள் சாடிகளில் நடப்பட்ட கன்றுகளைப் பயன்படுத்தி மாதிரி நகரப்புற வீட்டுத்தோட்டமொன்று நிர்மாணிக்கப்பட்டதுடன், விவசாயக் கல்விக்கு உதவியாக அமையும் விதத்தில் கிராமிய வீடு, மரத்தின் மேல் கன்று, நெற் களஞ்சியம் போன்ற மாதிரிகளும் நிர்மாணிக்கப்பட்டன. இவை தவிர விவசாய விரிவுரை மண்டபமொன்றும் நிர்மாணிக்கப்பட்டது. இந்த வசதிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு பிரதேசத்தின் ஏனைய பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு விவசாயம் தொடர்பான அறிவும் அகத்துண்டுதலும் கிடைப்பதுடன் அவர்களுக்கு அதில் ஈடுபாட்டையும் ஏற்படுத்தும்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்** - 2017
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:-** குறுகிய காலம்
**பங்காளர்கள்** - பாடசாலைப் பிள்ளைகள்
**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:** 120
**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி** - உள்நாட்டு நிதி

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

**விசாகா வித்தியாலயத்தில் முன்மாதிரி வீட்டுத்தோட்டமொன்றை உருவாக்குதல்**

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- பாடசாலை மாணவர்களின் மனப்பாங்கு விருத்தி மற்றும் அறிவூட்டடல்.

## 2.1.20 அரசாங்க விதைப் பண்ணை மற்றும் பயிற்சி நிலையம், ஒக்கம்பிட்டி

**ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 6.25**
**செலவிட்ட தொகை ரூபா.மில். 4.49**

**அறிமுகம்**

இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அதனுடன் தொடர்புடைய பின்னணி மற்றும் அதற்குத் தேவையான பிரதான படிமுறைகளான உள்ளக நீர்ப்பாசனத் தொகுதி மற்றும் வீதித் தொகுதி அபிவிருத்தி மற்றும் நிர்மாணிக்கப்பட்ட குளத்தின் விரிவாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது அடிப்படைப் படிமுறைகளுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



நிர்மாணிக்கப்பட்ட குளத்தை விரிவுபடுத்தும் செயற்பாடுகள மேற்கொள்ளுதல்

**குறிக்கோள்கள்**

- நிர்மாணிக்கப்பட்ட குளத்தை விரிவுபடுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- உள்ளக வீதிகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்.
- உள்ளக நீர்ப்பாசனக் கால்வாய்களுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்.

**நோக்கங்கள்**

- தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்து ஊவா மாகாணதத்திற்குத் தேவையான தரமான மேலதிக உணவுப் பயிர் விதைகளை உற்பத்தி செய்தல்.
- பண்ணையின் உள்ளகப் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக வீதித் தொகுதியில் திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்.
- உள்ளக நீர் முகாமையை மேற்கொள்வதற்காக நீர்ப்பாசனக் கால்கைளத் தொகுதியில் திருத்த வேலைகளைச் செய்து புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள குளத்தை மேலும் விரிவுபடுத்துதல்.

**இலக்குகள்**

- நிர்மாணிக்கப்பட்ட குளத்தின் மேற்பகுதி 1 மீற்றரினால் விரிவுபடுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- உள்ளக வீதிகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்வதன் கீழ் நுழை பாதையின் இரு மருங்கிலும் கொங்கிரீட் பக்க மதில்கள் நிர்மாணித்து சரளைக் கற்கள் பதித்து தயார்படுத்துதல்.
- உள்ளக நீர்ப்பாசனக் கால்வாய்களுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்வதன் கீழ் நீர் வடிந்தோடுவதற்கான பக்கமதில்கள் 03 நிர்மாணித்தல்.

**ஊபாய முறைகள்**

- குளத்தை விரிவுபடுத்துவதன் மூலம் சேகரித்து வைக்கக்கூடிய நீரின் அளவை அதிகரித்தல்.
- வீதிகளில் திருத்த வேலைகளைச் செய்வதன் மூலம் போக்குவரத்துக் கஷ்டங்களைத் தவிர்த்தல்.
- நீர்ப்பாசனக் கால்வாய்களில் திருத்தவேலைகளைச் செய்வதன் ஊடாக முறையான நீர் வழங்கலை ஏற்படுத்துதல்.

**புதிய போக்குகள்**

- வெற்றிகரமான மேலதிக உணவுப் பயிர் விதைகளை உற்பத்தி செய்வதன் மூலம் ஊவா மாகாணத்தின் விதைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்:** - 2017.07.25 - 2017.12.31

**செயற்திட்டம் (நீண்ட காலம்/ நடுத்தரக் காலம்/ குறுகிய காலம்):** நீண்ட காலம்

**பங்காளர்கள்:** ஊவா மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் விதை சான்றுப்படுத்தல் சேவை.

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடியான பயனாளிகள் - பண்ணைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும்.
- மறைமுகமான பயனாளிகள் - மாவட்டத்தின் 500 விவசாயிகள்

**செயற்திட்டத்துக்குப் பயன்படுத்திய நிதி** :- உள்நாட்டு




உள்ளக வீதிகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்:-**

- நிர்மாணிக்கப்பட்ட குளத்தை விரிவுபடுத்தும் செயற்பாடுகள மேற்கொள்ளுதல் - 1.5 மீற்றரால் குளத்தை விரிவுபடுத்தும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- உள்ளக வீதிகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் - கொங்கிரீட் நிலவடிப்புக்கள் 02 நிர்மாணிக்கப்பட்டு ஓடையை அகலமாக்கும் வேலைகள் பூர்த்தி செய்ய்பபட்டன.
- உள்ளக நீர்ப்பாசனங்களுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் - 03 கொங்கிரீட் நில வடிப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டு ஓடையை அகலமாக்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்:-**

- மாவட்டத்தின் மேலதிக உணவுப் பயிர் விதைத் தேவைகளை வழங்குவதன் ஊடாக மாவட்டத்தை தன்னிறைவடையச் செய்தல்.

**எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மேம்பாடுகள்.**

- 2017 ஆம் ஆண்டில் செயற்திட்ட மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் ஏற்பட்ட தாமதங்களின் காரணமாக செய்ய முடியுமாக இருந்த வேலைகளைச் செய்ய முடியாது போனது. உள்ளக வீதிகளின் திருத்த வேலைச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் கீழ் நுழை பாதையின் மீதமுள்ள பகுதிக்கான உள்ளக வீதியில் திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல், தேவையான இடங்களில்மதகுகள், கோஸ்வேக்கள் போடுதல் என்பவற்றுக்காகவும் செயற்திட்டப் பிரேரணைகள் ஊடாக உத்தேச நெற் களஞ்சயத்தை நிர்மாணிப்பதற்காகவும் 2018 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முன்மொழிகின்றோம்.

- புதிய நெற் களஞ்சிய நிர்மாணம் - ரூபா.மில். 4.5
- உள்ளக வீதிகளுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் - ரூபா.மில். 2.5
- உள்ளக நீர்ப்பாசனக் கால்வாய்களுக்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் - ரூ.மி. 1.5

## 2.1.21 50ழு பங்களிப்பின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்குகளை வழங்கும் செயற்திட்டம்.

**அறிமுகம்**

2017 ஆம் ஆண்டில் நிலவிய வறட்சியான வானிலை நிலைமையின் கீழ் பயிர்களின் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி இலக்குகளை அடைவதற்கு வடக்கும் மற்றும் ஊவா மாகாண விவசாயிகளுக்கு 2017.01/18 பெரும் பொகத்தில் பயிர்செய்வதற்காக விதை உருளைக் கிழங்குகளைப் பெறுவதில் சிரமங்கள் காணப்பட்டன. அதற்கிணங்க, வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் குறிப்பாக உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யப்படும் யாழ்ப்பாணம், பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் விவசாயிகளை உள்நாட்டு உருளைக் கிழங்கு உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபடச் செய்து அவர்களின் உருளைக் கிழங்கு உற்பத்திக்கான செலவுகளைக் குறைப்பதற்காக தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி 2017 இன் கீழ் 50ழு பங்களிப்பின் அடிப்படையில் விதை உருளைக் கிழங்குகளை வழங்கும் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**குறிக்கோள்கள்**

- நாட்டில் நிலவும் நுகர்வுக்கான உருளைக் கிழங்குத் தேவைகளை உள்நாட்டு நுகர்வோர் உருளைக் கிழங்கு உற்பத்தியின் மூலம் பூர்த்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்தல்.

**ஊபாய முறைகள்**

- விவசாயிகளுக்கு 50ழு பங்களிப்பின் அடிப்படையில் விதை உருளைக் கிழங்கு வழங்குதல்.

**நிகழ்ச்சித்திட்டக் காலப் பகுதி:**

- நுவரெலியா மாவட்டம் - 2017/12/10 முதல் 2017/12/31 வரை
- பதுளை மாவட்டம் - 2017/12/20 முதல் 2017/12/31 வரை

**செயற்திட்டத்தின் தன்மை:** குறுகிய காலம்

**பங்காளர்கள்:**

- மாவட்ட செயலகம், நுவரெலியா

- பிரதி விவசாயப் பணிப்பாளர் (மாகாண) அலுவலகம் நுவரெலியா, வரையறுக்கப்பட்ட விவசாய வாழ்வாதார ஊக்குவிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நுவரெலியா

- 50ழு பங்களிப்பின் அடிப்படையில் விதைகளைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் பதுளை மாவட்ட உருளைக் கிழங்கு விவசாயிகள்.

- மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
- விவசாயத் திணைக்களம்
- ஊவா மாகாண சபை

**பயனாளிகளின் எண்ணிக்கை:**

**நேரடிப் பயனாளிகள்**
யாழ்ப்பாண மாவட்டம் - 1,289 விவசாயிகள்
நுவரெலியா மாவட்டம - 767 விவசாயிகள்
பதுளை மாவட்டம் - 1,908 விவசாயிகள்

நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட நிதி - உள்நாட்டு

**நிதி முன்னேற்றம்:-**

| | ஒதுக்கிய தொகை (ரூ.மி) | செலவிட்ட தொகை (ரூ.மி) |
|---|---|---|
| நுவரெலியா மாவட்டம் | 15.38 | 14.83 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 37 | செலவு : 5.48<br>O/S: 26.28 |
| பதுளை மாவட்டம் | 23.75 | 10.75 (ரூ.மி)<br>(10.75 ஆன 50% விவசாயிகளின் பங்களிப்பு சேகரிக்கப்பட்டுள்ளது |

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்:**

| | |
|---|---|
| நுவரெலியா மாவட்டம் | 118.25 மெ.தொ. விதை உருளைக் கிழக்கு நுவரெலியா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்த நிலப்பரப்பு ஏக்கர் மெ.தொன 116.88 ஆகும் |
| யாழ்ப்பாணம் மாவட்டம் | விதை உருளைக் கிழங்கு 234.72 மெற்றிக் தொன் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்த நிலப்பரப்பு ஏக்கர் மெ.தொன் 234.725 ஆகும். |
| பதுளை மாவட்டம் | விதை உருளைக் கிழங்கு 119.45 மெ.தொன் பதுளை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்த நிலப்பரப்பு 147.5 ஏக்கர்களாகும். |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும், சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்:**

விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்குகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளின் உருளைக் கிழங்கு உற்பத்திச் செலவு குறைக்கப்படுவதுடன் உற்பத்திசெய்யப்படும் உருளைக் கிழங்குகளின் அளவு அதிகரிக்கும். அதனால் உருளைக் கிழங்கு விற்பனை மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் வருமானம் அதிகரிப்பதற்கும் பொருளாதார ரீதியில் விவசாயிகள் பலமடைவதற்கும் இச்செயற்திட்டம் பங்களிப்புச் செய்யும்.

## 2.1.22. பிபிலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் நாற்று மேடை மற்றும் பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.மில். 2.37
செலவிட்ட தொகை ரூபா.மில். 2.37



**அறிமுகம்**

இந்நிறுவனத்தில் ஏஜே 04 பயிற்சிநெறிகளை ஆரம்பிப்பதற்கு பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். அதனால் நிறுவனத்தின் நாற்றுமேடை அலகை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**குறிக்கோள்கள்**

- நாற்றுப் மேடைப் பாதுகாப்பு மற்றும் நாற்று உற்பத்திகளை மேம்படுத்துதல்.
- நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தைத் தயார்படுத்தலின் வினைத்திறனை மேம்படுத்தி, பயிலுநர்களுக்கு அந்தத் தொழில்நுட்பத்தைப் பழக்குதல்.

**நோக்கங்கள்**

- மொனராகலை மாவட்டத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான பழக்கன்றுகளையும் ஏனைய விதைக் கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குதல்.
- கூட்டுப் பசளை உற்பத்தியின் அளவை அதிகரித்தல்.
- புதிய தொழில்நுட்ப அறிவைப் பயிலுநர்களுக்கு வழங்குதலும் புதிய விவசாய உபகரணங்களைப் பயன்படுத்துவதற்குத் தூண்டுதலும்.

**இலக்குகள்:-**

- வகைகள் 2500 அடி வலை வீடொன்றை நிர்மாணித்தல்.
- நாற்று மேடையை சுற்றி வலை வேலியொன்றையும் நுழைவாயிலொன்றை நிர்மாணித்தல்.
- இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல். (பல நோக்க துண்டாக்கல் இயந்திரம், 4 சக்கர ட்ரக்டர் மூலம் செயற்படக்கூடிய தவாளிப்பு உபகரணங்கள், 4 சக்கர ட்ரக்டர் மூலம் இயங்கக்கூடிய காடு வெட்டும் இயந்தரம்)

**ஊபாய முறைகள்:**

- நாற்று உற்பத்தி மற்றும் வலை வீட்டுப் பயன்பாடு என்வற்றின் மூலம் தரம்வாய்ந்த நாற்றுக்களை வழங்குதல்.
- புதிய விவசாய இயந்திரங்களைப் பயன்படுத்தி முறையான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

**புதிய போக்குகள்:-**

- புதி விவசாய உபகரணங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக விவசாயிகளை இயந்திரமயமாக்கலுக்கு ஆற்றுப்படுத்துதல்.
- தரம்வாய்ந்த மற்றும் புதிதாக மேம்படுத்தபட்ட அரும்பொட்டப்பட்ட கன்றுகளை நடுவதற்கு விவசாயிகளைத் தூண்டுதல்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்** :- 2017.08.08- 2017.12.31 வரை

**செயற்திட்டம் (நீண்ட காலம்/ நடுத்தரக் காலம்/ குறகிய காலம்):** நடுத்தரக் காலம்

**பங்காளர்கள்:** ஊவா மாகாண விவசாயத் திணைக்களம்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

- நேரடிப் பயனாளிகள் - 3000 பயிலுநர்கள், 2,000 மாணவர்கள்
- மறைமுகமான பயனாளிகள் - மாவட்டத்தின் 10,000 விவசாயிகள்

**செயற்திட்டத்துக்குப் பயன்படுத்திய நிதி :- உள்நாட்டு**

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்:**

| *செயற்திட்டம்/ செயற்பாடு* | *2017.12.31 இல் உள்ளவாறான பௌதிக முன்னேற்றம்* |
|---|---|
| *2500 சதுர அடி கொண்ட வலை வீடொன்று நிர்மாணித்தல்* | *வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பொலித்தீன் மற்றும் வலை பொருத்தப்படவில்லை* |
| *பாத்தியைச் சுற்றி வலை மறைப்பு வேலியும் நுழைவாயில் கதவும் நிர்மாணித்தல்* | *வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது* |
| *சேதன உர உற்பத்திக்காக துண்டாக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்தல் (மல்டி சொப்பர்)* | *கொள்ளவு செய்யப்பட்டுள்ளது* |
| *வரப்பு அமைக்கும் உபகரணமொன்று (4 சக்கர ட்ரக்டரில் பொருத்தி)* | *கொள்வனவு செய்யப்பட்டுள்ளது* |
| *களை வெட்டும் உபகரணமொன்று (4 சக்கர ட்ரக்டரில் பொருத்தி)* | *கொள்வனவு செய்யப்பட்டுள்ளது* |

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

- ஒட்டுமொத்த உற்பத்திகளினதும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்.
- கிராமிய வறுமையை ஒழித்தலும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதலும்.
- அறுவடைக்குப் பிந்திய அழிவுகளைக் குறைத்தல்.
- சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- நிலப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல்

சேதன உர உற்பத்திக்காக
துண்டாக்கும் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல் (மல்டிசொப்பர்)



**எதிர்கால முன்மொழிவுகள் அல்லது மேம்பாடுகள்:-**

- 2017 ஆம் ஆண்டின் செயற்திட்டத்திற்கும் மதிப்பீட்டிற்கும் அங்கீகாரம் கிடைப்பதற்கு தாமதமடைந்தமையினால் பண்ணையில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருந்த விதைக் களஞ்சியத்தை நிர்மாணிக்க முடியவில்லை. 2018 ஆம் ஆண்டில் இதற்காக மதிப்பிடப் பட்ட 03 மில்லியன் ரூபாவை வழங்குவதன் மூலம் அந்த இலக்கை அடைய முடியும்.

## 2.1.23. இரணமடு விமானப் படை முகாமில் உள்ள மாம்பழச் செய்கைச் செயற்திட்டம்.

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 0.25**
**செலவிட்ட தொகை - ரூபா.மில் 0.25**

**அறிமுகம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் இராமநாதபுரம் கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள இலங்கை வான் படையின் இரணைமடு முகாம் 20 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்ட ஒரு முகாமாகும். இந்த முகாமினுள் சுத்தம் செய்யப்பட்ட நிலப் பரப்புக்களை முறையாக விவசாய நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டு விவசாய அமைச்சின் வழிகாட்டல் மற்றும் பங்களிப்பின் கீழ் 8 ஏக்கர் நிலப்பகுதியைப் பயன்படுத்தி 1,000 ஈ.ஜே.சீ வகை மாமரக் கன்றுகள் உரிய தரநியமங்களுக்கு ஏற்ப பயிரிடப்பட்டுள்ளன.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

- தரம்வாய்ந்த மாழ்பழ உற்பத்திகளை உள்நாட்டுச் சந்தைக்கு வழங்குதல்.
- மாம்பழச் செய்கையில் ஆர்வம் காட்டும் தரப்பினருக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் அறிவையும் வழங்குதல்.
- தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.
- மகாமின் வளாகத்தினுள் பயன்படுத்தப்படாத நிலப் பிரதேசங்களில் விவசாய ரீதியில் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்துதல்.
- மாம்பழச் செயற்திட்டத்தின் மூலம் பெறப்படும் இலாபகங்களின் ஊடாக நிதியத்தைப் பலப்படுத்தி அதன் முலம் சேவையிலுள்ள ஆட்களின் நலனோம்பலை மேம்படுத்துதல்.

**உபாய முறைகள்**

- முகாமில் சேவையில் ஈடுபட்டுள்ள சேவை ஆட்களிடமிருந்து பெறமுடியுமான மேலதிக ஊழிய மணித்தியாலங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் செயற்திட்டத்தை முன்னெடுத்தல்.

**புதிய போக்குகள் (Repository)**

இச்செயற்திட்டத்திற்குப் பயன்படுத்தும் நிலப் பகுதிக்கு மேலதிகமாக விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படாத வேறு நிலங்கள் முகாமினுள் காணப்படுகின்றனவா என்று தேடியறிந்து மாமரச் செய்கையை மென்மேலும் விரிவுடுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறிதல்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்:** 2017 -2022
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:-** நீண்ட காலம்
**பங்காளர்கள்** - விவசாய அமைச்சு/ இலங்கை வான்படை
**நேரடி/ மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:** 950
**செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி** - உள்நாட்டு

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

இரணமடு விமானப் படை முகாமில் 08 ஏக்கர் நிலத்தில் 1000 டொம் ஈ ஜே சீ மாமரக் கன்றுகளை நடுதல்.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

கிருமி நாசினிகளின்றி சேதன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இச்செயற்திட்டம் மேற்கொள்ளப் படுவதனால் வி'மற்ற விளைச்சலைப் பெற முடிவதுடன், அதனை உள்நாட்டுச் சந்தையில் விற்பதன் மூலம் அவற்றைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு அவர்கள் செலவிடும் பணத்திற்குச் சமனான மிகவும் தரம்வாய்ந்த பழங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இந்த விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் சேவையிலுள்ள ஆட்களின் நலனோம்பலை அதிகரிப்பதற்குப் பெரும் துணையாக அமையும்.

## 2.1.24 சோயாவை அடிப்படையாகக் கொண்ட உணவு உற்பத்திச் செயற்திட்டம் - தேசிய உணவு மேம்பாட்டுச் சபை

சோயா மிகவும் உயர் புரதச் சத்தைக் கொண்ட ஒரு தாவர இனமாகும். எனினும் சோயா நுகர்வும் சோயாவை அடிப்படயாகக் கொண்ட உற்பத்திகளை தயாரித்தலும் குறைந்த அளவிலேயே இடம் பெறுகின்றன. அதனால் சோயாவை அடிப்படையாகக் கொண்டு உயர் நார்ப் பெறுமானம் கொண்ட பிஸ்கட், உடனடி நூடில்ஸ் மற்றும் யோகட் பான உற்பத்தி இச்செயற்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்படும்.

செயற்திட்டத்திற்கான நிதி ஏற்பாடு வழங்குதல் - விவசாய அமைச்சினால்
1.87 மில்லியன ரூபா 2017.08.02 ஆந் திகதி வழங்கப்பட்டது. கண்ணோருவை உணவு ஆராய்ச்சி அலகினுள் இந்த உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

**குறிக்கோள்கள்**

- சோயாவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல்.
- சோயாவை அடிப்படையாகக் கொண்ட உணவுகள் தொடர்பில் நுகர்வோர் காட்டும் ஆர்வத்தை மேம்படுத்துதல்.
- சுகாதார ஆரோக்கியமிக்க எதிர் காலச் சந்ததியொன்றை உருவாக்குதல்.

**இச்செயற்திட்டத்தின் கீழ் சோயாவை அடிப்படையாகக் கொண்டு 03 உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

- சோயாவை அடிப்படையாகக் கொண்டு பிஸ்கட் உற்பத்தி செய்தல் Fortified fiber enrich biscuit)
- சோயாவையும் காய்கறிகளையும் அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட உடனடி நூடில்ஸ் Instant cup Noodle with mixed Vegetable)
- சோயாவையும் குறைவாகப் பயன்படுத்தப்படும் பழங்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட யோகட் பானமொன்று (Soya Yoghurt Drink with Under Utilized Fruit)

பல்வேறு துறைகளில் செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்

இந்த உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கு தனியார் துறையினரின் பங்களிப்புப் பெறப்படுகின்றது. அத்துடன் மக்களின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



தனியார் நிறுவனமொன்றின் பிஸ்கற்றுகளுக்கான சாத்தியப்பாட்டை ஆராய்தல்.

## 2.1.25 தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளைப் பலப்படுத்துதல்

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 1.05**
**செலவிட்ட தொகை ரூபா. 1.04**

### அறிமுகம்

விவசாயத் திணைக்களத்தின் தலைமையகத்தின் உள்ளே தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான உப அலகு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் உரிய தரப்பினரின் அனுமதிகளைப் பெறுதல், செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் மற்றும் அனுமதி பெறுதல், தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியின் வெற்றிக்காக நிதிப் பிரிவு, பயிர்த் தலைவர்கள், விவசாயத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகள், மாகாண சபைகள் மற்றும் மகாவலி அதிகாரசபை போன்ற தரப்பினருடன் உரியமுறையில் தொடர்புகளைப் பேணுதல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சினால் வருடாந்தம் பாரியளவு தொகைப் பணம் விவசாயத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்படுவதுடன் அதற்கான மேலதிக பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட உப அலகின் அடிப்படை வசதிகள் இச்செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டன.

### செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்

- தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியின் தொழிற்பாட்டுப் பொறிமுறைக்கு வலுவூட்டுதல்
- தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியுடன் தொடர்புடைய குறித்த தரவுகளை முறையாக இற்றைப்படுத்தும் முறையொன்றை உருவாக்குதல்

### உபாய முறைகள்

முன்னேற்றத் தொழிற்பாடுகள் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான கணினி வசதிகளையும் அலுவலக உபகரணங்களையும் வழங்குதல்.

**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:-** குறுகிய காலம்

**பங்காளர்கள்**

முன்னேற்றத் தொழிற்பாடுகள் மற்றும் மதிப்பீட்டு அலகு, விவசாயத் திணைக்களம்

நேரடியான மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:

நேரடிப் பயனாளிகள் - தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியிலும் முன்னேற்றத் தொழிற்பாடுகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவிலும் பணி புரிகின்ற உத்தியோகத்தர்கள்

மறைமுகமான பயனாளிகள் - உணவு உற்பத்திக்கான தேசிய நிகழ்ச்சியின் தொழிற்பாடுகள் உப அலகின் நிகழ்ச்சியின் தொடர்புடைய சேவையின் மூலம் பெறப்படும் அமைச்சின், விவசாயத் திணைக்களத்தின், மாகாண விவசாயத் திணைக்களத்தின், மகாவலி அதிகாரப் பிரதேசத்தின் உத்தியோகத்தர்கள்.

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்:**

- 6 கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன
- USP 6 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- Kaspesky Intemet Security (3 Uers)2 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- 16GB Pen Drive 2 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- Book End 20 கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- இணையப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியின் தொழிற்பாடுகளைப் பலப்படுத்தும் நோக்கில் நிகழ்ச்சியின் வெற்றிக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மனித வளங்களுக்கு வலுவூட்டப்பட்டுள்ளன.

# 2.2 விவசாய அமைச்சின் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

சேதன வீட்டுத்தோட்டம்



## 2.2. 1 சேதன உர உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சி (ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. 100) செலவுத் தலைப்பு 118-2-3-21-2509

### 2.2.1.1 சேதன உர உற்பத்தி மற்றும் சார லங்கா கடன் நிகழ்ச்சி

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 80**
**செலவிட்ட தொகை ரூ.மி. 27.5**
செலவுத் தலைப்பு- 118-2-3-21-2509

**அறிமுகம்**

சேதன உரப் பயன்பாடைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக சேதன உர உற்பத்திக்கு விவசாயிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள் நடமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அதற்கிணங்க, சேதன உர உற்பத்திக்கு நிதியுதவியும் வசதிகளிம் வழங்கும் நோக்கில் 2016 ஆம் ஆண்டில "சார லங்கா" கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டிற்காக சார லங்கா நிகழ்ச்சிக்கு 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதில் 27.5 மில்லியன் ரூபா 120 விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் மத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்காக சார லங்கா நிகழ்ச்சிக்கு 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதில் 27.5 மில்லியன் ரூபா 120 விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் மத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

| தொ. இல. | மாவட்டம் | வழங்கிய தொகை (ரூபா) | கடன் அறவீடு (ரூபா) | அறவிடப்பட வேண்டிய தொகை (ரூபா) | கடன் அறவீட்டுச் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | கம்பஹா | 3.35 | - | 3. 35 | - |
| 2 | களுத்துறை | 2.50 | 0. 4 | 2.08 | 16.40% |
| 3 | கண்டி | 2.42 | 0.075 | 2.34 | 3.11% |
| 4 | மாத்தளை | 0.55 | - | 0.55 | |
| 5 | காலி | 3.00 | 0.80 | 2.19 | 26.92% |
| 6 | மாத்தறை | 2.00 | 0.35 | 1.65 | 17.25% |
| 7 | குருநாகல் | 2.50 | 0.008 | 2.50 | 0.33% |
| 8 | புத்தளம் | 2.00 | 0.52 | 1.95 | 2.60% |
| 9 | அநுராதபுரம் | 5. 00 | 0.58 | 4.94 | 1.16% |
| 10 | பொலனறுவை | 0.80 | 0.97 | 0.70 | 12.19% |
| 11 | பதுளை | 2. 00 | 0.17 | 1.83 | 8.51% |
| 12 | மொனராகலை | 0.80 | 0.57 | 0.74 | 7.20% |
| 13 | கேகாலை | 3.60 | 0.24 | 3.3 | 6.71% |
| 14 | வவுனியா | 1.85 | 0.14 | 1.71 | 7.59% |
| 15 | யாழ்ப்பாணம் | 0.10 | - | 0.1 | |
| 16 | முல்லைத்தீவு | 0.33 | 0.08 | 0.24 | 24.50% |
| | **மொத்தம்** | **32.80** | **2.54** | **30.25** | **7.77%** |

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் இலக்குகள்:**

- இரசாயன உப பயன்பாட்டைக் குறைப்பதற்காக விவசாயிகள் மத்தியில் சேதன உரப் பயன்பாட்டை ஊக்குவித்தல்
- கூட்டு உர உற்பத்தியின் மூலம் படிப்படியாக கழிவுப் பொருட்களைக் குறைத்தல்.
- கூட்டு உர உற்பத்தியில் ஈடுபடுகின்ற சிறியளவிலான உற்பத்தியாளர்களை ஊக்குவித்தலும் உற்பத்தி மட்டத்தை அதிகரித்தலும்
- நவீன தொழில்நுட்ப முறைகள் மற்றும் கூட்டு உர உற்பத்தியின் நவீன போக்குகளையும் அடையாளம் காணுதல்
- சேதன உரத்திற்கான சந்தைத் ததரத்தை ஏற்படுத்துதலும் அதன் மூலம் தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துதலும்

மேலே குறிப்பிட்ட குறுகிய கால குறிக்கோள்களுக்கு மேலதிகமாக மண்ணின் வளத்தை அதிகரித்தல், வி'மற்ற உள்நாட்டு உணவுப் பழக்கத்திற்கு மக்கள் பழக்கப்படுதல், இரசாயன உர இறக்குமதிக்குச் செலவாகும் செலவைக் குறைத்தல். புதிய பாரியளிலான சேதன உரத் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல் என்பன இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**2.2.1.2 சேதன உரப் பயன்பாட்டையும் உற்பத்தியையும் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சி மாகந்துரை சேதன வீட்டுத்தோட்டத்திற்கான விசேட மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்தல், கூட்டு உரச் சான்றுப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரம்**

ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 20
செலவிட்ட தொகை ரூபா. 15.32

**அறிமுகம்**

விவசாயத் தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் விவசாயத்திற்காக இரசாயன உள்ளீடுகளை மாத்திரம் பயன்படுத்துவதன் மூலம் பௌதீகச் சூழலுக்கும் மனிதனுக்கும் ஏற்படும் சேதனப் பயிர்ச்செய்கையின் பாதகமான தாக்கங்கள் தொடர்பான அறிவை விருத்தி செய்வதுடன் சேதனப் பசளைகளின் முக்கியத்துவம் தெளிவாகியது. நாட்டின் தரம்வாயந்த சேதன உர உற்பத்தியை ஊக்குவிப்பதும் சேதன உள்ளீடுகளைப் பயன்படுத்தும் விவசாய உற்பத்தியை ஊக்குவிப்பதும் நிலைபேறான விவசாய அபிவிருத்திக்கு அத்தியவசியமானவையாகும்.

**செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**

நாட்டில் நிலைபேறான பயிர் உற்பத்திகளை உருவாக்குதல், நீண்ட காலத்தில் மண்ணின் தரத்தை மேம்படுத்துதல், உரப் பாவனையைக் குறைத்தல்

**உபாய முறைகள்**

சேதன உர உற்பத்தி மற்றும் சேதனப் பயிர்ச்செய்கை தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சியொன்றைப் நடாத்துல், சேதன உர உற்பத்தி மற்றும் சேதன உர உற்பத்தி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல், புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளுதல், மாதிரி சேதன உர உற்பத்தி அலகுகளைப் பராமரித்தல், கூட்டு உரச் சான்றுப்படுத்தல் மூலம் உரிய தரத்திலான கூட்டு உரங்களை நாட்டினுள் பரவலாகக் கிடைக்கச் செய்தல், மாதிரி சேதனப் பயிர்ச்செய்கை களங்களைப பராமரித்தல் என்பவற்றின் மூலம் இரசாயன உரப் பயன்பாடு குறைந்த பயிர்ச்செய்கை முறைகள் தொடர்பில் ஆர்வமூட்டுதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்** - 2014 இலிருந்து
**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/ குறுகிய காலமா) என்பது:-** நீண்ட காலம்

**பங்காளர்கள்:** விவசாய அமைச்சசு, விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் (வி.தி) மாகந்துறை சேதன விவசாயத்திற்கான விசேட மத்திய நிலையம்

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை**: விவசாயிகள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் - 7,193
செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு

## செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்

**ஆய்வுச் செயற்பாடுகள் - 90%**

சேதன உர உற்பத்தி தொடர்பா புதிய நிறுவனங்கள்
- காய்கறிகள் மற்றும் பழ வகைகளுக்கான தேசிய பொதிகளை அறிமுகப்படுத்துதற்கான ஆய்வுகள் 03
பாதுகாப்பான வீடு மற்றும் ஆய்வு 01

**பயிற்சி - 95%**

-பயிற்சி நிகழ்ச்சிகள் 63 பயிலுநர்கள் 7193
-பகிரப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் 7500
-நடாத்தப்பட்ட செயலமர்வுகள் 06
-கண்காட்சிகள் 01

**சேதன உர உற்பத்தி மற்றும் சேதன உள்ளீட்டு உற்பத்தி மாதிரிகளை உருவாக்குதல் - பௌதிக முன்னேற்றம் 100%**

-கூட்டு உர உற்பத்தி - 200 தொன்
புதிய இயந்திரங்கள் - 02
உற்பத்தி அலகுகள் 04

கூட்டு உர உற்பத்தி



**மாகந்துரை சேதன வீட்டுத்தோட்டத்திற்கான விசேட மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்தல்- 100%**

-அபிவிருத்தி செய்யப்பட்ட காணிப் பரப்பு - 10 ஏக்கர்
-சேதனப் பழச் செய்கை - 5 ஏக்கர்
உணவகம் - 01
இயந்திரக்கூட அபிவிருத்தி - அனைத்து இயந்திரக்கூட உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

**கூட்டு உரச் சான்றுப்படுத்தல் - 60%**

- சான்றுப்படுத்தல் வேலைத் திட்டம் மற்றும் அதற்குத் தேவையான ஆவணங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன.
- 3 உற்பத்தி நிறுவனங்கள் சான்றுப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டதுடன் 50 நிறுவனங்கள் பதிவுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.



கொழுக்கிக் கலப்பை



பயிற்சி நிகழ்ச்சிகள்

### தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள்

- 06 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், 400 வானொலி குறுஞ் செய்திகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன.

“ உலர்ந்து வெடித்துப் போன பூமிக்குப் புதியதொரு எதிர்பார்ப்பு” என்ற நூல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்

- சேதன உரப் பாவனையின் காரணமாக உற்பத்தி அதிகரித்து விளைச்சல் அதிகரிக்கவும், விவசாயக் கழிவுப் பொருட்களையும் கிராமிய ஊழியத்தையும் பயன்படுத்தி சேதன உரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்யவும் முடிவதன் ஊடாக பொருளாதார அபிவிருத்தி அடைவது சாத்தியப்படுதல்.
- பெண் விவசாயிகள் மற்றும் மகளிர் விவசாயச் சங்கங்கள் ஊடாக சேதன உர உற்பத்தி, சேதனப் பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம் ஊடாக மேலதிக வருமானத்தைப் பெறுதல்.
- நகரத்துக்குப் பொருத்தமான சேதனப் பயிர்ச்செய்கை முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் நகரப்புற வீட்டுத் தோட்ட அபிவிருத்தியின் ஊடாகவும் நகரப்புற விவசாயம் மேம்படுவதற்கு உதவி கிடைத்தல்.
- கூட்டு உரங்களையும் சேதன பயிர்களையும் ஏற்றுமதி செய்வதற்குக் காணப்படும் சாத்தியங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதியை ஊக்குவிப்பது சாத்தியப்படுகின்றமை. சேதன உர உற்பத்திக்கான முழுப் பங்களிப்பும் தனியார் துறையினால் வழங்கப்படுவதனால் அரசாங்க தனியார் துறைப் பங்குடமையின் மூலம் தனியார் துறை விவசாத் தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்குப் பாரியளவில் உதவி கிடைத்தல்
- விவசாயப் பண்ணைகளின் கழிவுப் பொருட்களையும் நகரப்புறக் கழிவுப் பொருட்களையும் முறையாக முகாமை செய்ய முடிவதனால், கழிவுப் பொருட்களின் மூலம் பொருளாதாரப் பயன்களைப் பெற முடிவதுடன் நுகர்வு வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் ஆரோக்கியமான சூழலொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் இச்செயற்திட்டம் துணையாக அமையும்.

### எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மேம்பாடுகள்-

- மாகாண விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றின ஒருங்கிணைப்புடன் பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துதல்
- விவசாயக் களங்களுக்குச் சென்று பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- சேதன உர உற்பத்தி மற்றும் சேதனப் பயிர்ச்செய்கை தொடர்பான குறுகிய கால பயிற்சிநெறிகளை ஆரம்பித்தல் மற்றும் விவசாயக் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் சேதனப் பயிர்ச்செய்கையை உள்ளடக்குதல்.
- சேதன உர உற்பத்தி தொடர்பில் தனியார் துறையினருக்கு மானியங்கள் வழங்குதல்

பொலித்தீன் வீடு



## 2.2.2 தேசிய விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டம் (செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-26-2507)

2017 ஆம் ஆண்டில் 12 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதற்காக அனுமதியளிக்கப்பட்ட தொகை ரூ.மி 20 நிதி முன்னேற்றம் - ரூ. மி. 10.24.

இச்செயற்திட்டம் தேசிய அபிவிருத்திக்குத் அத்தியவசியமான புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல், விவசாய ஆய்வுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் மற்றும் அந்த அறிவை விவசாயத் துறையின் எதிர்கால அபிவிருத்திக்காகப் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

| பல்கலைக்கழகம் | ஆய்வு | அனுமதி அளிக்கப் பட்ட தொகை (ரூபா.மில்) | செலவு (ரூபா. மில்) |
|---|---|---|---|
| பேராதனை | 1. விருந்து வழங்கி ஒட்டுண்ணி மற்றும் *Santalum album* வேர் ஒட்டுண்ணி என்பற்றுக்கிடையலான பொறிமுறையை ஆய்வு செய்தலும் இலங்கையில் பிரபல்யப்படுத்துவதற்குப் பொருத்தமான விருந்து வழங்கியை அடையாளம் காணுதல். | 1.78 | 1.34 |
| | 2. நெல் விதைகளின் உயிர்த்தன்மையைச் சோதிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமுறையொன்றை உருவாக்குதலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட்ட பிரபலமான விதைகளைப் பயன்படுத்தி விதைகளைக் களஞ்சியப்படுத்தும் போது உயிர்ப்புத் தன்மையை பேணி வருதல். | 0.97 | 0.21 |
| | 3. உப நீர் அளவீட்டில் மண் பொஸ்பரஸ் மற்றும் எந்திரத் தொகுதி உணவுக்கான விரிவான ஆவணமொன்றைத் தயாரித்தல் | 0.74 | 0.65 |
| | 4. பச்சை வீடுகளில் உள்ளீட்டுச் சாத்தியங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் | 1.91 | 0.94 |
| பட்டப்பின் கற்கை நிறுவனம் | 5. இலங்கையில் பூச்சிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கிரமிப்பு வெளித் தாவரங்கள், சில ஆக்கிரமிப்புத் தாவரங்களிலுள்ள ........ தாவர மற்றும் கிருமிநாசினிப் பண்புகள் மற்றும் மொன்ரிமொரிலினைட் ஆக்கக்கூறுகள். | 1.36 | 0.99 |
| வயம்ப | 6. இறப்பரின் (*Heweabrasilliensis*) மீள்தன்மைக்கான இயல்பின் முன் குறியீடு தொடர்பான செயற்பாட்டுப் பகுப்பாய்வு | 0.15 | 0.95 |
| | 7. இலங்கையில் பயிர்ச்செய்கையில் பூச்சிகொல்லிகளின் பயன்பாட்டு முறை, சுற்றாடலில் ஏற்படுத்தும் தாக்கங்களும் விவசாயிகளின் சுகாதாரத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களும். | 1.06 | 0.49 |
| ஊவா வெல்லஸ்ஸ | 8. வெலிமடை மற்றும் பொரகஸ் பிரதேசத்துக்கான அதிக விளைச்சலைத் தரக்கூடியதும் காற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடியதுமான சாதாரண அவரைகளை (*Phoseolus vulgaris*) பங்கேற்றல் செடி இனப் பெருக்க மூலம் மேம்படுத்துதல் | 1.86 | 0.97 |
| ஊவா வெல்லஸ்ஸ | 9. ஹோட்டன்தன்னை தேசிய பூங்காவின் ஒருங்கிணைந்த வனத்தின் கன்றுகள் இறத்தல் மற்றும் மீள் வளர்ச்சிக்கான சாத்தியங்களைக் கண்டறிதல். | 0.72 | 0.58 |
| கொழும்பு | 10. நெல்லின் மேம்படுத்தப்பட்ட பொஸ்பரஸ் போசணைக்கான பொஸ்பேட் உயிரியல் உரங்களை அபிவிருத்தி செய்தல் | 0.87 | 0.86 |
| சப்ரகமுவை | 11. இலங்கையின் நகரப் பிரதேசங்களில் சேதன உணவுகளைக் கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய கொள்வனவு நடத்தை தொடர்பான அளவுகோல்களைப் பகுப்பாய்வு செய்தல். | 0.56 | 0.54 |
| இராஜரட்டை | 12. களஞ்சியப்படுத்தப்பட்ட உற்பத்திகளில் பூச்சிகள் தொடர்பில் குறை அபாயங்களைக் கொண்ட கிருமிநாசினிகளின் தாக்கங்கள் | 1.71 | 1.69 |

## 2.2.3 நீர், துப்புரவு மற்றும் உடல் ஆரோக்கியம் (WASH) தொடர்பான செயற்திட்டம்

(கமநல அபிவிருத்தித் திணைக்களம்)- செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-32-2507

ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. 74 செலவாகிய தொகை ரூ.மி. 59.9

கிம்புல்கெமவெவ - மொனராகலை



கொரிக்கதுவ வெவ - மொனராகலை





இந்திபெலஸ்ஸவெவ - மொனராகலை

## WASH செயற்திட்டம் - (கமநல அபிவிருத்தித் திணைக்களம், விவசாய அமைச்சு)

### பின்னணி

இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நீர், துப்புரவு மற்றும் உடல் ஆரோக்கியம் தொடர்பில் செயற்திட்டம் (WASH) அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக 2011 - டிசம்பர் 17 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்ட ஒரு செயற்திட்டமாகும்.

| | |
|---|---|
| செயற்திட்டத்தைப் நடைமுறைப்படுத்துதல் ஆரம்பித்த திகதி | 2014 டிசம்பர் 17 |
| உத்தேச (முடிவு) செயற்பாடுள்ள நாட்கள் | 2016 டிசம்பர் 16 |
| திருத்தப்பட்டவாறான செயற்பாடுள்ள (இறுதி) நாட்கள் | 2018 டிசம்பர் 16 |
| நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2015 செப்டம்பர் 15 |
| நிதி மூலம் | சார்க் அபிவிருத்தி நிதியம் |
| முழுச் செயற்திட்டப் பெறுமதி<br>நிதி மூலம் | 0.94 Million US$, (136.37 Million SLR<br>மூலம் நிதி (Million US$)<br>உதவிபெறுபவர் 0.02<br>சார்க் அபிவிருத்தி நிதியம் (SDF) 0.92<br>மொத்தம் 0.94 |
| சார்க் அபிவிருத்தி நிதியம் | 0.92 Million US$ (133'40 Million US$) |
| மொத்தப் பங்களிப்பு | (Currency Unit =<br>Sri Lankan Rupee (LKR) LKR 145 = US$ 1) |
| Cost for MOA | Nil |
| உத்தேச செலவுகள் | வருடம் 2015 2016 2017 2018<br>வருடாந்த செலவு 4.92 41.88 46.00 43.57<br>மொத்தச் செலவு 4.92 46.80 92.80 136.37 |
| பிரதான துறை<br>துணைத் துறை | நீர்<br>விவசாயம்<br>துப்புரவு<br>உடல் ஆரோக்கியம் |
| பொறுப்பான நிறுவனம் | கமநல அபிவிருத்தித் திணைக்களம்<br>விவசாய அமைச்சு |
| இலக்காகக் கொள்ளப்பட்ட பிரதேசம் | மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டம் |

| | |
|---|---|
| பயனாளிகள் | விவசாய அமைப்புக்கள்<br>700 சிறியளவிலான விவசாயக் குடும்பங்களைக் கொண்ட |
| 07 குளக் கிராமங்கள் | |
| முக்கிய வேலைப் பகுதி | விடயம் நிதி (ரூபா மில்) அமுலாக்கும் நிறுவனம்<br>1 நீர் 0.64 DAD<br>2 துப்புரவு 0.04 DAD, UOC<br>3 உடல் ஆரோக்கியம் 0.01 DAD, UOC |

| | |
|---|---|
| செயற்திட்டத்தின் கீழான பயனாளிகள் | மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சிறியளிவலான வடிகாலமைப்புக்களுக்கு அருகில் வாழும் 700 விவசாயக் குடும்பங்களுக்குத் தேவையான குடிநீர், நாளாந்த நீர்த் தேவைகள் மற்றும் விவசாய வாழ்வாதாரம் என்பவற்றை உறுதிப்படுத்துதல். |

## நோக்கங்கள்

மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு 7 கீழ் வாழும் ஆண், பெண் மற்றும் சிறுவர் அங்கத்தவர்கள் 350 பேரின் நீர்ப் பிரச்சினை (நீர் காணப்படாமை), நீர்ப் பற்றாக்குறை, நிச்சயமற்ற வழங்கல், நீர் அதிகரித்தல் மற்றும் பலவீனமான நீரின் தரம் என்பவற்றைக் குறைப்பதற்கான பரீட்சார்த்த முயற்சியாக நடைமுறைப்படுத்துதல்.

## 1. வெளியீடு/ பயன்

- 3 வருட காலமாக மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைந்துள்ள 7 பலநோக்கு கிராமிய நிர்ப்பாசனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல்.
- 3 வருட காலமாக மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அமைந்துள்ள முறையே
4 நுண் நீர்ப் போசணைகளினதும் 5 நீர்ப் போசணைகளினதும் முகாமைத்துவதைப் பலப்படுத்துதல்.
- மேற்குறித்த 7 கிராமங்களிலும் நீரின் தரத்தை மேம்படுத்துதல்.

## 2. நோக்கங்கள்

இலங்கையின் நீர் மற்றும் சூழல் தொகுதியின் தேவைகளுக்கான கிராமிய நீர்ப்பாசனத்தில் தங்கி வாழும் கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

## செயற்திட்டச் செயற்பாடுகள்

2015 ஆகஸ்ட் 15 ஆந் திகதி இச்செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமையாளர் நியமிக்கப் பட்டார்.

உப விடயம் செயற்பாடுகள்

நீர்

- கிராமியக் குளங்களின் சூழற்தொகுதிகளை முகாமை செய்தல்
- நீர் சார்ந்த மேம்பாடுகள். அதன் சிறியளவிலான நீர்ப்பாசனங்களின் முக்கிய வேலைப் பகுதிகள், கீழருவிகள் மற்றும் ஓடைகள் மேம்படுத்தப்படும்.
- இந்த நீர்ப்பாசனங்களின் கீழ் தொழிற்பாட்டு மற்றும் மதிப்பீடுகளுக்காக சமுதாய அமைப்புக்களை உருவாக்குதல்.
- விவசாயத் தலைவர்களுக்கான தலைமைத்துவ ஆற்றல விருத்தி.
- மிகச் சிறிய நீர்ப் போசணை, சிறிய நீர்ப் போசணை மற்றும் நீர்ப் போசணை எல்லைகளை அடையாளம் காணுதல்
- காணிப் பயனுறுதி வரைபடம் தயாரித்தல்.
- பயன் குறைந்த அல்லது பயனற்ற காடுகளுக்காக வனச் செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பிரதான சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு சமுதாய அமைப்புக்களை தூண்டுதல்.
- பிரதான பயிர்ச்செய்கை நிகழ்ச்சிகளுககான உள்நாட்டு தாவர வகைகளை அறிமுகப்படுத்துதல்.
- மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட இடங்களில் சமுதாய அடிப்படையிலான பயிர்ச்செய்கையினை உருவாக்குதல்.

துப்புரவு மற்றும் சமூக சுகாதாரம்

- சுகாதாரப் பரிசோதகர்களையும் சுகாதாரப் பெண் ஊழியர்களையும் பயற்றுவித்தல்
- சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் **BCC** அறிவுறுத்தல்களை அச்சிடுதல்.
- சமுதாய சுகாதாரம் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டுதல்.
- அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளில் மேம்படுத்தப்பட்ட துப்புரவு முறைகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்.
- காலாண்டு அடிப்படையிலான சமுதாய சுகாதாரச செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் பிரதேச சுகாதாரப் பரிசோதைன உத்தியோகத்தர்களின் ஊடாக மாதாந்த வீட்டு மட்டத்திலான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள்.



அந்தன்குளம் மட்டக்களப்பு மாவட்டம்

## 06. 2017 - முன்னேற்றம்

| ஆகக்கூறு | செயற்பாடுகள் | 2017 ஒதுக்கீடு | செலவினம் ரூபா.மில் | 2017 ஆகஸ்ட் 31 வரையான அடைவுகள் |
|---|---|---|---|---|
| **1 பூர்வாங்கம்** | 1. அடிப்படை மதிப்பாய்வு | | | அடிப்படை மதிப்பாய்வு 100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| | 2. நிலைமைப் பகுப்பாய்வு மற்றும் வளங்களின் வரைபடம் தயாரித்தல் | | | தரவு சேகரித்தல் பூர்த்தியடைந்துள்ளது வரைபடம் தயாரிப்பு நடைபெறுகின்றது |
| **2. நீர்** | 2.1 பொறியியல் அளவை, வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் | 51.75 | 50.5 | அளவை, வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் 90% பூர்த்தியடைந்துள்ளன. மொனராகலை மாவட்டத்தில் வவ்வால வெவ தொடர்பான அளவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| | 2.2 நீர் உட்கட்டமைப்புக்கான பொருட்களின் பெறுகை | | | சிறிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைக்கு் பணி நடைபெற்று வருகின்றது. மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் 80% வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. |
| | 2.3 நீர் உட்கட்டமைப்புக்கான சிவில் வேலைகள் | | | மொனராகலை மாவட்டத்தில் 04 சிறிய நீர்ப்பாசனக் குளங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 03 குளங்களிலும் வேலைகள் நடைபெறுகின்றன. 80% வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன |
| | 2.4 பயனர் குழுவின் ஆற்றல் விருத்தி | | | விவசாயச் சமுதாயத்திற்கான பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட்டன. |
| | 2.5 பொருத்தமான தொழில்நுட்பத்தை அடையாளம் கண்டு பின்பற்றுதல் | | | பயிற்சி - பண்ணை முகாமை மற்றும் நீர் முகாமை முக்கிய வேலைகளின் பராமரிப்பு தொடர்பானது |
| **3 துப்புரவு** | 3.1 சமுதாய அமைப்புக்கள், பாடசாலைகள், சமுதாயங்கள் ஆகியோருக்கான பயிற்சி மற்றும் தெளிவூட்டல் | 2.11 | 1.99 | பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல்கள் அச்சிடப்பட்டன |
| | 3.2 பொருத்தமான அணுகுமுறைகள்/மாதிரிகள் /நியமங்கள் தொடர்பான பயற்சி | | | கிராமத் தலைவர்களுக்கான பயிற்சி பூர்த்தி செய்யப்பட்டது. |
| | 3.3 துப்புரவு வசதிகள் மற்றும் செய்துகாண்பித்தல் அலகுகளின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள் | | | |
| **4 சுகாதாரம்** | 4.1 சமூக கலாசார நடைமுறைகள் தொடர்பான ஆய்வு | 0.69 | 0.69 | சுகாதாரபூர்வமாக வாழ்வது தொடர்பான கிராம மக்களுக்கான விழிப்பு நிகழ்ச்சி பூர்த்தி செய்யப்பட்டது. |
| | 4.2 BCC/மாதவிடாய் சுகாதாரத்திற்கான IEC பொருட்களையும் கருவித் தொகுதியையும் உருவாக்குதல் | | | வழிகாட்டல்களை தயாரிக்கும் பணி நடைபெறுகின்றது |
| **5 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு** | பொதுச் செயற்படுகள் | 19.45 | 6.72 | |
| **5 நிகழ்ச்சி உதவிச் செலவு** | | | | ஊழியர்களின் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு உதவியாக |
| | மொத்தம் | **74.0** | 59.9 | |



## 2.2.4 விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் விவசாய அமைச்சு - (செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-39-2509)







பயிற்சி மற்றும் கள மேற்பார்வை

## 2.2.4 விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் - விவசாய அமைச்சு

| | |
|---|---|
| இலங்கை அரசாங்கத்தினால் இலங்கையின் விவசாயத்துறையின் நவீனமயப்படுத்தல் செயற்திட்ட உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்திற்கு உலக வங்கியினால் 2016 ஜூன் 29 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் இதற்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது. | |
| செயற்திட்ட அமுலாக்க ஆரம்பத் திகதி | *2016 ஒக்டோபர் 15 ஆந் திகதி* |
| எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகைத் திகதி | *2021 டிசம்பர் 31 ஆந் திகதி* |
| செயற்பாட்டு ஆரம்பத் திகதி | *2017 மார்ச் 22 ஆந் திகதி* |
| நிதிய மூலம் | விவசாயத் துறை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம்) செயற்திட்ட இலக்கம் : 5873- LK |
| செயற்திட்டத்திற்கான மொத்தச் செலவு | *169.84 மில்லியன் ஐ.அ. டொலர், 24,788.148 மில்லியன் ரூபா* |
| நிதி மூலம் | மூலப் பெறுமதி (அ.டொலர் மில்லியன்) |
| முழுமையான வங்கி நிதியீட்டம் | கடன்பெறுநர்/ பெறுபவர் 0.74 |
| விவசாய அமைச்சிற்கான செலவு | சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (ID) 25.00 |
| எதிர்பார்க்கப்படும் விடுவிப்புக்கள் | உள்ளூர்ச் சமுதாயங்கள் |
| (ஐ.அ.டொலார் மில்லியன்) | உள்நாட்டு விவசாய அமைப்புக்கள் 44.10 |
| நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் (தலைமை/ பிரதான) | மொத்தம் 169.84 |
| குறுக்கு வெட்டுத் தலைப்புகள் | *125.00 மில்லியன் அ.டொ, 18,243.75 மில.ரூபா* |
| இலக்காக்க் கொள்ளப்பட்ட பிரதேசங்கள் | (பண அலகு – இலங்கை ரூபா (மில்லியன்) ரூபா. 145.95 – அ.டொ.மில்லியன்) |
| பயனாளிகள் | விவசாய உற்பத்திச் சங்கங்கள் |
| ஆக்கக்கூறுகள் | சிறிய பண்ணைக் குடும்பங்கள் மற்றும் ஏனைய பண்ணைக் குடும்பங்கள் |
| - 1 ஆம் ஆக்கக்கூறு ஆரம்பக் கைத்தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தொழிற்பாடான வணிக மற்றும் ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புடன் இணைந்த வகையில் அவ் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.<br>- 2 ஆம் ஆக்கக்கூறு விவசாயத் துறையின் உபாயங்கள் தொடர்பான அரசாங்கத்தின் நகல் வரைபின் உதவியுடன் விவசாய அமைச்சின் பொறுப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.<br>3 ஆம் ஆக்கக்கூறு மூன்று ஆக்கக்கூறுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். | |
| 2 ஆம் ஆக்கக்கூறில் பின்வரும் துணை ஆக்கக்கூறுகள் உள்ளடங்கும் | |
| அ) 2.1 (விவசாயிகள் பயிற்சி மற்றும் திறன் விருத்தி– (6.20 மில். அ.டொ)<br>ஆ) 2.2 (விவசாயத் தொழில்நுட்ப மாதிரிப் பூங்கா - (6.20 மில். அ.டொ)<br>இ) 2.3 (உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகள் - (14.71 மில். அ.டொ)<br>ஈ) 2.4 (பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை உதவி–(4.28 மில். அ.டொ) | |
| விவசாயிகள் பயிற்சி மற்றும் திறன் விருத்தியின் கீழான ஒதுக்கீடு | தொழில்சார் விவசாயிகள் அமைப்புக்களை தாபிப்பதற்காக |
| விவசாயத் தொழில்நுட்ப மாதிரிப் பூங்காக்களுக்கான ஒதுக்கீடுகள் | மேம்படுத்தப்பட்ட உற்பத்திக் ஆற்றல், மேம்படுத்தப்பட்ட வழங்கல் மற்றும் முகாமைத்துவம், மிகவும் சிறந்த தும் வினைத்திறன் மிக்கதுமான தொழால்நுட்பம், மேம்படுத்தப்பட்ட சந்தைத் தொடர்புகள் மற்றும் பெறுமதிச் சேர்க்கைக்கான சந்தர்ப்பங்களின் ஊடாக செயற்திட்டத்தின் விவசாயத் தொழில்நுட்ப மாதிரிகள் ஊடாக ஆக க குறைந்தது |

## தொலை நோக்கு

புத்தாக்கத்தின் ஊடாக உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய சுபீட்சத்திற்கான சக்திவாய்ந்த மற்றும் பயனுறுதி வாய்ந்த விவசாயப் பிரிவு

## எமது பணி

செயற்திட்டம் விடயப் பரப்புக்குள் இயற்கை வளங்களை நிலைபேறான முறையில் முகாமை செய்வதன் ஊடாக ஏற்றுக்கொள்ளக்கூடிய புத்தாக்கமான சந்தையை இலக்காகக் கொண்ட மற்றும் முன்னேற்றகரமான விவசாயத் துறையின் ஊடாக உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட உற்பத்தி, தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வியாபாரங்களை தனதாக்கிக்கொள்வதற்காக

## பிரதான கருப்பொருட்கள்

- கிராமிய அபிவிருத்தி கிராமிய சந்தை 20□
- கிராமிய கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் 20□ கிராமிய சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் 20□
- சுற்றாடல் மற்றும் இயற்கை நீர் வள முகாமைத்துவம் 20□
- வள முகாமைத்துவம்
- மனித அபிவிருத்தி போஷாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு 20□

## உயர் மட்டத்திலான குறிக்கோள்கள்

இலங்கைப் பங்குடமை உபாய முறைகள் (CPS) 2013 -2016 (2012 மே 22 ஆந் திகதி கொண்ட 66286 ஆம் இலக்க இலங்கை நிர்வாக அறிக்கை) தொடர்பில் உடன்படுகின்றேன். இச்செயற்திட்டம் இலங்கைப் பங்குடமை உபாய முறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ள துறைகள் இரண்டுக்குப் பங்களிப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவை:

1. பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்களுககு உதவி வழங்குதல்.

2.(அ) கிராமியப் பிரதேசங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காக விவசாயப் பயனுறுதியையும் போட்டித் தன்மையையும் மேம்படுத்துதல் மற்றும் இலங்கையின் கட்டமைப்பு மாற்றங்களுக்கான வசதிகளை வழங்குதல்.

(ஆ) கிராமிய வாழ்வாதார மூலங்களை வழங்குதலும் பலப்படுத்துதலும், விவசாய மற்றும் விவசாயப் பெறுமதிச் சங்கிலிகளில் தொழில்வாய்ப்புக்களை வழங்குதலும் வறிய மற்றும் 40மூ க்கு குறைந்த மட்டத்திலுள்ள அபாயங்களை எதிர்நோக்கும் மக்களுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் கிராமியப் பிரதேசங்களில் வருமான வழிகளையும் வாழ்வாதாரங்களின் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்

(இ) நீர் மற்றும் நீர்ப்பாசனத் துறைக்கான செயற்திட்டத் தொடர்புகளின் ஊடாக வெள்ளம் மற்றும் வறட்சி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும் காலநிலை நட்புறவான விவசாய முன்னெடுப்புக்களுக்குப் பங்களிப்புச் செய்தவதன் முலம் வாழ்வாதார வழிகளை மேம்படுத்துதலும் சமூக ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதலும்.

## செயற்திட்ட அபிவிருத்திக் குறிக்கோள்கள்

- விவசாயப் பயனுறுதியை அதிகரிப்பதற்கு உதவுதல்,
- சந்தைக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துதல்,
- செயற்திட்ட விடயப் பரப்பினுள் காணப்படும் விவசாயத் தொழில்முயற்சிகள் மற்றும் சிறிய பண்ணைகள் மூலம் குடும்ப அலகுகளிலுள்ள விவசாயிகளின் சேர்க்கப்பட்ட பெறுமதியை அதிகரித்தல்.

**தாக்கங்கள்**

- தெரிவுசெய்யப்பட்ட களப் பயிர்கள், உயர் விவசாய வெளியீட்டுக்காக மேம்படுத்தப்பட்ட பயனுறுதித் தன்மையின் ஊடாக விவசாயத்தில் ஈடுபடும் சிறிய காணி உரிமையாளர்களை அதிகரித்தல்,
- சேர் பெறுமதியை மேம்படுத்துதல்,
- புதிய சந்தை வாய்ப்புக்கள்,
- வருமானம் அதிகரித்தல் மற்றும் தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்தல்.

**எதிர்பார்க்கப்படும் நேரடிப் பயன்கள்**

- புதிய உற்பத்தித் தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுதல்
- நீர் மற்றம் மண் வள முகாமையை மேம்படுத்துதல்
- உற்பத்திகளைத் தயாரித்தல், பொதி செய்தல் மற்றும் விற்பனையை அதிகரித்தல்
- உற்பத்தித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய அழிவைக் குறைத்தல்
- சேவைகளுக்கு, சந்தைகளுக்கு மற்றம் தகவல்களுக்கு மிகவும் சிறந்த அணுகல் வசதிகளை வழங்குதல்.
- உற்பத்திகளைச் சான்றுப்படுத்துதலின் ஊடாக சிறந்த சந்தை மாற்றங்களைச் செய்தல், வர்த்தக நாமமிடல்
- புதிய நிறுவனம் சார் உற்பத்தி வேலைத் திட்டத்தின் ஊடாக பொருளாதார பரிமாணங்களின் பயன்கள்

**எதிர்பார்க்கப்படும் நேரடிப் பயன்கள்**

- மகளிர் தொழில்முயற்சியாளர்களின் சக்திவாய்ந்த ஆற்றல்கள் உள்ளிட்ட உற்பத்திகள் மற்றும் விற்பனைக் குழுக்களின் ஆற்றல் மற்றும் ஒழுங்கமைப்பு மட்டம் என்பவற்றைப் பலப்படுத்துதல்.
- விற்பனை மற்றும் உயர் பெறுமதிச் சங்கிலிச் செயற்பாட்டாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான முந்திய மற்றும் பிந்திய தொடர்புகளின் தரத்தை மேம்படுத்துதலும் செலவுகளைக் குறைத்தலும்.
- தொழில்நுட்பம், காலநிலை நட்புறவான விவசாயத் துறை மற்றும் வள முகாமை தொடர்பான அறிவை மேம்படுத்துதல்.
- சிறியளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் தனியார் துறை வியாபாரங்களின் புதிய வடிங்களுடன் இணைந்து செயற்படுதல்.
- விவசாயத் துறையைப் பல்வகைபமைப்படுத்துவதன் ஊடாக போ'க்கை மேம்படுத்துதலும் போஷாக்குமிக்க உற்பத்திகளை அதிகரித்தலும் குறிப்பாக பழங்களினதும் காய்கறிகளினதும் உற்பத்தியை அதிகரித்தல்.
- துறைசார் கொள்கை மீளாய்வு, உருவாக்குதல் என்பவற்றுக்காக பிரதான அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் ஆற்றல்களை மேம்படுத்துதல்.
- இலங்கை முழுவதிலும் பின்னடைந்துள்ள கிராமப் பிரதேசங்களில் கிராமிய மக்களுக்கான போற்றத்தக்க சமூகப் பயன்கள் மற்றும் நிலையான வறுமையைக் குறைப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதலும்
- மேம்படுத்தப்பட்ட விவசாயப் பயனுறுதி, ஒழுங்கமைப்பு அபிருத்தி மற்றும் பெறமதி சேர் சங்கிலி அபிவிருத்தி என்பவற்றின் ஊடாக விவசாயிகளின் குடும்பங்களுக்கான மேலதிகப் பொருளாதாரப பயன்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது
- மறையான விவசாய உற்பத்தி அமைப்புக்களின் அங்கத்துவம் மற்றும் விவசாய வியாபாரங்களுடனான பங்குடமையின் ஊடாக அதிக வறுமையிலுள்ள குடும்பங்களையும் தனிப்பட்ட ஆட்களையும் குழுக்களையும் பலப்படுத்துவதற்காக தொழில் வாய்ப்புக்களை உள்ளடக்குதல் மற்றும் நிதி வசதிகள், தொழில்நுட்பம், சந்தை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விற்பனை வசதிகள் என்பவற்றை மேம்படுத்துதலும் புதிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத் திறன்களை வளர்த்தலும்.

**வறுமையை ஒழித்தல்**

- செயற்திட்ட விடயப் பரப்பினுள் அனைத்து இடங்களிலும் வறுமையை ஒழித்தல்.
- விவசாயத்தை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளின் ஊடாக சமுதாயத்துக்கு வலுவூட்டுதல், வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார பலத்தை மேம்படுத்துதல் என்பன எமது குறிக்கோள்களாகும்.

**பட்டினியை ஒழித்தல்**

- பசியால் வாடுவதை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பினையும் உயர்வான போசாக்கினையும் அடைதலும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதலும்.
- உணவு மூலங்களை பல்வகைமைப்படுத்துதலும் அதிகரித்தலும், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் போ'க்கை அதிகரித்தலும் நிலைபேறான விவசாயத் துறையை ஊக்குவித்தலும் இச்செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

**தரம்வாய்ந்த கல்வி**

- சிறந்த கல்வி - விவசாய உற்பத்திச் சங்கங்களை சுயாதீன பொருளாதார அலகுகளாகுவம் செயற்பாட்டாளர்களாகவும் உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் உதவி வழங்குவதன் ஊடாக நிறுவன ரீதியான நிலைபேறு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துதவதற்கு இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயற்திட்டத்தின் மூலம் செயற்திட்ட முகாமைத்துவத் திறன் விருத்தி, பதிவு செய்வதற்கு உதவி வழங்குதல் மற்றும் நிதி அனுசரணை வழங்கும் பொறிமுறைகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஊடாக நிதி அணுகல் வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**பால் சமத்துவம்**

- ஆண் பெண் சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்துப் பெண்களுக்கும் விவசாயம் மற்றும் உற்பத்திக்காக வலுவூட்டுதல்.
- பயிற்சி வழங்குதல், நாற்று மேடைகள் அல்லது வேறு பொருளாதார வாய்ப்புக்கள் போன்ற பெண்களை அடிப்படையாகக் கொண்ட நுண் முயற்சியாண்மையின் ஊடாக வலுவூட்டுதல் எமது அதிகமான செயற்திட்டங்களல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**சிறந்த தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி - தாங்கிக் கொள்ள முடியுமான அனைவரையும் உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையானதும் பயனுறுதி வாய்ந்ததுமான தொழில் மற்றும் அனைவருக்கும் கௌரவமான தொழில் கிடைப்பதை ஊக்குவித்தல்.**

- தொழில்சார்ந்த விவசாய அமைப்புக்களை தாபிப்பதற்காக மதிப்பிடப்பட்ட 20,000 பண்ணைக் குடும்பங்களுக்கும் இச்செயற்திட்டத்தின் மூலம பயன் கிடைக்கும். விவசாய வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் பயிற்சிச் செயற்பாடுகளின் ஊடாக திறன்களை விருத்தி செய்தலும் நிதி அனுசரணை வழங்கும் பொறிமுறைகள் அல்லது வர்த்தக வங்கிகள் என்பவற்றை அணுகுவதற்கான தகைமைளை மேம்படுத்துவதற்காக இச்செயற்திட்டத்தினால உதவி வழங்கப்படும்.

**கைத்தொழில், புத்தாக்க மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்**

விவசாயத் தொழில்நுட்ப மாதிரிப் பூங்காக்களுடன் தொடர்படும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட முன்னுரிமைச் செயற்திட்டப் பிரதேசங்களான சிறியளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தற்போது காணப்படும் நீர்த் தாங்கிகளையும் நீர்ப்பாசனத் தொகுதிகளையும் மேம்படுத்துதல் தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகளுக்கும் சந்தைக்குமான அணுகல் வசதிகளை மேம்படுத்துதல், போக்குவரத்து வசதியினை மேம்படுத்துவதற்காகப் புதிய கள அணுகல் வீதிகளை நிர்மாணித்தல், சந்தைகளுக்கான அணுகல், மற்றும் விவசாய இயந்திரங்களைப் பெறுவதற்கான அணுகல், அனைத்து மேடைளையும் தளுவல் அளவுகளையும் உள்ளடக்கிய கிராமிய மட்டத்திலான களஞ்சிய வசதிகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதிகள், பயிர் அறுவடைக்கான கலப்பு உரம் இடுவதற்கான வசதி, களஞ்சிய வசதி மற்றும் ஏனைய வசதிகள்.

**குறைந்த சமனற்ற தன்மைகள்**

சிறிய அளவிலான விவசாயிகளின் அறிவை மேம்படுத்துவதற்காகவும் விவசாய உற்பத்தி நிறுவனங்களை அமைப்பதற்கு உதவுவதற்காகவும் சந்தை வாய்ப்புக்களுக்கு மிகவும் சிறந்தமுறையில பதிலளிப்பதற்காகவும் விவசாயிகள் நினைக்கின்ற விதத்தில் அவர்களுக்கு உதவுதலும் அதன் மூலம் மூலம் அவர்களுடைய சம வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**நிலைபேறான நகரங்களும் சமுதாயங்களும்**

மேம்படுத்தப்பட்ட உற்பத்தி ஆற்றல், மேம்படுத்தப்பட்ட வழங்கல மற்றும் முகாமைத்துவம், மிகவும் சிறந்த மற்றும் மிகவும் வினைத்திறன்மிக்க தொழில்நுட்பம், மேம்படுத்தப்பட்ட சந்தைத்

தொடர்புகள் மற்றும் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கான வாய்ப்புக்களின் ஊடாக செயற்திட்டத்தின் விவசாயத் தொழில்நுட்ப மாதிரிகளின் ஊடாக ஆகக் குறைந்தபட்சம் 14,000 குடும்பங்கள் பயனடையும்.

**பொறுப்புள்ள நுகர்வு மற்றும் உற்பத்தி**

விவசாயத் தொழில்நுட்ப மாதிரிகளின் அபிவிருத்திக்காக செயற்திட்டத்தின் மூலம உதவி வழங்குவதன் ஊடாக உயர் பெறுமதியைக் கொண்ட விவசாயக் கைத்தொழிலர அடையாத துறைகளில் காணப்படும் நவீன விவசாயத் தொழில்நுட்பப் பொதிகளை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பங்குபற்றும் பிரதேச மக்களுக்கு இடவசதிகளை வழங்குவதற்காக பூங்காக்களை நிர்மாணித்தல்.

- மறையான விவசாய அமைப்புக்களின் உற்பத்தியாளர்கள் (விவசாயக் கம்பனிகள்), குறிப்பான தொழில்நுட்ப பொதிகளின் ஊடாக பயனுறுதி மறறும் பல்வேறு பயிர் உற்பத்திகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தல்.
- உற்பத்தித் துறைகளின் அடிப்படையில் உற்பத்தி மட்டங்களை அடைவது மற்றும் ஒதுக்கீடுகளை உபாய முறைப்படி சந்தை அணுகலுக்காகப் பயன்படுத்துதல் மற்றும் உற்பத்தித் தயாரிப்பு மறறும் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி என்பவற்றுக்காக முதலீடுகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இந்த மாதிரி அணுகலை நடைமுறைப்படுத்துவது செயலாற்றுகையின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையிலான சேவைகளின் ஊடாக நடைபெறுகின்ற போதிலும் உற்பத்திக்காக நேரடி வர்த்தகத் தேவைகள் இல்லை. அவர்கள் பரீட்சித்த செயற்பாடுகள் உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்படும். வெற்றிகரமான மாதிரிகளை வர்த்தக முதலீட்டாளர்களின் ஊடாக கீழ் நோக்கி செல்லும் ஒரு முறையின் ஊடாக மேலதிக முதலீட்டைக் கவர்வது சாத்தியமாகும் என்றும் அணுகல் நீண்ட கால நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் தேசிய செயற்திட்டச் சேவை மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் என்பன தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் ஆற்றல் விருத்தி என்பவற்றின் ஊடாக பயனடையும்.

**சமாதானத்தையும் நீதியையும் பலப்படுத்துதல்**

உட்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் பொதுச சேவைகள் உத்தேச விவசாய முதலீடுகளுடன் (துணைச் செயற்திட்டங்கள்) நேரடியாகத் தொடர்புபடுதல். கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விவசாயத் தொழில்முயற்சிகளால் மேற்கொள்ப்படும் பயனுறுதி வாய்ந்த முதலீடுகளின் ஒட்டுமொத்த நிலைபேறான தன்மையையும் பலப்படுத்துவதற்காக மாகாண சபைகளின் ஊடாக அந்த உப செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

நீண்ட கால நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இச்செயற்திட்டத்தின் மூலம் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டதும் தொடர்ச்சியானதுமான பகுப்பாய்வுகளுக்கும் துறையின் செயலாற்றுகை தொடர்பிலும் அவற்றின் தாக்கங்கள் தொடர்பில் உதவியாக அமையும். விவசாயச் செயற்பாடுகளுக்குத் தேவையான சூழலை மேம்படுத்துவதற்காக குறைநிரப்புக் கொள்கையொன்று எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் மூலம் செயற்திட்டத்தின் நீண்ட கால நிலைபேறான தன்மைக்குப் பங்களிப்புச் செய்யபடும்.

**நோக்கங்களுக்கான பங்குடமை**

நிலைபேறான அபிவிருத்திக்காக உலகளாவிய பங்குடமையை நடைமுறைப்படுத்துதலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வழிமுறைகளைப் பலப்படுத்துதல்.

## 8. செயற்திட்டச் செயற்பாடுகள்

| துணை ஆக்கக் கூறு | செயற்பாடுகள் |
|---|---|
| விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | விரிவான பயிற்சி நிகழ்ச்சியொன்றின் மூலம் தனிய ஆட்களுக்கனா விவசாய ஆற்றல்கள் கட்டியெழுப்பப்படுகின்றன.<br>அவற்றில் பின்வருவன உள்ளடங்கும்:<br>i) தொழில்முயற்சியாக விவசாயம் என்ற கருப்பொருளின் கீழ் தற்போது காணப்படும் பாடத்திட்ட அலகுகளில் விரிவான பாடத்திட்டத்தை உருவாக்குதல்.<br><br>ii) 600 கிராமங்கள் வரையில் விரிவாக்குவதற்கான உபாயமொன்றை உருவாக்குதல்.<br>iii) பிரதான பயிற்றுவிப்பாளர்கள் 10 பேருக்கும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் 200 பேருக்கும் பயிற்சியளித்தல்.<br>iv) பண்ணைப் பயிற்சிக் கிராமங்கள் மற்றும் வகுப்பறை கூட்டிணைப்பைக் கொண்டதாக பண்ணைத் தொழில்முயற்சிப் பயிற்சிப் பாடசாலை அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் ஊடாக நாடு முழுவதிலும் பயிற்சியை விரிவுபடுத்துதல்<br>விவசாய உற்பத்தி அமைப்பின் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் பின்வருவன உள்ளடங்கும்.<br>(i) பிரதான பெறுமதிச் சங்கிலிக்கு முன்னுரிமை வழங்குவதற்காக தொழில்நுட்பப் பெறுமதிச் சங்கிலி மற்றும் விவசாய உற்பத்தி அமைப்புக்களை மதிப்பீடு செய்தல்.<br>(ii) தற்போது காணப்படும் மற்றும் எதிர்கால விவசாயிகள் அமைப்புக்களின் பயிற்சித் தேகைளை மதிப்பீடு செய்தல்<br>(iii) குழுக்களை அமைத்தலும் பதிவு செய்வது தொடர்பான மொடியூல்கள் அடங்கலாக விரிவான பாடத்திட்டத்தை அபிவிருத்தி செய்தல், சட்டத் தேவைகள், விவசாய உற்பத்திக் குழுக்களை முகாமை செய்தல், வணிகக் கடன் வழங்குதல், நவீன தொடர்பால் தொழில்நுட்பப் பயன்பாடு<br>(iv) 500 விவசாய உற்பத்திக் குழுக்களை அமைக்கும் இலக்கை அடைவதற்காக விரிவாக்கல் உபாய முறையொன்றை உருவாக்குதல்.<br>(v) பிரதான பயிற்றுவிப்பாளர்கள் 10 பேருக்கும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் 200 பேருக்கும் பயிற்சியளித்தல்.<br>(vi) தற்போது காணப்படும் மற்றும் புதிய விவசாய உற்பத்தி அமைப்புக்கள் 500 இற்குப் பயிற்சிகளை விரிவுபடுத்துதல்.<br>(vii) விவசாய உற்பத்தி அமைப்புக்களுக்கான அடிப்படை அலுவலக உபகரணங்கள் (கணினி, அலுவலகத் தளபாடங்கள்) வழங்குதல்.<br>(viii) முறையான சட்டரீதியான பதிவுச் செலவு |
| விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்கள் | பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல், பல்வகைமைப்படுத்துதல், வர்த்தகமயமாக்குதல், மிகவும் நிலைபேறானதும் வானிலைக்கு ஈடுகொடுக்கக் கூடியதுமான எனினும் தற்போது இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் விவசாயிகள் அல்லது உற்பத்திக் கம்பனிகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படா அல்லது தற்போது இலங்கையில் காணப்படாத விவசாயப் புத்தாக்கத் தொழில்நுட்பப் பொதிகளை அறிமுகப்படுத்துதல், காட்சிப்படுத்துதல், பயன்பாடுகளை அதிகரிப்பதற்கான புதிய உற்பத்திகளை முறைகளை அறிமுகப்படுத்துதல்.<br>இந்த துணை ஆக்கக்கூறு பின்வருவனவற்றுக்கு உதவியாக அமையும்.<br>• விவசாயத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படும் வறிய விவசாயிகள் உள்ள தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களுக்காக விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்களை அமைத்தல்.<br>• விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்கள் அமைக்கப்படுவது தெரிவுசெய்யப்பட்ட பயிர்களுக்கான இறுதியில் தெளிவான சந்தையொன்றை இலக்காகக் கொண்ட பின்வரும் விடயங்களையும் கொண்டதாக முழுமையான விவசாய தொழில்நுட்ப முன்னெடுப்புக்களைக் காட்சிப்படுத்துவதற்கும் ஆகும்.<br>1. விவசாயிகளுக்கு வலுவூட்டும் சேவையில் ஈடுபடுதலும் பயிற்சியளித்தலும்<br>2. விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளுதல்.<br>3. அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதலும் உருவாக்குதலும்,<br>4. சந்தை வசதிகளை உருவாக்குதல்<br>செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி முதலாம் இரண்டாம் வருடங்களில் உள்நாட்டு வெளிநாட்டு சேவை வழங்குநர்களுக்கு அழைப்பு விடுத்து சமனான விவசாயச் சூழல், சமூக கலாசார சூழல்களில் அவர்களால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட விவசாய அபிவிருத்தி மாதிரிகள் தொடர்பில் கலந்துரையாடுதல் மற்றும் சமர்ப்பிப்பதற்காக சர்வதேச தொழில்நுட்ப மாநாடுகள் இரண்டை ஏற்பாடு செய்தல் |
| உற்பத்தி மற்றும் சந்தைப் படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகள் | விவசாயத் தொழில்நுட்ப மாதிரிப் பூங்காக்களுடன் தொடர்புடைய தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமைச் செயற்திட்டப் பரப்புக்களான சிறியளவிலான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தற்போது காணப்படும் நீர்த் தாங்கிகளையும் நீர்ப்பாசனத் தொகுதிகளையும் மேம்படுத்துதல்<br>2 தெரிவுசெய்யப்பட்ட உற்பத்திகள் மற்றும் சந்தை அணுகல் வசதிகளை மேம்படுத்துதல், போக்குவரத்தை மேம்படுத்துதல் என்பவற்றுக்காக புதிய கள அணுகல் வீதிகளை நிர்மாணித்தல், சந்தை அணுகல் மற்றும் விவசாய இயந்திரங்கள்ககான அணுகல்<br>3 உலர்த்தல் மேடைகள் மற்றும் மறைப்புக்கள் அடங்கலாக கிராமிய மட்டத்தில் களஞ்சிய வசதிகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளைத் மேற்கொள்வதற்கான வசதிகள், பயிர் அறுவடைக்கான கலப்பு உரம் இடுவதற்கான வசதி, களஞ்சிய வசதி மற்றும் ஏனைய வசதிகள். |
| பகுப்பாய்வுகள் மற்றும் கொள்கைகள் ஆலோசனை உதவி | கொள்கைகளையும் ஒழுங்குவிதிகளையும் மதிப்பீடு செய்தல், சந்தைக் கேள்வி நிலைபேறான தன்மை மற்றும் மீள் தன்மைக்குப் பதலளிக்கக் கூடிய, மிகவும் போட்டித்தன்மை கொண்ட விவசாயச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்குத் தேவையான பொருத்தப்பாடுகள், மறுசீரமைப்புக்கள் அல்லது புதிய கொள்கைகளைச் சிபாரிசு செய்தல்,<br>புதிய மற்றும் உயர் பெறுமதி கொண்ட ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான உபாயமுறைப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல், உயர் தாக்கம் கொண்ட பெறுமதிச் சங்கிலிகளின் பரிணாமம் மற்றும் தொடர்புபட்டுள்ள இணைப்புக்களுக்கு இணங்கச் செயற்படுவதற்குத் தேவையான கொள்கைகள், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு அல்லது அரசாங்க முதலீடுகளில் தேவையான மாற்றங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>கொள்கைகள் மற்றும் அரசாங்கக் கொள்கைகளின் சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் மற்றும் பொதுச் செலவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பொதுச் செலவுகளின் வினைத்திறனையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்துவதற்கான திருத்தங்களைச் சிபாரிசு செய்தல்.<br>4 அரசாங்க நிகழ்ச்சிகளின் முறையான தாக்கங்களை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட வெளிவாரியான மற்றும் சுயாதீன தொழிற்பாட்டு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். |

12பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் 2017

செயற்திட்டப் பணிப்பாளர் 2017 மார்ச்சு மாதம் 27 ஆந் திகதி கடமையைப் பொறுப்பேற்றார். செயற்திட்டத்தின் துணை ஆக்கக் கூறு மட்டத்தில் 2017 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆந் திகதி முதல் டிசம்பர்ள 31 ஆந் திகதி வரையிலான முன்னேற்றம் பின்வருமாறு அமைந்திருந்தது.

| துணை ஆக்கக் கூறு | ஒதுக்கப்பட்ட நிதி ரூபா மில். | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூபா.மில். | நிதி முன்னேற்றம்:- ரூபா.மில். | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 2.1 விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் திறன் விருத்தி | 700 | 8.90 | 0.08 | 1. இலங்கையின் விவசாயிகள் அமைப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் தற்போது காணப்படும் மாதிரிகள் தொடர்பான அறிக்கையொன்றை உருவாக்குவதற்கான சேவை வழங்குநர் ஒருவரைப் பெறுகை செய்வதற்கான<br>- பத்திரிகை அறிவித்தல் 2017 நவம்பர் மார் 12 ஆந் திகதி, தகைமை பெற்ற வழங்குநர்களின் சுருக்கமொன்றைத் தயாரித்தல், மற்றும் தெரிவு செய்ய்பபட்ட வழங்குநர்களுக்கு விவசாயிகள் அமைப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு அனுப்பப்பட்ட முன்மொழிகள் அமைய வேண்டிய முறையை விளக்கும் ஆவணமொன்று வழங்கப்பட்டது.<br>2 விவசாயிகள் அமைப்புக்களுக்கான பயிற்சித் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கும் பயிற்சி மாதிரிகளை உருவாக்குவதற்குமான சேவை வழங்குநர் ஒருவரைப் பெறுகை செய்வதற்காக - பத்திரிகை அறிவித்தல் 2017 நவம்பர் மார் 12 ஆந் திகதி, தகைமை பெற்ற வழங்குநர்களின் சுருக்கமொன்றைத் தயாரித்தல், மற்றும் தெரிவு செய்ய்பபட்ட வழங்குநர்களுக்குப் பயிற்சித் தேவைளை மதிப்பீடு செய்வதற்கு அனுப்பப்பட்ட முன்மொழிகள் அமைய வேண்டிய முறையை விளக்கும் ஆவணமொன்று வழங்குதல்.<br><br>3. விவசாயம் ஒரு வியாபாரமாக என்ற தொனிப் பொருளின் கீழ் சிறிய அளவிலான விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக விரிவான பயிற்சிப் பாடத்திட்டங்களை உருவாக்குதல் ஆலோசகருடன் இணக்கப்பாட்டு ஒப்பந்தம் செய்தல் : 2017 நவம்பர் 10<br>4. விவசாய வியாபாரப் பாடசாலைப் பயிற்சி மாதிரிகளை அபிவிருத்தி செய்வதற்காக உள்ளீடுகளை அடையாளம் காணுவதற்காக உரிய தரப்பினர்களை ஒருங்கிணைத்து 2 நிகழ்ச்சிகள் நடாத்துதல்.<br>- வட மாகாணம் 2017 நவம்பர் மாதம் 24 ஆந் திகதி<br>- வட மத்திய மாகாணம் 2017 டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி<br>5. உரிய தரப்பினர்களுக்கு அறிவூட்டுவதற்கான வீடியோ நாடாக்கள் வழங்குதல் |

| துணை ஆக்கக் கூறு | ஒதுக்கப் பட்ட நிதி ரூபா மில். | மொத்த மதிப்பிடப் பட்ட செலவு ரூபா.மில். | நிதி முன் னேற்றம்:- ரூபா.மில். | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 2.2 நவீன விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்கள் | | 18.60 | 3.79 | 1. மாகாணச் செயற்திட்ட அலகுகள் மூலம் ஏழு மாவட்டங்களில் விவசாயக் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்களை அடையாளம் காணப்பதற்காக அடிப்படை ஆய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டு அதன் பெறுபேறுகள் 2017<br>ஒக்டோபர் மாதம் 20 ஆந் திகதி உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது.<br>2. தற்போது காணப்படும் தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் தொடர்பில் தகவல் சேகரித்தல், ஏற்கனவே மகாண செயற்றதிட்டத் தொழிற்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>3. விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்களை அமைப்பதற்கான பொருத்தமான வழங்குநரொருவரைப் பெறுகை செய்வதற்காக அனுப்பும் ஒழுங்குமுறையைத் தயார்படுத்துதவற்காக ஆலோசகர் ஒருவரை வாடகைக்கு அமர்த்துதல். உடன்பாட்டில் கையொப்பமிடுதல்<br>2017 நவம்பர் மாதம் 8 ஆந் திகதி<br>4. மாகாணச் செயற்திட்டத் தொழிற்பாட்டு அலுவலகத்தின் ஊடாகப் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கும் துரித தேசிய தேவைகளாக ஒவ்வொரு மாவட்டத்திற்குமான முன்னோடிச் செயற்திட்டங்களை இனங்காணுதல் (உ.வங. 10. யூ.03) மற்றும் அதற்கான செயற்திட்டக் கோட்பாடுகள் உலக வங்கிக்கு அனுப்புதலும் அவற்று அனுமதி பெறுதலும்<br>5. முன்னோடிச் செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்கான செயலமர்வுகளை நடாத்துதலும் செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தலும்<br>6. சந்தையை இலக்காகக் கொண்ட விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சிப் பூங்காக்களுக்குப் பொருத்தமான தற்போது அவர்களால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படும் நவீன<br>தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை அடையாளம் காணப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தொழில்நுட்ப மன்றமொன்ற சினமன் லேக்<br>சைட் ஹோட்டலில் நடாத்தப்பட்டதுடன் 2017 நவம்பர் மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. இதில் 22 கம்பனிகள் பங்கேற்றன.<br>7. தொழில்நுட்ப ஒன்றியத்தின் சுருக்கமொன்றை உலக வங்கிக்கு அனுப்புதல்<br>8. தனியார் துறையுடன் கூட்டமொன்றை நடாத்துதலும் செயற்திட்டங்கள் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள பார்வைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துதலும் விவசாய அமைச்சின் செயற்திட்டங்களுக்குத் தனியார் துறையினர் தலையீடுகளைச் செய்வதன் சாத்தியம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.<br>9. தனியார் துறையின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு குறித்த அனுப்புகையின் நிபந்தனைகளை உலக வங்கிக்கு அனுப்புதல்.<br>10. ஐரோப்பிய நிதியுதவியின் கீழ் செயற்திட்டங்களை மேற்கொள்வதன் சாத்தியங்கள் காணப்படும் மாவட்டங்களில் உலக வங்கியின் பணிக் குழாத்துடன் கள அவதானிப்புக்களை மேற்கொள்ளல்<br>(பதுளை, அம்பாறை) |

| துணை ஆக்கக் கூறு | ஒதுக்கப் பட்ட நிதி ரூபா மில். | மொத்த மதிப்பிடப் பட்ட செலவு ரூபா.மில். | நிதி முன் னேற்றம்:- ரூபா.மில். | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 2.3 உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் | | 40.0 | 0.00 | 1. 7 மாவட்டங்களில் உத்தேச கொத்தணிப் பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வசதிகள் உலக வங்கியின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>2. நான்காவது உலக வங்கயின் பணிக் குழாத்துடனான கூட்டத்தின் பின்னர் அடையாளம் காணப்பட்ட முன்னோடிச் செயற்திட்டங்களின் கொத்தணியாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிப் பட்டியல் மீண்டும் திருத்தப்பட்டு அனுப்பப்பட்டது. |
| 2.4 பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனைப் பங்கேற்பு | | 13.55 | 0.46 | 1. அடையாளம் காணப்பட்ட முன்னணி வீச்சுகளுக்கான கொள்கைகளை ஆழமான முறையில் பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் உள்ளிட்ட முக்கிய பங்காளர்கள் அழைத்து கொள்கை மன்றங்கள் 2 ஐ நடாத்துதல்.<br>2. கொள்கைப் பகுப்பாய்வு ஆழமாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னுரிமைப் பரப்புக்களை அடையாளம் காணப்பதற்காக, ஆய்வுத் தலைப்புக்களைத் தீர்மானித்தல் மற்றும் மதிப்பீட்டு எடுகோள்களைத் தீர்மானித்தல் என்பவற்றுக்காக ஆலோசகர் ஒருவரை வாடகைக்கு அமர்த்துதல்.<br>3. விவசாய அமைச்சின் கொள்கைகளைக் கவனத்தில் எடுத்து விசேட முக்கிய உபாய முறைப் பரப்புக்களை இலக்காகக் கொண்டு செயலமர்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்ட ஆய்வு வீச்சுக்களை அட்டவணைப்படுத்துதல். ஆய்வுப் பரப்புக்களை முன்னுரிமைப்படுத்துதல். மற்றும் 10 பிரதான கருப்பொருட்களின் அபிவிருத்தி செய்தலும்.<br>4. 10 கொள்கை ஆய்வுகளைத் தெரிவுசெய்தலும் அதற்கு பத்திரிகை அறிவித்தலொன்றின் ஊடாக முன்மொழிவுகளைக் கோருதல் தொகை ரூ.மி 100, பிரேரணைகள் கோருதல் மற்றும் முன்மொழிவுகள் கிடைத்தல் 59. செயற்திட்டப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கு தகுதிபெறும் பிரேரணைகள்<br>57<br>5. ஒவ்வொரு ஆய்வுக் கருப்பொருளின் கீழும் எதிர்பார்க்கப்படும் வெளியீட்டைத் தீர்மானிப்பதற்காகச் சிறிய செயலமர்வு 01 நடாத்தப்பட்டது.<br>6. விவசாய அமைச்சுக்காகத் திட்டமிட்டு அமைப்பதற்கு எதிர்பார்க்கின்ற தேசிய விவசாயத் தகவல தளத்தின் செயற்திட்ட அறிக்கையின் நகல் வரைபு நான்காவது உலக வங்கி தூதுக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.அதற்கான முன்னோடிச் செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. |

| துணை ஆக்கக் கூறு | ஒதுக்கப் பட்ட நிதி ரூபா மில். | மொத்த மதிப்பிடப் பட்ட செலவு ரூபா.மில். | நிதி முன் னேற்றம்:- ரூபா.மில். | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 3.1. செயற்திட்ட முகாமை | | 264.92 | 51.58 | 1. செயற்திட்டத் தொழிற்பாட்டு அலகை அமைத்தல்<br>2. மாகாணச் செயற்திட்டத் தொழிற்பாட்டு அலகை அமைத்தல்<br>3. பெறுகைத் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்தல்<br>4. வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான செயற்பாடுகள் உலக வங்கியின் மீளாய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>5. செயற்பாட்டுக் கைநூலைப் பூர்த்தி செய்வதற்கான செயலமர்வை 2017 ஒக்டோபர் மாதம் 12 ஆந் திகதி நடாத்துதல்<br>6. மத்திய செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் 05<br>7. மாகாண செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் 04<br>8. ஊழியர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் செயலமர்வு<br>9. தொடர்புடைய தரப்பினருக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகள் 03<br>10. உலக வங்கியின் தூதுக் குழுக் கூட்டம் 03<br>11. ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுடனான கூட்டங்கள் 02.<br>12. ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் 07.<br>13. ஐரோப்பிய ஒன்றியக் குழுக் கூட்டங்கள் 01<br>14. 2017 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான நிகழ்ச்சி 01<br>15. ஐந்து வருடத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான நிகழ்ச்சி 01<br>16. ஊழியர் குழாத்தினருக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகள் 01,<br>17. பெறுகைப் பயிற்சி 01, |

| | | | | |
|---|---|---|---|---|
| 3.2 தொழிற்பாடு மற்றும் மதிப்பீடு | | | | 1. செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை அளவுகோள்களைப் பெறுவதற்கான கணக்கெடுப்புக்களை மேற்கொள்ளுதலும் செயற்திட்டத்திற்கான தொழிற்பாட்டு மற்றும் மதிப்பீட்டுத் தொகுதியொன்றை உருவாக்குவதற்காக சேவை வழங்குநர் ஒருவருக்கு வழங்க வேண்டிய சேவை நிபந்தனைகள் கொண்ட ஆவணத்தைத் தயாரிப்பதற்காக ஆலோசகர் ஒருவரை வாடகைக்கு அமர்த்துதல்.<br>2. செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை அளவுகோள்களைப் பெறுவதற்கான கணக்கெடுப்புக்களை மேற்கொள்ளுதலும் செயற்திட்டத்திற்கான தொழிற்பாட்டு மற்றும் மதிப்பீட்டுத் தொகுதியொன்றை உருவாக்குவதற்காக சேவை வழங்குநர் ஒருவருக்கு வழங்க வேண்டிய சேவை நிபந்தனைகளைக் கொண்ட நகல் வரைபு மாகாணச் செயற்திட்டத் தொழிற்பாட்டு அலகுகளின் தொழிற்பாட்டு மற்றும் மதிப்பீட்டு நிபுணர்களுடன் கலந்துரையாடி அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.<br>3. செயற்திட்டத்தின் அடிப்படை அளவுகோள்களைப் பெறுதற்கான அடிப்படையாக 2013 ஆம் ஆண்டின் விவசாயப் புள்ளிவிபரவியல் தரவுகளைப் பயன்படுத்தி செயற்திட்ட மாவட்டங்களின் பக்கத்தோற்றப்பாடுகளை அடையாளம் காணும் செயற்பாட்டுக்காக ஆலோசகர் ஒருவர் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>4. செயற்திட்டத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டமும் ஐந்து வருட வேலைத் திட்டமும் தலைமையகம் மற்றும் மாகாண மட்டங்களில் தயாரிக்கப்பட்டன.<br>5. செயற்திட்டத்தின் முன்னேற்றம் வெளிப்படுத்துவதற்காகவும் அறிக்கைப் படுத்துவதற்காகவும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தொழிற்பாட்டுக் குழுவுக்கும் உலக வங்கிக்கும் அனுப்பப்பட்டுள்ளன. |
| | 700 | 345.97 | 55.93 | |

- செயற்திட்டத்தின் பிரதான துணை ஆக்கக் கூறான 2.2 இன் கீழ் சேவையைப் பெறுவதற்கு சேவை வழங்குநர் ஒருவரைப் பெறுகை செய்வது அத்தியவசியமானதாகும். இப்பெறுகைச் செயற்பாடு தொடர்பில் உலக வங்கிக்கும் விவசாய அமைச்சுக்கும் இடையில் பல பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளன. இறுதியில 2017 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில் வருகை தந்த உலக வங்கித் தூதுக் குழுவினரின் ஊடாக அச்சேவை வழங்குநரைப் பெறுகை செய்தல், தரத்தை அடிப்படையாகக் கொண்ட முறையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதஜ. எனினும் இதற்கு 8 - 10 மாதங்கள் எடுக்கும் என்பதனால் செயற்திட்டத்தைப் நடைமுறைப்படுத்துவது தாமதமடையும் என்பதனால் செயற்திட்டத் தொழிற்பாட்டு அலகினால் செயற்திட்டப் பிரதேசங்களில் 18 முன்னோடிச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதவற்கு உலக வங்கியின் அனுமதி பெறப்பட்டது.சேவை வழங்குநரைப் பெறுகை செய்யும் வரையில் உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது, 2018 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்தின் தெளிவான செயற்பாடுகள் இனம் காணப்பட்டுள்ளன.

## 2.2.5. 1500 சிறிய குளங்களில் வண்டல் அகற்றுதல், புனரமைத்தல், மறுசீரமைத்தல் செயற்திட்டம் (செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-40-2506)

நிலைபேறான விவசாயத் துறையை ஊக்குவித்தல், காலநிலை மாற்றங்களினால் விவசாயத் துறைக்கு ஏற்படும் அழிவுகளைக் குறைப்பதை இலக்காகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் 1,500 சிறிய குளங்களில் வண்டல் அகற்றுதல், புனரமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 3,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

**குறிக்கோள்கள்**

- கைவிடப்பட்ட குளங்களை மறுசீரமைத்து, வண்டல் அகற்றுவதன் ஊடாக விவசாய நிலங்களுககு அதிக நீரு வழங்குவது எல்லங்கா குளத்தை மேம்படுத்துதல்

| இலக்கம் | மாவட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கிய நிதி ரூ.மி. | செலவு ரூ.மி. | பயனாளி விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை | பயிரிடப்படும் வயற் பரப்பு (ஏக்கர்) | | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இது வரையில் பயிரிடப்பட்ட ஏக்கர் எண்ணிக்கை | புதிதாகப் பயிரிடப்படும் ஏக்கர் எண்ணிக்கை | |
| 1 | கொழும்பு | 2 | 2.00 | 1.18 | அடையாளம் காணப்படவில்லை. | | | 0] |
| 2 | கம்பஹா | 14 | 27.50 | 24.55 | 279 | 236 | 0 | 27] |
| 3 | களுத்துறை | 31 | 34.52 | 17.88 | அடையாளம் காணப்படவில்லை. | | | 10] |
| 4 | கண்டி | 6 | 18.44 | 590 | 146 | 91 | 0 | 2] |
| 5 | மாத்தளை | 95 | 177.24 | 83.71 | 782 | 862 | 0 | 14] |
| 6 | நுவரெலியா | 12 | 38.90 | 18.93 | 839 | 793 | 0 | 20] |
| 7 | காலி | 18 | 14.00 | 3.06 | 322 | 276 | 0 | 22] |
| 8 | மாத்தறை | 97 | 80.62 | 8.35 | 60 | 40 | 0 | 10] |
| 9 | அம்பாந்தோட்டை | 24 | 88.52 | 6.58 | 155 | 171 | 0 | 1] |
| 10 | அநுராதபுரம் | 921 | 1025.60 | 692.62 | 4219 | 207 | 0 | 12] |
| 11 | பொலனறுவை | 12 | 25.09 | 6.85 | 30 | 0 | 0 | 18] |
| 12 | பதுளை | 13 | 9.63 | 3.08 | 382 | 184 | 12 | 28] |
| 13 | மொனராகலை | 59 | 52.44 | 41.55 | 815 | 490 | 450 | 16] |
| 14 | இரத்தினபுரி | 65 | 63.34 | 35.24 | 274 | 218 | 0 | 12] |
| 15 | கேகாலை | 6 | 7.30 | 3.58 | 394 | 141 | 0 | 0] |
| 16 | குருநாகல் | 343 | 484.62 | 416.02 | 10108 | 6470.18 | 0 | 21] |
| 17 | புத்தளம் | 136 | 84.90 | 67.75 | 4913 | 2648 | 218.46 | 20] |
| 18 | அம்பாறை | 75 | 102.90 | 81.36 | 695 | 1320 | 0 | 20] |
| 19 | மன்னார் | 49 | 61.13 | 36.82 | 168 | 357 | 1 | 16] |
| 20 | முல்லைத்தீவு | 37 | 80.24 | 65.20 | 261 | 688 | 0 | 31] |
| 21 | வவுனியா | 69 | 161.36 | 120.60 | 683 | 632 | 742 | 14] |
| 22 | திருகோணமலை | 65 | 83.00 | 45.92 | 3405 | 4034 | 0 | 39] |
| 23 | கிளிநொச்சி | 56 | 20.74 | 18.78 | அடையாளம் காணப்படவில்லை. | | | 65] |
| 24 | மட்டக்களப்பு | 28 | 190.72 | 71.04 | அடையாளம் காணப்படவில்லை. | | | 26] |
| 25 | யாழ்ப்பாணம் | 82 | 56.85 | 53.96 | 288 | 314 | 0 | 37] |
| 26 | தலைமையகம் | 1 | 8.36 | 768 | | | | 92] |
| | மொத்தம் | 2316 | 3000.00 | 1938.19 | 29218 | 20172.18 | 1423.46 | 17] |

## 2.2.6. திறன் விருத்தி நிகழ்ச்சியின் கீழ் அநுராதபுரப் பண்ணை இயந்திரப் பயிற்சி நிலையத்திற்கான விடுதியொன்றை நிர்மாணித்தல் - (செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-31-2509)

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 59.08**
**செலவிட்ட தொகை ரூபா. 52.93**



விடுதிக் கட்டடத்தின் உள்ளே திரைச் சீலை மற்றும் தளபாடங்கள்



நிர்மாணித்து முடிக்கப்பட்ட விடுதிக் கட்டடம்

**அறிமுகம்**

இலங்கைக் குடியரசு ஜேர்மன் சம்'டிக் குடியரசுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் இயந்திரப் பயிற்சி நிலையம் 1971 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. முழுமையான இயந்திரத் தேர்ச்சி பெற்ற விவசாயிகளின் பரம்பரையொன்றை உருவாக்குவதன் ஊடாக நிலைபேறான அபிவிருத்திக்கான படிமுறையாக அமைகின்ற விவசாயப் பொருளாதாமொன்றை உருவாக்குவதே குறிக்கோளாகும்.

**குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**

அங்கு பயிற்சிபெறும் 100 விவசாயிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒரே தடவையில் விடுதி வசதிகளை வழங்குவதன் ஊடாக நிர்வாகத்திற்கும் இலகுவாக அமைகின்ற முழுமையான 7 விடுதிக் கட்டடங்களை நிர்மாணித்தல்.

**செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்-** 2014 - 2017

**செயற்திட்டம் (நீண்ட காலமா/நடுத்தரக் காலமா/குறுகிய காலமா) என்பது:-** நடுத்தரக் காலம்

**பங்காளர்கள்** - விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், ஆலோசனைக் கம்பனிகள், வடமத்திய மாகாணம், பொறியியல் திணைக்களம், நிர்மாணக் கம்பனிகள், பொறியியல் சேவை தனியார் கம்பனி கம்பனி

**நேரடி மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**
ஒரு தடவையில் 84 பயிலுநர்களுக்கும் வருடாந்தம் 84 பயிலுநர்களுக்கும் தங்கியிருக்க முடியும். வருடாந்தம் 3,500 பயிலுநர்கள் இதன் மூலம் பயனடைவர்.

**முக்கியமான தொழிற்பாட்டுக் குறிகாட்டிகள் மற்றும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த உற்பத்தி/ பயனாளிகள்:** 6000 மனித நாட்களாகக் காணப்பட்ட பயிற்சி இலக்கை 10,000 வரை அதிகரித்தல்

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

- 7 விடுதி அலகுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளனன.
- 7 கட்டட அலகுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 7 கட்டட அலகுகளுக்கும் தேவையான தளபாடங்கள், மின் உபகரணங்கள், துப்புரவு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- உணவகத்திற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- 7 அலகுகளுக்குத் தேவையான திரைச் சீலை போடும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

- சரியான இயந்திரப் பயன்பாட்டுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் விவசாய உற்பத்தியின் பயனுறுதித் தன்மை மேம்படும். அநுராதபுரம் போன்ற க்'டப் பிரதேசங்களில் விவசாயிகளுக்கு சரியான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாயப் பயனுறுதித் தன்மையையும் மேம்படுவது விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும்.

உள்ளக வீதிகள்



கட்டடத்தின் யன்னல்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட மழை நீர்த் தடுப்புக்கள்



## 2.2.7 விவசாயப் பயிர்களின் உற்பத்தியை எதிர்வுகூறும் நிகழ்ச்சி (செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-3-2509)

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 1**
**செலவிட்ட தொகை ரூ.மி. 0.75**

**அறிமுகம்**
2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சி 18 மாவட்டங்களில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டது 2015/16 பெரும்போகம் முதல் நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்**
பயிர் உற்பத்திகளை எதிர்வுகூறுவதன் மூலம் மிகச்சரியான தகவல்களை தேசிய மட்டத்தில் கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்காக வழங்குதல்.

**உபாய முறைகள்**
நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்து நிகழ்ச்சியின் நடைமுறை முக்கியத்துவம் தொடர்பில் அறிவூட்டி வினைத்திறனை மேம்படுத்துதல்.

**செயற்திட்ட ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம்** - 2017.01.01 முதல் 2017.12.31 வரை

**செயற்திட்டக் காலப் பகுதி (காலம்/நடுத்தரக் காலம்/ குறுகிய காலம்)** - குறுகிய காலம்

**நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட நிதி** - உள்நாட்டு நிதி

**செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்**

நிகழ்ச்சியுடன் தொடர்புடைய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அடுத்த பயிர்ச்செய்கை ஆண்டுக்கான பயிர்ச்செய்கை இலக்குகள் அடங்கிய பயிர் உற்பத்தித் திட்டம் (அறிக்கை) தயாரிக்கப்பட்டுள்ளது.

**செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம்**

விவசாயத் துறையில் பிரதேச மட்டத்தில் சேகரிக்கப்படும் தரவுகளை தேசிய கொள்கை வகுப்புக்குப் பயன்படுத்துதல்.





## 2.2.8. இலங்கையில் வர்த்தக ரீதியில் ஈரப்பலா உற்பத்திக்கான அங்குரார்ப்பணச் செயற்திட்டம் (செலவுத் தலைப்பு இலக்கம்- 118-2-3-42-2509 (13)



நிலைபேறான விவசாயத்தின ஊடாக உணவுப் பாதுகாப்பையும் போசணை மட்டத்தையும் அதிகரித்தல், பட்டினியை ஒழிப்பதற்கான நிலைபேறான அபிவிருத்திக் குறிகாட்டிகளுக்கு இணங்க இலங்கையில் ஈரப்பலாப் பயிர்ச்செய்கையை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் பெறுமதி சேர்ப்பு முறைகளின் ஊடாக ஈரப்பலாப் பயிர்ச்செய்கையை வர்த்தக மட்டத்தில் விரிவுபடுத்தும் குறிக்கோள்களுடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்திட்டம் ஆசிய ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி அமைப்பின் 6 மில்லியன் ரூபா உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டம், ஈரப்பலா உற்பத்தியை அதிகரிப்பதையும் சந்தை வாய்ப்புக்களை அதிகரிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் ஈரப்பலாவுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை உருவாக்குதலும் அதனுடன் தொடர்புடைய பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தி மேம்படுத்துதல், ஒரு வீட்டுத் தோட்டப் பயிராகத் தொடர்ந்தும் பிரபல்யப்படுத்துதல், மிகவும் உயர் தன்மைகளைக் கொண்ட விசேட இனங்களை அறிமுகப்படுத்துதல், ஈரப்பலாச் செய்கையில் காணப்படும் பூச்சிகள் மற்றும் நோய்க காரணிகள் தொடர்பாக ஆய்வு செய்தல், நாற்றுமேடை முகாமை மற்றும் விரிவாக்க முறைமை மேம்படுத்துதல், உயர் தரத்திலான உள்நாட்டு இனங்களை ஆய்வு செய்து இனங்காணுதல் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டிற்காக 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும் வருடம் முடிவில் செலவு 0.4 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

## 3. சர்வதேசத் தொடர்புகள் (செலவுத் தலைப்பு - 118-2-3-1505)

அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் செயற்திட்டப் பிரேரணைகளை மேம்படுத்தி உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்புதல், அவற்றுக்கு அனுமதி கிடைத்ததன் பின்னர் நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களிடம் ஒப்படைத்தல், பிந்திய விபரம் சேகரித்தல், வெளிநாடுகளுடனும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல், உள்நாட்டு வெளிநாட்டு இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் விதத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேணி வருதல், சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய சர்வதேச ஒப்பந்தங்களுக்கான தகவல்களை வழங்குதல், விவசாயத் துறையுடன் தொடர்புடைய வகையில் அவற்றை ஒருங்கிணைப்புச் செய்தல், அரசாங்க மற்றும் தனியார் பங்குடமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் என்பனவே பிரதான குறிக்கோள்களாகும்.

**வெளிநாட்டு உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்**

**வானிலை மாற்றங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்களின் அடிப்படையில் நிலைபேறான விவசாயத்திற்கான தாக்கங்ளைக் குறைப்பதற்காக ஆசிய நாடுகளின் விவசாயத் துறை உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் அனுபவப் பரிமாற்றம்.**

**ஒதுக்கப்பட்ட தொகை - ரூபா.மில் 3.5**
**செலவிட்ட தொகை ரூ.மி. 3.71**

“விவசாயச் செயற்பாடுகளில் வானிலை மாற்றங்களின் தாக்கங்கள் மற்றும் அனர்த்த முகாமை மற்றும் இயைபாக்கமடைதல்” அடிப்படையாகக் கொண்டு ஆசிய நாடுகளில் விவசாயத்துடன் தொடர்புடைய வகையில் ஒவ்வொரு தரப்பினரதும் விவசாய அறிவை இற்றைப்படுத்துதவதற்கும் பரிமாறிக் கொள்வதற்குமாக ஆசிய உற்பத்தித்திறன் அமைப்புடன் (APO) இணைந்து ஐந்து நாள் (2017.09.1115) செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.
வானிலை மாற்றங்களின் கீழ் நிலைபேறான விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக ஆசிய நாடுகளிலுள்ள விவசாயத் துறை உத்தியோகத்தர்களிடமுள்ள அனுபவத்தையும் அறிவையும் எமது விவசாயத் துறை உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதன் ஊடாக மிகவும் பொருத்தமானதும் பயனுறுதி வாய்ந்ததுமான விவசாய நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பது இதன் பிரதான பயனாகும். இந்த செயலமர்வு விவசாயத் துறையுடன் தொடர்புடைய ஆசிய நாடுகளின் 22 பிரதிநிதிகளும் 12 உள்நாட்டுப் பிரதிகளும் பங்கேற்றனர்.

**இலங்கை முன்னணி பழப் பெறுமதிச் சங்கிலியின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, மா, அன்னாசி, பப்பாசிப் பயிர்ச்செய்கைகளை மேம்படுத்துதலும் முகாமை செய்தலும்.**

நிலைபேறான விவசாயத்தின ஊடாக உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், போசணை மட்டத்தை அதிகரித்தல், விவசாயிகளின் வறுமை ஒழித்தல், போ'ாக்குள்ள உணவுகள் மூலம் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல் ஆகிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கையின் பழச் செய்கையை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும் ஒரு செயற்திட்டமாக “இலங்கையின முன்னணி பழப் பெறுமதிச் சங்கிலியின் உறபத்தியை மேம்படுத்துவதற்கும் வர்த்தகமயமாக்கலுக்கு உதவி வழங்குவதற்குமான செயற்திட்டம்” முன்மொழியப்பட்டுள்ளது.

இதன் கீழ், மா, அன்னாசி மற்றும் பப்பாசிப் பயிர்ச்செய்கைகளை மேம்படுத்துவற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக உணவு மற்றும் விவசாயத் தாபனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுக்கு சீன அசாங்கத்தின் உதவியுடன் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக உணவு மற்றும் விவசாயத் தாபனத்தினால் சீன அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தங்களின் நகல் வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## தாவரத் தொற்றுநீக்கல் சேவையைப் பலப்படுத்துதல்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் விவசாயிகளின் வறுமை ஒழிப்பதற்கான ஒரு உபாய முறையாக ஏற்றுமதிசெய்யப்படும் விவசாய உற்பத்திகளை சர்வதேச தரநியமங்களுக்கு இணங்கப் பேணி வருதல், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் செடிகளுக்கும் உற்பத்திகளுக்கும போட்டி விலையினை வழங்குதல், இறக்குமதி செய்யும் நாடுகளில் சர்வதேச சந்தைகளில் நுழைவதற்காக இறக்குமதி செய்யும் நாடுகளுக்குத் தேவையான தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல், தாவர மற்றும் தாவர உற்பத்திகளை இறக்குமதி செய்யும் போது இறக்குமதி செய்யும் நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள அல்லது அனுமதிக்கப்படாத தாவரங்களை அல்லது தாவர உற்பத்திகளை இறக்குமதி செய்வது தவிர்க்கப்படுவதை உறுதி செய்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக தாவரத் தொற்றுநீக்கச் சேவையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நோக்கில் தாவரத் தொற்றுநீக்கச் சேவையில பயன்படுத்தும் தொழில்நுட்பப உபகரணங்களில் திருத்த வேலைகளைச் செய்து மறுசீரமைப்பதற்காக 259.6 மில்லியன் ரூபா செலவில் 2017 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அவ் உபகரணங்களை இந்நாட்டுக்கு கொண்டு வருவதற்குச் செலவாகும் காலத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் கிடைக்கவுள்ளது. இதற்காக சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் உதவி வழங்குவதுடன் விவசாயத் திணைக்களத்தின் தாவரத் தொற்றுத் தடுப்புச் சேவையினால் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

- ஆசிய உணவு மற்றும் விவசாய ஒத்துழைப்பு முன்னெடுப்பு (AFACI) நிறுவனத்தின் இலங்கைக்கான தேசிய ஒருங்கிணைப்பு அலகாகத் தொழிற்படுதல் மற்றும் அதனுடன் தொடர்புடயை ஒருங்கிணைப்பு, அதனுடன் தொடர்புடைய சர்வதேச மாநாடுகளையும்/ செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
- சர்வதேச விவசாயத்திற்கான கொரியச் செயற்திட்டம் (KOPIA) இலங்கை நிலையத்துடனான ஒருங்கிணைப்பு.
- ஏனைய சர்வதேச அமைப்புக்கள் (CAPSA, APPC, TENET, WFP, CIRDAP) போன்றவற்றுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- பல்வேறு நாடுகளுடனும் சர்வதேச அமைப்புக்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (ஆழுரு) கைச்சாத்திடுவதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், கையொப்பமிடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்
- சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்களுடன் (SAPTA, PFTA, CFTA) தொடர்புடைய கடமைச் செயற்பாடுகள்
- நூட்டின் விவசாயச் செயற்திட்டங்களுக்கான உதவிகளைப் பெறுவதற்காக உரிய நிறுவனங் களுடனும் அமைப்புக்களுடனும் ஒருங்கிணைப்புக்காகச் சந்தாப் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

| *நிறுவனம் /அமைப்பு* | *2017 ஆம் ஆண்டுக்கான இலக்கு (ரூ. மி)* | *2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகை (ரூ. மி)* |
|---|---|---|
| *FAO – ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயத் தாபனம்* | *17.7* | *19.08* |
| *CIRDAP – ஆசிய பசுபிக் வலய ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிலையம்* | *2.5* | *2.6* |
| *AARDO – ஆசிய ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி நிலையம்* | *4.2* | *4.47* |
| *CAPSA* | *4.56* | *4.63* |
| *APPC – ஆசிய பசுபிக் வலய தாவரப் பாதுகாப்பு ஆணைக்குழு* | *0.9* | *0.12* |

(டொலரின் பெறுமதி அதிகரித்திருப்பதனால் செலுத்தப்பட்ட தொகை இலக்கை விட அதிகமாகவுள்ளது).

# 4. விவசாயிகள் நம்பிக்கை நிதியம்

## நிதியத்தின் கட்டமைப்பு

### ஆரம்பம்

விவசாயிகள் நம்பிக்கை நிதியம் 1994 மார்ச் மாதம் 9 ஆந் திகதி அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் நிதியத்தின் சார்பில் அப்போதைய விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர், அவ் அமைச்சின் இராஜாங்க செயலாளர், விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பா ன அமைச்சின் செயலாளர், கமநல சேவை ஆணையாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய சபையொன்று கைச்சாத்திட்ட நம்பிக்கைப் பொறுபபு உறுதியொன்றின் மூலம் தாபிக்கபபட்டது.

### எமது பணி

சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்குத் தேவையான பின்னணியை உருவாக்கி சிறு விவசாயிகளின் செயலூக்கமிக்க பங்களிப்புடன் விவசாய ரீதியில் தன்னிறைவடைந்த இலங்கையை உருவாக்குதல்.

### குறிக்கோள்கள்

1994 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உரித்தில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க 2002 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றின் மூலம் நிதியம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- இலங்கையில் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலனோம்பலை மேம்படுத்துதல்
- சிறிய விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாய தொழில்நுட்பக் கடன் வசதிகளை வழங்குதல்
- சிறிய விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல்
- சிறு விவசாயிகளின் நிதிக் கஷ்டங்களைப போக்கிக் கொள்வதற்காக சிறு விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல்
- சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்காக அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பயிர் மற்றும் விலங்கு உற்பத்திச் செயற்பாடுகளையும் உற்பத்தித் தயாரிப்புக்கான கைத்தொழில் நிகழ்ச்சிகளையும் நடைமுறைப்படுத்துதல்.

### நடைமுறைப்படுத்தும் முறை

பணிப்பாளர் சபையொன்றின் ஊடாக ஒவ்வொரு வருடத்திற்குமான செயற்திட்டங்களுக்கு அனுமதிபெற்று உரிய நிறுவனத்தின் ஊடாக செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிதியத்தின் பணிப்பாளர் சபை பின்வரும் விதத்தில் அமைந்துள்ளது.

- தலைவர் - விவசாய அமைச்சின் செயலாளர்
- அங்கத்தவர் - கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்
- அங்கத்தவர் - பிரதம கணக்காளர (விவசாய அமைச்சு)
- அங்கத்தவர் - திறைசேரியின் விசேட பிரதிநிதி

## நிதி மூலம்

### 1. கொவிசத லொத்தர் விற்பனை வருமானம்

நிதியத்திற்கான பிரதான வருமான வழி கொவிசத லொத்தர் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தின் குறிப்பிட்டதொரு சதவீதமாகும். அது காலத்துக் காலம் லொத்தர் சபையுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் நம்பிக்கை நிதிய உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

95/1317/105/081 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் கொவிசத லொத்தர் என்ற பெயரில் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவிற்கு இணங்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஊடாக விவசாயிகள் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்ப வேண்டியவாறு ஒருங்கணை நிதியத்திற்கு வைப்புச் செய்வதற்காக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2. நிதியத்தின் முதலீட்டு வருமானம்

நிதியத்தின் மேலதிக பணத்தை காலத்துக் காலம் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானமும் பிரதான வருமான மூலமாக விளங்குகின்றது.

### 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம்

- விவசாய வங்கிகளின் தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்துவதற்காக கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டத்திற்கு மூலதனம் வழங்குதல்.
- இதன் கீழ் 2017 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தி ஆணையாருக்கு 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் கமநல சேவை நிலைய மட்டத்தில் நடாத்தப்படும் கமநல வங்கிகளின் ஊடாக விவசாயிகளின் சிறிய அளவிலான கடன் தேவைகளுக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டது.
- விவசாயிகளுக்காக வினைத்திறன்மிக்க விரிவாக்கல் சேவையினை உறுதிப்படுத்துவதற்காக கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.
- இதன் கீழ் 2017 ஆம் ஆண்டில் 1.4 மில்லியன் ரூபா கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் இலங்கை ஹதபிம அதிகாரசபைக்கும் வழங்கப்பட்டது.

### 3. அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்கான அன்பளிப்புக்கள்

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**உரக் களஞ்சியங்களை நிறுவுதலும் திருத்த வேலைகளைச் செய்தலும்**

- கடந்த வருடங்களைப் போன்று 2017 ஆம் ஆண்டிலும் உரக் களஞ்சிய நிர்மாணப் பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தி 4 உரக் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக 3.99 மில்லியன் ரூபா மீள அறவிடப்படாத கொடையாக கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதுடன் அந்த உரக் களஞ்சியங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**கிராமிய சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களைப் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

- வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சி 2017 ஆம் ஆண்டலும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் அநுராதபுரம், குருநாகல், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் கீழ் 16.2 மில்லியன் ரூபா செலவில் 05 சிறியளவிலான கால்வாய்களில் திருத்த வேலைகள் செய்யப்பட்டு அப்பிரதேசங்களிலுள்ள விவசாயிகளிளுக்கு நேரடி மற்றும் மறைமுகமான பயன்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**கிராமிய விவசாய வீதிப் புனரமைப்பு**

- 2017 ஆம் ஆண்டில் 13.5 மில்லியன் ரூபா செலவிட்டு அநுராதபுரம், குருநாகல், கம்பஹா, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 08 விவசாய வீதிகளில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

**விவசாயத் திணைக்களம்**

- கைத்தொழில் உள்ளீட்டு உற்பத்தி மற்றும் விளைச்சலைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சிகளுக்கு முற்பணங்கள் வழங்குதல்.
- இதன் கீழ் விதை நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 80 மில்லியன் ரூபாவும், உள்நாட்டு பெரிய வெங்காயம் கொள்வனவு செய்வதற்காக 5 மில்லியன் ரூபாவும் தேனிப் பெட்டிகளையும் தேனி வளர்ப்புக்குத் தேவையான ஏனைய உபகரணங்களைத் தயாரிப்பதற்கும் 0.5 மில்லியன் ரூபாவும் ஆக விவசாயத் திணைக்களத்திற்கு 85.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டதுடன் தற்போது அதில் 80.0 மில்லியன் ரூபா கணக்குத் தீர்க்கப்பட்டுள்ளது.

**தேசிய உணவு மேம்பாட்டுச் சபை**

- சோயா அவரை கொள்வனவு செய்வதற்காக தேசிய உணவு மேம்பாட்டுச் சபைக்கு 5 மில்லியன் ரூபா முற்பணம் வழங்கப்பட்டதுடன் அந்தப் பணத்தில் சோயா அவரை கொள்வனவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு முழுப் பணத்தொகையும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட செயலகம்**

- மொனராகலை மாவட்டத்தில் பருவமல்லாக் காலத்தில் ரம்புட்டான் பயிர்ச்செய்கையைப் பிரபல்யப்படுத்துவதற்காகவும் கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில் காளான் செய்கையைப் பிரபல்யப்படுத்துவதற்காகவும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 4. விவசாய வங்கிகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டங்கள்

கடன் திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் அந்தூரியம் செய்கைச் செயற்திட்டமொன்றும் கண்டி மாவட்டத்தில் விதை நெற் களஞ்சியமொன்றும் நிர்மாணிப்பதற்கான செயற்திட்டமொன்றுக்காக விவசாய வங்கிகளின் ஊடாக முறையே 0.3 மில்லியன் ரூபா, 1.5 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் கடன் வழங்கப்பட்டதுடன் தற்போது அச்செயற்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடனைத் திருப்பிச் செலுத்தும் செயற்பாடும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

## 5. 2017 ஆம் ஆண்டில் ஆரம்பித்த விசேட நிகழ்ச்சிகள்

2017 ஆம் ஆண்டு முதல் விவசாயிகள் நம்பிக்கை நிதியத்தினால் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து ஒருங்கிணைந்த கடன் நிகழ்ச்சியொன்று நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதன் கீழ் விசேட விவசாயச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்குவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒரு முன்னோடிச் செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 3 விசேட செயற்திட்டங்களுக்காக 6மூ வட்டியின் கீழ் 7.0 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

**ஹல்கஹகும்புர அணைகட்டு புனர்நிர்மாணம்**

புனரமைக்க முன்னர்



புனரமைக்கும் போது



புனரமைத்ததன் பின்னர்



# 5. மதிப்பீடு மற்றும் தொழிற்பாடுகள் - (செலவுத் தலைப்பு - 118- 02-03-20-2509)

விவசாய அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் தொழிற்பாட்டு மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக 11.7 மில்லியன் ரூபா (உணவு உற்பத்தி நிகழ்ச்சியின் கீழ் விவசாயத் திணைக்களத்திற்கான 1.7 மில்லியன் ரூபா அடங்கலாக) ஒதுக்கப்பட்டதுடன் 3,64 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட கள அவதானிப்புக்களின் எண்ணிக்கை 56

2 ஆம் பொறியியல் இராணுவப் பிரிவு, பெரியதம்பனை, வவுனியா
(வெளிக்கள அவதானிப்பு - மதிப்பீட்டுத் தொழிற்பாட்டுப் பிரிவு, விவசாய அமைச்சு)










பலாபத்வல ராஜஅம்மா அவர்களின் சேதன உர உற்பத்தி அலகை அவதானிப்புக்கு உற்படுத்தியமை





# 6. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வு என்பது நிறுவனமொன்றின் செயற்பாட்டைச் சோதனையிடுவதற்காகவும் மதிப்பீட்டுச் சேவைச் செயற்பாடுகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள சுயாதீனமான ஒரு மதிப்பீட்டு அலகாகும். நி.பி. 127 இன் கீழ் காட்டப்பட்டுள்ள கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக விவசாய அமைச்சின் செயலாளரின் நேரடிக் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஓர் அலகாகும்.

**கணக்காய்வுச் சோதனைகளை நடாத்துதல்**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள ஊழியர் குழாம் மற்றும் ஏனைய வளங்களையும் ஊழியர் குழாத்தின் அனுபவம் மற்றும் பயிற்சி ஆகிய வரையறைகளுக்கு உட்பட்ட வகையில் அமைச்சின் கீழ் உள்ள அடையாளம் காணப்பட்ட அபாயத்தைக் கொண்டு துறைகளைக் கணக்காய்வு செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அதற்கிணங்க, 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் செய்யப்பட்ட கணக்காய்வுச் சோதனைகளின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

**2017 ஆம் ஆண்டின் முன்னேற்றம்**

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல் - இலக்கு 04 முன்னேற்றம் 04
- கணக்காய்வுச் சோதனைகள் மற்றும் விசேட விசாரணைகளின் முன்னேற்றம்.

| தொ. இல | நிறுவனம் | 2017 ஆம் ஆண்டில் அனுப்பிய கணக்காய்வுக் கேள்விகள்/ விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | விசவசாய அமைச்சு | 03 |
| 02 | விவசாயத் திணைக்களம் | 01 |
| 03 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் (விவசாய வங்கிகள் அடங்கலாக) | 02 |
| 04 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 02 |
| 05 | அறுவடைக்குப் பிந்தி தொழில்நுட்ப நிறுவனம் | 01 |
| 06 | தேசிய உணவு மேம்பாட்டுச் சபை | 04 |
| 07 | வ/ப கொழும்பு கொமர்ஷல் கம்பனி | 01 |
| 08 | வ/ப லங்கா உரக் கம்பனி | 02 |
| 09 | விவசாயிகள் நம்பிக்கை நிதியம் | 05 |
| 10 | ஹெக்டர் கொப்பேகடுவை விவசாயச் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 02 |
| 11 | இலங்கை பொஸ்பேற்றுக் கம்பனி | 01 |
| 12 | இலங்கை விவசாய கொள்கைச் சபை | 01 |

இவை தவிர, 2017 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சினால் அமுல்படுத்தபபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களான வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப தொடர்பிலும் உணவு ஊக்குவிப்புச் சபை, விவசாயிகள் நம்பிக்கை நிதியம், வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொமர்'ல் உரக் கம்பனி, தேசிய உரச் செயலகம் என்பவற்றுக்காகவும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள விவசாய வங்கி 01 இற்காகவும் கணக்காய்வு அறிக்கைள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பான பிந்திய விபரம் சேகரிப்பு தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டதுடன் வினைத்திறன்மிக்க பிந்திய விபரச் செயன்முறையொன்றை உருவாக்கும் தேவை மற்றும் முக்கியத்துவம் தொடபில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் ஊடாக விடயங்கள் முன்வைக்கப்பட்டன.



## 07. அமைச்சின் கீழ் உள்ள இயங்கும் நிறுவனங்கள்

7.1 விவசாயத் திணைக்களம்

7.2 கமநல அபிவிருத்தித் திணைக்களம்

7.3 விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

7.4 ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்

7.5 இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை

7.6 அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்

7.7 தேசிய உணவு மேம்பாட்டுச் சபை

7.8 தேசிய உரச் செயலகம்

7.9 வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி

7.10 வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

7.11 வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் அரசாங்க கம்பனி

# 7.1 விவசாயத் திணைக்களம்



கொடித் தோடை - பொல்கஹவலை நாவல்



கண்ணோருவை நாவல்



இரண்டாவது உள்நாட்டு மிளகாய் வகை
MICH HY 2

## எதிர்கால நோக்கு

தேசிய சௌபாக்கியத்திற்காக விவசாயத் துறையில் உன்னத நிலையை அடைதல்

## எமது பணி

தேசத்தின் உணவு, போசாக்குப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நேர்மையான, நிலையான விவசாய அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்காக மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை விருத்தி செய்து பரப்புதலும் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அனைத்துப் பங்காளிகளுக்கும் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குதலும்.

## அடைய எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

1. வறுமை ஒழித்தல்.

2. நிலைபேறான விவசாயத்தைக் ஊக்குவித்தல்

3. ஆரோக்கியமான வாழ்வை உறுதிப்படுத்துதலும் அனைவருக்கும்,அனைத்து வயதுகளிலும் நல்வாழ்வை ஊக்குவித்தலும்

5. ஆண் பெண் சமத்துவத்தை அடைதல் மற்றும் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் வலுவூட்டுதல்.

12. நிலைபேறான நுகர்வையும் உற்பத்தி முறைகளையும் உறுதிப்படுத்துதல்.

13. காலநிலை நிலைமாற்றங்கள் மற்றும் அதன் தாக்கங்களை தடுப்பதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## நிறுவனத்தை நிறுவுதல்

இலங்கைச் சமுதாயத்திற்கு வினைத்திறன்மிக்க முறையில் விவசாய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு அவற்றின் பயன்களைப் பொது மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக விவசாயத் திணைக்களத்தைத் தாபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்தேவையின் அடிப்படையில் 1911 ஆம் ஆண்டில் இலங்கையில் அமர்வு அறிக்கையொன்றாக அங்கீகாரம் (Ceylon Session Paper - 1911) பெற்றதன் பின்னர் 1912 மே மாதம் 20 ஆந் திகதி இலங்கையின் விவசாயத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

## பிரதான பணிகள்

1. ஆய்வுகள் மூலம் நாட்டிலுள்ள பல்வேறு விவசாய சுற்றாடல் வலயங்களுக்குப் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.
2. புதிய முன்னேற்றகரமான விவசாயத் தொழில்நுட்பத்தை விவசாயிகள் மத்தியில் பரவலாக்குதல்.
3. உயர் தரம்வாய்ந்த விதைகளையும் நடுகைப் பொருட்களையும் உற்பத்தி செய்து விநியோகித்தல்.
4. தாவரப் பாதுகாப்புச் சட்டத்தையும் களை கொல்லிக் கட்டுப்பாட்டுச் சடத்தையும் மண் பாதுகாப்புச் சட்டத்தையும் விதைச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துதல்.
5. விவசாய தொடர்பான தொழிற்தகைமை 3 -4 தேசிய மட்டங்களில் நடாத்துதல், விவசாயிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் தேவையான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
6. உணவுப் பயிர் உற்பத்தியுடன் தொடர்புடைய சமூக பொருளாதார நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

## 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகளும் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான செலவுகளும்

| செயற்திட்டம் | மூலதனம் | | மீளெழும் | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு (ரூ.மி.) | செலவு (ரூபா) | ஒதுக்கீடு (ரூ.மி.) | செலவு (ரூபா) |
| 1. நிர்வாக மற்றும் நிறுவனச் சேவைகள் | 45.49 | 35.02 | 441.52 | 424.07 |
| 2. விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவ-ிருத்தி | 114.0 | 69.31 | 1,613.96 | 1,447.59 |
| 3. விரிவாக்கம் மற்றும் பயிற்சி | 279.6 | 208.18 | 1,255.42 | 1,196.78 |
| 4. விதைகளைச் சான்றுப்படுத்துதல் மற்றும் தாவரப் பாதுகாப்பு | 104.0 | 77.57 | 1,261.72 | 1,180.11 |
| மொத்தம் | 543.09 | 390.08 | 4,572.62 | 4,248.65 |

## 2017 முன்னேற்றம்

1. தொழில்நுட்பவியலாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி

- விநியோகிக்கப்பட்ட புதிய வகைகள்
- கௌபி ANKCP 2




- விளைச்சலை அறுவடை செய்ய எடுக்கும் காலம் 64-68 நாட்கள்.
- சாதாரண அறுவடை ஹெக்டயரொன்றுக்கு சுமார் 1500-1600 கிலோ கிராம்களாக காணப்படுவதுடன் 3-4 தடவைகள் அறுவடை செய்ய முடியும்.
- விவசாயிகள் மத்தியில் தற்போது பிரபலமடைந்துள்ள கடலை கௌபி வடிவத்திலிருப்பதனால், முற்றிய பச்சை கதிர்களிலிருந்து விதைகளை கறியாகவும் உலர் விதைகளை அவித்து உணவாகவும் பயன்படுத்த முடிவதனால் இரட்டைப் பயன்பாடுடைய ஒரு வகையாக (Dual purpose) விளங்குகின்றது.
- விதைகள் ஏனைய இனங்களை விட அளவில் பெரியதாக இருப்பதுடன் விதைகளில் இளம் கபில நிறம் மற்றும் வெள்ளை (Bicolor) நிறத்தை நுகர்வதில் நுகர்வோர் அதிக விருப்பம் காட்டுகின்றனர்.

## போஞ்சி - பச்சை போஞ்சி **( PB 161)**





- சாத்தியமான அறுவடை ஹெக்டயரொன்றுக்கு 23-25 டொன்களாகும்.
- 40-45 நாட்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பூக்க ஆரம்பிப்பதுடன் 60-63 நாட்களில் விளைச்சலை அறுவடை செய்ய முடியும்.
- நடுத்தரமான நீளமுடைய பச்சை நிறமான உருண்டைக் கதிர்கள் காய்க்கும்.
- கதிரின் மேற்பரப்பு மென்மையாக இருப்பதுடன் விதைகள் வெளித் தளித் தெரிவது மிகவும் குறைவாகும்.
- கொடி முழுவதிலும் ஒரே விதத்தில் கதிர்கள் பரவிக் காணப்படும்.
- 8-9 தடவைகள் அறுவடை செய்ய முடியும்..
- அறுவடை செய்வது தாமதமானாலும் கூட கதிரின் இளமைத் தன்மை தொடர்ச்சியாகக் காணப்படும்.

## இரண்டாவது உள்நாட்டு கலப்பின மிளகாய் வகை (MICH HY 2)




இரண்டாவது உள்நாட்டு மிளகாய் வகை MICH HY 2

- சாத்தியமான அறுவடை ஹெக்டயரொன்றுக்கு சுமார் 35 டொன்களாகும்.
- திணைக்களத்தினால் இது வரையில் வழங்கப்பட்ட திறந்த மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட மிளகாய் இனங்களுடன் ஒப்பிடுகையில் 30மூ 40மூ அதிக விளைச்சலைத் தரக்கூடியது.
- கதிரொன்றின் நீளம் சுமார் 13 செ.மீ ஆகக் காணப்படும் அதேவேளை கதிர் தடிப்புக் குறைவாகக் காணப்படுவதனால் பச்சை மிளகாய்க்கும் செத்தல் மிளகாய்க்கும் பொருத்தமானது.
- இலையில் பூஞ்சணம் கட்டும் பிரச்சினைக்கு நடுத்தர அளவில் எதிர்ப்புச் சக்தியை நடுத்தர அளவில் கொண்டிருப்பதனால் இரசாயன கிருமிப் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ள முடியும்.

## மாங்காய் - ஹொரண ஹிரு




- வேகமான வளர்ச்சி மற்றும் வைத்திருப்பது வைத்திருக்க முடியுமாக உள்ளமை.
- காய்கள் முற்றும் போது மஞ்சள் நிறமாக மாறும்.
- காய்களை மஞ்சள் நிறமாக்குவதற்காக காய்களை மறைப்பது அத்தியவசியமானதாகும்.
- அத்திரக்னோஸ் நோய்க்கு நடுத்தர அளவில் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ளது.
- தாழ் நில ஈர வயலத்திற்குச் சிபாரிசு செய்யப்படுகின்றது.

## கொடித் தோடை - ஹொரண கோல்ட்





- காயொன்றின் சராசரி எடை சுமார் 155 கிராம்களாக இருக்கும். அது உருண்டை அல்லது நீள் வடிவத்தக் கொண்டிருக்கும்.
- பழுத்ததன் பின்னர் தோலின் நிறம் மஞ்சள் செம்மஞ்சள் நிறங்களாகும்.
- சதைப் பகுதி மஞ்சளை ஒத்த செம்மஞ்சள் நிறமாகும்.
- அதிக விளைச்சலைத் தருவதுடன் விதைகள் மூலம் கன்றுகளை உற்பத்தி செய்ய முடியும்.
- தாழ்நில ஈர, இடை வரள் வலங்களுக்கும் மத்திய நாட்டு ஈர, இடை மற்றும் உலர் வலயங்களுக்கும் பொருத்தமானது.

## கொடித் தோடை - பொல்கஹவலை நாவல்



- அறுவடை முதல் வருடத்தில் கொடியொன்றிலிருந்து 16 கிலோவும் இரண்டாம் வருடத்தில் கொடியொன்றிலிருந்து 24 கிலோவும் கிடைக்கும்.
- கன்றை நட்டு 10 மாதங்களில் முதலாவது அறுவடை கிடைக்கும்.
- காயின் தோல் சிவப்புச் சார்ந்த ஊதா நிறமாகும்.
- காயொன்றின் நிறை 100-120 கிராம்களுக்கு இடைப்பட்டதாகும்.
- சதை மஞ்சளான பெரிய காய்கள் காய்க்கும்.
- கொழுந்துகளில் ஊதா நிறத்தை அதிகளவில் காண முடியும்.
- வைரஸ் மற்றும் வேர்கள் அழுகும் நோய்களுக்கு நடுத்தர அளவிலான எதிர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ளது.
- மலைநாட்டு ஈரவலயத்திற்கும் இடைவலயத்திற்கும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

## நாரங்காய் - ஜூஸ்





- செம்மஞ்சள் நிறமான சதை கொண்ட பெரிய காய்கள் (100-130 கிராம்) காய்க்கும்.
- வருடம் முழுவதிலும் பரவிக் காணப்படும் அறுவடையுடன் 2 பிரதான அறுவடைக் காலங்கள் காணப்படும். வருடம் முழுவதிலும் பரவிக் காணப்படும் அறுவடையுடன் 2 பிரதான அறுவடைக் காலங்கள் காணப்படும்.
- ஒரு வருடத்தில் ஒரு மரத்திலிருந்து சுமார் 150 கிலோ கிராம் அறுவடை கிடைக்கும்.
- பழச்சாறு உற்பத்திக்கும் புதிய பழமாகவும் பயன்படுத்த முடியும்.
- தாழ் நில ஈர வயலத்திற்குச் சிபாரிசு செய்யப்படுகின்றது.

## நெல்லி - கண்ணொருவை நெல்லி





- பெரிய காய்கள் 40-70 கிராம் நிறை கொண்டவையாகக் இருக்கும்.
- முற்றிய காய்கள் மஞ்சள்சார்ந்த நிறத்தைக் கொண்டிருக்கும்.
- கன்றுகளை நட்டு 2 1.'.2- 3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பூத்து காய்க்கும்.
- ஒரு வருடத்தில் ஒரு மரத்திலிருந்து சுமார் 150 கிலோ கிராம் அறுவடை கிடைக்கும்.
- சாடிகளில் சிறப்பாகப் பயிரிடக் கூடியதாக உள்ளதுடன் வீட்டுத் தோட்டங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

## நாவல் – கண்ணொருவை நாவல்





- உள்நாட்டு நாவல் பழங்களுடன் ஒப்பிடுகையில் பெரிய பலமாகும்.
- சதை ஊதா நிற பழச்சாறு நிரம்பியதாகவும் சுவையானதாகவும் இருக்கும், பழுத்த பழம் ஊதா நிறம் போன்ற கறுப்பு நிறமாக இருக்கும்.
- சாடிகளில் சிறப்பாகப் பயிர் செய்ய முடிவதுடன் ஈர வலயத்திற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

## எலதங் - கண்ணோருவை எலதங்





- மிகவும் அரிதாக காணக்கூடிய ஒரு பெரிய நாவல் இனமாகும்.
- பழுக்கும் போது இளம் பச்சை நிறமாக மாறும்.
- சாடிகளில் சிறப்பாக பயிர் செய்ய முடியும்.
- எலதங் என்ற பெயரில் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளது.

## மாதுளை - கல்பிட்டி கலப்பின மாதுளை





- இது விவசாயத் திணைக்களததினால் சிபாரிசு செய்யப்பட்ட முதலாவது கலப்பின மாதுளை இனமாகும்.
- இளம் பஞ்சை நிறம் செம்மஞ்சள் ரோஸா நிறமாக மாறும்.
- சுமார் 5 வருட வயதைக் கொண்ட மரமொன்றின் காய்களின் சராசரி நிறை 230 - 260 கிராம்களா இருப்பதுடன் ஒரு கிலோவுக்கு சுமார் 4-5 காய்கள பிடிக்கும்.
- காய்கள் வட்டமான, நடுத்தரப் பருமனைக் கொண்டவை
- சதை சிவப்பு நிறமானது, மென்மயைான விதைகளைக் கொண்டிருக்கும்.
- பாகு கடும் சிவப்பு நிறமானது.
- தற்போது சிபாரிசு செய்யப்பட்டுள்ள மற்றும் இறக்குமதி செய்யபடும் மாதுளை இனங்களுடன் ஒப்பிடுகையில் அதிக ஒட்சிசன் எதிர்ப்புச் சக்தி கொண்டதாக உள்ளதுடன் இறக்குமதி செய்யப்படும் மாதுளை இனங்களுடன் போட்டி போட முடியுமான தோற்றத்தையும் கொண்டுள்ளது. அரும்பொட்டப்பட்ட செடிகள் மூலம் உருவாக்கப்படுகின்றது.

## 1.2 நெல்

களுத்துறை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படும் அபாயத்தைக் கொண்ட வயல்களில் வெள்ளப் பெருக்குக்கு ஈடுகொடுக்கக்கூடிய நெல் வகைகள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் ஒரு நெல் வகையொன்று வெற்றிகரமானது என அடையாளம் காணப்பட்டது.

- அதிக விளைச்சலைப் பெறுவதற்காக இயந்திரங்கள் மூலம் நாற்று நடுவது விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துப்பட்டது.

- KOPIA செயற்திட்டத்தின் கீழ் இராஜாங்கனை யாயவ 9 பிரதேசத்தில் அரிசி தயாரிப்பு நிலையமொன்று நிறுவப்பட்டது.

## 1.3 பூங்காப் பயிர்கள்

- மோசமான வானிலையின் காரணமாகக் குறையும் உணவு உற்பத்திக்கனா தீர்வாக அரிசிப் பையில் வற்றாளை பயிரிடும் புதிய முறையை பிரபல்யப்படுத்துதலும் வற்றாளை மற்றும் மரவள்ளி நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்து விநியோயகித்தலும் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் கீழ் அரிசி உறையில் வற்றாளை பயிரிடும் 43 கிராமங்கள் அமைக்கப்பட்டன.



அரிசி உறையில் வற்றாளை பயிரிடுதல்

- தெரிவுசெய்யப்பட்ட காய்கறி வகைகளின் உற்பத்தியையும் விளைச்சலையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத் தலையீட்டுச் செயற்பாட்டின் கீழ் கண்டி (990) மஹியங்கனை (39) மாத்தறை (475) அம்பாந்தோட்டை (202) காலி (10), களுத்துறை (30) பிரதேசங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

- இலங்கையில் காய்கறி உற்பத்தியின் போது அதன் தரமும் விளைச்சலும் குறைவடைவதில் பிரதானமாகத் தாக்க செலுத்தும் பிரதான நோய்கள் மற்றும் பீடை வகைகள், பழ ஈ, இல் ஈ, மூலகட்டினப் புழு, வால் புழு மற்றும் மண் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு சுற்றாடல் விஞ்ஞான மற்றும் உயிரியல் விஞ்ஞான முறைகள் அடங்கலாக ஒருங்கிணைந்த பீடை மற்றும் நோய் பீடைக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துவதன் கீழ் வெற்றிகரமாக நீண்ட காலம் நீடிக்கும் ஓமோன் கிருமி நாசினி வகையொன்று மற்றும் பச்சை வீட்டு நிலைமைகளின் கீழ் நோய்க்காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நுண்ணங்கி இனமொன்று இனங்காணப்பட்டது.



விவசாயிகளை களத்தில் *Trichoderma* மதிப்பீடு செய்தல்



ஒதுக்கப்பட்ட *Fusarium* இனமொன்று

## 1.4 வயற் பயிர்கள்

- ஹெக்டயரொன்றுக்கு சுமார் 35 தொன் விளைச்சலைத் தரக்கூடிய புதிய கலப்பின மிளகாய் இனமொன்றும் (MICH HY 2) பச்சைக் கதிர்களை அல்லது உலர்த்தி அவித்து உணவாகக் கொள்ளக்கூடிய இரட்டை நவீன கௌபி இனமொன்று (ANKCP2) உற்பத்தி செய்யப்பட்டன.

- மிளகாய்ச் செய்கைக்கான சொட்டு நீர் வழங்கல் கொண்ட பொதியொனறும் பயறுப் பயிர்ச்செய்கைக்கான ஸ்பிரிங்கலர் நீர் வழங்கல் கொண்ட பொதியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

- வெங்கய விதை உற்பத்தி மற்றும் உள்நாட்டு இனங்களுக்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான KOPIA செயற்திட்டம் அநுராதபுர மாவட்டத்தில் கலென்பிந்துனுவெவ, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லியன்கஸ்தோட்டை மற்றும் மன்னார் மாவட்டத்தில் சின்னக்கரை மற்றும் தரவன்கோட்டை ஆகிய கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டது. தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல், களப் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் பெரிய வெங்காய விதை விற்பனை மூலம் மாத்திரம் கலென்பிந்துனுவெவ 13.93 மில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்தது.



கலென்பிந்துனுவெவ விதை உற்பத்திக் கிராமத்தின் பெரிய வெங்காய விதை உற்பத்திச் செய்கையொ-ன்று

## 1.5 இயற்கை வள முகாமைத்துவம்

- பருமல்லாத காலத்தில் காய்கறிச் செய்கைக்குப் பொருத்மான 12 பிரதேசங்களும் பழச் செய்கைக்காக 5 பிரதேசங்களும், மேலதிக உணவுப் பயிர்களுக்குப் பொருத்தமான 19 பிரதேசங்களும் அடையாளம் காணப்பட்டன.

- இலங்கையில் வறட்சி அபாயம் நிலவும் பிரதேசங்களின் வரைபடம் 16 வருடங்கள் (2000-2016) MODIS செய்மதித் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் அது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது.

- மண் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடு மாகாண விவசாயத் திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிற்காக மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண விவசாயத் திணைக்களங்களுக்காக தலா 1.5 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டது. நுண் நீரூட்டப் பிரதேசங்களில் விவசாய நிலங்களுக்கான மண் பாதுகப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டன.:. பொருட்கள் நடப்பட்டன.

## 2. விதை சான்றுப்படுத்தல் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி

- உள்நாட்டு உருளைக் கிழங்கு விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பண்ணைகளின் விளைத்திறனை மேம்படுத்துவதற்காக மீபிலிமான மற்றும் பிதுருதலாகல பண்ணைகளில் நீர்ப் இறைக்கும் இயந்திரம் மற்றும் நீர் தெளிக்கும் தொகுதி என்பன அமைக்கப்பட்டதுடன் கந்தபொலை, சீதா எளிய, பிதுறுதலாகலை பண்ணைகளின் களஞ்சியங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஒப்பந்த விதைக் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட மேலதிக உணவுப் பயிர் விதை 789.9 மெ.தொன்கள், சான்றுப்படுத்தப்பட்ட நெல் விதை 160,080 புசல், தரப்படுத்தப்பட்ட காய்கறி விதை 3,912 கி.கிராம் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.

- நிலைபேறான விவசாயத் துறைக்னா ஆசிய வலையமைப்பைக் கட்டியெழுப்பும் செயற்திட்டத்தின் கீழ் (Asian network for Sustainable Agriculture) இலங்கையினுள் சேதனப் பயிர்ச்செய்கையை பிரபல்யப்படுத்துதற்காக 2 முகாமைத்துவத் தொழில்நுட்பங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் சேதன சான்றுப்படுத்தல் வழங்குவதற்காக சுமார் 200 விவசாயக் குழுக்கள் பதிவு செய்யப்பட்டன. இவை தவிர சேதனப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சுமார் 500 தனியார் துறையினருக்கு உயர் கொம்போஸ்ட் உற்பத்திக்காகப் பயிற்சியளிக்கப்பட்டது.

- பூச்சிகொல்லிகளினால் மனிதனுக்கும் சூழலுக்கும் ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தின் தரநியமங்களுக்கான 20 காய்கறி மற்றும் பழவகை மாதிரிகளில் பூச்சிகொல்லி எச்சங்கள் தொடர்பில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் பூச்சிகொல்லிக் கொள்கலன்களை சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் அழிப்பதற்கான 2 சேகரிப்பு நிலையங்கள் மட்டக்களப்பு மற்றும் பட்டஅத்தை பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டன.

- விதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் கீழ் ஊடகங்களின் ஊடாக அறிவூட்டுவதற்கான சுருக்கமான விளம்பரங்கள் 91 முறையும் 15 நிமிடங்கள் கொண்ட அருணலு வீடியோ நிகழ்ச்சிகள் 4 உம் ஒளிபரப்பப்பட்டதுடன் ரூபவாஹினியின் “நுக செவன” மற்றும் ரங்கிரி வானொலி அலைவரிசையின் “ரன் சியவர” நேரடி நிகழ்ச்சிகளுக்கு திணைக்கள உத்தியோகத்தர்கள் உதவி வழங்கினர்.

## 3. விரிவாக்கல், பயிற்சி மற்றும் தொடர்பாடல் நிகழ்ச்சி

- பயிற்சிப் பிரிவின் கீழ் உள்ள 12 நிறுவனங்களின் கீழ் 2017 ஆம் ஆண்டில் 46,172 மனித நாட்களாக 733 பயிற்சிகள் நடாத்தப்படட்டன.

- பெண்களை மையமாகக் கொண்ட குடும்ப அலகுகளின் போ‘க்கு மட்டத்தையும், சமூக மற்றும் பொருளாதார மட்டத்தையும் மேம்படுத்துவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது விவசாய உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகளில் பெண்களின் முயற்சியாண்மையை மேம்படுத்துதவற்காக 2017 ஆம் ஆண்டில் 68 பெண்கள் குடும்பத்தின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்தனர். 56 ஹெல போஜுன் தொழில்முயற்சிப் பயிற்சிகள் 30 மகளிர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 2 புதிய ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டன. இவை தவிர பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் அருகில் ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- தேனி வளர்ப்பை வர்த்தக மட்டத்தில் பரவலாக்கி வீட்டுத் தோட்டங்களில் தேனி வளர்ப்பைப் பரவலாக்குவதன் மூலம் பயிர்களில் கணினி சேர்க்கைக்கும் குடும்பத்தின் தேவைக்கான தேனை உற்பத்தி செய்வதற்காகவும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் தேனி வளர்ப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் கீழ் 25 மாவட்டங்களிலும் 106 தேனி வளர்ப்புக் கிராமங்கள் அமைக்கப்பட்டதுடன் அதன் மூலம் 2,120 பயனாளிகளுக்கு தேனி வளர்ப்புப் பெட்டியொன்றும், புகை அடிக்கும் கருவியொன்றும் தேன் வதையொன்றும் இலவசமாக வழங்கப்பட்டன.

- மாகந்துறை சேதன உரத்திற்கான சிறப்பு நிலையத்தின் ஊடாக “நிலைபேறான விவசாயத்தின் மூலம் ஆரோக்கியமான மக்களை உருவாக்குதல்” என்ற கருப்பொருளின் கீழ் சேதன உரப் பாவனையை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டில் இளம் விவசாயிச் சங்கங்களின் தேசிய மன்றத்தின் கூட்டம் நடாத்தப்பட்டதுடன் பாடசாலை இளம் விவசாயச் சமுதாயங்கள் தொடர்பில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவூட்டப்பட்டு அந்நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

- விவசாய உற்பத்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி (NVQ 6) மற்றும் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா பாடநெறி (NVQ 5) என்பவற்றுக்கா 20172019 கல்வியாண்டுக்காக முறையே 367 மற்றும் 236 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் முறையே 216 மற்றும் 205 டிப்ளோமாதாரிகள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

- 108 விவசாய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் 214 குறுந் தகவல்களும் வாரந்தோறும் 32 நிகழ்ச்சிகள் என்ற அடிப்படையில் 1588 வானொலி நிகழ்ச்சிகளும் குறுந்த தகவல்கள் 904 உம் ஒலிபரப்பப்பட்டன.

- விவசாய வெளியீட்டு அலகின் ஊடாக விவசாயம் தொடர்பான 35 புத்தகங்களின் 98,404 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.







பயிர்ச்செய்கைக் கால அட்டவணை

தேனி வளர்ப்பு தொடர்பான வெளியீடு

මී මැසි පාලනය පිළිබඳ ප්‍රකාශන

- விவசாயத் தொழில்நுட்பப் பூங்காவைப் பார்வையிடுவதற்கு உள்நாட்டைச் சேர்ந்த 154,712 பேரம் வெளிநாடுகளைச் சேர்ந்த 649 பேரும் வருகை தந்ததுடன் நுழைவுச் சீட்டுக்கள் மூலம் 3,160,545 ரூபா வருமானம் கிடைத்தது.

- விவசாயக் கல்லூரி அபிவிருத்தியின் கீழ் கரபிஞ்ச மற்றும் குண்டசாலை விவசாயக் கல்லூரிகளில் விரிவுரை மண்டபங்கள், நூலகங்கள், ஊழியர் குழாத்திற்கான அறைகள் என்பவற்றைக் கொண்ட புதிய கட்டடங்களும், அங்குணுகொலபெலஸ்ஸ விவசாயக் கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டடத்தின் இரண்டாம் கட்டமும் நிர்மாணித்து முடிக்கப்பட்டதுடன் பல்வெஹர விஞ்ஞான ஆய்கூடத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்தலும், வவுனியா உணவகம் உள்ளிட்ட கட்டடங்களைப் புதுப்பித்தலும், பரந்தன் விவசாயக் கல்லூரிக்கான அதிக கொள்ளளவு கொண்ட நீர் வடிப்பான் ஒன்றைப் பொருத்துதுதலும் மேற்கொள்ளப்பட்டன.




குண்டசாலை விவசாயக் கல்லூரியின் புதிய கட்டடம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையம்

- விவசாயக் கல்லூரிகளின் பண்ணை அபிவிருத்தியின் கீழ் 15 மில்லியன் ரூபா செலவில் விவசாயக் கல்லூரிகளின், சேவைப பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களின் பண்ணைகளுக்கான நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல், உரங்களைக் கொள்வனவு செய்தல், வேலிகள் நிர்மாணம் போன்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 4. ஏனைய அடைவுகள்

- கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிறுவனம் பாரியளவிலான பசுமைப் பண்ணைக்கான ஜனாதிபதியின் சுற்றாடல் விருதை வென்றமை.





- மகா இலுப்பள்ளமை வயற் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பண்ணைகளுக்காக விவசாயக் கொள்கை அபிவிருத்திச் சபையின் ஊடாகப் பெருந்தோட்டமல்லாத் துறைக்காக வழங்கிய தேசிய விருதின் கீழ் இரண்டாம் இடம் கிடைத்தமை.




- மகா இலுப்பள்ளமை வயற் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விருது

| இலக்கம் | செயற்திட்டத்தின் பெயர் | செலவுத் தலைப்பு | நிறுவனம் | ஒதுக்கீடு (ரூ.மி) | செலவு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டம் 2 | | | | |
| 1 | காய்கறிகள் மற்றும் பழங்கள், ஏனைய வயற் பயிர் விதைகளின் புதிய கலப்பினங்கள் மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை இன அபிவிருத்தி (ரூ.மி 80) | 285-02-02-8-2507 | FCRDI | 43 | 36.52 |
| | | | HORDI | 27.5 | 26.89 |
| | | | FRDI | 9.5 | 8.892 |
| 2 | 100 பழக் கிராமங்கள் அமைத்தல் | 285-02-02-9-2507 | FRDI | 15 | 15 |
| 3 | அயன மண்டல பழ வகைகளின் உயிர்ப் பல்வகைமைப் பூங்கா அமைத்தல் (ரூ.மி 25) | 285-02-02-10-2507 | FRDI ஹொரைண | 14.5 | 13.82 |
| | | | FRDI குண்டசாலை | 10 | 5.49 |
| | | | FRDI ஹோமாகைம | 0.5 | 0.78 |
| 4 | மண் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் | 285-02-02-7-2507 | NRMC | 5 | 5 |
| 5 | பிரதேச விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலைய நிர்மாணம் – திருநெல்வே | 285-02-02-0-2104 (03) | FCRDI | 6 | 6 |
| செயற்திட்டம் 3 | | | | | |
| 6 | விவசாயப் பாடசாலையை மேம்படுத்துதல் | 285-02-03-8-2507 | ETC | 55 | 48.41 |
| 7 | ஊடக நிகழ்ச்சி (ரூ.மி 30) | 285-02-03-4-2507 | FBS | 16 | 16.7 |
| | | | PU | 2.547 | 2.54 |
| | | | A-Park | 10 | 10 |
| | | | ICC | 0.953 | 0.24 |
| | | | NAICC | 0.5 | 0.55 |
| 8 | விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா | 285-02-03-7-2507 | ICC-கண்ணொருவை | 2.5 | 2.5 |
| | | | ICC – பட்டஅத்தை | 2.5 | .25 |
| 9 | விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த கருத்தரங்கு | 285-02-03-6-2401 | ICC | 4 | 4 |
| 10 | விவசாயப் பாடசாலைப் பண்ணை (ரூ.மி. 15) | 285-02-03-2-2105 | ETC | 13 | 12.95 |
| | | | ICC | 2 | 12.95 |
| செயற்திட்டம் 4 | | | | | |
| 11 | தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சி | 285-02-04-1-2507 | SPMDC | 498.0202 | 494.2 |
| 12 | வறட்சி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல் வழங்குதல் | 285-02-04-1-2507 | SPMDC | 54 | 54 |
| 13 | அவசர விதை நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் | 285-02-04-1-2507 | SPMDC | 180.2 | 179.6 |
| 14 | துரித விதைப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சி | 285-02-04-5-2507 | SPMDC | 120 | 119.16 |
| 15 | உள்நாட்டு உருளைக் கிழங்கு விதை உற்பத்தியை ஊக்குவித்தல் | 285-02-04-9-2507 | SPMDC | 60 | 59.34 |
| 16 | விதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நடுகைப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துதல் | 285-02-04-4-2507 | SCPPC | 15 | 15 |
| 17 | புதிய சுகாதார மற்றும் சுற்றாடல் மீது விவசாய இரசாயனங்களின் பாதகமான தாக்கங்களைக் குறைத்தல் | 285-02-04-8-2507 | SCPPC | 5 | 5.051 |
| | மொத்தம் | | | 1172.2202 | 1147.17 |
| 18 | தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் | 285-02-02-5-2507 | DOA | 50 | 46 |
| 19 | சிறியளவிலான செயற்திட்டங்கள | 285-02-02-4-2507 | DOA | 60 | 46.4 |
| 20 | அறுவடைக்குப் பிந்திய முகாமை | 285-02-02-12-2507 | FRU | 57.028 | 57.028 |
| | இறுதி மொத்தம் | | | 1339.2482 | 1296.60 |

# 7.2 கமநல அபிவிருத்தித் திணைக்களம்



வவுனியா மாமடுகுளம் புனரமைக்கப்பட முன்னர்



வவுனியா மாமடுகுளம் புனரமைக்கப்பட்ட பின்னர்

## தொலை நோக்கு

இலங்கையின் விவசாயிகள் சமூகத்தினதும் அனைத்து விவசாய நிலங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி.

## எமது பணி

இலங்கையின் விவசாயிகள் சமுதாயத்தின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் அனைத்து விவசாயக் காணிகளையும் போற்றத்தக்க பயனைப் பெறும் விதத்தில் இயன்ற வரையில் நிறுவனத்தின் சட்ட மற்றும் முகாமைத்துவ சேவை ஒழுங்குபடுத்தி காலத்திற்கு ஏற்றவாறு பேணி வருதல்.

## அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

1. வறுமையை ஒழித்தல் அனைத்து வகையான பட்டினிகளையும் ஒழித்தல்

2. உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல், போசணையை மேம்படுத்துதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.

3. அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவைப் பெறுவதற்கான உரிமை மற்றும் நிலைபேறான நீர் மற்றும் துப்புரவு முகாமை என்பவற்றைப் பாதுகாத்தல்.

8. நிலைபேறான பரிபூரணமான பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாத்தல் மற்றும் பயனுறுதி வாய்ந்த ஊழியத்தைப் பாதுகாத்தல் அனைவருக்கும் கௌரவமான தொழிலை பெறுவதற்கான உரிமையைப் பாதுகாத்தல்

12. நிலைபேறான நுகர்வையும் உற்பத்தி முறைகளையும் உறுதிப்படுத்துதல்

13. வானிலை முரண்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுவதற்கும் அதன் தாக்கங்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தலும்

15. பௌதிகச் சூழல் தொகுதிகளைப் பாதுகாக்கும் புனரமைப்புகள் நிலைபேறான பயன்பாட்டை நோக்கிய ஊக்குவிப்பு, வனங்களை நிலைபேறான முறையில் முகாமை செய்தல், பாலைவனமாதலுக்கு எதிராகப் போராடுதல் மற்றும் உயிர்ப் பல்வகைமைக்கு ஏற்படும் அழிவுகளைத் தடுத்து நிறுத்துதல்

## அறிமுகம்

இலங்கையின் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில், அதுவரையில் காணப்பட்ட உணவுத் திணைக்களத்தை இல்லாதாக்கி 1957 ஒக்டோபர் 1 ஆந் திகதி கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வயற் காணிச் சட்டத்தின் மூலம் வலுவூட்டப்பட்ட இத்திணைக்கள ஏற்கனவே 2000 ஆம் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கி

வருகின்றது.

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் குறிக்கோள் மற்றும் முக்கிய கடமைகள்

- அரசாங்க விவசாயக் கொள்கைகளுக்கு இணங்கிய முறையில் விவசாயக் காணிகளைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- விவசாயக் காணி உரிமையாளர்கள், விவசாயக் காணி உரிமையாளர விவசாயிகள் மற்றும் ஆட்சியுரிமைகள் கொண்டவர்கள்.'. விவசாயிகளின் விவசாய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- விவசாய அமைப்புக்களைப பதிவு செய்தல் மற்றும் பேணி வருவது தொடர்பான கட்டளைகளை உருவாக்குதலும் அந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதலும்.
- கமநல அபிவிருத்திச் சபைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் அதிகாரங்ககளைப் பயன்படுத்துவதற்காக வழிகாட்டுதலும் மேற்பார்வை செய்தலும்.
- நாடு முழுவதிலும் உள்ள அனைத்து கமநல அபிவிருத்திச் சபைககளினதும் அதிகாரப் பிரதேசங்களுடன் தொடர்புடையதாக காணி தொடர்பான தகவல்கள் அடங்கிய விவசாயக் காணிப் பெயர்ப் பட்டியல்களை தயாரித்து திருத்தங்களைப் பேணி வருதல்.
- விவசாயக் காணிகளுடன் தொடர்புடைய விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சிறிய நீர்ப்பாசனக் கைத்தொழில் மற்றும் நீர் மூலங்ககளின் பயனுறுதித்தன்மை, பாதுகாப்பு, முகாமை என்பவற்றுடன் குறித்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
- கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் விவசாயக் கொள்கைகளை மீறும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- அரசாங்க விவசாய மற்றும் சமகால அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏனைய நிறுவனங்ளுக்குத் தேவைப்படும் நிறுவன, சட்ட மற்றும் முகாமை சேவைகளை வழங்குதல்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி

| | மொத்த ஒதுக்கீடு (ரூ.மி) | 2017.12.31 செலவு (ரூ.மி.) |
|---|---|---|
| மீளெழும் செலவுகள் | 6752.17 | 6698.84 |
| மூலதனச் செலவு | 1799.00 | 868.97 |

விவசாய அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்

## விவசாய அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது

1500 சிறிய குளங்களில் வண்டல் அகற்றுதல்,

புனரமைப்பு 3000.00 1938.19

## கிராமியப பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களம் வழங்கும் பங்களிப்பு

விவசாயம் செய்ய முடியுமான அனைத்துக் காணிகளையும் பயனுறுதி வாய்ந்த முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தி கிராமிய விவசாயிகளின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களம் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தியது.

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.

### சிறிய நிர்ப்பானங்கள் கைவிடப்பட்ட வயர்களில் பயிர்செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

### செலவுத் தலைப்பு இலக்கம்- 281-2-2-12-2506

| | மாவட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி | செலவு ரூ.மி | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | பயிரிடப்படும் வயல் பரப்பு (ஏக்கர்) | | நிதி முன்னேற்றம்:- |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இது வரையில் பயிரிடப்பட்ட ஏக்கர் எண்ணிக்கை | புதிதாகப் பயிரிடப்படும் ஏக்கர் எண்ணிக்கை | |
| 1 | கொழும்பு | 50 | 27.48 | 21.12 | அடையாளம் காணப்படவில்லை. | | | 77மூ |
| 2 | கம்பஹா | 90 | 61.13 | 52.74 | 1303 | 52.5 | 950 | 86மூ |
| 3 | களுத்துறை | 79 | 55.49 | 34.60 | 10495 | 0 | 2025 | 62மூ |
| 4 | கண்டி | 70 | 53.05 | 45.99 | 1156 | 0 | 0 | 87மூ |
| 5 | மாத்தளை | 52 | 71.51 | 37.17 | 1840 | 1258 | 0 | 52மூ |
| 6 | நுவரெலியா | 70 | 72.79 | 70.11 | 2462 | 2791 | 0 | 96மூ |
| 7 | காலி | 151 | 107.86 | 32.76 | 1078 | 788 | 6 | 30மூ |
| 8 | மாத்தறை | 255 | 90.19 | 16.58 | 1564 | 131.5 | 0 | 18மூ |
| 9 | அம்பாந்தோட்டை | 26 | 15.31 | 5.73 | 101 | 95 | 0 | 37மூ |
| 10 | யாழ்ப்பாணம் | 2 | 9.20 | 7.98 | 0 | 0 | 0 | 87மூ |
| 11 | வவுனியா | 5 | 23.80 | 20.52 | 133 | 85 | 232 | 86மூ |
| 12 | முல்லைத்தீவு | - | 1.76 | - | அடையாளம் காணப்படவில்லை. | | | 0மூ |
| 13 | மன்னார் | - | 2.39 | 2.08 | அடையாளம் காணப்படவில்லை. | | | 87மூ |
| 14 | கிளிநொச்சி | 1 | 7.34 | 2.78 | அடையாளம் காணப்படவில்லை. | | | 38மூ |
| 15 | மட்டக்களப்பு | 1 | 16.11 | 16.58 | அடையாளம் காணப்படவில்லை. | | | 103மூ |

| | மாவட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி | செலவு ரூ.மி | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | பயிரிடப்படும் வயல் பரப்பு (ஏக்கர்) | | நிதி முன்னேற்றம்:- |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | அம்பாறை | 1 | 2.34 | 0.22 | அடையாளம் காணப்படவில்லை. | | | 9மூ |
| 17 | திருகோணமலை | | 3.12 | 7.59 | அடையாளம் காணப்படவில்லை. | | | 243மூ |
| 18 | குருநாகல் | 1 | 14.44 | 14.33 | அடையாளம் காணப்படவில்லை. | | | 99மூ |
| 19 | புத்தளம் | - | 12.32 | 12.57 | அடையாளம் காணப்படவில்லை. | | | 102மூ |
| 20 | அநுராதபுரம் | 109 | 124.68 | 175.20 | 780 | 0 | 0 | 141மூ |
| 21 | பொலனறுவை | 8 | 18.78 | 13.74 | 48 | 60 | 0 | 73மூ |
| 22 | பதுளை | 70 | 70.05 | 53.17 | 2374 | 1273 | 78 | 76மூ |
| 23 | மொனராகலை | 13 | 26.58 | 12.25 | 558 | 532.5 | 607.5 | 46மூ |
| 24 | இரத்தினபுரி | 34 | 24.64 | 21.16 | 402 | 523 | 0 | 86மூ |
| 25 | கேகாலை | 66 | 43.15 | 31.68 | 2205 | 1139.2 | 16 | 73மூ |
| 26 | நீர் முகாமைத்துவப் பிரிவு தலைமையகம் | 0 | 5.65 | - | | | | 0மூ |
| | பொத்துஹரை பயிற்சி நிலையம் | 0 | 8.00 | - | | | | 0மூ |
| | மொத்தம் | 1154 | 969.16 | 708.63 | 26499 | 8728.7 | 3914.5 | 73மூ |

**கெக்குணு கஹ கால்வாய் புனரமைப்பு**

கட்டானை கமநல சேவைப் பிரதேசம் - 94, மேற்கு களுவாரிப்புவ




**குருவாவலை பிரதான கால்வாய் புனரமைப்பு**

தொம்பே கமநல சேவைப் பிரதேசம் - 409, குருவாவலை



## உத்தேசித்துள்ள நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்: இலக்கம் 1 மற்றும் 2

இதன் கீழ்:

1. கைவிடப்பட்ட எனினும் மீண்டும் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்தல்.

2. கைவிடப்பட்டுள்ள எனினும் ஒருபோதும் பயிர்ச் செய்ய முடியாத வயல்களை வேறு உணவுப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்துதலும் அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும்

3. உடைந்து தூர்ந்து போயுள்ள அனைத்து வடிகாலமைப்புக்களையும் நிரோடைகளையும் மறுசீரமைத்தல்

4. வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் அழிவைக் குறைப்பதற்காக குளங்களை ஆழமாக்கி நீரோரடைகளை சுத்தம் செய்தல்.

4. விவசாய வீதிகளைப் புனரமைத்தலல் ஆகிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும்.

### மாமடு குளத்தைப் புனரமைத்தல் - வவுனியா

முன்னர் பின்னர்





நெற் பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்த முடியுமான எனினும் வேறு பயிர்களை பயிரிட முடியுமான கைவிடப்பட்ட வயல்களை வேறு பொருளாதார நோக்கங்களுக்குப் பயன்படுத்த முடியுமான வகையில் தயார்படுத்துதல் இதன் குறிக்கோளாகும். 2017 ஆம் ஆண்டில் 4 மாவட்டங்களில் இந்நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

### பயிர் பல்வகைப்படுத்தும் நிகழ்ச்சி

செலவுத் தலைப்பு இலக்கம்- 281-2-2-10-2507

| | மாவட்டம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி | செலவு ரூ.மி | பௌதிக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம்:- |
|---|---|---|---|---|---|---|
| 1 | புத்தளம் | 100 | 7.00 | | | 0ூ |
| 2 | குருநாகல் | 500 | 31.50 | 5.00 | | 16ூ |
| 3 | அநுராதபுரம் | 27 | 5.00 | | | 0ூ |
| 4 | மட்டக்களப்பு | 1 | 6.00 | 1.5 | | 25ூ |
| 5 | மொத்தம் | 628 | 49.50 | 6.5 | 1ூ | 13ூ |

❖ கமநல அபிவிருத்தி தலைமையகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் நிலையங்கள் என்பற்றில் திருத்த வேலைகளை மேற்கொள்ளுதலும் புதிய நிர்மாணங்களும்

சேவைகளை பெறுவதற்கு வரும் விவசாயளின் கருத்துக்களுக்கு இணங்க விவசாயம் தொழில்நுட்ப விவசாய முறைகளைப் பயன்படுத்தி மாதரிப் பயிர்ச்செய்கைகளைக் கொண்ட புதிய திட்டத்திற்கு ஏற்ப கமநல அபிவிருத்தி தலைமையகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் நிலையங்களில் திருத்த வேலைகளைச் செய்தலும் புதிதாக நிலையங்களை நிர்மாணித்தலும் இதன் குறிக்கோளாகும். 2017 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சிக்காக 174.9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டின் மூலம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள 109 செயற்திட்டங்களில் 81 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

| தொ. இல. | மாவட்டம் | அடையாளம் காணப்பட்ட செயற்-திட்டங்களின் எண்ணிக்கை | நிதி நிலைமை | | நிதி முன்னேற்றம்:- |
|---|---|---|---|---|---|
| | | | விடுவிக்கப்பட்ட தொகை ரூ.மி. | செலவு ரூபா.மில். | |
| 1 | கொழும்பு | 6 | 3.57 | 1.15 | 38மூ |
| 2 | கம்பஹா | 1 | 1.93 | 1.93 | 100மூ |
| 3 | களுத்துறை | 1 | 0.96 | 0.87 | 88மூ |
| 4 | கண்டி | 3 | 6.73 | 3.50 | 51மூ |
| 5 | மாத்தளை | 5 | 3.87 | 2.10 | 54மூ |
| 6 | நுவரெலியா | 3 | 2.38 | 2.22 | 80 |
| 7 | காலி | 3 | 8.70 | 8.78 | 100மூ |
| 8 | மாத்தறை | 4 | 8.93 | 1.91 | 15மூ |
| 9 | அம்பாந்தோட்டை | 3 | 6.66 | 3.84 | 50மூ |
| 10 | யாழ்ப்பாணம் | 6 | 3.09 | 3.08 | 94மூ |
| 11 | வவுனியா | 7 | 3.88 | 3.87 | 97மூ |
| 12 | முல்லைத்தீவு | 3 | 5.77 | 4.88 | 85மூ |
| 13 | மன்னார் | 7 | 7.71 | 6.54 | 80மூ |
| 14 | கிளிநொச்சி | 3 | 8.33 | 7.96 | 85மூ |
| 15 | மட்டக்களப்பு | 1 | 2.97 | 2.12 | 70மூ |
| 16 | அம்பாறை | 6 | 6.59 | 1.11 | 40மூ |
| 17 | திருகோணமலை | 6 | 2.27 | 2.23 | 95மூ |
| 18 | குருநாகல் | 4 | 29.88 | 25.02 | 86மூ |
| 19 | புத்தளம் | 5 | 13.01 | 4.43 | 35மூ |
| 20 | அநுராதபுரம் | 7 | 1.99 | 1.40 | 70மூ |
| 21 | பொலனறுவை | 4 | 4.61 | 4.42 | 90மூ |
| 22 | பதுளை | 3 | 3.74 | 3.73 | 97மூ |
| 23 | மொனராகலை | 5 | 6.86 | 5.99 | 85மூ |
| 24 | இரத்தினபுரி | 3 | 9.83 | 9.46 | 90மூ |
| 25 | கேகாலை | 3 | 8.37 | 8.07 | 88மூ |
| | நீர் முகாமைத்துவப் பிரிவு தலைமையகம் | 7 | 12.27 | 8.71 | 73மூ |
| | மொத்தம் | 109 | 174.9 | 140.34 | 81மூ |

❖ “சிதமு” மகளிர் அமைப்புக்களை அமைத்தலும வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சியின் கீழ் ஐந்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை உருவாக்குதலும்.

விவசாய அமைச்சின் கோட்பாடின் அடிப்படையில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பமான தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி 2016 -2018 என்ற எண்ணக்கருவின் கீழ் விவசாயத்தை வியாபாரமாகவன்றி வாழ்வாதாரமாகக் கருதி மூன்று வருடத் திட்டத்தின் விவசாயிகளுக்கு வலுவூட்டி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களை சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சுய கௌரவமுள்ள ஒரு பிரிவாக மாற்றுவது இந்நிகழ்ச்சியின் குறிக்கோளாகும்.

அதற்கிணங்கள் பெண்கள் குடும்பத்தின் தீர்க்கமான காரணியாகக் கருதி பெண்களின் முயற்சியாண்மை அபிவிருதி மற்றும் பெண்களின் பங்கேற்பு என்பவற்றின் ஊடாக குடும்பத்தின் போசாக்கு மற்றும் வளங்களை முகாமை செய்தல் ஆகிய அடிப்படைக் குறிக்கோள்களும் சமூக அமைப்பின் அடிப்படையான அம்சமான குடும்ப அலகை அடிப்படையாகக் கொண்டு அதன் உணவுப் பாதுகாப்பை அடைவதற்கும் நிலைபேறான வருமான மூலங்களை விருத்தி செய்து கொள்வதன் ஊடாக குடும்பத்தின் உணவு மற்றும் போ'ாக்கு, நிலயத்தின் பயனுறுதித்தன்மை என்பவற்றை அதிகரித்தல், உணவுக்கான செலவைக் குறைத்தல், நிலைபேறான விவசாயத்தைப் பிரபல்யப்படுத்துதல் மற்றும் ஒழுக்கப் பண்புகளை விருத்தி செய்தல் போன்ற ஆக்கக் கூறுகளின் உச்ச நிலையை அடைவதற்காக வீட்டுத் தோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு குடும்ப அலகிற்கு வலுவூட்டும் நாட்டின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டில் ஆரம்பித்து மூன்று வருடங்கள் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படும் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியின் கீழ் நாடு முழுவதிலும் ஒவ்வொரு கிராமத்திலும் “சிதமு” மகளிர் விவசாய அமைப்புக்களை உருவாக்கி அவர்களை உள்நாட்டு உணவு உற்பத்தியில ஈடுபடுத்தும் சவாலை சிறப்பாக வெற்றிகொள்ள முடிந்துள்ளது.

ஏற்கனவே நாடு பல்வேறு முழுவதிலும் 25000 “சிதமு” மகளிர் விவசா அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வருடத் திட்டத்தின் கீழ் பயனாளிப் பெண்களின் எண்ணிக்கை 5 இலட்சமாகக் காணப்பட்ட போதிலும் தற்போது 596,956 பேர் வரை அதிகரித்துள்ளது. ஏற்கனவே சுமார் 21,000 “சிதமு” மகளிர் அமைப்புக்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சியை வெற்றிகொள்வதற்காக “சிதமு” மகளிர் வலையமைப்பின் குறிக்கோள்களும் பணிகளும் பின்வருமாறு அமையும். குறிக்கோள்கள் மற்றும் பணிகள்

- விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பெண் விவசாயிகளினதும் அவர்களின் குடும்பத்தினதும் வருமான மட்டம், போசணை மற்று சுகாதாரக் கல்வி ஆன்மிகப் பின்னணி என்பவற்றை வளர்த்தல்.
- விவசாயச் செயற்பாடுகளுக்கான உள்ளீடுகள் மற்றும் கடன் என்பவற்றை உள்ளடக்குதல்.
- சிக்கனத்தையும் சேமிப்பையும் தூண்டுதல்.

- ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் மூலம் அங்கத்தவர்ளின் பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்வதற்குக் குழுக்களாக ஒன்றுசேர்தல்.
- வீட்டுத்தோட்டத்தை ஒரு பூங்காவாக அபிவிருத்தி செய்தலும் இளம் பெண்கள் விவசாய-த்திற்குப் பழக்கப்படுதலும்.
- வீட்டுத்தோட்டத்தை சேதனப் பயிர்ச்ச்செய்கைக்குப் பயன்படுத்துவது உணவு நுகர்வை மாற்றியமைத்து போ'ாகு அதிகரிப்பதற்கு உதவும்.
- அறிவு, மனப்பாங்கு, மற்றும் திறன் விருத்தியின் மூலம் மகளிர் தலைமைத்துவ முக-ாமைப் பண்புகள் விருத்தியடையும்.

வீட்டுத்தோட்டச் செய்கை, கைவிடப்பட்ட பயிர்ச்செய்கை, வீட்டு விவசாயத்தை அறிமுகம் செய்தலும் போ'ாக்கு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துதல். "சிதமு" மகளிர் விவசாய அமைப்புக்களுடன் இணைந்த வகையில் மாதாந்தம் ஒரு விசேட நிகழ்ச்சி நடாத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இந்நிகழ்ச்சியின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

அதன் மூலம் விவசாயம் அதிக வருமானம் தரும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழிலாக மாறி கவர்ச்சியானதாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## புத்தரிசி விழா

புராதன காலந்தொட்டு இலங்கை மக்களின் பிரதான வாழ்வாதாரமாக விவசாயம் விளங்குகின்றது. அவர்கள் அறுவடையின் மூலம் உணவுகளை போதிகளுக்கு பூஜை செய்வது சிறப்பான வழக்காறாகும். மண், நீர், சூரிய ஒளி, காற்று போன்ற இயற்கைச் சக்திகளை அடிப்படையாக்க கொண்டு மேற்கொள்ளப்படும் விவசாயத்தின் போது தமது அறுவடையைப பெற்றதன் அந்த இயற்கைக் சக்தி நன்றியாக இந்த நிகழ்ச்சி நடாத்ததப்படுகின்றது.

அதற்கிணங்க, இந்த சிறப்பான நிகழ்வை தேசிய விழாவாக அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன் வருடாந்தம் கொண்டாடும் பொறுப்பு கமநல அபிவிருத்தித் திணைக்களதிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2017 ஏப்ரல் 7 மற்றும் 8 ஆந் திகதிளல் 50 ஆம் வருடமாகவும் பௌத்த மக்களின் முன்னிலையில் ஜயஸ்ரீ மகாபோதியின் முன்னிலையில் சிறப்பாக நடாத்தப்பட்டது

பால் பொங்க வைப்பது முதல் புதிய அரிசியை பெரஹரவின் மூலம் மகாபோதியின் முன்னிலைக்கு கொண்டுவந்து பூஜை செய்யும் நிகழ்ச்சியும் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டது. நாட்டின் அனைத்து கம சேவை நிலையங்களிலும் சேக்கப்பட் அரிசி இத்தினத்தில் பூஜையாக்கப்படும். இம்முறை புத்தரிசி விழாவைச் சிறப்பாகக் கொண்டுவதற்கு விவசாய அமைச்சு உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், வட மத்திய மாகாண சபை மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பனவும் விவசாய அமைப்புக்களும் பாரியளவில் பங்களிப்புச் செய்ததுடன் இதன் போது "தேசிய புத்தரிசி விழா" என்ற பெயரில் நினைவுச் சஞ்சிகையொன்றும் வெளியிடப்பட்டது.

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் - சுருக்கம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**2017.12.31 இல் உள்ளவாறான நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்**

| தொ.இல. | செலவுத் தலைப்பு | நிகழ்ச்சி | நிதி முன்னேற்றம் | | | முன்னேற்றம்: | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. | செலவு ரூ.மி. | % | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒப்பந்தம் செய்யபட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நடைமுறையிலுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை | வேலைகள் பூர்த்தியடைந்துள்ளவை | % |
| 1 | 281-2-2-12-2506 | சிறியளவிலான நீர்ப்பாசனங்களை புனரமைத்தல் மற்றும் கைவிடப்பட்ட வயல்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 969.2 | 708.5 | 73 | 1154 | 909 | 66 | 716 | 62 |
| 2 | 281-2-2-10-2507 | பயிர்ப் பல்வகைமைப்படுத்தல் நிகழ்ச்சி | 49.5 | 6.5 | 13 | | | | | |
| 3 | 281-1-1-0-2001 | தலைமையக மற்றும் மாவட்ட அலுவலக திருத்த வேலைகள் | 27 | 18 | 72 | 20 | 17 | | 15 | 75 |
| 4 | 281-2-2-0-2001 | கமநல சேவை நிலையங்களையும் உரக் களஞ்சியங்களையும் புதுப்பித்தல் | 104.4 | 91.8 | 92 | 74 | 67 | 14 | 53 | 72 |
| 5 | 281-2-2-0-2104 | மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்களுக்கான புதிய நிர்மாணங்கள் | 43.5 | 28 | 71 | 15 | 14 | | 13 | 86 |
| 6 | 281-1-1-0-2401 | பயிற்சி நிகழ்ச்சிகள் | 2 | 1.9 | 95 | | | | | |
| 7 | 281-2-2-0-2102 | அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 20 | 18.3 | 92 | | | | | |
| 8 | 281-2-2-0-2002 | இயந்திரங்களைப் புனரமைத்தல் | 7 | 7 | 100 | | | | | |
| 9 | 118-2-3-40-2502 | 1500 சிறிய குளங்களில் வண்டல் அகற்றுதல், புனரமைத்தல், மறுசீரமைத்தல் | 3000 | 1938.1 | 65 | 2316 | 2040 | 877 | 1123 | 77 |
| 10 | 118-2-3-21-2509 | சார லங்கா கடன் திட்டம் (சேதன உர உற்பத்திக்காக) | 80 | 27.5 | 34 | | | | | |
| 11 | 118-2-3-20-2509 (8) | விவசாயக் கிணறு திருத்த வேலை நிகழ்ச்சி | 200 | 157.90 | 80 | 1166 | 1166 | 991 | 908 | 78 |

# 7.3 விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை



குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட அறிவூட்டல்.





## தொலை நோக்கு

உள்நாட்டு விவசாயத் துறைக் காப்புறுதியின் மூலம் தென் ஆசியாவில் முன்னோடிய விவசாயக காப்புறுதி நிறுவனமாக மாறுதல்.

## எமது பணி

விவசாயக் காப்புறுதி மற்றும் பாதுகாப்பு வழங்குவதற்கான கூட்டு முயற்சியாக உரிய நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்வதன் ஊடாக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உன்னத சேவையினை வழங்குதல்

## அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

1. வறுமையை ஒழித்தல்
2. நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்
8. நிலைபேறான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்
13. காலநிலை மாற்றங்களுக்கான தீர்வுகள்

## 2 நிலைபேறான விவசாயத் துறைக்கான அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

### 1. வறுமையை அதன் எல்லா வடிவத்திலும் எல்லா இடத்திலும் ஒழித்தல்

■ விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் திட்டம்

1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் 2014 மார்ச்சு 14 ஆந் திகதிய 1855/49 இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு 2014 சனவரி 1 ஆந் திகதியில் இருந்து புதிய செயற்றிட்டம் அமுலாக்கப்பட்டது. இதற்காக நிதியாக 2014 ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் மூலம் 1000 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் 2015 ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் 5000 மில்லியன் ரூபாவை அடுத்து வரும் 3 வருடங்களுக்குள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்யும் விவசாயிகள் மற்றும் மீனவச் சமுதாயத்தில் 60 வருடங்களைக் கடந்ததன் பின்னர் விவசாயிகளுக்கும் விவசாயக் குடும்பங்களுக்கும் பொருளாதார சக்தியை வழங்குவது பிரதான குறிக்கோளாகும்.

### தாக்குப்பிடிக்கக்கூடிய, உள்ளடக்கக்கூடிய மற்றும் நிலைபெறுதகு பொருளாதார விருத்தி, முழுமையானதும் பயனுறுதிமிக்கதுமான தொழிலும் அனைவருக்கும் கௌரவமான உயர்தொழிலும் கிடைத்தல்

■ விவசாயிகளுக்காக மூன்றாந்தரப்பு காப்புறுதியை அறிமுகஞ்செய்தல்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம் மூலமாக கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு கிடைத்துள்ள தத்துவங்களின் பிரகாரம் விவசாயிகளின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களை காப்புறுதி செய்வதற்கான பூரண உரிமை சபைக்கு வழங்கப்பட்டுள்ளதோடு தற்போது அமுலுலில் உள்ள சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக விவசாயிகளின் மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாந்தரப்பு காப்புறுதியை அறிமுகஞ்செய்தல் மற்றும் மற்றும் அமுலாக்குதலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மூன்றாந்தரப்பு காப்புறுதியை அறிமுகஞ் செய்வதற்கான முகவர் வலையமைப்பினை நிறுவுகையில் கிராமிய தொழிலின்மை விகிதத்தை குறைக்க எமது நிறுவனத்திற்கு இயலுமானதாகி உள்ளது.

### பசியால் வாடுவதை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பினையும் உயர்வான போசாக்கினையும் அடைதலும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதலும்.

■ அரசாங்கத்தின் உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விவசாயக் காப்புறுதித் திட்டம்

இச்சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவொன்றின் அடிப்படையில் அரசாங்கத்தினால் உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிர்க் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு 2014/2015 பெரும் போகம் முதல் இச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இயற்கை அனர்த்தங்களின் காரணமாக உள்நாட்டு விவசாயத் துறைக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள் கடந்த சில வருடங்களில் மென்மேலும் அதிகரித்து வந்ததுடன் அதன் உச்ச கட்டம் 2016/2017 பெரும் போகம் 2017 சிறு போகம் என்பவற்றின் போது நாடு முழுவதிலும் நிலவிய கடுமையான வறட்சியின் காரணமாக விவசாயிகளின் பயிர்கள் மிகப் பாரியளவில் அழிவுற்றன. இப்போகங்களில் சபையின் கீழ் பயிர்க் காப்புறுதி மிகக் குறைந்த ஏக்கர் பரப்புக்களுக்கே செய்யப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு விவசாயத் துறையை பாதுகாப்பதற்காகவும் விவசாயிகளுக்கான ஒரு சேவையாகவும் கருதி அரசாங்கத்தின அங்கீகாரத்துடன் அதன் முழுமையான அனுசரணையுடனும் தவணைப் பணம் அறவிடாது பயிர்கள் அழிவடைந்த அனைத்து விவசாயிகளுக்கும் நட்டஈடு வழங்குவதற்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தீர்மானித்து. 2016/17 பெரும் போகத்தில் மாத்திரம் சபையினால் 5,233 மில்லியன் ரூபா நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளது.

பயிர்கள் அழிந்ததனால் பொருளாதார க்'டங்களுக்கு ஆளாகியிருந்த விவசாயிகளுக்கு தமது பொருளாதாரத்தை சுயாதீனமாக வைத்திருப்பதற்கும் அந்த விவசாயிகள் மீண்டும் வழமை போல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கும் உதவியதன் மூலம் உள்நாட்டு விவசாய துறையின் நிலைபேறான வளர்ச்சிக்கு உதவியது.

■ குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட டுஜெனெநஒ டீயளநசூ அழிவு மதிப்பீட்டு முறை

தற்போது சர்வதேசரீதியாக வினைத்திறன்மிக்க சேவை நிலைமைகளைப் பேணிவருகின்ற பயிர்க்காப்புறுதித் துறையில் முன்னணி வகிப்பவருடன் இணைந்து அவர்களின் புதிய தொழில்நுட்பம் மற்றும் நுட்பமுறைகளை உள்ளீர்த்து உள்நாட்டு மற்றும் சர்வதேச அனர்த்த முகாமை முறையியல்களை பாவிக்கவும் அதனூடாக எதிர்வரும் வருடங்களில் சபையின் சேவைகளை உயர் மட்டத்திற்கு கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பயிர்க் காப்புறுதித் திட்டங்களில் நட்டஈடு செலுத்தும் செயற்பாடுகளின் போது தற்போது பயன்படுத்தப்படும் கண் மட்டத்திலான அழிவு மதிப்பீட்டு முறைக்குப் பதிலாக குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட (ஐனெநஒ டீயளந) அழிவு மதிப்பீட்டு முறையொன்றைப் பயன்படுத்துவதற்கு தற்போது திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் விவசாயிகளுக்கு நட்டஈடு செலுத்தும் போது மிகவும் நியாயமானதும் வினைத்திறன் மிக்கதுமான முறையொன்றைப் பின்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கம்பனியின் உதவியுடன் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்தும் செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதன் முன்னோடிச் செயற்திட்டத்தின் முதலாம் கட்டம் வவுனியா மாவடடத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. விவசாயத் துறையுடன் தொடர்புடயை ஏற் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற வெளி நிறுவனங்கள் பலவற்றின் ஒத்துழைப்புடன் 2017∴18 பெரும் பொகத்தில் வவுனியா மாவட்டத்தில் பரீட்சார்த்த மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த முன்னோடிச் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் அநுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 2018 சிறுபோகம் சிறுபோகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு இணங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

1. குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்

குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வானிலை நிலைமைகளினால் விவசாயத் துறைக்கு ஏற்படும் தாக்கங்களை விஞ்ஞானபூர்வமாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மதிப்பிட்டு துரிதமாக இழப்பீட்டை வழங்க முடியும் என்பதனால் தற்போதைய முறையைப் போன்று பல மாதங்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலுச்சேர்ப்பதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வாரத்தினுள் இழப்பீட்டை வழங்கும் முறையொன்று உருவாக்கப்படும். இது தவிர, தவிர்க்க முடியுமான விவசாய அபாயச் சாத்தியங்களை முகாமை செய்வதற்கான தகவல் தொழில்நுட்பங்களையும் விவசாயத்திற்கு வழங்குவதன் மூலம் ஏற்படக் கூடிய அபாயங்களை முகாமை செய்வதற்கு முன்கூட்டி அறிவித்தல் வழங்குவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படுகின்றது. இலங்கையில் விவசாய அபாயச் சாத்தியங்களை முகாமை செய்வதற்கான புதிய தொழில்நுட்ப முறையொன்றை அறிமுகப்படுத்துதல். இதன் பயனாக புதிய பயிர்களுக்கு காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், வானிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல், விவசாயிகளின் தரவுகளை உள்ளடக்கிய ஆஜஐளு மென்பொருளொன்றை உருவாக்குதல் மற்றும் விவசாய அபாயச் சாத்தியங்கள் தொடர்பில் எச்சரிக்கும் முறைமையொன்றை உருவாக்குதல்.

## நேரடிப் பயனாளிகள்

- இலங்கையில் விவசாயக் காப்புறுதி உள்ளடக்கத்தை அதிகரிக்க முடிகின்றமை,
- காப்புறுதி செய்த விவசாயிகளால் வினைத்திறன்மிக்க சேவையினைப் பெற முடியுமாதல்.

## பெறுபேறு∴ வெளியீடு

- புதிய பயிர்களுக்கான காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- வானிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துதல்.
- விவசாயிகளின் தரவுகள் அடங்கிய மென்பொருள் ஒன்றை உருவாக்குதல்.
- விவசாய இழப்புச்சாத்தியங்கள் தொடர்பில் எச்சரிக்கையூட்டும் முறைமையொன்றை உருவாக்குதல்.
- விவசாயத் துறை வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களின் அடிப்படையில் ஏற்படும் அபாயச் சாத்தியங்களினால் ஏற்படும் நட்டத்தை இந்த முறைமையின் மூலம் மதிப்பீடு செய்து இழப்பீட்டை வழங்கப்படுவதனால் வினைத்திறன் மிக்க முறையில் மக்கள் விவசாயத் துறையை நோக்கி வரும் நிலை ஏற்படுதல்

## செயற்திட்டத்தின் காரணமாக பிரசைகள் வலுவூட்டப்படும் (Empowerment) விதம்

தற்போது நடைமுறையில் கண் மட்டத்திலான சோதனை மூலமே விவசாய அழிவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. விவசாய அனர்த்தமொன்று நிகழ்ந்ததன் பின்னர் அழிவை மதிப்பீடு செய்வதற்கு அதிக காலம் எடுப்பது மட்டுமன்றி கண் மட்டத்திலான சோதனையின் போது விடயங்களின் அடிப்படையிலன்றி தனிப்பட்ட தீர்மானங்கள் உள்ளடங்குவதனால் அழிவு மதிப்பீடு தொடர்பில் சிக்கலான நிலைகள் தோன்றுகின்றன. குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வானிலை நிலைமைகளினால் விவசாயத் துறைக்கு ஏற்படும் தாக்கங்களை விஞ்ஞானபூர்வமாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மதிப்பிட்டு துரிதமாக இழப்பீட்டை வழங்க முடியும் என்பதனால் தற்போதைய முறையைப் போன்று பல மாதங்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலுச்சேர்ப்பதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வாரத்தினுள் இழப்பீட்டை வழங்கும் முறையொன்று உருவாக்கப்படும்.





## காப்புறுதி முகவர்களை ஆட்சேர்ப்புச் செய்து பயிற்சியளிப்பதற்கான செயலமர்வு

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம் மூலமாக கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு கிடைத்துள்ள தத்துவங்களின் பிரகாரம் விவசாயிகளின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களை காப்புறுதி செய்வதற்கான பூரண உரிமை சபைக்கு வழங்கப்பட்டுள்ளதோடு தற்போது அமுலுலில் உள்ள சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக விவசாயிகளின் மோட்டார் வாகனங்களுக்கான மூன்றாந்தரப்பு காப்புறுதியை அறிமுகஞ்செய்தல் மற்றும் மற்றும் அமுலாக்குதலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மூன்றாந்தரப்பு காப்புறுதியை அறிமுகஞ் செய்வதற்கான முகவர் வலையமைப்பினை நிறுவுகையில் கிராமிய தொழிலின்மை விகிதத்தை குறைக்க எமது நிறுவனத்திற்கு இயலுமானதாகி உள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களில் ஒன்றான உள்வாங்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையானது பயனுறுதி வாய்ந்ததுமான தொழிலொன்று, அனைவருக்கும் கௌரவமான தொழிலொன்றைப் பெறுதல் என்பவற்றுக்கு விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உள்ள உரிமையை உரிய முறையில் விளக்கி விவசாயச் சங்கங்களின் ஊாக நியமிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றின் முதுகெலும்பான சந்தைப்படுத்தல் முகவர் வலையமைப்பைப் பலப்படுத்தும் நோக்கில் தற்காலத்துக்குப் பொருத்தமான விவசாயக் காப்புறுதி மற்றும் சந்தைப்படுத்தல் உபாய முறைகள் தொடர்பில் அறிவூட்டுவதற்கும் இந்த அறிவூட்டல் நிகழ்ச்சித் தொடர் திட்டமிடப்பட்டுள்ளது.





## வானிலைத் தகவல்களை பரிமாற்றம் செய்தல்

குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதிச் செயன்முறையின அடிப்படைக் குறிக்கோள் இயற்கை அனர்த்தங்களினால் அடிக்கடி அழிவுக்குள்ளாகும் விவசாயத் துறையைத தன்னிறைவுப் பொருளாதாரம் வரை கட்டியெழுப்புவதும், விவசாயத்திலிருந்து விலகிச் செல்லும் தற்போதைய விவசாயிகளை மீண்டும் அதில் ஈடுபடச் செய்தல். இதற்காக அர்பபணிப்புடன் செயற்படும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள், மழைவீழ்ச்சித் தரவுகளைத் தரும் வளிமண்டலவியல் திணைக்களம், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை என்பன கூட்டாக இந்த நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதுடன் மேற்குறித்த திணைக்களங்களிடமிருந்து கிடைக்கும் தரவுகளையும் தகவல்களையும வலையமைப்பில் சேர்த்து அந்த நிறுவனங்களாலும் விவசாயிகளாலும் பெற முடியுமான முறையில் பராமரித்து வருதலும் இற்றைப்படுத்திய தகவல்களை அடிக்கடி பரிமாறிக் கொள்ளவதற்கு மாவட்டங்களினுள் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துவதும் இதன் அடிப்படைக் குறிக்கோள்களாகும்.

இவை தவிர குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டத்தில் நட்டஈட்டைத் தீர்மானிக்கும் செயற்பாடு மிகவும் துல்லியமாக மேற்கொள்ளப்படுவதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்தின் மழைவீழ்ச்சித் தரகவுகளைப் பெறும் வீச்சுக்களை விரிவுபடுத்துவதற்காக கமநல சேவைககள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது இதன் நோகக்கமாக உள்ளதுடன் அந்த வேலைத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக விவசாய, மகாவலி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களினதும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வேலைத் திட்டம் ஏற்கனவே வவுனியா மாவட்டத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது

குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வானிலை நிலைமைகளினால் விவசாயத் துறைக்கு ஏற்படும் தாக்கங்களை விஞ்ஞானபூர்வமாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் மதிப்பிட்டு துரிதமாக இழப்பீட்டை வழங்க முடியும் என்பதனால் தற்போதைய முறையைப் போன்று பல மாதங்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலுச்சேர்ப்பதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வாரத்தினுள் இழப்பீட்டை வழங்கும் முறையொன்று உருவாக்கப்படும். இது தவிர, தவிர்க்க முடியுமான விவசாய அபாயச் சாத்தியங்களை முகாமை செய்வதற்கான தகவல் தொழில்நுட்பங்களையும் விவசாயத்திற்கு வழங்குவதன் மூலம் ஏற்படக் கூடிய அபாயங்களை முகாமை செய்வதற்கு முன்கூட்டி அறிவித்தல் வழங்வதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படுகின்றது.



விவசாயிகளுக்கு தெளிவூட்டுவதற்காக கமநல சேவை மட்டத்தில் நாடளாவியல் ரீதியில் நடாத்தப்படும் செயலமர்வுகள்

பசியால் வாடுவதை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பினையும் உயர்வான போசாக்கினையும் அடைதலும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதலும் என்பதை முன்னிறுத்தி விவசாயக் காப்புறுதி மற்றும் குறிகாட்டிகளின் அடிப்படையிலான காப்புறுதித் திட்டத்தின் புதிய போக்குகள் தொடர்பில் விவசாயிகளுக்குத் தெளிவூட்டுவதற்கக கமநல சேவைகள் மட்டத்தில் நாடு முழுவதிலும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நேரடியாக விவசாயிகளுடன் தொடர்புபட்டு நடைமுறைப் பிரச்சினைகளை தலைமையகத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதும் இதன் மற்றொரு குறிக்கோளாகும்.

2017.˙.18 பெரும் போகத்தின் ஆரம்பத்தில் வவுனியா மாவட்டத்தில் 8 கமநல சேவை நிலையங்களை அண்டிய 400 விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இத்தகைய தெளிவூட்டல் செயலமர்வொன்று சிறப்பாக நடாத்தப்பட்டது.

குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டம் தொடர்பான விரிவான விளக்கத்தை வழங்குவதற்கு இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் போகங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள காப்புறுதித் திட்டம் தொடர்பில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிகளுக்கும் விவசாயகிகளுக்கும் கமநல சேவை மட்டத்தில் அறிவூட்டுவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.





## 4. நிதி முகாமை

- செலவு மதிப்பீடுகள்

| செலவுத் தலைப்பு | முன்னைய வருடம் | | | செலவுச் சதவீதம் | நடப்பு வருடம் | | | செலவுச் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு (ரூபா.மில்) | செலவு (ரூபா. மில்) | மீதி | | ஒதுக்கீடு (ரூபா.மில்) | செலவு (ரூபா. மில்) | மீதி | |
| தனியாள் வேதனாதிகள் | 240.00 | 240.00 0 | - | 100மூ | 240.00 | 240.00 | - | 100மூ |
| மூலதனம் | 4.00 | 4.00 | - | 100மூ | 4.00 | 4.00 | - | 100மூ |
| ஏனைய மீளெழும் | 0 | 0 | - | 0மூ | 0 | 0 | - | 0மூ |

- 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு இணங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

| பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சி | விசேட துறை | பிரதான தொழிற்பாட்டுக் குறிகாட்டி | நிதி முன்னேற்றம்:- | | பௌதிக முன்னேற்றம் | | இறுதி வெளியீடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2017 ஒதுக்கப்பட்ட நிதி (ரூபா.மில்) | 2017.12.31 இல் உள்ளவாறான செலவு (ரூபா.மில்) | பௌதிக இலக்குகள் | பௌதிக முன்னேற்றம் | |
| விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் திட்டம் | விவசாயிகள் ஓய்வூதியம் | விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள அளவுகள் மற்றும் விவசாயிகள் ஓய்வூதிய உரிமை பெற்றவர்கள் | 2460 | 2669 | | விவசாயிகளின் எண்ணிக்கை 148201 | |
| விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் திட்டம் | விவசாயிகள் ஓய்வூதியம் | விவசாயிகள் ஓய்வூதியச் சம்பள அளவுகள் மற்றும் விவசாயிகள் ஓய்வூதிய உரிமை பெற்றவர்கள் | - | 60 | | விவசாயிகளின் எண்ணிக்கை 4037 | |
| “கெதட்ட அருண” பயிர்க் காப்புறுதி | பயிர்க் காப்புறுதி | செலுத்திய உரிமைத் தொகை மற்றும் உள்ளடக்கிய நிலப்பரப்பு | 5233.3 | 5233.3 | | | |

# 7.4 ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்



மிஹிந்தலை கள மதிப்பீடு



மத்துகமை - பழக்கன்றுகளை பெற்றவர்கள்



மட்டக்களப்பு சிதமு விவசாயிகள் சங்கங்கள்

## தொலை நோக்கு

கமநல மற்றும் கிராமியத் துறையின் நிலைபேறான அபிவிரு-த்திக்காகப் புதிய அறிவை உருவாக்கி பகரிந்துகொள்ளும் முன்னோடியாகத் திகழ்தல்

## எமது பணி

ஆய்வு மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளின் ஊடாக

கமநல மற்றும் கிராமியத் துறையைப் பலப்படுத்துதல்

## அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான குறிக்கோள்கள்

01. அனைத்து இடங்களிலும் அனைத்து மட்டங்களிலும் காணப்படும் வறுமையை ஒழித்தல்.

02 பட்டினியை இல்லாதொழித்தல், உணவுப் பாதுகாப்பையும் அடைதல் போ'ாக்கு மட்டத்தைத மேம்படுத்துதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதல்

08. நிலைபேறான தன்மையை மேம்படுத்துதல் உள்ளிட்ட அனைவருக்கும் கௌரவமான பயனுறுதிய வாய்ந்த, நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி

## குறிக்கோள்கள்

1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டில் நியதிச் சட்ட நிறுவனமொன்றாக ஹெக்டர் கொப்பேகவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது.

## குறிக்கோள்கள்

### கமநல ஆராய்ச்சியில் பேணுதல், உதவியளித்தல், ஊக்கமளித்தல் அத்துடன் ஒத்துழைத்தல்

- செயற்பாடுகள ஆராய்ச்சியில் பேணுதல், உதவியளித்தல், ஊக்கமளித்தல் அத்துடன் திக்குவல்லை
- அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூராட்சிச் சபைகள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், மற்றும் வேறு நிறுவனங்கள் ஆகியவற்றினால் பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள ஆராய்ச்சியை ஒருங்கிணைத்தல்.
- கைத்தொழிலின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் நிறுவனரீதியான காரணிகள் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மேற்கொள்ளுதல்
- கைத்தொழில் நோக்கங்களுக்காக காணியின் பொருளாதார உபயோகம் தொடர்பில் ஆய்வுகளையும், ஆராய்ச்சியையும் மற்றும் கற்கைகளையும் பொறுப்பேற்றல்
- விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தியுடன் தொடர்புடைய சமூக பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- கமநல ஆராய்ச்சி தொடர்பாக பயிற்சி வசதிகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒன்றில் தனியாக, அல்லது இலங்கையில், அல்லது வெளிநாடுகளில் உள்ள வேறு நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல் அல்லது அமுல்செய்தல். அத்துடன் இவை தொடர்பில் டிப்ளோமாக்கள், பட்டங்கள், பரிசுகள், அதிவிசேட சித்திகள் ஆகியவற்றை வழங்குதல்.
- விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளுடன் தொடர்புடைய மாநாடுகள், செயலமர்வுகளை நடாத்துதலும் அவற்று அனுசரணை வழங்குதலும்.
- ஆசிய நாடுகளின் பிராந்தியத் தேவைகளுக்கு சேவையாற்றுவதற்காக அவற்றின் ஒத்துழைப்புடன் கமநலக் கட்டமைப்பின் பிரச்சனைகள் தொடர்பில் இத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ளுதலும், கமநலப் பிரச்சனைகள் மீது தகவலைச் சேகரிப்பதற்கும், பரப்புவதற்கும் நிலையமொன்றை வழங்குதலும்.
- இலுலங்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி ஆசிய நாடுகளின் விவசாயத் துறை அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுகளை நடாத்துதல்.

## வகிபாகம்

ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளை நடத்துவதன் மூலம் கமநல மற்றும் கிராமியத் துறையைப் பலப்படுத்துவதே எமது நிறுவனத்தின் பணியாகக் கருதப்படுகின்றது.

1972 ஆம் ஆணடின் 5 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனச் சட்டத்தின் 31 ஆம் பிரிவில் எமது நிறுவனத்தின் வகிபாகம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. அதற்கிணங்க, எமது நிறுவனத்தின் முக்கிய பணி ஆய்வுகளின் ஊடாக அறிவை உருவாக்கி பகிர்ந்து கொள்வதாகும். ஆய்வுகளின் மூலம் வழங்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான விவசாயத்தை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் விவசாயிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையில் தகவல்களின் ஊடாக ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் பணியிலும் எமது நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

2017 முன்னேற்றம்

செயற்பாடுகள்: சமகால விடயப் பரப்பினுள் உருவாக்கப்பட்டுள்ள 5 பிரிவுகளின் கீழ் ஆய்வுச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுகளின் முன்னேற்றம்

| ஆய்வுகள் | பௌதிக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம்:- | |
|---|---|---|---|
| | | நிதி (ரூபா. மில்.) | செலவு (ரூபா. மில்) |
| இலங்கையில் நெல் சந்தைப்படுத்தல் தொடர்பான அரசாங்க மற்றும் தனியார் துறையின் தலையீட்டின் தற்போதைய நிலை மற்றும் எதிர் காலம் தொடர்பான விவசாயிகளின் தொலைநோக்கு: | தரவு சேகரித்தல் மற்றும் கணினியில் உள்ளீடு செய்தல் பூர்த்தியடைந்துள்ளது | 0.91 | 0.95 |
| உணவுப் பாதுகாப்புக்காக பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய மரபுரீதியான விவசாய அறிவின் முக்கியத்துவம் தொடர்பான ஆய்வு. | தரவு சேகரித்தல் மற்றும் கணினியில் உள்ளீடு செய்தல் பூர்த்தியடைந்துள்ளது | 0.97 | 0.75 |
| இலங்கையின் தென்கிழக்கு உலர் வலயத்தில் நிலவும் நிலைபேறு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அதனைனத் தீர்பப்தற்கான வழிமுறைகள்: | முதலாம் நகல் வரைபு அறிக்கையை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிகப் பணிப்பாளரின் கருத்துக்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 3.2 | 2.89 |
| இலங்கையின் தென்கிழக்கு உலர் வலயத்தில் வயற் பயிர் உற்பத்ததியின் நிலைபேறான தன்மை (பிரச்சினைகள் மற்றும் போக்கு தொடர்பில் காணப்படும் சந்தர்ப்பங்கள். | முதலாம் நகல் அறிக்கை பூர்த்தியடைந்துள்ளது, பிரிவுத் தலைவர்களினதும் மேலதி பணிப்பாளரது கருத்துக்கள் வழங்குதல் பூர்த்தியடைந்துள்ளது. வெளிவாரியான மீளாய்வாளர்களின் கருத்துக்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 1.45 | 1.27 |
| இலங்கையின் வீட்டுத்தோட்டங்களில் பழச் செய்கையின் மீது தாக்கம் செலுத்துகின்ற காரணிக்ள தொடர்பான ஆய்வு: | தரவு சேகரித்தல் மற்றும் கணினியில் உள்ளீடு செய்தல் பூர்த்தியடைந்துள்ளது | 0.97 | 0.94 |
| மனிதச் செயற்பாடுகளின் காரணமாக கிராமியக் குளங்களில் மண் நிறைந்துள்ளமை மற்றும் அதன் மூலம் விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பான ஆய்வு: | தரவு சேகரித்தல் மற்றும் தரவுகளை கணனினியில் உள்ளீடு செய்தல் பூர்த்தியடைந்துள்ளது. தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை எழுத்தப்பட்டு வருகின்றது. | 0.63 | 0.48 |
| இலங்கையின் உலர் வலயப் பயிர் உற்பத்தித் தொகுதியின் மீது காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள்: | தரவு சேகரிப்பு நடைபெறுகின்றது. | 1.37 | 0.35 |
| இலங்கையின் உர மானிய நிதியுதவி நிகழ்ச்சி: சமூக பொருளாதார ஆய்வு | தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை எழுத்தப்பட்டு வருகின்றது. | 1.17 | 0.98 |

# பயிற்சி நிகழ்ச்சிகள்

6 பயிற்சி நிகழ்ச்சிகளின் கீழ் 80 பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டு 8,479 விவசாயத் தலைவர்ககளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது, அவர்களில் 40மூ பெண் விவசாயத் தலைவிகளாவர்.

பயிற்சி நிகழ்ச்சிகளின் முன்னேற்றம்:

| பயிற்சி நிகழ்ச்சிகள் | பௌதிக முன்னேற்றம் | ஒதுக்கப்பட்ட நிதி (ரூபா மில்லியன்) | செலவு (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| "ஆரோக்கியமான பரம்பரைக்காக விவசாயம்" தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | நுவரெலியா, மொனராகலை மாவட்டங்களில் 30 கமநல அபிவிருத்தி நிலையங்களில் 1399 விவசாயத் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல் | 1.5 | 1.22 |
| பெண் விவசாயிகளுக்கு வலுவூட்டும் ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சி. | மொனராகலை மாவட்டத்தில் 10 கமநல அபிவிருத்தி நிலையங்களில் 903 விவசாயத் தலைவிகளுக்கான பயிற்சி | 0.4 | 0.44 |
| 2016.்.18 தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் விவசாயத் தலைவிகளுக்கு வலுவூட்டுவதற்கான பயிற்றுவிப்பாளஎர்களுக்கான பயிற்சி | பொலனறுவை மாவட்டத்தில் 14 கமநல அபிவிருத்தி நிலையங்களில் 1337 விவசாயத் தலைவிகளுக்கான பயிற்சி | 0.85 | 0.6 |
| சமூக வலுவூட்டல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி. | அநுராதபுரம் மாவட்டத்தில் 10 கமநல அபிவிருத்தி நிலையங்களில் 1014 விவசாயத் தலைவிகளுக்கான பயிற்சி | 0.9 | 0.52 |
| விவசாய வியாபாரம் மற்றும் சந்தைப்படுத்தல் விரிவாக்கல் பயன்பாடு தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு | யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய வியாபார முகாமைப் பிரிவின் 88 மாணவர்களுக்கான பயிற்சி | 0.3 | 0.25 |
| விவசாய அமைப்புக்களைப் பலப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சி | மாத்தளை மாவட்டத்தின் 15 கமநல அபிவிருத்தி நிலையங்களின் அனைத்து மகளிர் விவசாய அமைப்புக்களினதும் தலைவிகளுக்கும் 1531 தொழில்முயற்சியாளர்களுக்கும் பயிற்சியளித்தல் | 0.6 | 0.59 |
| மொத்தம் | | 4.5 | 3.62 |

# 7.5 இலங்கை விவசாய ஆய்வுக் கொள்கைச் சபை



விவசாய ஆராய்ச்சி நிபுணத்துவதற்கான விருது வழங்கல் 2017



இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபையின் பிரதிநிதிகள் குழு சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மேற்கொண்ட சுற்றுலா



NARS நிறுவனங்களில் வெளிவாரியான புலனாய்வு - அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் - மகாஇலுப்பலம

## தொலை நோக்கு

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திற்கு உத்தரவாதமளிப்பதற்காக விசேடமானதும் நிலைபேறா-னதுமான ஆய்வு, அபிவிருத்தி, புத்தாக்கத் தொகுதி

## எமது பணி

கொள்கை வகுப்பு, வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்ளல் முதலிய அம்சங்களினூடாக விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்கள் என்பவற்றைத் தேசிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கி ஆற்றுப்படுத்துதல்.

## அடைவதற் எதிர்பார்க்கும் நிலைபேறான இலக்குகள்

02 பட்டினியை அனைத்து வகையிலும் இல்லாதொழித்தல், உணவுப் பாதுகாப்பையும் போ'ாக்கையும் மேம்படுத்துதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்

13 காலநிலை மாற்றங்கள் மறற்ம் அதன் தாக்கங்களுக்கு எதிராகப் போராடுவதற்கான அவசர நடவடிக்கைகள் எடுத்தல்

## நிறுவனம் தாபிக்கப்பட்டதன் குறிக்கோள்கள்:

1. விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க உன்னத நிலையை அடைதல்

2. தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடையும் பொருட்டு விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தா-க்கங்களை ஒருதிசைப்படுத்தல்

3. தேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் தொகுதியின் (விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப) ஆற்றலை விருத்தி செய்தல்

4. விவசாய அபிவிருத்திக்கு உதவுவதற்காக உயர் தரத்திலான கேள்வியின் அடிப்படையில் நிகழும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்

5. உலகளாவிய தரத்திலான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தை அடைவதற்காக சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலான ஒத்துழைப்பை ஊக்குவித்தல்

6. தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க நிகழ்ச்சிகளினதும் நிறுவனங்களினதும் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தலும் மதிப்பீடு செய்தலும்

7. தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க நிகழ்ச்சிகளைப் பரவலாக்குதலும் விழி-ப்புணர்வை ஏற்படுத்துவதை ஊக்குவித்தலும்

8. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சியை அடைவதற்காக இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொ-ள்கைச் சபையின் நிறுவன ஆற்றல்களைப் பலப்படுத்துதல்.

## செயற்பாடுகள்:-

1. கொள்கை வகுப்பு

2. ஆய்வு முகாமை

3. நிதி சேகரித்தல்

4. மனித வள அபிவிருத்தி

## 2017 ஆம் ஆண்டின் பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம்

ஒதுக்கிய தொகை ரூபா 12.8 செலவிட்ட தொகை 11.13

| செயற்பாடு | அனுமதியளிக்க-ப்பட்ட தொகை (ரூபா.மில்) | செலவிட்ட தொகை (ரூபா.மில்) | நிதி முன்னேற்றம் (மூ) |
|---|---|---|---|
| கொள்கை வகுப்பு | 1.67 | 0.99 | 60மூ |
| ஆய்வு முகாமை | 1.72 | 1.55 | 90மூ |
| நிதி சேகரித்தல் | 2.9 | 2.35 | 8மூ |
| மனித வள அபிவிருத்தி | 6.50 | 6.22 | 95மூ |

## செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம்

### 1. கொள்கை வகுப்பு

தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கை 2017 ஆம் ஆண்டில் தயாரித்து முடிக்கப்பட்டதுடன் அது 2018-2027 வரையில் செல்லுபடியாகும். அது தவிர, 12 துறைகளின் கீழ் தேசிய ஆய்வு முன்னுரிமைகள் தயாரிக்கப்பட்டன.

வானிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடைவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சிகளை அடையாளம் காணப்பதற்காகச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் அதன் பயனாக வானிலை மாற்றங்களுக்கு இயைபாக்கம் அடையும் ஆராய்ச்சி வழித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

NARP செயற்திட்டத்தின் கீழ் 78 ஆய்வுச் செயற்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டுக்காக 18 புதிய செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

NARP செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 78 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன.

### 2. ஆய்வு முகாமை

INFORM தரவுத் தொகுத ியேுசுளு 28 நிறுவனங்களுக்காகப் பூர்த்தி செய்யப்பட்டது.

NARS நிறுவனத்தின் வெளிவாரியான புலனாய்வு நிகழ்ச்சியின் கீழ் அநுராதபுரம் அறுவடைக்குப் பிந்திய நிறுவனத்திலும் (IPHT) மற்றும் ஹொரண பழச் செய்கை ஆராய்ச்சி, அபிவருத்தி நிறுவனத்திலும் (FRDI) வெளிவாரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இறுதி அறிக்கை குறித்த நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அமைச்சிற்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தேசிய விவசாய ஆராய்ச்சி உன்னதத் தன்மையை மேம்படுத்துவதற்காக தேசிய விவசாய ஆராய்ச்சி விருது வழங்கும் விழா 2017 ஆம் ஆண்டில நடாத்தப்பட்டதுடன் அது பெருந்தோட்ட விவசாயம், பெருந்தோட்டமல்லா விவசாயம், பண்ணை விலங்குகள் மற்றும் மீன்பிடி ஆகிய 3 துறைகளின் கீழ் 28 விண்ணப்பங்களில் 7 வெற்றியாளர்களுக்கும் ஒரு ஊக்குவிப்பு வெற்றியாளருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

NARS நிறுவனங்களின் விஞ்ஞானிகளின் அறிவை மேம்படுத்துவதற்கான செயற்திட்டப் பிரேரணைகள் எழுதுதல் தொடர்பான செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

### 3. நிதி சேகரித்தல்

நிறுவனங்களுக்கிடையிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு 2 ஆராய்ச்சிப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

### 4. மனித வள அபிவிருத்தி

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைச் சபை மற்றும் வங்காளதேச விவசாய ஆராய்ச்சிச் சபை என்பவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணரவ் ஒப்பந்தத்திற்கு இணங்க செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக வங்காளதேச விவசாய ஒப்பந்தத்திற்கு இணங்க செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக வங்காளதேச விவசாய ஆராய்ச்சிச் சபையின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்தனர்.

NARS இன் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி ஆற்றலை மேம்படுத்துவதற்காக 4 விஞ்ஞானிகளுக்கு ICAR - CARP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்தியாவில் கலாநிதிப் பட்டப் படிப்புக்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

# 7.6 அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்





இலங்கையின் விவசாய உற்பத்திக-ளின் வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலி முகாமை

## தொலை நோக்கு

தேசிய உணவுப் பாதுகாப்புக்கான நிலைபேறான அறுவடைக்குப் பின்னரான அபிவிருத்தியின் மிகச் சிறந்த மத்திய நிலையமாகத் திகழ்தல்

## எமது பணி

வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிவாய்ந்ததுமான அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத் தலையீட்டின் மூலம் தேசிய உணவுப பாதுகாப்பின் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக போட்டி விலையொன்றின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு உயர் தரத்திலான பாதுகாப்பான உணவு உற்பத்தியை வழங்குதலும் பெறுமதிச் சங்கிலிகளைப் பலப்படுத்துதலும்.

## அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

2. அனைவருக்கும் உணவுகளை எளிதிற் கிடைக்கச் செய்தலும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதலும்.

12. நிலைபேறான நுகர்வையும் உற்பத்தி முறைகளையும் உறுதிப்படுத்துதல்.





கொய்யா வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலி முகாமை

## அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் முலம் 2000 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.

## குறிக்கோள்கள்

■ இலங்கையின் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆராய்ச்சிகளை அடையாளம் கண்டு முன்னுரிமைகளை ஏற்படுத்தி அவற்றை ஆரம்பித்தல். அதன் கீழ், நெல், அரிசி, ஏனைய தானிய வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள், களப் பயிர்கள், வாசனைத் திரவியப் பயிர்கள் மற்றும் வெட்டப்பட்ட பூக்களில் அறுவடை பறித்தல், பயன்படுத்துதல் மற்றும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் நீண்ட காலம் பாதுகாத்து வைத்தல், ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலை தயார்படுத்தல் முறை, இடைப் பயன்களின் பயன்பாடு, தர உத்தரவாதம் போன்றவற்றுக்கான தொழில்நுட்பங்கை அடையாளம் காணுதல் மற்றும் விளம்பரம் செய்தல்

■ விவசாயப் பயிர்களின் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை தயார்படுத்தல்களுக்கான செலவுகளை குறைப்பதற்காக அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப முறைகளை இயந்திரமயப்படுத்தல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப முறைகளின் ஊடாக விவசாயப் பயிர்களின் போ'ாக்கு நிலையை மேம்படுத்துதலும் அதன் மூலம் மக்களின் போ'ாக்கு மட்டத்தைக் கட்டியெழுப்புதலும்.

■ கிராமிய விவசாயப் பண்ணைத் துறையின் தொழில் வாய்ப்புகளையும் மற்றும் வருமானத்தையும் அதிகரிக்கும் பொருட்டு கிராமிய மட்டத்தில் பயனுள்ள விவசாய மையக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து பரிவர்த்தனை அடைய செய்வதனூடாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்தல்.

■ உற்பத்தி விற்பனையின் தரம், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் தொடர்பான புதிய நுட்ப முறைகளின் பயன்பாடு மற்றும் பொருள் விற்பனை வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத் துறையில் மேம்படுத்தப்பட்ட நுட்ப முறைகள் தொடர்பான பயனுறுதிவாய்ந்த தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் அவற்றை விவசாயிகளுக்கும் விவசாய அமைப்புக்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் உரிய இலக்குக் குழுக்களுக்கும் மத்தியில் பிரபல்யப்படுத்துதல்.

## வகிபாகம்

- ■ ஆய்வு மற்றும் அபிவிருத்தி
- ■ பயிற்சி மற்றும் விரிவாக்கம்
- ■ ஆய்வுகூடச் சேவைகள் மற்றும் பொறியியல் சேவைகள்
- ■ ஆலோசனைச் சேவைகள்

விவசாயப் பயிர்களின் சரியான அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப முறைகள் தொடர்பில் வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளிலுள்ள தரப்பினருக்கு அறிவூட்டுதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களின் ஊடாக புதி மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களையும் கருவிகளையும் அறிமுகப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் அறுவடைக்குப் பின்னரான அழிவைக் குறைத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல்.

## பொதுத் திறைசேரியின் நேரடி நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள்

| | செயற்திட்டம்∴ நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கப்பட்ட நிதித் தொகை ரூபா.மில் | பௌதிக முன்னேற்றம் 2017.12.31 இல் உள்ளவாறு | நிதி முன்னேற்றம்:- (பொறுப்புக்கள் மற்றும் வரவுகள் அடங்கலாக) | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி முன்னேற்றம்:- | மூ |
| 1 | எலுமிச்சை பயிரின் அறுவடைக்குப் பின்னரான ஆயுட் காலத்தை அதிகரிப்பதற்காக வெக்ஸ் சிகிச்சை மற்றும் பல்வேறுபட்ட களஞ்சியப்படுத்தல் முறைகளின் தாக்கங்களை ஆய்வு செய்தல். | 0.065 | வெக்ஸ் சிகிச்சை மூலம் எலுமிச்சைப் பயிரின் ஆயுட்காலமும் தரமும் மேம்படும்.<br><br>ஹுநசழ நுநெசபல ஊழழடடைெ ஊாயஅடிநச இன் எலுமிச்சைப் பயிரின் ஆயுட் காலம் 30 நாட்களும் குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களில் 40 நாட்களும் சாதாரண நிலைமையில் 15 நாட்களும் தரம் பாதுகாக்கப்படும் விதத்தில் களஞ்சியப்படுத்த முடியும். | 0.05744 | 88.37 |
| 2 | பொருளாதாரப் பெறுமதியைக் கண்ட உள்நாட்டுக் காய்கறிப் பயிரிகளை குறைந்த குளிர் நிலையில் உரிய களஞ்சியங்களின் தரத்தைப் பகுப்பாய்வு செய்தல். | 0.185 | 7 வாரங்களில் கறிக் மிளகாய் 3 வாரகாலத்திற்கு அதன் தரம் பாதுகாக்கப்படும் விதத்தில் களஞ்சியப்படுத்த முடியும். குளர் களஞ்சியத்திலிருந்தி அகற்றிய பின்ன 03 நாட்கள் வைத்திருக்க முடியும். பாகற்காய் மற்றும் தக்காளி உற்பத்திகளின் களஞ்சிய நிலை அவதானிக்கப்பட்டு வருகின்றது. | 0.13038 | 70.48 |
| 3 | விவசாயப் பயிர்களைச் சுத்தம் செய்தல், கல், மணல் நீக்குதல் என்பவற்றுக்கான தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல். | 0.45 | சிறியளவில் உற்பத்திசெய்யப்பட் கம்பார்ட்மென்ட் செபரேட்டர், குரக்கனில் கல், மணல் அகற்றுவதற்குப் பொருத்தமானதாகும். எனினும் இந்த இயந்திரத்தை உருவாக்குவதற்குத் தேவையான துணை இயந்திரங்கள் காணப்படாமையினால் இயந்திரத்தின் உற்பத்தி ஓரளவு பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. | 0.2 | 44.44 |
| 4 | அவசர நிலைமையின் போது ஈரமான நெல் உலர்தலை ஆய்வு செய்தல். | 0.285 | உலர்த்தித் தொகுதியைத் தயாரித்தலும் ஆய்வைப பரீட்சித்துப் பார்த்தலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தரவு பகுப்பாய்வும்ம் அறிக்கை எழுதுதலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 0. 271 | 94.73 |
| 5 | ஓசோன் வாயுவைப் பயன்படுத்தி வாசனைத் திரவியங்களின் தரத்தை மேம்படுத்துதல். | 0.75 | மிளகு மற்றும் கறுவாவின் நுண்ணங்கிகளின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அடர்த்தி அடையாளம் காணப்பட்டது. | 0.435 | - |

| | செயற்திட்டம்∴ நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்க-ப்பட்ட நிதித் தொகை ரூபா.மில் | பௌதிக முன்னேற்றம் 2017.12.31 இல் உள்ளவாறு | நிதி முன்னேற்றம்:- (பொறுப்புக்கள் மற்றும் வரவுகள் அடங்கலாக) | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 6 | குறைந்த வெப்பநிலையின் கீழ் மிளகாய்த் தூள் தயாரித்தல் | 0.12 | ஆய்வு பூர்த்திசெய்யப்பட்டு தொழில்நுட்பக் கோட்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான காப்புரிமை பெறப்படவுள்ளது. | 0. 103 | 85.83 |
| 7 | இலங்கையின் சில மாவட்டங்களில் வளரும் தெரிவுசெய்யப்பட்ட காய்கறி வகைகள் சிலவற்றில் அடங்கியுள்ள பாரமான உலோகங்களைப் பகுப்பாய்வு செய்தல் | 0.38524 | தெரிவுசெய்யப்பட்ட காய்கறி வகைகள் சிலவற்றிலும் அப்பிரதேசங்களின் விவசாய நிலங்களின் மண்ணிலும் நீரிலும் அடங்கியுள்ள பாரமான உலோகங்களின் (ஆசனிக், கெட்மியம், ஈயம், நாகம் மற்றும் செப்பு) அளவு மதிப்பீடு செய்யப்பட்டது. | 0.361 | 93.71 |
| 8 | அரிசிக் கைத்தொழிலில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். | 0.51 | இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது | 0.05 | 9.8 |
| 9 | பண்ணைகளின் நிலைமைகளின் கீழ் களஞ்சியப்படுத்தும் போது நெல்லின் நிறை குறைவடைதல் மற்றும் தரம் குன்றுதல் என்பவற்றைத் தீர்மானித்தல் | 0.039 | களஞ்சியத்தில் நிகழும் அறுவடைக்குப் பின்னரான அழிவு 6% ஆகும், பிரதான காரணம் பூச்சிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டது | 0.034 | 87.18 |

மேலே குறிப்பிட்டவாறு 2017 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து ஆராய்ச்சிச் செயற்திட்டங்களும்

- விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய அழிவுகளைக் குறைத்தல்
- உணவுகளுக்குப பெறுமதி சேரத்தல்
- மற்றும் சமுதாயங்களின் போ'க்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய 3 பிரதான கருப்பொருட்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதற்கிணங்க, இந்த அனைத்துச் செயற்திட்டங்களும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2 ஐ பூர்த்தி செய்பவையாக உள்ளதுடன் அறுவடைக்குப் பின்னரான அழிவைக் குறைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆய்வுச் செயற்திட்டங்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2.04 உடனும், தயாரிப்பு மற்றும் பெறுமதிசேர்ப்பை இலக்காகக் கொண்ட செயற்திட்டங்கள் இலக்கு 12.4 உடனும் தெளிவாகத் தொடர்பு படுகின்றனர். அவற்றின் பயனாக கிராமிய மக்களின் நலனோம்பல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தப்படுவதுனட அதன் மூலம் மறைமுகமாக நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 1 அதாவது வறுமைப்பு நிகழ்கின்றது.



(a)



(b)

வெக்ஸ் சிகிச்சை மூலம் எலுமிச்சைப் பயிரின் ஆயுட்காலமும் தரமும் மேம்பட்டுள்ள விதம்.

ய. சிகிச்சைக்கு உட்படுத்தாது சாதாரண நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட எலுமிச்சை

டி. வெக்ஸ் சிகிச்சைக்கு உட்படுத்தி சாதாரண நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட எலுமிச்சை

## குறைந்த வெப்பநிலையின் கீழ் மிளகாய்த் தூள் தயாரித்தல்





அதிக வெப்பநிலையின் கீழ் வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்காக கருவிகளைப் பயன்படுத்தி மிளகாய்த் தூள் தயாரித்தல் தயாரித்தல் மிளகாய்த் தூளின் தரத்தை ஆய்வுகூடத்தில் பரிசோதித்தல்.

அவசர நிலைமையின் போது ஈரமான நெல் உலர்தலை ஆய்வு செய்தல்.



ஈரமான நெல்லை உலர்த்துவதற்காகத் உருவாக்கப்பட்ட வெப்பப் பம்பியின் உதவியுடனான உலர்த்தல் தொகுத

# 7.7 தேசிய உணவு மேம்பாட்டுச் சபை







புத்தளை சேதன உர உற்பத்தி

## தொலை நோக்கு

விவசாயிகளினதும் வசதி குறைந்த மக்களினதும் கௌரவத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பொருளாதார சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையும் ஏற்படுத்துதல்

## எமது பணி

பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் சார்ந்திருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் அபிவிருத்தி பொருட்டும் பங்குகொள்ளும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

## அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான குறிக்கோள்கள்

2. பசியால் வாடுவதை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பினையும் உயர்வான போசாக்கினையும் அடைதலும் நிலைபேறான விவசாயத்தை மேம்படுத்துதலும்.

12. நிலைபேறான நுகர்வு முறையொன்று காணப்படுவதை உறுதிசெய்தல்

அறிமுகம்

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையானது 1973 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையாக பாராளுமன்ற சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். 2009.05.15ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. 1973 ஆம் ஆண்டில் இந்தச் சபையை அமைப்பதற்கு ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ( குழழன யனெ யுபசஉைரடவரசந ழுசபயநளையவழைெ - குயுழு ) உதவியும் கிடைக்கப்பெற்றது. இது கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள ஒரு சபையாகும். இச்சபையானது, வெளிநாட்டு நன்கொடையுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு வசதியளித்து ஒருங்கிணைக்கும் அமைப்பாக ஆரம்பத்தில் செயலாற்றியது.

## நிறுவனம் தாபிக்கப்பட்டதன் குறிக்கோள்கள்

- பிரதானமாக பொருளாதார அநீதிகளுக்கு உட்பட்ட மக்களுக்குச் சேவை செய்தல்.
- அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க சமூக, பொருளாதார அபிவிருத்தி பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்.
- விவசாய,கைத்தொழில் அபிவிருத்தியின் பால் முன்வைக்கப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.
- விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மையை ஊக்குவித்தல்.
- சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சமூகங்களுடன் ஒத்துழைத்தல்

## செயற்பாடு

- அபிவிருத்தி மூலங்களை கூட்டுக் குறிக்கோள் ஒன்றை நோக்கி வழிப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளுதல்.
- கிராம மக்களுக்கு சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு கிராமிய மக்களுக்கு அதிகாரம் வழங்குதல்.
- சுயமாக ஊக்குவிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக பாரம்பரிய கிராம மக்களிடம் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் பெற முடியுமான பெறுமானங்களை நோக்கி மாற்றியமைத்தல்.
- உள்நாட்டு உணவுப் பயன்பாட்டையும் உற்பத்தியையும் ஊக்குவித்தல்.
- அறுவடைக்குப் பின்னரான அழிவுகளைக் குறைக்கும் தொழில்நுட்பத்தை கீழ் மட்டம் வரை எடுத்துச் செல்லல்.

## நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் பௌதிக முன்னேற்றம்

நிதி முன்னேற்றம் 2017.12.31 இல் உள்ளவாறு

| நிதி வழங்கும் நிறுவனங்கள் | செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. மில் | தற்போதைய செலவு ரூபா. மில். |
|---|---|---|---|
| விவசாயிகள் நம்பிக்கை நிதியம் | சோயா - திரிபோஷ உற்பத்தி | 5 | இக்கடன் தொக செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது |
| விவசாய அமைச்சு | சோயாவை அடிப்படையாக் கொண்ட உற்பத்திகளைத் தயாரிக்கும் செயற்திட்டம் | 1.8 | 0.67 செலவு செய்யப்பட்டது. மீதித் தொகையா 1,208,288.50 ரூபா விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டது. |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | வீதி உணவு (வண்டி) செயற்திட்டம் | | பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஊடாக நிதி வழங்கப்படுவதுடன் எமது நிறுவனம் தொழில்நுட்பப் பங்களிப்பை மாத்திரம் வழங்குகின்றது |
| உலக உணவுத் தாபனம் | அரிசிக்கு வலுவூட்டும் செயற்திட்டம் | 0.479 | 1.02 செலவு செய்யப்பட்டது. |
| உயிரியல் பல்வகைமை உணவு மற்றும் போசணை அமைப்பு | சுவுளு - குறைவாகப் பயன்படுத்தப்படும் பழங்கள் செயற்திட்டம் | 0.29 | 0.235 செலவு செய்யப்பட்டது. |
| | ஒதுக்கீடு (ரூ.மி.) | | செலவு ரூபா.மில். 2017.12.31 |
| ஏனைய மீளெழும் செலவுகள் | 40 | | 40 |
| மூலதனச் செலவு | 2.8 | | 2.880 |

இந்த வருடத்தில் ஆரம்ம்பிக்கப்பட்ட விசேட செயற்திட்டங்கள்

### 1. குளங்களை மீளத் தோண்டி புனரமைத்தல்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணப்படும் குளங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளதனால் நீரின் அளவு குறைவடைந்துள்ளதனால் இச்செயற்திட்டத்தின் ஊடாக அக்குளங்களை மீண்டும் தோண்டி புனரமைத்து விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

✓ குறிக்கோள்

உலர் வலயத்தில் வாழ்கின்ற கிராமிய மக்களின் பிரதான வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகமான குளங்கள் மண்ணால் நிரம்பிக் காணப்படுகின்றன. மேலும் குளங்களின் அணைகள், வான்கதவுகள், ஓடைகள் போன்ற பிரதான நீர்ப்பாசனத் தொகுதிகள் அழிவடைந்து தூர்ந்து போயுள்ளன.

அதனால், பயனாளிகளான விவசாயிகளுக்கு இரண்டு போகங்களிலும் பயிரிடக்கூடிய பயிர்களை உச்ச அளவில் உற்பத்தி செய்வதற்கு, சிறிய குளங்களை புனரமைக்கும் நோக்கில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது

- செயற்திட்ட வருமானம்- ரூபா மில். 74.623
- 2017.12.31 இல் செலவு- ரூபா.மில். 76.013





குளத்தை தோண்டும் போது - அம்பாந்தோட்டை

## 3. நன்ரோ செயற்திட்டம்

நன்ரோ செயற்திட்டத்தின் மூலம் பாடசாலைப் பிள்ளைகளின் காலை உணவு வேளைக்கான மாற்றீடொன்று உற்பத்தி செய்யப்பப்படுகின்றது. இதன் மூலம் பிள்ளைகளின் போசணை மட்டத்தைத அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் பயறு, நிலக்கடலை, உலர் தேங்காய், எள் என்பவற்றைக் கலந்து அதற்கு கொதிநீர் ஊற்றி உடனடியாகத் தயாரித்துக் கொள்ள முடியுமான ஒரு உணவாக உள்ள இதனை கண்ணோருவை உணவு ஆராய்ச்சி நிறுவனம் உற்பத்தி செய்கின்றது.

### 4. அரிசிக்கு வலுவூட்டும் முன்னோடி செயற்திட்டம்

தேசிய உணவு மேம்பாட்டுச் சபை சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உலக உணவு மற்றும் விவசாயத் தாபனத்தின் நிதிப் பங்களிப்புடன் இதனை நடைமுறைப்படுத்துகின்றது. உலக உணவுத் தாபனத்திடமிருந்து 0.479 மில்லியன் ரூபா கிடைத்ததுடன் இந்த வருடத்தில் 1.02 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளான ஆரோக்கியமான வாழ்வை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் எல்லா வயதுகளிலும் நல்வாழ்வை ஊகுவத்தல் மற்றும் பட்டினியால் வாடுவதை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசண மட்டத்தை அடைதல் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவித்தல் ஆகிய குறிக்கோள்களை அடைவதற்காக அரிசிக்கு வலுவூட்டும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும் கண்டி மொனராகலை போன்ற பிரதேசங்களில் இரும்புச்சத்துக் குறைபாடு காணப்படும் பாடசாலை மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கான ஒரு முன்னோடிச் செயற்திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.






## 5. குறைவாகப் பயன்படுத்தப்படும் பழச்சாறு உற்பத்திச் செயற்திட்டம்

குறைவாகப் பயன்படுத்தப்படும் பழங்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும், பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் குறிக்கோள்களுடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விரலிக்காய், முள் ஆத்தா மற்றும் மாம்பழம் என்பவற்றை அடிப்படையான பழங்களாகக் கொண்டு கண்ணோருவை உணவு ஆராய்ச்சி அலகில் இப்பானம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன் மூலம் உயர் போ'ாக்கு கொண்ட குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற பழங்கள் வீண் விரயமாவதைத் தவிர்ப்பதற்கும் அதிக போ'ாக்கு கொண்ட உள்நாட்டுப் தேங்காய் எண்ணெய் வகைகளின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.





விசேட செயற்திட்டம்

## 1. நகரப்புற விவசாயப் புரட்சி

தற்போதைய சனாதிபதி அவர்களின் தலைமையில் உணவு உற்பத்தி நிகழ்ச்சிப் புரட்சி வேலைத் திட்டத்திற்கு எமது நிறுவனத்தினால் நகரப்புற வீட்டுத் தோட்டங்களுக்கு அறுவடை செய்யும் கட்டம் வரையில் வளர்க்கப்பட்ட காய்கறிக் செடிகளை விற்பனை செய்யும் வேலைத் திட்டமொன்று நகரப் பயிர்ச்செய்கை புரட்சி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் சேதன மூலப் பொருட்கள் சாடிகளில் அறுவடை செய்யும் கட்டத்தை நெருங்கிய இரண்டு காய்கறிகளை ஒரு சாடியில் நட்டு 4 சாடிகள் கொண்ட தொகுதியொயன்று குறைந்த விலையில் நகரப்புற மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது.

### பயனாளிகளின் எண்ணிக்கை:

கட்டம் - 1

100 சாடிகளை 25 நுகர்வோருக்கு விற்பனை செய்தல்





ஹெல்திபூட் சொப் திறத்தல்




## 2017.12.31 வரையான பௌதிக முன்னேற்றம்

| செயற்பாடு | | நிதி முன்னேற்றம்:- | | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | | வருடாந்தச் செலவு (ரூ.மி) | வருடாந்த வருமானம் (ரூ.மி) | |
| நாற்று மேடை - நாராஹேன்பிட்டி | இலக்கு | 10.07 | 12 | நகரப்புற மக்களுக்குத் தேவையான வீட்டுத்தோட்ட அபிவிருத்திக்கான கன்றுகள், உரம், சாதனங்கள் போன்றவற்றை இங்கு பெற்றுக் கொள்ள முடியும் |
| | முன்னேற்றம் | 9.530 | 10.713 | |
| நாற்று மேடை தெஹிவளை | இலக்கு | 4.26 | 4.72 | நகரப்புற மக்களுக்க வீட்டுத்தோட்ட அபிவிருதத்திக்கான அனைத்துப் பொருட்களையும் குறைந்த விலையில் வழங்குவதற்காக இவ் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. |
| | முன்னேற்றம் | 4.807 | 5.792 | |
| தெஹிவளை விற்பனை நிலையம் | இலக்கு | 50.0 | 51 | மக்களுக்கு உள்நாட்டு உணவுகளை குறைந்த விலையில் பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். |
| | முன்னேற்றம் | 48.144 | 47.065 | |
| மவ்போ' செயற்திட்டம் | இலக்கு | 1.018 | 1.1 | கண்ணோருவை தொழிற்சாலையில் இந்த உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. (1685 பக்கற்றுக்கள் - 1 கி.கி) |
| | முன்னேற்றம் | 2.34 | 0.922 | |
| மவ்போ' செயற்திட்டம் | இலக்கு | 1.071 | 1.1 | அரசாங்க நிறுவனங்களின் உள்ளேயும எமது நிறுவனத்திலும் காணப்படும் விற்பனை நிலையங்களுக்கும் காட்சியறைகளுககும் தேவையான அளவு மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டது. (4005 பொதிகள் - 1 கி.கி) |
| | முன்னேற்றம் | 0.54 | 0.190 | |
| பாரம்பரிய அரிசி செயற்திட்டம் - கலங்குட்டி | இலக்கு | 6.79 | 7 | "குருளு துட" "பச்சபெருமாள்" "களுஹீனட்டி" "பொக்காலி" "சுவந்தல்" "ரத்தல்" "மடவாழு" போன்றவை (1 கி.கி கொண்ட 1316 பொதிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன). |
| | முன்னேற்றம் | 1.951 | 1.936 | |
| ஹெலதிபூட் பஸார் | இலக்கு | 3.7 | 3.8 | உள்நாட்டு உணவுகளையும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் சிறியளவிலான தொழில்முயற்சியாளர்கள் இச்செயற்திட்டத்தின் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றனர். |
| | முன்னேற்றம் | 0..001 | 0.028 | |
| விலங்கு உணவுக்காக சோளம் இறக்குமதி செய்யும் செயற்திட்டம் | இலக்கு | 2877.5 | 3025 | விலங்கு உணவை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்காகச் சந்தையில் நிலையான விலையை ஏற்படுத்தி 38689603 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்டது. |
| | முன்னேற்றம் | 1719.19 | 1755.628 | |
| புத்தளப் பண்ணை சேதன உரம் | இலக்கு | 0.473 | 0.48 | பிரதேச மக்களுக்கு தங்களின் விவசாயச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டுவதற்காகவும மாதிரி பண்ணையாகவும் இப்பண்ணை எமது சபையினால் ஆரம்பம் தொட்டே பராமரிக்கப்பட்டு வருகின்றது. சேதன உர உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது. 20,000 கி.கிர உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. |
| | முன்னேற்றம் | 1.828 | 1.62 | |

| 2017.12.31 வரையான பௌதிக முன்னேற்றம் | | | | |
|---|---|---|---|---|
| அரிசி மாவுச் செயற்திட்டம் | இலக்கு | 0.322 | 0.33 | 723 பக்கற் உற்பத்தி செய்யப்பட்டது. |
| | முன்னேற்றம் | 0.44 | 0.341 | |
| குறைந்த பயன்பாடுடைய பழங்கள் ஊடாக பழப் பானம் உற்பத்தி செய்தல் | இலக்கு | 0.29 | 0.3 | 1,200 போத்தல் பானம் - அனோதா, மா, விரலிக்காய் |
| | முன்னேற்றம் | 0.234 | 0.248 | |
| ஹெல்திபூட் ஜொப் | இலக்கு | 0.234 | சேவைகள் செயற்திட்டம் | 17 ஹெல்தி /புட்சொப்கள் திறக்கப்பட்டுள்ளன. |
| | முன்னேற்றம் | 0.239 | 0.171 | |
| சிறியளவிலான நீர்ப்பாசனங்கள் நவீனமயப்படுத்தல் - அம்பாந்தோட்டை | இலக்கு | 254.7 | 256 | சிறிய நீர்ப்பாசனங்களையும் குளங்களையும் புனரமைப்பதன் மூலம் முதலாவது கட்டத்தில் மண்ணை அகழ்வதற்காக 40 குளங்களுக்குப் பணம் செலுத்தி மண் அழகப்பட்டதுடன் அவற்றில் 9 குளங்களில் அகழ்வு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| | முன்னேற்றம் | 76.013 | 74.623 | |
| அரிசிக்கு வலுவூட்டும் செயற்திட்டம் | இலக்கு | 1.8 | 1.9 | 50 மெ.தொ. உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டுள்ளது. |
| | முன்னேற்றம் | 1.025 | 3.658 | |
| திரிபோஷ உற்பத்திக்கு சோயா வழங்குல். | இலக்கு | 495.9 | 500.2 | விவாசாயச் சங்கங்களிடமிருந்து கொள்வனவு செய்து திரிபோஷ உற்பத்திக்காக 137 மெற்றிக் தொன் வழங்கப்பட்டுள்ளது. |
| | முன்னேற்றம் | 74.591 | 71.5 | |
| சோயாவை அடிப்படையாக் கொண்ட உற்பத்திகளைத் தயாரித்தல் | இலக்கு | 7 | 0.8 | முதலாம் கட்டத்திற்காக விவசாய அமைச்சினால் ஏற்கனவே 1.8 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன மொத்தச் செலவு 0.6701 மில்லியன் ரூபாவாகும். |
| | முன்னேற்றம் | 0.561 | 0.6701 | |
| வீதி உணவுகளைப் பிரபல்யப்படுத்தும் செயற்திட்டம் | இலக்கு | 72.1 | சேவைகள் செயற்திட்டம் | பெறுகைச் செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் கிராமிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| | முன்னேற்றம் | - | - | |

# 7.8 தேசிய உரச் செயலகம்



இலங்கை உரக் கம்பனியின் களஞ்சியச் சோதனை



கொமர்ஷல் உரக் கம்பனியின் களஞ்சியச் சோதனை



ஆணமடுவை வித்தியாலயத்தின் 10-11 ஆம் வகுப்பு மாணவர்களுக்காக முறையான உரப பயன்பாடு தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சி

## தொலை நோக்கு

இலங்கையில் பயிர் செய்யப்படும் அனைத்துப் பயிரினங்களினதும் உற்பத்தி விளைத்திறனை மேம்படுத்துவதற்காக சேதன மற்றும் அசேதன உரங்களை உரிய தரநியமங்களைக் கொண்டதாக உற்பத்தி செய்வதையும் பயன்படுத்துவதையும் உறுதிப்படுத்துதல்.

## எமது பணி

உரங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து விஞ்ஞானபூர்வமான சிபாரிசுகளின் அடிப்படையில் உரத்திற்கான தேவைகளை மதிப்பீடு செய்தல், உர நிறுவனங்கள் மற்றும் கையிருப்புக் கட்டுப்பாடு, உரிய தரத்திலான உர விநியோகம் மற்றும் விற்பனையை உறுதிப்படுத்துதல், சேதன மற்றும் அசேதன உரப் பயன்பாட்டின் போது சூழல் நட்புறவான முறையில் உரங்களைப் பயன்படுத்துதல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் உர மானியத் திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் உரப் பாவனைத் துறையில் முறைகேடுகளைத் தவிர்பபதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## வெற்றிகொள்ள எதிர்பார்க்கும் நிலைபேறான

2. நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்
12. நிலைபேறான நுகர்வையும் உற்பத்தி முறைகளையும் உறுதிப்படுத்துதல்.
13. காலநிலை மாற்றங்களுக்கான தீர்வுகள்

## குறிக்கோள்கள்:

- உள்நாட்டு உரத் தேவைகளை அடையாளம் காணுதல்.
- உரம் இறக்குமதி மற்றும் கையிருப்புக் கட்டுப்பாடு.
- உரங்களின் தரநியமத்தையும் தரத்தையும் உறுதிப்படுத்துததல்.
- உரத்திற்காக நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சியை முறையாக நடைமுறைப்படுத்துதல்.
- உரம் விநியோகிக்கும் செயற்பாடுகளை முறையாக ஒழுங்குபடுத்துதல்.

## வகிபாகம்:

| தேசிய உரச் செயலகம் | அரசாங்க உரக் கம்பனிகள் (லக் பொஹொர, கொழும்பு கொமர்ஷல் உரம்) |
|---|---|
| • 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துதல்.<br>• அறிவுபூர்வான உரச் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு உரத் தேவைகளைச் சரியாக இனம் காணுதல்<br>• உரத்துக்கான தேவைகள் சரியான முறையில் உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்தல்.<br>• உரங்களின் தரநியமத்தையும் தரத்தையும் உறுதிப்படுத்துததல்.<br>• ஒவ்வொரு பயிருக்கும் சிபாரிசு செய்யப்பட்ட உரப் பாவனையை ஒழுங்குபடுத்துதல்.<br>• அரசாங்கத்தின் உர மானிய வேலைத் திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துதல்<br>• உரம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கான நிறுவனங்களைப் பலப்படுத்துதல்.<br>• உரப் பாவனைத் துறையில் முறைகேடுகளைக் குறைபத்தல் உரம் தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை வெளியிடுதல்.<br>• உரப் பாவனை மற்றும் விநியோகம் தொடர்பான தரவுத் தொகுதியொன்றைப் பேணி வருதல். | • உரங்களை இறக்குமதி செய்தல், கலவை செய்தல், விநியோகித்தல், மற்றும் விற்பனை செய்தல்.<br>• தற்பாதுகாப்பான உரக் கையிருப்பைப் பேணி வருதல். |

## உள்நாட்டு உரத் தேவையை அடையாளம் காணுதலும் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும்

உள்நாட்டு உரத் தேவைகளை அடையாளம் கண்டு உர விநியோகச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவது தேசிய உரச் செயலககத்தின் பிரதான குறிக்கோளாக விளங்குவதுடன் அதன் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மாவட்ட மட்டத்தில் உரத்துக்கான தேவைகளை கணித்தல்.
- விநியோகத் திட்டத்தை தயார்படுத்துதல்.
- அரசாங்க கம்பனிகளிடமுள்ள யூரியா, ரீ.எஸ்.பீ மற்றும் எம்.ஓ.பீ உரக் கையிருப்புக்களை போகங்களுக்கு முன்னர் மீளாய்வு செய்தல்.

- அந்த மீதியாகவுள்ள கையிருப்பு நிலைமைகளைக் கழித்து போகத்திற்குத் தேவையான ஏனைய உரங்களைக் கணித்தல்.
- இந்த உரத் தேவைகளை 65மூ மற்றும் 35மூ ஆக அமையும் விதத்தில் லங்கா உரக் கம்பனிக்கும் கொழும்பு கொமர்'ல் உரக் கம்பனிக்கும் ஒதுக்குதல்.
- மாதாந்த உணவுத் தேவைகளுக்கு இணங்க மேற்குறித்த 65மூ மற்றும் 35மூ வீதங்களில் லங்கா உரக் கம்பனிக்கும் கொழும்பு கொமர்'ல் உரக் கம்பனிக்கும் இடையில் பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்.
- இந்த பெறுகைத் திட்டத்தை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் அனுமதிக்காகச் சமர்ப்பித்தல்.
- அனுமதி பெறப்பட்ட பெறுகைச் செயற்திட்டத்தை பெறுகைப் பிரிவு அனுப்புதல்.
- மாதாந்த தேவைகளின் அடிப்படையில் உரங்களுக்கு விலைமனுக்கள் கோரல், கேள்விப்பத்திரங்களைத் திறத்தல், பகுப்பாய்வு செய்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளைப் பெறுதல் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் அனுமதியைப் பெறுதல்.
- பெறுகைக் குழுவின் தீர்மானங்களை அமைச்சரவைக்கு அனுப்புதல், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் மற்றும் கடன் உத்தரவாதக் கடிதங்கள் திறத்தல்.
- அதற்கிணங்க, போகத்திற்குத் தேவையான உரங்களை ஒரு மாதத்திற்கு முன்னராவது இறக்குமதி செய்தல்.

**அதற்கிணங்க, உரங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோக வலையமைப்பைப் பின்வருமாறு காட்ட முடியும்.**



| உர இறக்குமதி - 2017<br>அரசாங்க மற்றும் தனியார் கம்பனிகள் |
|---|

| உர வகை | அளவு (மெற்றிக் தொன்) |
|---|---|
| யூரியா :Urea* | 197,485 |
| ரி.எஸ்.பீ :TSP* | 28,114 |
| எம்.ஓ.பீ :MOP* | 85,197 |
| எஸ்.ஏ. :SA* | 65,922 |
| கீஸரைட் :Kiserite* | 13,698 |
| ஏனையவை :Others* | 280,578 |
| மொத்தம் | 670,994 |

## மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் 2017

- மாதரிகளைப் பரிசோதித்தலும் உரங்களின் தரத்தை உறுதிப்படுத்துதலும்
- உரப் பாவனை தொடர்பான பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள்
- கையிருப்பை உறுதிப்படுத்துதலும் களஞ்சியச் சோதனையும்
- உர நிவாரணப் பணம் வழங்கும் நிகழ்ச்சியின் சுற்றறிக்கைகள் தொடர்பான செயலமர்வு
- கணினித் தரவுத் தொகுதிகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் செயலமர்வு

## உர மானிய நிகழ்ச்சியின் ஆரம்பம்
## (நிவாரணமாக உரம் வழங்குதல்)

- 2005 ஆம் ஆண்டில் நெற் செய்கைக்காக யூரியா உரம் மாத்திரம் வழங்கப்பட்டது.

  (50 கி.கி. கொண்ட உர மூட்டையொன்று 350.00 ரூபா வீதம்)

- 2005˙.2006 பெரும் போகம் முதல் நெற்செய்கைக்கான அனைத்து நேரடியான உரங்களும் நிவாரண விலையில் வழங்கப்பட்டது.

  (50 கி.கி. கொண்ட உர மூட்டையொன்று 350.00 ரூபா வீதம்)

- 2006 ஆம் ஆண்டில் தேயிலை செய்கைக்காக யூரியா மாத்திரம் நிவாரண விலையில் வழங்கப்பட்டது.

(50 கிலோ உர மூடையொன்று 1200.00 ரூபா வீதம்) 50 ஏக்கருக்கு குறைந்த காணிகளுக்கு

- 2011 ஆம் ஆண்டில் தேங்காய் செய்கைக்காக எம்.ஓ.பீ உரம் மாத்திரம் நிவாரண விலையின் அடிப்படையில் வழங்கப்பட்டது.
- நெல் உர நிவாரணம் (2 ஹெக்டயருக்கு குறைந்த விவசாயிகள்), அனைத்து நேரடியான உரங்களும் 50 கி.கி மூடையொன்று 350 ரூபா வீதம், மூடையொன்றுக்கான காப்புறுதிப் பங்களிப்பு 150.00 ரூபா.
- ஏனைய பயிர்களுக்கு, 50 கிலோ நேரடி உர மூடையொன்று, 1,200.00 ரூபா வீதம் 50 கிலோ கலப்பு உர மூடையொன்றுக்கு 1,300.00 ரூபா வீதம்

அரசாங்கத்தின் கொள்கையாக உர நிவாரணமாகப் பணம் வழங்கும் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டமை




### உர நிவாரணமாகக் பணம் வழங்கும் நிகழ்ச்சி:-

(நிவாரணமாகப் பணம் வழங்குதல்)

நெல் மற்றும் ஏனைய மேலதிகப் பயிர்களை பயிர்ச்செய்கையாளர்களுக்கான நிவாரணமாக குறைந்த விலையில் உரங்களை வழங்குவது. 2016 ஆம் ஆண்டு வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், சேதனப் பயிர்ச்செய்கையும் வி'மற்ற நாடும் என்ற தொனிப்பெ-ாருள் தொடர்பில் சமூகத்தில் அறிஞர்களுக்கிடையிலான பேசுபொருள் உருவாகியது. அத்துடன் அரசாங்கத்தின கொள்கைத் தீர்மாமொன்றின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டுக்கான வரவுெ-சலவுத் திட்ட முன்மொழிவாக உர நிவாரணமாகப் பணம் வழங்குதல் 2016 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

### 2016 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையிலான உர நிவாரணக் கொள்கை

- நிவாரணப் பணத்தை நிவாரணமாக விவசாயிகளுக்கு நேரடியாக வழங்குதல்.
- உர நிவாரணம் பெறுவதற்கு உரித்துடைய பயிர்கள்
  - நெல்
  - மேலதிக உணவுப் பயிர்கள் (உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோளம், சோயா அவரை)
- உர நிவாரணம் பெறுவதற்கு உரித்துடைய பயிர்கள் - நெல், உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோளம், சோயா அவரை
- நெல் செய்கை பண்ணும் விவசாயியொருவருக்கு 2 ஹெக்டயர் உச்ச எல்லைக்கு உட்பட்ட வகையில் அதிகபட்சமாக 2 போகங்களுக்கு) வருடமொன்றுக்கு 50,000.00 ரூபா.
- ஏனைய வயற் பயிர்கள் (உருளைக் கிழங்கு.׃.வெங்காயம்.׃. மிளகாய்.׃.சோயா.׃. சோளம் பயிரிடும் விவசாயியொருக்கு 1 ஹெக்டயர் என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்ட வகையில்
- ஒரு வருடத்திற்கு 10,000.00 ரூபா உர நிவாரணப் பணமாக வழங்குதல்.
- ஒவ்வொரு விவசாயியும் தனது பயிர்ச்செய்கை நிலத்தின் அடிப்படையில் கட்டாய விவசாயக் காப்புறுதிக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

அதனடிப்படையில் விவசாயிகளுக்கு உரித்துடைய பணத்தொகை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் ஊடாக விவசாயிக-ளின் கணக்கில் வரவு வைக்கப்படும். குறித்த செயற்பாடுகளைப் பின்வரும் முறையில் காட்ட முடியும்.




உர நிவாரணமாகக் பணம் வழங்கும் நிகழ்ச்சி:-

## செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்:-

- நிவாரணம் பணமாக வழங்கப்படுவதனால் இரசாயன உரப் பயன்பாடு குறைவடைந்து சேதன உரப் பயன்பாட்டை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுவதனல் வி'மற்ற பயிர்ச்செய்கையும் ஆரோக்கியமான மக்களும் என்ற கோட்பாடு மக்களிடம் கொண்டு செல்லப்பட்டமை.
- விவசாயிகள் தமது காணி மண்ணைப் பரிசோதனை செய்ததன் பின்னர் தேவைக்கு ஏற்ப உரத்தின் அளவை அடையாளம் கண்டு அந்த அளவு உரத்தை மாத்திரம் கொள்வனவு செய்வதனால் தேவையற்ற உரப் பாவனை குறைவடைதல்.
- இரசாயனப உரங்களை அதிகளவில் பயன்படுத்தியன் காரணமாக ஏற்படும் நோய் நிலைமையாகக் கூறப்படும் சிறுநீரக நோய் மற்றும் நீலக் குழந்தை பிறத்தல் நிலைமைகள் கட்டுப்படுத்தப்படுதல்.
- உரத்திற்குப் பதிலாக நிதி உதவி வழங்குவதன் மூலம் அப்பயிர்களுக்காகச் செலவாகும் உற்பத்தி செலவு குறைவதனால் வருமானம் அதிகரிக்கும்.
- நிவாரண நிவாரணப் பணம் விவாயிகளுக்கு நேரடியாகக் கிடைப்பதனால் தேவையான நேரத்தில் தேவையான அளவு உரத்தை கொள்வனவு செய்வது இலகுவானதாக உள்ளது.
- வெளிநாட்டுச் செலாவணி மீதப்படுவதனால் செண்மதி நிலுவைப் பற்றாக்குறை குறைவடைந்து சிறந்த நிலை ஏற்படுகின்றது.

## எதிர்பார்க்கப்படும் பெறுபேறு:

- முறையான உரப் பயன்பாட்டின் ஊடாக பொருத்தமற்ற உரப் பாவனையின் பாதகமான விளைவுகள் குறைவடைதல்.
- உர நிவாரணம் பணமாக வழங்கப்படுவதனால் விவசாயிகளின் வருமானம் அதிகரித்தல்
- உர நிவாரணம் வழங்கும் போது நிகழ்ந்துள்ள முறைகேடுகளைக் குறைத்தல்.
- நிவாரணத்தை காசாக வழங்குவதன் ஊடாக விவசாயியின் தற்றுணிபின் அடிப்படையில் இரசாயன மற்றும் சேதன உரங்களைப் பயன்படுத்தக் கூடியதாக உள்ளமை.

## இலக்குகள்:-

இலங்கையினுள் சிறு போகத்திலும் பெரும் போகத்திலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் வயற் காணிகளிலும் உர நிவாரணம் பெறுவதற்கு உரித்துடைய மேலதிக உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளிலும் இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்து சேதன உரப் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் ஊடாக காணிகளின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துதல்.

உபாயங்கள்: 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக விவசாயிகளுக்கு தரநியமத்துடன் கூடிய தரமான உரங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

உர நிவாரணத்திற்காக பணம் வழங்கும் நிகழ்ச்சியின் கீழ் விவசாயிகளுக்கு உரித்தான நிவாரணப் பணத்தை அவர்களுடைய வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்தல்.

### புதிய போக்குகள்:-

- உரச் சோதனைகளையும் தரப் பரிசோதனைகளையும் நவீன தொழில்நுட்பங்களின் ஊடாக மேற்கொள்ளுதல்.
- உர இறக்குமதி மற்றும் கையிருப்புக் கட்டுப்பாடு தொடர்பான தரவுத் தொகுதியொன்றைப் பேணி வருதல்.
- நெல் மற்றும் மேலதிகப் பயிர்ச்செய்கைக்காக உங்களை வழங்குவதற்குப் பதிலாக நிவாரணம் வழங்குதல்.
- தேசிய உரச் செயலகத்திற்கான புதிய இணையதளப் பக்கமொன்றை ஆரம்பித்தல்.

## செயற்திட்டம் ஆரம்பிக்கும் வருடம் மற்றும் முடிவடையும் வருடம் -

ஆரம்பிக்கும் ஆண்டு 2016

**செயற்திட்டம் (நீண்ட காலமா.·. நடுத்தரக் காலமா.·. குறுகிய காலமா என்பது) : குறுகிய காலம்**

பங்காளர்கள்: - விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாவட்ட செயலகங்களின் உரம் தொடர்பான துணைக் குழுவின் உத்தியோகத்தர்கள், தேசிய உரச் செயலகத்தின் உத்தியோகத்தர்கள், அரசாங்க வங்கிகளின் உத்தியோகத்தர்கள், உரக் கம்பனிகள் உள்ளிட்ட விற்பனையாளர்கள்.

**நேரடியான மற்றும் மறைமுகமான பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை:**

நேரடிப் பயனாளிகள் - விவசாயிகள்

மறைமுகமான பயனாளிகள் - உரக் கம்பனிகள், அரசாங்க வங்கிகள் மற்றும் உர விற்பனையாளர்கள்

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - உள்நாட்டு

உர நிவாரணப் பணம் வழங்கலின் முன்னேற்றம்

## உர நிவாரணப் பணம் வழங்கலின் முன்னேற்றம்

### நெல் உர நிவாரணம் வழங்குதல்
### 2017.˙.18 பெரும் பொகம்

மாவட்ட அடிப்படையில (2018.01.23 ஆந் திகதி வரையில்)

| | மாவட்டம் | விவசாயிகளின் எண்ணிக்கை | பயிர்ச் செய்கைப் பரப்பு (ஹெக்டயர்) | நிவாரணப் பணம் (மில்லியன் ரூபா)) |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 7.047 | 2,690.09 | 34.45 |
| 02 | கம்பஹா | 24,639 | 8,973.44 | 119.73 |
| 03 | களுத்துறை | 25,618 | 10,902.35 | 134.74 |
| 04 | கண்டி | 30,480 | 12,207.01 | 156.35 |
| 5 | மாத்தளை | 32,228 | 17,906.40 | 227.18 |
| 06 | நுவரெலியா | 6,877 | 2,768.26 | 34.83 |
| 07 | காலி | 24,325 | 10,183.58 | 129.29 |
| 08 | மாத்தறை | 31,363 | 13,038.71 | 170.61 |
| 09 | அம்பாந்தோட்டை | 44,336 | 34,147.89 | 428.11 |
| 10 | குருநாகல் | 105,405 | 44,632.18 | 572.26 |
| 11 | புத்தளம் | 6,197 | 4,433.11 | 55.92 |
| 12 | அநுராதபுரம் | 85,171 | 75,195.96 | 940.00 |
| 13 | பொலனறுவை | 65,672 | 65,008.37 | 812.60 |
| 14 | பதுளை | 49,066 | 25,327.67 | 320.69 |
| 15 | மொனராகலை | 44,321 | 28,491.22 | 356.37 |
| 16 | இரத்தினபுரி | 21,177 | 9,088.62 | 115.36 |
| 17 | கேகாலை | 19,747 | 5,216.35 | 72.32 |
| 18 | அம்பாறை | 76,339 | 78,718.40 | 983.98 |
| 19 | திருகோணமலை | 41,186 | 38,756.40 | 484,45 |
| 20 | மட்டக்களப்பு | 41,356 | 51,290.90 | 641.13 |
| 21 | கிளிநொச்சி | 17,328 | 24,978.60 | 312.23 |
| 22 | முல்லைத்தீவு (சம்பத்நுவரவுடன்) | 16,616 | 19,385.90 | 242.32 |
| 23 | மன்னார் | 12,470 | 14,792.60 | 184.90 |
| 24 | வவுனியா | 12,379 | 14,278.80 | 178.48 |
| 25 | யாழ்ப்பாணம் | 18,105 | 9,907.30 | 132.48 |
| மொத்தம் | | 859,448 | 622,320.11 | 7,840.84 |

## உர நிவாரணப் பணம் வழங்கலின் முன்னேற்றம்
## வேறு பயிர்ச்செய்கைக்காக நிவாரணப் பணம் வழங்குதல் - 2017

மாவட்ட அடிப்படையில (2018.01.23 ஆந் திகதி வரையில்)

| | மாவட்டம் | விவசாயிகளின் எண்ணிக்கை | பயிர்ச் செய்கைப் பரப்பு (ஹெக்டயர்) | நிவாரணப் பணம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | - | - | - |
| 02 | கம்பஹா | - | - | - |
| 03 | களுத்துறை | - | - | - |
| 04 | கண்டி | 1,417 | 398.46 | 4.03 |
| 5 | மாத்தளை | 176 | 70.02 | 0.71 |
| 06 | நுவரெலியா | 1,259 | 473.15 | 4.7 |
| 07 | காலி | - | - | - |
| 08 | மாத்தறை | - | - | - |
| 09 | அம்பாந்தோட்டை | 452 | 158.45 | 1.58 |
| 10 | குருநாகல் | - | - | - |
| 11 | புத்தளம் | - | - | - |
| 12 | அநுராதபுரம் | 25,980 | 19,053.10 | 190.53 |
| 13 | பொலனறுவை | 40 | 20.90 | 209.00. |
| 14 | பதுளை | 14,579 | 9,680.39 | 96.98 |
| 15 | மொனராகலை | 22,952 | 18,359.96 | 183.61.0 |
| 16 | இரத்தினபுரி | - | - | - |
| 17 | கேகாலை | 1 | 0.20 | 0.002 |
| 18 | அம்பாறை | 6,351 | 5,418.50 | 53.43 |
| 19 | திருகோணமலை | - | - | - |
| 20 | மட்டக்களப்பு | 849 | 337.20 | 3.37 |
| 21 | கிளிநொச்சி | 840 | 344.40 | 3.44 |
| 22 | முல்லைத்தீவு (சம்பத்நுவரவுடன்) | 372 | 148.40 | 1.48 |
| 23 | மன்னார் | 1,426 | 542.40 | 5.42. |
| 24 | வவுனியா | 520 | 231.60 | 2.31 |
| 25 | யாழ்ப்பாணம் | 10,598 | 3,219.18 | 35.69 |
| மொத்தம் | | 87,812 | 58456.31 | 587.58 |

## 2017 ஆம் ஆண்டின் பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம்

ஒதுக்கப்பட்ட தொகை 30,426.0 மில்லியன் ரூபா (திருத்தப்பட்ட மதிப்பீட்டின் படி)

செலவு :- 30,361.0 மில்லியன் ரூபா (உரக் கம்பனிகளுக்குச் செலுத்தப்பட்ட கடன் தவணைப் பணங்கள் அடங்கலாக)

செலவிட்ட தொகை 2017 சிறு போகம் (நெல்) - ரூபா.மில். 3,453.06 2017∴18 பெரும் (நெல்) ரூ.மி. 7,840.84 (2018.01.23 வரை)

2017 (ஏனைய): ரூபா.மில். 587.59

செயற்பாடுகள் மற்றும் பௌதிக முன்னேற்றம் -

### நெல் மற்றும் மேலதிகப் பயிர்ச்செய்கைக்காக உங்களை வழங்குவதற்குப் பதிலாக நிவாரணம் வழங்குதல்.

2016 சிறு போகம் முதல் உர நிவாரணப் பணம் வழங்குவதன் முன்னேற்றம்




### செயற்திட்டத்தின் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரசைகள் வலுவூட்டப்படும் விதம் :-

உரத்திற்கான நிவாரணமாக பணம் வழங்குவதன் மூலம் பயிர்களுக்காகச் செலவிடப்படும் உற்பத்தி செலவு குறைவடைந்து அவர்களின் வருமானம் அதிகரிப்பதனால் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதன் ஊடாக பொதுவாக ஒட்டுமொத்த பொருளாதாரவும் முன்னேற்றமடைதல்.

### முகங்கொடுத்த சவால்கள்

- சர்வதேச சந்தையில் உரத்தின் விலை அதிகரித்தமை.
- தனியார் கம்பனிகள் உரங்களை இறக்குமதி செய்வது வரையறுக்கப்பட்டமை

### அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அமைச்சரவைத் தீர்மானமொன்றின் அடிப்படையில்

- சர்வதேச சந்தையில் விலை அதிகரித்தமையினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த நிலையான விலை மாற்றப்பட்டமையினால் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல்.

# 7.9 வ/ப இலங்கை உரக் கம்பனி









## தொலை நோக்கு

இலங்கையின் உரச் சந்தையில் முன்னோடி என்ற வகையில் துறையிலும் அது சாந்த உற்பத்திகளிலும் சேவைகளையும் உள்ளீடுகளையும் வழங்குகின்ற பல்வகைமைப்படுத்தப்பட்ட புதிய உலகிற்குப் பொருத்தமான முன்னணி நிறுவனமாகத் திகழ்தல்.

## எமது பணி

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க லக்பொஹொர குடும்பத்தின் உச்ச அளவிலான பங்களிப்புடன் இலங்கையின் விவசாய, கமநல சேவைகள் துறையின் உற்பத்திகளையும் வருமானத்தையும் இலாபமீட்டும் தன்மையையும் அதிகரிப்பதற்காக பல்வகைச் சந்தைக் கேள்விகளுக்குப் பொருத்தமான உரங்கள உற்பத்தி செய்தலும் சந்தைப்படுத்தலின் மூலம் கம்பனியின் இலாபமீட்டும் தன்மையின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துதலும்.

## அடைவதற்கு எதிர்பார்க்கும் நிலைபேறான இலக்குகள்

2. 2030 ஆம் ஆண்டளவில் சிறியளவிலான விவசாய உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்திகளை இரண்டு மடங்காக்குவதற்குப் பங்களிப்புச் செய்தலும் உயிரியல் தொகுதியைப் பாதுகாத்தலும்.

2. உயிர்த் தொகுதியை பாதுகாத்து 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான விவசாயத் துறையைக் கட்டியெழுப்புதலும் உற்பத்திகளை இரட்டிப்பாக்குதலும்.

## நிறுவனம் தாபிக்கப்பட்டதன் குறிக்கோள்கள் மற்றும் பணிகள்

1. 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை விவசாயிகளின் உரத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஜேர்மனிய சமஷ்டிக் குடியரசின் நிதி மற்றும் தொழில்நுட்பப் பங்களிப்புடன் 1964 ஆம் ஆண்டில் இலங்கை உரக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

2.இக்கூட்டுத்தாபனம் 1987 ஆம் ஆண்டிடன் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனங்களையும், அரசுக்குச் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் பிரகாரம், 1992 செப்தெம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி எனும் பெயரில் மீள நிறுவப்பட்டது.

3. இக் கம்பனி தற்சமயம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. 2008.08.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் விதத்தில், வரையறுக்கப்பட்ட தமன்கடுவை விவசாய உரக் கம்பனி வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியுடன் இணைக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் பொலநறுவை பிராந்திய உரக் களஞ்சியத் தொகுதியாக இயங்கி வருகின்றது.

## விவசாயத் துறையில் இலங்கை உரக் கம்பனியின் வகிபாகம்.

தேயிலை, இறப்பர், தெங்கு முதலான பாரம்பரிய ஏற்றுமதிப் பயிர்களுக்கும், ஏனைய விவசாயப் பயிர்களுக்கும் தேவையான அனைத்து வகையான உர வகைகளையும் இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், விநியோகித்தல் முதலானவை இக் கம்பனியின் பிரதான பணிகளாகும்.

இலங்கை மக்களுக்கு 2017 ஆம் ஆண்டில் சுமார் 150,000 மெ.தொ இரசாயன உரம் என்ற விற்பனை இலக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

## நிதியத்தின் கட்டமைப்பு

இக் கம்பனி, தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், பொது முகாமையாளர் அலுவலகங்களைக் கொண்டதாகவும், நிதிப் பிரிவு, மனிதவள அபிவிருத்திப் பிரிவு, கொள்முதல் பிரிவு, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகப் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, சட்டப் பிரிவு, தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஆகிய பிரிவுகளைக் கொண்டதாகவும் இயங்கி வருகின்றது.

## விநியோக வலையமைப்பு

இக்கம்பனியின் பிரதான நிருவாக அலுவலகமும், மத்திய களஞ்சியசாலைத் தொகுதியும் வத்தளை, ஹுனுப்பிட்டியில் அமைந்துள்ளதுடன், தீவு முழுதும் உட்படுமாறு 39 பிராந்திய உரக் களஞ்சியசாலைகளைக் கொண்டதாக பரந்து விரிந்த சந்தைப்படுத்தல், விநியோக வலையமைப்பைக் கொண்டு காணப்படுகின்றது. கம்பனியின் பிரதான களஞ்சியசாலையில் 67,000 மெற்றிக் தொன், பொலநறுவை பிரதான களஞ்சியசாலைத் தொகுதியில் 18,500 மெற்றிக் தொன் என்றவாறும், அதே போன்று தீவு முழுவதும் அமைந்துள்ள பிராந்திய களஞ்சியசாலைகளில் சுமார் 49,975 மெற்றிக் தொன் என்றவாறும் உர இருப்புகளை களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளை கொண்டுள்ளது.

## சேதன உரச் செயற்திட்டம்

“வி'ங்களற்ற ஒரு நாடு ஆரோக்கியமான பரம்பரை”

### 3.1 அறிமுகம்

பசுமை சந்தைப்படுத்தல் எண்ணக்கரு உலகம் முழுவதும் விரிவாக்கம் பெறத் தொடங்கியதைத் தொடர்ந்து பெரும்பாலான நாடுகளும், வியாபார நிறுவனங்களும் அதே போன்று நுகர்வோரும் இவ் விடயம் தொடர்பாக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். புதிய அரசாங்கத்தின் அரச கொள்கைகளுக்கு ஏற்ப சேதனப் பசளை பாவனையை மக்கள் மத்தியில் அறிமுகம் செய்து, நச்சுக் கலக்காத உணவுகளைக் கொண்ட நாடொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் மத்தியில் இரசாயன உரப் பாவனையை மட்டுப்படுத்தி, சேதனப் பசளை பாவனையின் பக்கம் மக்களைத் திசை திருப்புவதினூடாக புதிய அரசாங்க விவசாயக் கொள்கைக்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதே அடிப்படை எதிர்பார்ப்பாகும். மக்கள் மத்தியில் இரசாயன உரப் பாவனையை மட்டுப்படுத்தி, சேதனப் பசளை பாவனையின் பக்கம் மக்களைத் திசை திருப்புவதினூடாக புதிய அரசாங்க விவசாயக் கொள்கைக்கு இணங்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதே அடிப்படை எதிர்பார்ப்பாகும்.

## நிரந்தர அபிவிருத்தி நோக்கங்களை வெற்றிகொள்வது தொடர்பில் கம்பனி செயற்பட்ட முறை

அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க சூழல் நட்புறவான சேதன உரப் பயிர்ச்செய்கையைப் பிரபல்யப்படுத்துதன் ஊடாக வி'மற்ற உணவு உற்பத்தியை அதிகரித்தல்சேதன உர வகைகளை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல், விவசாயக் குடும்பங்களையும், சிறியளவிலான சேதன உர உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்தல், அவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் விவசாயிகளினதும் உற்பத்தியாளர்களினதும் வருமானம் அதிகரிப்பதற்குப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. நிலைபேறான விவசாயம்

| இலக்குகள் | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | 2018 எதிர்பார்க்கப்படும் விற்பனை மெ.தா | 2020 எதிர்பார்க்கப்படும் விற்பனை மெ.தொ | 2025 எதிர்பார்க்கப்படும் விற்பனை மெ.தொ | 2030 எதிர்பார்க்கப்படும் விற்பனை மெ.தொ |
| சேதன உர விற்பனை அளவு (சேதனக் கட்டிகள், சேதனக் கூட்டு உரம் மற்றும் திரவ உரம் | 6,000 | 18,000 | 24,000 | 30,000 |

## சேதனச் சந்தையை வெற்றி கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய உபாய முறைகள்

பல்வகைப்படுத்தப்பட்ட சேதனப் பசளை உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம் செய்தல்.

2. நவீன உற்பத்திகள் தொடர்பில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுதல்.
3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் விநியோகிக்கப்படுகின்ற தர அறிக்கைகளை ஆய்வு செய்தல்.
4. விவசாயிகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.
5. மாதிரி சேதனப் பசளை பயிர்ச் செய்கைகளை ஆரம்பித்தல்.

## 3.4 புதிய போக்குகள்

1. மண்ணைப் பாதுகாத்தல்
2. கழிவுப் பொருள் முகாமைக்கான ஒரு தீர்வாக அமைதல்

## காலப் பகுதி

ஆரம்பிக்கப்பட்ட வருடம் - 2016 ஆம் ஆண்டு முதல் ஒரு நீண்ட காலச் செயற்திட்டம்.

## 3.7 பங்காளரகள்

சேதன உர உற்பத்தியாளர்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் லக்பொஹொர விற்பனை வலையமைப்பு

நேரடிப் பயனாளிகள் - விவசாயிகள்

மறைமுகப் பயனாளிகள - அனைத்து மக்களும்

செயற்திட்டத்திற்குப் பயன்படுத்திய நிதி - கம்பனியின் நிதி

<u>அபிவிருத்தித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம்</u>

<u>(2017.01.01 முதல் 2017.12.31 வரை)</u>

- சேதன கட்டி உரம் 196.084 மெ.தொ என்ற விற்பனை இலக்கு அடையப்பட்டுள்ளது
- கூட்டு உரம் 88.948 மெ.தொ என்ற விற்பனை இலக்கு அடையப்பட்டுள்ளது.
- சேதன திரவ உரம் 3051.1 லீற்றர் மற்றும் (250 லீற்றர், 500 லீற்றர், 1 லீற்றர் அளவுகளில் 7246 போத்தல்கள்) விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2017 நிதியாண்டில் 150,000 மெற்றிக் தொன் இரசாயன உரத்தைச் சந்தைப்படுத்துவதற்காக 9000 மி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2017.01.01 முதல் 2017.12.31 வரையில் அனைத்து இரசாயன உரங்களும் 68753 மெ.தொ விற்பனை செய்யப்பட்டுள்ளது.





- தென் மாகாணத்தில் சேதன உரம் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல். 2017.09.02 முதல் 2017.09.04 வரையில் பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள், மாவட்ட விற்பனை நிறைவேற்றுநர்கள், கையிருப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் ஆகிய உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

# 7.10 வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி



வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி தலைமையகம் - ஹுணுப்பிட்டி, வத்தளை




உரக் களஞ்சியம்



உரம் சந்தைப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள எமது கம்பனியின் விற்பனை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் குழு

## தொலை நோக்கு

விவசாய கைத்தொழிலுக்காக பொருட்கள் மற்றும் சேவைகள் தாமதமின்றி உற்பத்தி செய்து பகிர்ந்தளித்தல் ஊடாக இலங்கை விவசாய துறைக்கு நேரடியாக பங்களிப்பினை வழங்குவது ஊடாக அரச துறையிடமுள்ள முன்மாதிரியான நிறுவனமொன்றாக செயற்படுத்துதல்.

## எமது பணி

இலங்கையின் முன்னனி உர உற்பத்தி மற்றும் விநியோகத்தராக மாறுவதும் அரசின் விவசாய கைத்தொழிலுக்கான நோக்கில் பங்காளராக இருந்து உற்பத்திப ல்வகைப்படுத்துதல், உயர் நிலையில் உற்பத்திகளை வெளிக்கொணதல் மற்றும் நிறுவனத்தின் தரப்பினர்ககளின் தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சுயாதீன நிறுவனமொன்றாக செயற்படுவதற்காக சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளல்.

## அடைவதற்கு எதிர்பார்க்கும் குறிக்கோள்கள்

2. நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்

## அறிமுகம்:

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி 1872 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் கூட்டிணைக்கப்பட்டு பின்னர் 1976 இல் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படும் வரையில் பிரித்தானியாவின் முகாமைத்துவத்தின் கீழ் இருந்தது. கடந்த காலங்களில் கம்பனி பல்வேறுபட்ட மாற்றங்களுக்கு உள்ளானதுட் 1997 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க அரசாங்கத் தொழில் முயற்சிகள் சட்டத்திற்கு

இணங்க மீண்டும் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது. அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு கம்பனி என்ற வகையில் தன்னிறைவானதும் வறுமையற்றதுமான ஒரு நாட்டை உருவாக்கும் பயணத்தில் அரசாங்கத்தின் ஒரு பங்காளர் எனற் வகையில் விவசாயிகளுக்கு சலுகை நிகழ்ச்சிகளின் கீழ் உரத்தை விநியோகிக்கும் நோக்கில் கம்பனியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டின் உரத் தேவையில் 35மூ சதவீதம் உர மானிய முறையின் கீழ் எமது கம்பனியினால் விநியோகிக்கப்படுகின்றன. தற்போது உரம் இறக்குமதி, கலவை செய்தல் மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையில் விநியோகித்தல் என்பன கம்பனியின் பணிகளாக விளங்குகின்றன.

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்'ல் உரக் கம்பனி 1989.10.04 ஆந் திகதி 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் கொண்ட கம்பனியாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், மீண்டும் 2011.07.15 ஆந் திகதி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இல் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இக்கம்பனி அரசாங்கத்தினால நிர்வகிக்கப்படும் ஒரு கம்பனியாகும்.

## குறிக்கோள்:

கம்பனியின் சந்தைப் பங்குகளை 2021 ஆம் ஆண்டாகும் போது 17 சதவீதமாக வளர்ச்சியடையச் செய்வதுடன் சமுதாயத்திற்கும் சூழலுக்கும் உச்ச அளவிலான பங்களிப்பை வழங்குதலும்.

## நிரந்தர அபிவிருத்தி நோக்கங்களை வெற்றிகொள்வது தொடர்பில் கம்பனியின் கடமைப்பொறுப்புகள்

நிரந்தர அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கரு சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளிற்கு இடையில் சமநிலையைப் பேண முடியும். வரையறுக்கப்பட்ட விடயத் துறை ஒன்றுடன் நமது செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

மனித இனம் எதிர்நோக்கும் மிகப் பிரதானமான சவால் வறுமையை ஒழிப்பதாகும். அதனால் முதலாவது நிரந்தர அபிவிருத்தி நோக்கமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது "வறுமையை ஒழித்தல்" ஆகும். கட்டுப்பாட்டு விலை ஒன்றின் கீழ் விவசாயிகளுக்கு உரம் வழங்குவதன் மூலம் குறைந்த செலவினத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுவதற்கு விவசாயிகளுக்கு இயலுமாகவுள்ளது. விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்துதல் மற்றும் அத்தொழில் முயற்சியின் மூலம் அவர்களது ஜீவனோபாயத்தை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் வறுமை ஒழிப்பிற்குக் கரம் கொடுப்பதற்கு எமது நிறுவனத்திற்கு இயலுமாகவுள்ளது. கடந்த இரு தசாப்தங்களில் நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி மற்றும் விவசாய துறையில் மேம்பட்ட விளைவுகள் போன்ற காரணங்களினால் தென்னாசிய நாடுகளில் குறை போசாக்குள்ள மக்கள் தொகை சரி பாதியாகக் குறைவடைந்துள்ளதாக ஐக்கிய நாட்டு அபிவிருத்தி செயற்பாட்டினால் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாய துறைக்கு அதிகளவில் எமது நிறுவனம் ஆற்றும் பங்களிப்புக் காரணமாக "பட்டினியை ஒழித்தல் " எனும் நிரந்தர அபிவிருத்தியின் இரண்டாவது நோக்கத்தை எய்துவதற்குப் பங்களிப்புச் செய்வதற்கு எங்களால் முடியுமாகவுள்ளது.

தீர்க்கமான பொருளாதார வளமொன்றாக விவசாயக் கைத்தொழிலைக் குறிப்பிடலாம். எனினும் பயிரிடக்கூடிய காணியின் அளவு மிகவும் விரைவாக குறைவடைந்து வருகின்றது. இதற்கான பிரதான காரணம் தேவையற்ற வகையில் அதிகமாக விவசாய இரசாயனங்கள் பயன்பாட்டினைக் குறிப்பிடலாம் கம்பனியால் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் மண்ணின் தன்மையின் பிரகாரம் ஒவ்வொரு மண்ணின் விசேடத்திற்கு இணங்க அம்மண்ணின் குறை கூறுகளைச் சேர்த்து கலப்பு உரம் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் தேவையற்ற வகையில் மண்ணிற்கு உரம் சேர்வதை தவிர்ப்பதன் மூலம் மனித உயிர்" மற்றும் சுகாதார மற்றும் நல்வாழ்வு" என்ற நிரந்தர அபிவிருத்தியை நோக்கை வெற்றி கொள்வதற்கு மறைமுகமாக எமது கம்பனி பங்களிப்பு செய்துள்ளது.

## ஒழுங்கமைப்பு வலையமைப்பு

கொழும்பு கொமர்'ல் உரக் கம்பனி பிரதான களஞ்சிய தொகுதி உட்பட நிர்வாக அலகு வத்தள ஹுனுப்பிட்டியவில் 1 ஏக்கர் அளவிலான இடத்தில் அமைந்துள்ளதுடன் நாடு பூராகவும் வெள்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள 17 பிரதேச களஞ்சியங்களையும் கொண்டுள்ளது. அதற்கு மேலதிகமான நாடு பூராகவும் அமைந்துள்ள எமது 300 இற்கு அண்மித்த விற்பனை முகவர்கள் செயற்படுகின்றனர். இக்கம்பனி முகாமையாளர்கள் உட்பட 135 ஊழியர்களுடன் கூடிய பதவியணியினரையும் கொண்டுள்ளது.

### 2017 சனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் (கலக்காத மற்றும் கலப்பு உரம்)

| மாவட்டம் | உர வகை (மெ.தொ) | | மொத்தம் (மெ.தொ.) |
|---|---|---|---|
| | கலக்காத (மெ.தொ.) | கலப்பு (மெ. தொ.) | |
| அம்பாறை | 3,059.950 | 100.500 | 3160.450 |
| அநுராதபுரம் | 5,369.950 | 140.700 | 5,510.650 |
| பதுளை | 1,393.600 | 136.885 | 1,530.485 |
| மட்டக்களப்பு | 843.200 | - | 843.200 |
| கொழும்பு | 1,756.273 | 307.187 | 2,063.460 |
| காலி | 80.350 | 196.755 | 277.105 |
| கம்பஹா | 940.952 | 51.317 | 992.269 |
| அம்பாந்தோட்டை | 1,892.400 | 53.145 | 1,945.545 |
| களுத்துறை | 60.000 | 6.000 | 66.000 |
| யாழ்ப்பாணம் | 310.850 | 79.350 | 390.200 |
| கேகாலை | 5.200 | 6.000 | 11.200 |
| கிளிநொச்சி | 181.200 | - | 181.200 |
| குருநாகல் | 1,713.185 | 101.142 | 1,814.327 |
| மன்னார் | 1,111.100 | 3.450 | 1,114.550 |
| மாத்தளை | 787.900 | 0.100 | 788.000 |
| மாத்தறை | 450.550 | 536.505 | 987.055 |
| மொனராகலை | 3,844.950 | 61.550 | 3,906.500 |
| முல்லைத்தீவு | 184.000 | - | 184.000 |
| நுவரெலியா | 372.500 | 315.700 | 688.200 |
| பொலனறுவை | 5,746.052 | 172.300 | 5,918.352 |
| புத்தளம் | 521.050 | 40.500 | 561.550 |
| இரத்தினபுரி | 176.500 | 28.500 | 205.00 |
| திருகோணமலை | 5,619.407 | 2.210 | 5,621.617 |
| வவுனியா | 285.100 | - | 285.100 |
| யாழ்ப்பாணம் | 598.150 | 27.000 | 625.150 |
| மொத்தம் | 37,304.369 | 2,366.796 | 39,671.165 |

மொத்த விற்பனை வருமானம் (2017.01.01 முதல் 2017.12.31 வரை) - ரூபா.மில் 1,201.75 செயற்திட்டம்

# 7.11 வ/ப லங்கா பொஸ்பேட் (அரசாங்க கம்பனி)



பொஸ்பேட் இருப்பு - எப்பா-
வலை



பொஸ்பேற் உரம் பொதி செய்தல்



பொஸ்பேற்று உர உற்பத்தித் தொழி-
ற்சாலை

## தொலை நோக்கு

“எப்பாவலை பொஸ்பேற்று இருப்பை உச்சளவில் பயன்படுத்தி போ'க்குள்ள பொஸ்பரஸ் மூலம் எமது தாய்நாட்டை வளமான மண்ணைக் கொண்ட செழிப்பாக்குதல்”

## எமது பணி

“சூழல் நட்புறவான மற்றும் புதிய முறை முறைகளின் ஊடாக பொஸ்பரஸில் தன்னிறைவடைந்து தேசிய பொஸ்பேற்றுத் தேவைகளை வழங்குதல்”

## வெற்றிகொள்ள எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

2. நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்

# அறிமுகம்

எப்பாவல பொஸ்பேட் இருப்பு 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி புவிச்சரிதவியல் ஆராய்ச்சி திணைக்களத்தால் கண்டு பிடிக்கப்பட்டது.இந்தக் கையிருப்பு சுமார் 60 மில்லியன் மெ.தொன்களை உள்ளடக்கியுள்ளதுடன் அது வடக்கு இருப்பில் 40 மெ.தொன் ஆகவும் தெற்கு இருப்பில் 40 மெ.தொன் ஆகவும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றர் உயரத்தில் 06 மலைத்தொடர்களைக் கொண்டதாக சுமார் 324 ஏக்கர் நிலத்தில் பரவிக் காணப்படுகின்றது. சுமார் 60 மில்லியன் தொன்களைக் கொண்ட இந்த லோபஸ் இன் 33-40% பொஸ்பரஸ் பொன்டொக்சைட்டை உள்ளடக்கியுள்ளதுடன் இந்த இருப்பு உலகில் காணப்படும் மிகவும் தரம்வாய்ந்ததும் தனித்துவமானதுமான பொஸ்பேற்று இருப்பாகக் கருப்படுகின்றது.

இலங்கை பொஸ்பேற்று நிதியம் 1992 ஜுலை மாதம் 10 ஆந் திகதி ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் கொண்ட ஒரு கம்பனியாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ், அரசாங்க அகழ்வுகள் மற்றும் கனிப்பொருட்கள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவலை பொஸ்பேற்று செயற்திட்டம், 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபன அல்லது அரசாங்கத்தினால் உரிமை கையகப்படுத்தப்பட் பொதுக் கம்பனியாக மாற்றும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2007 ஆம் ஆண்டின 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் இக்கம்பனி மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

**அடிப்படையில் மேற்படி பொஸ்பேற்றுக்கான கேள்வி மற்றும் உற்பத்திகள் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன.**

01 தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிரதான பயிர்களுக்கான கேள்வி மற்றும் அவற்றின் சந்தை விலைகள்

02 வெளி நாட்டிலிருந்து இறக்கமதி செய்யும் ரொக் பொஸ்பேற்றுக்கான செலவு

03 ரொக் பொஸ்பேற்றுக்காக சந்தையில் காணப்படும் பதிலீடுகளின் விலைகள்

04 இலங்கையினுள் காணப்படும் இறக்குமதிச் சந்தையின் ஸ்திரத்தன்மை அடிப்படையில்

05 இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்கள் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகள்

**அடிப்படைச் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டுத் தன்மை**

கம்பனியின் அடிப்படைச் செயற்பாடாக பயிர்களுக்கான பொஸ்பேற்று பாறைகளை அகழ்தல், தயார்படுத்தல் மற்றும் சந்தைப்படுதல் மேற்கொள்ளப்படுவதுடன், 2014 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் வாரியப்பொலை, கனத்தேவெவவில் தென்னை உரம் கலவை நிலையமொன்று நிறுவப்பட்டு உயர் தரத்திலான நியாயமான விலைகொண்ட விலை உர விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

2017.01.01 முதல் 2017.12.31 வரையான தேசிய முன்னேற்றம் தொடர்பான சுருக்கமான அறிக்கை நிதி மற்றும் பௌதிக நிலைமைகள்

2017.01.01 முதல் 2017.12.31 திகதி வரை நிறுவனத்தின் ஈ.ஆர்.பீ. மற்றும் எச்.ஈ.ஆர்.பீ. உரங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் வருமானம் தொடர்பான தரவுகள்

| உர வகை | உற்பத்தி (மெ.தொ) | விற்பனை (மெ.தொ) | வருமானம் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| ஈ.ஆர்.பீ | 34,621 | 36,340 | 345.230 |
| எச்.ஈ.ஆர்.பீ | 7,814 | 8,281 | 95.232 |
| மொத்தம் | 42,435 | 44,621 | 440.462 |

2017 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் 34,0000 மெ.தொ பொஸ்பேற்று அகழப்பட்டதுடன் 44,629 மெ.தொ தயார்படுத்தப்பட்டதன் பின்னர் நாட்டின் நீண்ட கால விவசாயப் பயிர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் மூலம் கிடைத்த வருமானம் சுமார் 440.4 மில்லியன் ரூபாவாகும்.

மேலும் கடந்த 2016 ஆம் ஆண்டில் நிறுவனம் எதிர்நோக்கிய துக்ககரமான நிலைமைச் சரிசெய்து 2017 பஞ்சாங்க வருடத்தில் சுமார் 23 மில்லியன் ரூபாவை இலாபமாக உழைத்தது. மேலும் எப்பாவலை பிரதேசத்தில் காணப்படும் மிகப் பெரிய அரசாங்க நிறுவனம் என்ற வகையில் பிரதேசத்தில் வாழும் வறுமையில் வாடும் மக்களுக்கான நலன்புரிச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்கும் பிரதேசத்திலுள்ள உதவி தேவைப்படுகின்ற விகாரைகள், பாடசாலைகள் என்பவற்றுக்க நிதி மற்றும் பொருள் உதவிகளைச் செய்வதற்கும நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன மேலும் நிச்சயமற்ற சந்தை நிலைமையின் கீழும் பொதுத் திறைசேரிக்கு ரூபா.மி 3 ஐ பங்கிலாபமாக வழக்குவதற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வரியாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் ரூபா. மி. 24 இற்கு அதிகமான தொகையைச் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## பங்களித்தோர்...

**வழிகாட்டல்**

திரு. பி. விஜயரத்ன - செயலாளர் (விவசாய அமைச்சு)

திரு. டி.வி. பந்துலசேன - செயலாளர்

(விவசாய இராஜாங்க அமைச்சு)

திருமதி என். நிமல்கா டயஸ் - மேலதிக செயலாளர் (கண்காணிப்பு மற்றும மதிப்பீடு)

திரு. டபிள்யு.டபிள்யு.எஸ். மங்கள பணிப்பாளர் (திட்டமிடல்)

**அறிக்கை சேகரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு**

திரு. எச்.பீ.ஈ.எம். திசேர - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

திருமதி எச்.எல்.சீ.என் செவ்வந்தி - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

திரு. அரவிந்த ராமநாயக - அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி எச்.ஜீ.கே.ஏ. குலரத்ன - விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்

**தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் பக்க அமைப்பு**

திருமதி ஐ.ஏ.எஸ். ஹேவாபத்திரண

அபிவிருத்தி உத்தியோகத்தர்

(விவசாய அமைச்சு)

**நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் உத்தியோகபூர்வ அறிக்கைகள், தகவல்கள்**

நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் அமைச்சு

தேசிய திட்டமிடல் திணைக்களம்

**தகவல்கள் மற்றும் படங்கள்**

நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள்

**அட்டைப்படம்**

திரு. லஹிரு பெரேரா

கணினித் தரவு இயக்குநர், ஊடகப் பிரிவு

**மொழிபெயர்ப்பு - ஆங்கிலம்**

திருமதி எஸ்.எம்.என். சதுரிகா சமரவீர

மொழிபெயர்ப்பாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம்

**மொழிபெயர்ப்பு - தமிழ்**

திரு. எம்.எச்.எம். அனஸ் ஹுஸைன்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**தொழில்நுட்ப உதவி, டிவிடி அச்சிடுதல், அட்டை அச்சிடுதல், புத்தகம் கோர்த்தல் மற்றும் அச்சிடுதல்**

பெறுகைப் பிரிவு (விவசாய அமைச்சு

ரிசித பிரின்டர்ஸ் அன்ட பப்ளிகேஷன்ஸ், பத்தரமுல்லை

**வெளியீடு**

திட்டமிடல் பிரிவு, விவசாய அமைச்சு

අංක. 288, ශ්‍රී ජයවර්ධනපුර පාර, කෝට්ටේ, රාජගිරිය.
இல. 288, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வீதி, கோட்டே, ராஜகிரிய
288, Sri Jayawardenapura Road, Kotte, Rajagiriya